# ஆதி மார்க்க னீதி மொழி

## தக்ஷிணாயன மலர் 2021

ஜூலை முதல் டிசம்பர் வரை (தமிழ் மாதம் ஆடி முதல் மார்கழி வரை)

Copyright © AMNA Trust, Chennai

ஆதியே துணை



ஸ்ரீலஸ்ரீ மெய்வழி
சாலை ஆண்டவர்கள்

மெய்வழி
திரு.குழந்தைசாமி கவுண்டர்

திரு.சாலை ரவி அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

## மூலமந்திரம்

முத்திபூர்ணம்! மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்நோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர நிரூபிக மாகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களைஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்

## மகாசங்ஙல்ப மந்திரம்


மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்நு மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சுஓடாதவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்நு ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்நு தேவப்பிறப்பிலே பிறந்நு ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம் !



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை


திரு.சாலை ரவி அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

ஆதியே துணை. ஆதிமார்க்க னீதி அவையின் ஆதி மார்க்க னீதி மொழி எனும் மின்னணு சஞ்சிகை மெய்ஞான நிலைகள் உள்ளடங்கிய 88 அவை நிகழ்வுகளுடனும், மெய் ஞானப் பாடல்களுக்கான இசை வகுப்புகள் உள்ளடங்கிய 18 அவை நிகழ்வுகளுடனும் 106 அவை நிகழ்வுகளாக 17 அங்கத்தினர்களால் திறமுடன் தொகுக்கப் பெற்று, 2021- ஜூலை முதல் டிசம்பர் வரை (தமிழ் மாதம் ஆடி முதல் மார்கழி வரை) அரையாண்டு கால தக்ஷிணாயன மலராக மலர்ந்துள்ளது.



Copyright © AMNA Trust, Chennai

# ஜூலை மாத நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



**திரு.சாலை ரவி அவர்கள்**
**நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை**

*பேசரும்பெரும் பொருளைப் பேசரும் வாசகம் கொண்டு பேசியளிக்கின்ற பெருமான் மாசறும் தேசிகர் வைக்கும் வைப்பதனை வைக்கவெர்க்கும் மானிடச் சட்டை இல்லாவிடில் பேசிடும் பின்னல்களெல்லாம் தூசிகள் ஆவது மெங்கே தொன்மறை விளங்குவதெங்நே மாசுறும் பாசமுடைய தேகமதில் சூக்குமமும் தோன்றுவதெளிதோ நாயகம்.* என குருநெறி முறைவழியாக வரும் இருளறு குரு மொழியாம் ஒரு மொழியான இயல்மொழி கொண்டு பேசரும் பெரும் பொருளைப் பேசியளித்த பெருமானின் திருவடிகளைப் போற்றி வணங்கி அத்திருமேனி பல நிலைகளில் அருளிய அப்பெரும் பொருளின் சுவிசேஷ நற்செய்தியை உலக மக்கள் யாவரும் அறியும் வண்ணம் வழங்நப் பெற்றதே ***ஆதி மார்க்க னீதி மொழி***எனும் இம் ***மின்னணுச் சஞ்சிகை***. உலக மக்கள் யாவரும் அறியும் பொருட்டு ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்கள் தொகுத்து அளித்துள்ள இதில் உள்ள கருத்துக்கள் யாவும் செயலுடைய சிவானுபவமே அன்றி சாதாரண உலக அனுபவம் அல்ல.மக்கள் யாவரும் இந்த சிவானுபவத்தை பெறுவதற்கான ஒரு உன்னத வழிகாட்டியே இந்த ஆதி மார்க்க னீதி மொழி மின்னணுச் சஞ்சிகை. அனுபவத்தால் அறியக்கூடிய பேசரும் பொருளாகிய "சூட்சும அறிவெனும் சிவமயப் பொருள்" பேசி அளிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது. இதனை மக்களிடத்தில் செயல் அனுபவத்திற்கு ஆக்கி வைக்க வேண்டிய கடமையையும் இதன் மூல கர்த்தாவாகிய மூலப்பழம் பண்ணா ரமணி உண்டைப் பெட்டகத்தை னீதிமொழி கொண்டு வழங்கிய வள்ளல் வாக்மி மார்க்கனன்னாதர் "**பிரம்மப் பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்களின்**" திருவடிப் பெருமைகளையும் பற்றிச் சொல்வதே இச்சஞ்சிகையில் உள்ள அத்தனை செய்திகளும். திருவெனும் இமையா நாட்டம் கொண்ட தீன்குலத்து திருமேனியர் "சாலை ஆண்டவர்களின்" திருவடி நிழலில் தாங்கள் பெற்ற பேரின்ப அனுபவத்தை எங்கள் ஐயா **திரு மெய்வழி குழந்தைசாமி கவுண்டர்** அவர்கள் தங்களின் னீதிமொழி கொண்டு னான்மறையும் அங்நமாறுமே துலங்ந பேச்சழி னாவனாகிய எனையும் அமுத னாவோனாக்கிய சிவானுபவ நிலைகளையும், துக்க உடல் நீக்கி சுக உடல் மூலமாக அறியக்கூடிய செயலாகிய பிரம்ம வித்தை செயலை உலக மக்கள் யாவரும் அறியும் வண்ணம், இந்த மின்னணுச்சஞ்சிகை **உதயமாகிறது**. ஜூலை மாதம் ஆதி மார்க்க னீதி அவையின் மூலமாக நடைபெற்ற காணொளிக்காட்சி மற்றும் நேர்முக நிகழ்வுகளின் தொகுப்பாக 19 நிகழ்வுகள் இதில் கூறப்பெற்றுள்ளன. உலக மக்கள் தாங்கள் தேடவேண்டிய பொருள் இன்னது தான் என்பதனை அறிவிக்கும் இச்சஞ்சிகையைப் படித்து பயன் பெற வேண்டும் என்பதே இதன் நோக்கம். இதற்கான பெரும் முயற்சி மேற்கொண்ட ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த ஆசீர்பாதங்களைக் கூறி மேலும் மேலும் இந்த இறைத்தொண்டாகிய சிவப் பணியானது சிறக்க என்னுடைய வாழ்த்துக்கள்

***சாலை ரவி***

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2021 ஜூலை மாத சபை நிகழ்வுகளின் சாரம்சம்

***1st July, 2021 வியாழன் சபை***
***தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்***


*ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்*

நிகழ்ச்சியின் நடு நாயகமான குருபிரான் அவர்கள் வேதாந்தம், வேதம், கிரந்தம், நூல் என்றால் என்ன? என்று வினவினார்கள். இவையெல்லாம் வெறும் புத்தகங்கள் அல்ல என்றும் ஒரு மனித தேகத்திற்குள் எத்தனை தேகம் இருக்கின்றது என மனிதனை மட்டுமே குறி வைத்துப் பேசப்பெற்ற தேவரகசியம் எனக் கூறினார்கள். "தேவரகசியம் தேர்ந்த நன்நெறியோர் தேவர்கள் "என்று திருமறை தீர்ப்பு. தேவ ரகசியம் என்பது "நமசிவாய" எனும் பஞ்சாட்சர மந்திரம். நாம் தான் அம்மந்திரம் என உணர்ந்தால் பிறவாநெறி என்ற செயலுக்குள் ஆகலாம். இப்படியான நிலைகளை உள்ளடக்கி பேசப்பட்டதுதான் வேதாந்தம், வேதம், கிரந்தம், நூல், சுருதி என்பதாகும் என அருளினார்கள்.

தொடர்ந்து, தங்கம் பெரிதா அல்லது தந்தம் பெரிதா எனும் கேள்விக்கு, மண்ணில் விளைந்த தங்கத்தை விட உயிரில் விளைந்த தந்தம்தான் பெரிது என ஆண்டவர்கள் அருளியதாகக் கூறினார்கள். மேலும் ஆகமவிதி என்பதின் விளக்கமாக ஆகமம் என்றால் அகத்தின் ரகசியத்தை புறத்தில் கொண்டுவந்து அனுஷ்டானம் ஆக வைத்து வழிபடுவது எனவும், விதி என்றால் சட்டம் எனவும், இதன் வேத சாட்சியாக சிவபுராணம் பாடலில் வரும் "ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்பதையும் கூறினார்கள்.

மேலும் குரு என்பது "கு" காரமாகிய இருளை நீக்கி "ரு" காரமாகிய பிரகாசத்திற்கு அழைத்துச் செல்பவரே குரு எனவும், "குருவருள் இன்றித் திருவருள் இல்லை" எனவும் கூறினார்கள். மேலும் அக்னிகுண்டம் என்பது ஆசானின் திருப்பார்வையே எனவும் அதன் மூலம் அத்தனை பாவங்களும் சங்கரிக்கப் படுவதையே கோவில்களில் அக்னிகுண்டமாக வைக்கப் பெற்றுள்ளது எனவும்,மேலும் சுருதி என்பது அறிவாக உள்ளது, அது தெரியாவிடில் சுருதிக் கடலான சுழலாக மாறி அதில் சிக்கிக் கொள்கிறோம் எனவும், இரவு பகல் இல்லாத நேரம்,அந்தி சந்தி நேரம் என்றும் அங்கு தூங்காமல் தூங்கி சுகம் பெற்றால் பேரின்ப வீட்டில் வாழலாம் எனவும் இதற்குத்தான் "சீர்" எனும் அமானிதமாகிய அறிவு மனிதனுக்குத் தரப் பெற்றுள்ளது எனவும் சிவவாக்கியர் பாடலின் விளக்கமாக குளவி என்பது குருவாகவும் புழு என்பது சீடராகவும் உருவகப்படுத்தி புழு போல வாழ்ந்து கொண்டிருக்கும்

மனிதனை குளவியாகிய குரு தன் னாதமாகிய ரீங்காரம் மூலம் அறியாமை என்னும் இருளில் இருந்து அறிவுப் பிரகாசத்திற்கு கொண்டு வந்து இறைநிலைய அடையச் செய்வதை உணர்த்தினார்கள். மேலும் வைஷ்ணவத்தில் மதுர கவியாழ்வார் "செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே வளரும் என புளியாழ்வாரிடம் கேட்ட கேள்விக்கான [illegible] ஒரு மெய்க்குரு பிரானின் இரக்கத்தால் தான் அறிய முடியும் எனவும் அருளி அ செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

***3rd July, 2021 இசை வகுப்பு***
***தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்***

தகுதிவாய்ந்த அறிவுசார்ந்த மகனை "அச்சுதன்" எனவும், "அச்சா" என்ற சொல் குறிப்பது "அப்பா" என்பதையும் அது இறைவனின் நாமம் என்றும் அருளினார்கள். தொடர்ந்து ஆதிமெய் உதய பூரண வேதாந்தம் முகப்புப் பாடல் மற்றும் ஞான அகவல் முதல் பாடல் ஆகியவை பாடப்பெற்றன.பாடல்களை தாளம் தப்பாமல் ஏற்ற இறக்கத்துடன் பாட வேண்டும் எனவும், ஒரு பாடலானது அழகு பெற சாதகமும் ஆர்வசித்தமும் மிக அவசியம் எனவும் அதனைச் சாதகம் செய்யும் விதத்தினையும் கற்பித்தார்கள்.நான்குவரிப் பாடல்கள் யாவற்றையும் ஆண்டவர்கள் நாதநாமக்கிரியை என்ற ராகத்தில் பாடி அருளி இருக்கிறார்கள் என்பதையும் அதனை நன்கு கற்றுக் கொண்டால் எல்லாப் பாடல்களையும் மிக சுலபமாக பாடலாம் எனவும், வேத நூல்களில் உள்ள பாடல்களை உணர்வு கலந்து படித்தால் தான் அந்தப் பாடல்கள் உயிர்பெறும் எனவும் கூறினார்கள். மேலும், குருமணி மாலை, காமீல்கள் நோக்கம், இவற்றிலிருந்து பாடல்கள் பாடப்பெற்றன. தொடர்ந்து குருபிரான் அவர்கள் தாளம் போட்டுப் பாடுவதால் மூச்சு எனும் நடை சீராக இருக்கும் எனவும் அதுவே சரியான கதியாக இருக்கும் எனவும் அருளினார்கள். தொடர்ந்து, அவையில் பண்ணாகி அருங்யுமுதம் பொழியும் நாடு..., மாயக் கூத்தின் வகை அறியாமல்..., நம்பிய தன்னுயிர்..., மற்றும், உய்யவே எனக்கும்... என்ற பாடல்கள் பாடப்பெற்றன அவற்றிற்கான ராக தாளங்களை எப்படிப் பாட வேண்டும் என குருபிரான் அவர்கள் கற்பித்து அவையை நிறைவு செய்தார்கள்.

***3rd July, 2021 மான்மியம் சபை***
***தொகுப்பு: ஸ்ரீ கௌதம்***

அறுசுவை கொண்டு ஒளித்த இடத்தை அறிந்தவர்கள் தேவர்கள். அறுசுவை கொண்டொளிக்கும் இடம் என நாம் நினைப்பது, 5 அறிவு ஜீவ ராசிகளிடத்திலும் உள்ளது.ஆகையால் முழுக்க முழுக்க உடல்கடந்து நிற்க்கும் இந்த ஞான நிலைகளை உடல்கடந்துள்ள பொருளில் காட்டவல்லார்களே குருபெருமான் ஆவார்கள். மேற்கண்ட கூற்றை, அறுசுவை கொண்டொளித்தவிடம் விதமாய் கேட்க்க அருளும் குருபரன் அடைந்தோர்க்கல்லால் என்ற ஞானநூற் பொருளறிதல் பாடல் மூலம் அறியலாம். உலகில் பொதுவாக ஜாதி மதம் இனம் குலம் போன்றவற்றால் மக்கள் பிரிந்து வாழ்கின்றனர், மேலும் ஒரு சில இடங்களில் இவைகளால் சண்டை சச்சரவுகளிலும் ஈடுபடுகின்றனர். இவற்றின் உள் அர்த்தம் புரிந்தால் தான் இவைகளால் நமக்கான பலாபலன்கள் என்ன என்று புரியும், மேலும் மேற் சொன்ன அனைத்தும் அரூபம். ரூபத்தில் உள்ள மனிதனுக்கு ரூபத்தில் உள்ள பொருள் பயன்தரும், அரூபத்தில் உள்ள பொருள் மனிதனுக்கு எந்தவிதத்தில் பயன்தரும்? ஆகையால் மேற்கண்டவற்றை குருபிரான் மூலம் தொட்டுகாட்டப்பெற்று, அதில் நாள் தோறும் பழகி வந்தால் இவைகள் என்ன காரியத்திற்கு மனிதனுக்கு மட்டும் வைத்து படைக்கப் பட்டுள்ளது என தெரியவரும்.

***4th July, 2021 சிவகாசி சபை***
***தொகுப்பு: ஸ்ரீ. ஜெயக்குமார்***

ஆதி மார்க்க னீதி அவையின் குருபிரான் அவர்கள் சிவகாசி சபைக் காணொளிக் காட்சியில் புலன் வழி பற்றி யோடி எனும் பாடலுடன் சபையைத் துவக்கினார்கள்.

பொறி என்பன மனிதனுடைய இதயாசனத்தில் உள்ள ரகசியமாகும் எனவும் தீர்க்கதரிசனம் என்பது பொய்யல்ல, ஆண்டவர்கள் நமக்கு அருளி வந்த நிஜ செயல்கள் யாவும் மனிதனுடைய தலையை குறிவைத்து சொல்லப்பட்டது எனவும் கூறினார்கள். பிரம்மமாய் தானாய் இருக்கின்ற பொருளின் சலனமே மாயை. நாம் காணும் உலக சராசரங்கள் மாயை அல்ல. நம் மனமே மாயை.ஐம்புல னுகர்வே மாயக் கூத்து. இந்தப் பிறப்பானது விழிப்பு கனவு, தூக்கம், துரியம், துரியாதீதம் என்பதில் தான் உள்ளது. பொய்யுலகப் பொய்யுறவுப் பொருளின் வாழ்வும் என்ற பாடலுக்கான விளக்கமாக இன்று இந்த சபையில் நான் இருக்கின்ற


Copyright © AMNA Trust, Chennai

நிஜத்தைப் பெரியவர்கள் மாயை என்கிறார்கள் விடியல் என்பது மனம் அறிவாக மாறுகின்ற செயல். ஒரு மெய்க் குருவின் பேரிரக்கத்தால்தான் இதைப் பெற இயலும். கனவு உலகமாகிய இது கடந்து அப்பால் உள்ள அவ்வாழ்வைக் கைக் கொண்டால், பொய் உலக வாழ்வின் துன்பம், பயம், கவலையற்று இறை எண்ணத்துடன் இப் பிறவியைக் கடக்கலாம். துவைதம் எனும் மாயையை விட்டு அத்வைதம் எனும் ஓர் அறிவாகையில் நாம் இறைவன் வசம். மாயையின் முதல் பொருள் உடல். "வாழ்வு" என்பது ஆசானிடத்திலிருந்து பெறக்கூடிய அறிவின் மூலமாக அறிவு வடிவினனாகிய இறைவனை இவ்வுடல் இருக்கும் பொழுதே அறிந்து இரண்டறக் கலந்து வாழக் கூடியது. மாயை என்பது மறலியின் கையாக உள்ளது எனவும் வயது என்பது உடலுக்குத் தான் எனவும் வாழ்க்கை என்பது சுகம் மற்றும் துக்க அனுபவமாக உள்ளது. அதுவே சிவ அனுபவமாக இருந்தால் சுகம் எனவும் பேசப் பெற்றது. மெய்ஞானம் பெற்றால் உள்ளத்தில் தெளிவு பிறக்கும். கிருஷ்ண பரமாத்மா அருளிய சாவாது பிறவாது என்ற பாடலுக்கான விளக்கம்:



***ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்***

தீர்க்க தரிசிகள் இறைவனால் அனுப்பபட்டு இந்த உலகத்திற்கு வந்து கொண்டே இருக்கின்றார்கள். அடையாளம் காண இயலாத அவர்களே யதார்த்த னன் மன சீடர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்களே நமக்கு அறிவைப் புகட்டி னிழலைப் போல் னம்முடன் இருக்கிறார்கள்.

உணர்வின் மூலமே னம் உடலையும், உயிரையும் னாம் அறிய இயலும்.எனவே உணர்வு வெளிச்சப் பொருள் , உடல் னிழல். னினைவு வந்தவுடன் உணர்வு வந்தால் தான் னாம் யார் என்று னமக்குத் தெரியும்.

தலையி லென்குரு தாள்வாழி வாழியே என்று உள்ளதில், தலை என்பது தெற்கு முகம் கிழக்கு, முதுகு மேற்கு, கால்வடக்கு. எனவேதான் சிவபெருமான் தென்னாடுடைய சிவனாக குருவாக விளங்குகிறார். திருமூலர் பிரான் "தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்" என்கிறார். சிவானந்த போத னூலில் குருபெருமானின் னாவு லிங்கமாகவும் சீடனின் செவி யோனியாகவும் கூறப் பெற்றுள்ளது.

சுவை ஊறு ஒளி ஓசை நாற்றம் எனும் ஐந்தையும் னம்முள் உணர வைக்கக் கூடிய உணர்வே உலகு. அறிவே சிவமாக, ஜீவனாக, அதைக் கண்டால்| ஜென்ம சாபல்யமாகவும் கூறப் பெற்றுள்ளது. தன் பெரு வெளியாகிய சாலையே யாதும் உளதாய் ஏதும் இலதாகிய ஆறாவது அறிவாக உள்ளது.

மனம் ஓர் அறிவாக னிலைக்க அறியாமை என்னும் இருளை அகற்றி னம்முள் அறிவு என்னும் வெளிச்சத்தை ஒளிரச் செய்பவரே குருபிரான். தோற்றமுள்ள ரூபமாக வாயும், தோற்றமில்லாத அரூபமாக சப்தமும் உள்ளது. பெரியோர்களின் திருவாக்கு னாதம் எனும் அறிவான சொரூபமாகவும் நாம் பேசுவது சப்தமெனும் அழிவாகவும் உள்ளது. னீதி என்பது அகம் மற்றும் புறமாக உள்ளது.ஒரு மெய்க் குருபிரானின் இரக்கத்தால் தான் மனு னித்தியனாக முடியும்.

உலகின் முதல் மனிதன் ஆதாமிற்கு முன் தோன்றியவன் னரன். தூல உடலில் னான் என்ற னரன் இருக்கிறான். குருபிரானிடம் அறிவைப் பெறும் போது னாம் இந்த உடல் இல்லை என்பது புலனாகும்.


Copyright © AMNA Trust, Chennai

தேவன், மனிதன், னரன் போன்ற பதங்களின் அடையாளமாக இருப்பது னாவு. னாவுக்குப் பெரிதாக உலகமில்லை. "அவிழ்க்கின்ற வாறும் அது கட்டு மாறும்" எனும் திருமந்திரப் பாடலின் படி தமிழ் சொல் கொண்டு யாவற்றையும் பிரித்துவிடலாம். என்ற தேவ இரகசியம் தெரிந்த மக்கள் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களாக உள்ளனர்.

னாம் ஏழாகிய அறிவெனும் சீருடன் வந்தது ஆறாகிய ஆதாரத்தை அறியவும் ஐந்து கரமாகிய பந்தாட்சரத்தால் நான்காகிய கலை பாழ் போகாமல் மூன்றாகிய முச்சுடரை அறிய வைத்து இரண்டெனும் வாசியை உணர்த்தி ஒன்றாக ஆனால், னீ னான் (சிவன்) ஆவாய் அதுவே உன் சொந்த வீடு, என்று ஒரு மெய்க்குருவின் மூலம் அறியலாம்.

னரனிலிருந்து மனு, தேவன் என்ற னிலைகளுக்கு னம்மை ஏற்றி வைப்பது ஆசானின் திருனாவு. சுத்த சைதன்ய னாதர் சொல் ஒரு பொருளினாலே தோற்றமில்லாமையிலிருந்து தோற்றத்திற்கு னாம் வருகிறோம். புழு குளவியாக மாறும் செயல் என்பது னரன் எனும் னிலையிலிருந்து குருவின் னாதம் மூலம் மனுவாக மாறும் தேவரகசியச் செயலைக் குறிப்பதாக உள்ளது.

தௌஹீது காமீல் பாடலில் வரும்

*இருதய மெனும்சிமிழி லிருக்கும் கருமையது*
*என்பது தன்னிலிருந்து இரட்சிக்கும் மை*
*இந்த மையை அறிவது மனிதனின் கடமை*
*அதுவே மகத்தான னமது உடமை*
*அதனை மறந்தது நமது மடமை*
*அதை அறிந்தால் அடைவது மகிமை*
*அகத்தில் உள்ளதோ உண்மை*
*அதையறியாவிடிலோ சிறுமை*
*அகத்தை அறிவதே பெருமை அசலாகிய அந்நகார மை*
*அசையாத னிலையான மை*
*அச்சம் தீர்க்கும் அசலான மை*
*அஞ்ஞனமாய் விளங்கும் கருமை*
*அஞ்ஞானமாய் இருப்பதோ அறியாமை*
*அஞ்ஞாமையே மேன்மை*
*அஞ்சுவதே எவர்க்கும் தாழ்மை*
*அனுவாண்ட பிரமாண்ட மை*
*அண்டமெல்லாம் ஆண்ட மை*
*அதிசயமே உருவான மை*
*அருமையில் அதுவே அருமை*
*அனைவருக்கும் இது அண்மை*
*அகிலமெல்லாம் அதன் அடிமை*
*அஃகென்னும் பிரம்மமும் அதே மை*
*இத்தனை மையும் குருவின் பெரு மையே.*
*கங்காளன் பூசும் கவசத் திருனீறு என்பது குருபிரானின் வாய்மையாகிய ஆலவாயான் திருனீறாக உள்ளது.*

நாணயம் என்பது நாவானது நயமாக இருப்பது னம்மிடம் பணமாக, முதலாக இறைவன் அளித்த செல்வத்தை ஏழையைப் போல் சிக்கனமாக செலவழித்தால் என்றும் குறையாத பணக்காரானாய் வாழலாம். ஆண்டவர்கள் நேரான வழி தோணச் சொல்வேன் கேளு என்கிறார்கள். நேர் என்பது நான் என்று சொல்லக் கூடிய அமானிதபொருள் என்னும் அறிவாக ஒவ்வொரு மனுத் தலையிலும் உள்ளது. மண்ணுலகிலும், விண்ணுலகிலும் னம்முடைய பெயர் பதிந்துள்ளதால் இது போன்ற மேன்மையான அவையின் அங்கத்தினராக னாம் ஆகி உள்ளோம்.



Copyright © AMNA Trust, Chennai

**Take It Easy**
பசி, தாகம், தூக்கம் இவைகளில் take it easy சாத்தியமில்லை.இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக கருதும் மன னிலையில் ஓர் அறிவாக னிற்பவர்கள் மட்டுமே take it easy என கூற இயலும்.

***வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு***
***யாண்டும் இடும்பை இல***

இதுவே take it easy. எதிர்பார்ப்புகள் இருக்கும் இடத்தில் ஏமாற்றம் இருக்கும். மெய்ஞான னிலைகளை பெற்றவர்களுக்கு மட்டுமே இதை சுலபமாக எடுத்துக் கொள்ள இயலும். மெய்ஞானத்தை பற்றியவன் பயம் அறியாதவன். காரணம் அவன் ஆசானின் திருவடியைப் பற்றியவன் எனும் விளக்கங்களுடன் அவை நிறைவு செய்யப் பெற்றது.

***4th July, 2021 சத்துவாச்சேரி சபை***
***தொகுப்பு: ஸ்ரீ. ஜெயக்குமார்***



***ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்***

விண்ணுமண்ணும் கதிர்மதியு மின்பனிதா ரகையும் விளங்குவன மலைகளுடன் விரிந்நகுலாசலங்கள் என சாலை ஆண்டவர்கள் இரண்டே வரிகளில் உலகத் தோற்றங்களை விளக்கியுள்ளார்கள்.
புறக்கண் கொண்டு பார்க்கக் கூடிய அனைத்தும் அழிந்து போகக் கூடியதே. செயலாக உள்ள மூல மந்திரத்தைப் பார்க்க வேண்டிய இடத்தில் பார்த்துச் சொன்னால்தான் பலன் எனவும் பார்ப்பவனை பார்ப்பவனே பார்ப்பனன் எனவும், கோடிமனுக் கீந்நாலும் குறையாத மை ஹயாத்து எனும் ஜீவனாகிய மையே எனவும் கைலாயம் என்பது ஒரு மெய்க்குரு பிரான் மூலம் நமக்குள் பார்க்கக் கூடிய ஒன்றாக உள்ளது எனவும், உலகில் நாம் தேடிய செல்வம் நிலையானதல்ல எனவும், அறிவும் ஜீவனும் கலந்திருப்பதே ஜீவஆன்மா எனவும், நித்தியமான செல்வமே அழியா நிதி எனவும் வாசி, கற்பகம், பாதம் அனைத்தும் ஒன்றே எனவும், நெருப்பு, தேஜோமயம், ரிங் ரிங் மந்நிரம் அனைத்தும் ஒன்றே எனவும் பேசப்பட்டது.

ஆசானின் னாதமெனும் வாய்மையால் ஹராமான மனம் ஹலாலாக மாறுகிறது எனவும், முத்தொழில் மற்றும் ஐந்தொழில் இரகசியம், குருவினிடத்தில் உள்ளது எனவும், பதினாறு கலைகள் கொண்ட பூரணமே அறிவாகும் எனவும் துர்க் கந்தமுடைய இத் தேகத்தில் ஜீவன் துர்க்கந்தமற்ற இடத்தில் உள்ளது என்றும் பேசப் பெற்றது. மேலும், அகமிய உலகைச் சுற்றி வந்தே முருகப்பெருமான் ஞானப்பழத்தைப் பெற்றார் எனவும் மும்மூலத்தை கடந்ததால் அவர் முருகன், எனவும் அறு னரகத்தை அறுத்ததால் ஆறுமுகம் எனவும் கந்தமாகிய அவேரே கந்தன் எனவும் பேசப் பெற்றது.

னமக்குக் கவசமாக இருப்பது னம் கவனம் எனவும் தந்தையும் , தாயும் இல்லாத தோற்றம் சுயம்பு எனவும், ஆறாவது அறிவை அறிய ஆசானின் னாதமும் அதை அறிய வேதமும் விளங்கும் எனவும், ஆசானே வாலறிவன் எனவும் உள்ளம் என்பது மகா மகசூக்காகிய

இருதயமாக, வேதம் என்பது எழுதாத எழுத்தாக உள்ளது எனவும் பேசப் பெற்றது. தனக்கு இணையாக ஒரு புழுவை மாற்றும் குளவியின் செயல்போல்


Copyright © AMNA Trust, Chennai

மனிதனுக்கு மரண அச்சத்தை உணர்த்தி குருபிரான் தன் வாய்மையால் அறிய வைத்து தேவனாக்குகிறார்கள் என்றும் பேசப் பெற்று சபை நிறைவு செய்யப்பெற்றது.

***8th July, 2021 வியாழன் சபை***
***தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்***

குருபெருமானவர்கள் அமுத னா கொண்டு அருளிய னீதிமொழியின் அம்சங்கள். பிரம்ம பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் அருளிய எமனை அணுகவிடாது காக்கும் சத்திய பரிசுத்த வான்மதிக் கொரல் 33-வது திருவாக்கியம் ஓதப்பெற்றது.

ஆதிபாஷை தமிழ் பாஷை என்பது மனிதனுடைய அடையாளம். அடையாளத்திற்குரிய பொருள் வாக்கு.

**பொருள்** என்பது திருச்சிற்றம்பலப் பொருள் - ஜீவன். சிவானந்த போதம் ஜீவனே திருச்சிற்றம்பலப் பொருளதாகும்.

**பரிபாஷை** பரிபாஷை என்பது ஊமை பாஷை அல்ல. நாம் அறிந்த மொழியில் நம்முடைய சொந்த பாஷையில் வேதமானது இறக்கப்பட்டிருந்தாலும், அதனுள் பூட்டிவைக்கப்பட்டிருக்கும் மெய்ப்பொருளை எக்காலத்திலும் தாமே படித்து அறியவே முடியாது. திரு அவதாரம் தாங்கிவரும் குரு பெருமான் நம் மீது இரக்கம் கொண்டு அறிவித்தால் மட்டுமே வேதத்தை உணர முடியும்.

ஞானக்கொரல் காட்டும் குருவன்றி காணாதுனதுடம்புள் பூட்டுடைய மாட்டாதே போம். தமிழ் அறிவு வடிவு தமிழுக்குள் உயிர்ச்சக்கரத்தின் இரகசியமும், உடல் சக்கரத்தின் இரகசியமும் பொதியப் பெற்றுள்ளது. வினாயகர் அகவல் இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும் உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டி

தமிழ் கடவுள் முருகப்பெருமானுக்கு கந்தன், கார்த்திகேயன் என்று வட நாட்டிலும் வள்ளினாயகன், மயில் வீரன், மயில்சாமி என்ற பல வகைப்பட்ட திருனாமங்கள், கொங்கு நாட்டிலும், தமிழ்கூறும் நல்லுலகிலும் புழக்கத்திலுள்ளன. மக்களுக்கு இத்திருனாமங்களும் சூட்டப்படுகின்றன. இதற்கான காரணகாரியங்களை சுப்பிரமணியர் யோக ஞானத்தில் மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா விரிவாக அருளியுள்ளார்கள்.

ஆதி மெய் உதயபூரண வேதாந்தம் ஞானமுறையீடு என்னவே பஞ்ஞாயுதமாகவே. எனத் துவங்கும் 33-வது திருப்பாடல் பாடப்பெற்றது. பஞ்ஞாயுதம் ஐந்துவகைப்பட்ட பூதங்களான மண், தண்ணீர், காற்று, நெருப்பு, ஆகாயத்தை சேர்த்து கட்டப்பட்டதே இத்தேகம். மெய்ன்னிலை போதம் சேரியிலே ஐந்து விதக் கலப்பதுவு மெங்ஙே மேதினியிற் கலந்த பஞ்ஞபூதனிலை யெங்ஙே மூன்றாவது குலம் அறிவுக் கண்ணாகிய மூன்றாவது கண்திறக்கப்பட்டவர்களே மூன்றாவது குலத்தவர்கள். ஞான முறையீடு சாதி குலம் பாராதேயிருந்த மணிமந்ர மவுன வித்தே ஆதினூரானியை தன்னில றிந்தவர் ஆண்பிள்ளை ஆணிமுத்தே.

மாணிக்க வாசகர் அருளிய திருவாசகம் (சென்னிப்பத்து) தேவதேவன் மெய்ச் சேவகன்... எனத் துவங்கும் பாடல் பாடப்பெற்றது அமுத கலைக்ஞான போதம் (முதற்காண்டம்) சென்னிமலை வாசலுக்கு ளுட்புகுத வைத்து ஜீவனென்னும் சிரஞ்ஜீவிக்குச் செப்பு முபதேசம்

**சென்னிமலை** என்பது தலை. தலைக்கு ஒரு வாசல இருக்கிறது. அது இருதயத்துள் விளையக்கூடிய வாசல் செவிச்செல்வம். திருக்குறள் செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ் செல்வத்து ளெல்லாந் தலை

திருஞானசம்மந்தர் அருளிய தேவாரம் முதல் முறை- திருவலிதாயம் - பெரிய மேரு வரையே எனத் துவங்கும் பாடல் பாடப்பெற்றது. பிரம்மனும் திருமாலும்



Copyright © AMNA Trust, Chennai

அறியமுடியாத அடி முடியைக் கொண்டு உயர்ந்தோங்கிய அழலுறுவான பரம்பொருள் உறையும் இடம் வலிதாயமாக உள்ளது. அடி முடி நடுவாக அழலுறுவாக கடத்துக்கு உள்ளிருப்பவனை ஆசான் அறிவித்து ஒவ்வொரு படி நிலைகளாக ஏற்றி அறிவு விளக்கம் தந்து அனுபவமாக்கி வைப்பார்கள்.

**பேரின்ப வாழ்வு** தெய்வீகம் உடல்சார்ந்த விஷயமல்ல.அறிவு சார்ந்த விஷயம். உடலை காப்பாற்றிக் கொண்டிருக்கக்கூடிய பிராணன்- பிரணவப் பொருளாக அறிவு ரூபமாக நின்றுவிளங்குகின்ற ஜீவன் எனும் சிற்றம்பலப் பொருள் சார்ந்து வாழ்க்கூடிய வாழ்க்கையே- பிணி,மூப்பு, சாக்காடு அணுகாத பேரின்ப வாழ்க்கை. அப்பேரின்ப வாழ்வை அளிப்பவரே குரு. நால் வகை யோனி எழுவகைத் தோற்றம் உலகம் தோன்றுவதற்கு வித்தாக னின்று விளங்குவது- புழுக்கம், வித்து, அண்டம், சினை என்னப் பெற்ற நால்வகை யோனி.

**அறிவு அறி பாடம்**

***நால்வகை யோனி எழுவகைத் தோற்றம்***
***அனைத்தும் உன்னுள் அறிந்து வாழ்வதற்காய்***
***னீயுடல் எடுத்த னன்னேர் வழியென***
***அறிவது முதலாம் அறிவு அறி பாடமே.***

ஐந்து மந்திரத்தின் இரகசியமே-நால் வகை யோனி (புழுக்கம், வித்து, அண்டம், சினை) எழுவகைத் தோற்றம் (அமரர், மனு, விலங்கு, புள், ஊர்வன, ஜலம்வாழ் ஜந்து,தருக்கினம்) குருபிரான் நம்மை அன்பெனும் கருவறையில் வைத்து ஐந்தாவது யோனியாகிய ஆவிடை எனும் தேவயோனில் பிறப்பித்து ஆறாவது அறிவை அறிவித்து ஏழாம் பிறப்பாகிய தேவப்பிறப்பில் பெற்றெடுத்த பிறகே நாம் உடலெடுத்த னன்னேர் வழியை அறிந்து மரணமிலாப் பெருவாழ்வை வாழ முடியும்.

திருவாசகம் அன்னைப்பத்து பாடல் 2 படிக்கப்பெற்றது. அதில் வரும் அன்னே என்பது ஆண்பாலாகிய இறைவனைக் குறிக்கும் ஒன்றாகும். கருனணக் கடலாகிய தங்கள் குரு பிரானைப் பார்த்து அன்னே, அம்மே, என்று உருகி உருகிப் பாடுகிறார்கள்



***ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்***

தேவாரத் திருப்பதிகம்: முதல் திருமுறை - ஸ்தலம்-திருவலிதாயம்-பாடல்:10 படிக்கப்பெற்றது. அதில் இப்பாடலில் திருவெனும் ஓரறிவாக விளங்குகின்ற வலிதயமாக இருப்பது குருபிரானுடைய அருளாகிய அறிவின் கிரணமாகும். அத்திருவருள் நம் மனதைப் பண்படுத்தி வலிமையான அறிவாக, ஓரறிவாக ஆக்குகிறது.

ஆதிமான்மியம்: சன்னதம் பெரும் பருவம் ஓதப் பெற்றது "ஒத்தையான் மறைஊணிய முத்திய "பொன்னிலமாகிய அழியாத நாட்டில் ஆமென் வித்தை ஊணி வைக்கிறார்கள். அட்சரம் தாண்டி ஏகாட்சர நாயகர் ஒத்தையாய் ஒரே மனமாய் ஒரே எண்ணமாய் முக்குணங்களற்ற நிர்குணமாய் ஒன்றுக்குள் நிற்கவைத்த சொற்குணா உற்பரன். எமன் எல்லையில் நம்மை வெற்றிபெற வைப்பதற்காக வந்ததுவே வேதத்தாய் மான்மியம்'' ஆண்டவர்களுடைய இச்சை இந்த உலகத்தை உய்விக்கும் பெருங்காரியத்திற்குத் துணைக்கருவிகளாக நாம் இருக்க வேண்டும் என்பதே. ஆண்டவர்களின் உத்திரவின் படி யதார்த்த நன்மன மக்களிடத்தில் இதைக் கொண்டுபோய்ச் சேர்ப்பது நம் தலை மீது கடமையாக உள்ளது.
அதற்குத் தகுதியான வர்களாக நாம் ஆகிக்கொள்ள வேண்டும். இவையாவும்
ஆதி மார்க்க னீதி அவையின் குருபிரான் அவர்களால் அருளப்பெற்றது

.



Copyright © AMNA Trust, Chennai

**10th July, 2021 இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

ஆதி மார்க்க னீதி அவையில் 10-7-2021 சனிக்கிழமை (காலை 11.00-1.00 மணி) அன்று குருபெருமானவர்கள் கற்பிக்கும் இசை வகுப்பின் இன்னமுத மொழிகள். ஸ்ருதி-மாதா லயம் பிதா பாடல்களை இசையோடு ராகத்தோடு, தாளத்தோடு பாடுவதற்கு ஆர்வமும், முயற்சியும் சாதனம். ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவமாக இறைவன் அளித்த அமானித சொத்தில், மிக முக்கியமான சொத்து, சப்தம் (வாக்கறிவு) விலங்குகளுக்கு ஒரே சப்தமாகவே இருக்கும். அதனதன் இனங்களுக்கு மட்டும் புரியும். ஆனால், மனிதனின் ராக ரகமான சப்தம் - சர்வத்தையும் அறிவிக்கும் உன்னத சிறப்புடையது. இறைவனை அடைவதற்கான சாதனங்களிலே மிக முக்கியமான சாதனம் - இசை. அருளாளர்கள் அனைவருமே இசைக்கு வசமானவர்களே. ஏசுனாதர், னபிகள் னாயகம் வசனமாகவே சொன்னாலும், அவர்கள் பேசுவதே இசைபோல் இருக்கும். கூவும் குரல் மேவும் தொனி ஓசையரே. புத்த பகவான் சன்னிதி முன்னிலையில் 5000 பேர் சேர்ந்திருந்தாலும், அவர் மெல்லிய ஓசையில் பேசுவார்களாம். பெரியோர்களின் ஓசைக்கு இசைந்திருக்க வேண்டுமென்பதை உணர்த்தும் திருக்குறள் ஈதல் இசை பட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு. மெய்ஞ்ஞானத்திற்குள் நுழைந்து அதன் உள்ளார்ந்த அறிவார்ந்த தேவ பாஷையை உன் பாஷையாக ஆக்கி கொள்ளக்கூடிய வல்லப வசந்த சொத்து இசைக்குள் இருக்கிறது. ஹார்மோனியம் காற்றின் மூலம் இயங்கும் இசைகருவி. காற்று பை விரிந்து சுருங்குவதன் மூலம் சப்தமானது உண்டாகிறது.

ஸ ரி க ம ப த நி ஸ   ஸ நி த ப ம க ரி ஸ
15-வது மேளகர்த்தா ராகம் மாயமாளவகௌளை ஜன்ய ராகம்-னாதனாமகிரியா. இது மிகவும் பழமைவாய்ந்த ராகம். இறைவன் மனுக்களை உண்டாக்கிய நாளிலிருந்து இசையானது அவனோடு தவழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆதி மெய் உதய பூரண வேதாந்தம் (முகப்பு)
னீதியெனும் பொருளான மனுக்குலத்தை.... பாடல் எளிமையாக பாடும் வகையில் (ம - ப - த) (த - ப - ம) என்ற சுருதிகளில் நம் தெய்வமவர்கள் அருளியுள்ளார்கள்.

ஆடலங்ஙன்னி (னற்று னைற்றாள்.பாடல்) 3 ஸ்வரத்தில் எளிமையான ராக தாளத்தோடு தெய்வமவர்கள் அமைத்து அதனுள் பார பெரிய இரகசியங்களை பொதித்து வைத்துள்ளார்கள். ஆண்டவர்கள் உபதேச காலத்தில் திருமாளிகையிலிருந்து வந்து தன் ஆசனத்தில் ஏறி அமர்வதற்கு முன் ஆடலங்ஙன்னி பாடல் பாடப்பெறும்.

ஏகதாளம் - ஒரே அங்கத்தையுடையது.
கண்ட சாப்பு தாளம் - த க த கி ட (த க - 2) (த கி ட - 3) (2 + 3) = 5 எண்ணிக்கையுடையது.
மிஸ்சரசாப்பு தாளம் -த கி ட த க தி மி (த கி ட- 3) (த க தி மி -4) (3+4) = 7 எண்ணிக்கையுடையது.
புகழும் திருக்கயிலை குல பூபா.... பாடல் - 22வது மேளகர்த்தாராகமாகிய மத்திமாவதியில் பாடப்பெற்றுள்ளது.

கலைமலை அரசராகிய ஆண்டவர்கள் வான னாட்டிலிருந்து இறக்கப்பெற்ற ஆதிமெய் உதய பூரண வேதாந்த த்திலுள்ள முகப்பு, ஞான அகவல், மெய்வழி னூல், ஐம்மணிப் பொதிகை, ஆடலங்ஙன்னி பாடல்கள் இன்றைய சபையில் பாடப்பெற்றது.

***10th July, 2021 மான்மியம் சபை***
***தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்***

இறைவனால் மனிதனுக்கு கொடுக்கப்பெற்ற வரம் இந்த அமாவாசை, பௌர்ணமி, போன்ற விசேஷ நாட்கள் ஆகும்.

**அமாவாசை**: ஆசீர் பதிக்கப் பெற்ற நாளாக, விசேஷமான நாளாக இறைவன் நமக்காக ஏற்படுத்தி உள்ள, நாளில் தான் எல்லா பொக்கிஷங்களும்


Copyright © AMNA Trust, Chennai

இருக்கிறது. காலச்சக்கரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய விஷயம் அமாவாசை, இதை அறியவேண்டுமானால் மெய்ஞ்ஞான ராஜபாட்டையில் பயணிக்க வேண்டும். அமாவாசை தான் full moon day என்று ஞானிகள் கூறுகிறார்கள். சூரியன் மறைவதும் உதிப்பதும், சந்திரன் வளர்வதும் தேய்வதும் உயிரினுடைய ரகசியமாக இருக்கிறது.

**பௌர்ணமி**: வித்தில்லா வித்து விளைந்து வரக்கூடிய இரகசியமே பௌர்ணமி. சந்திரனுடைய சுழற்சி கணக்கு 27 நாட்களாக உள்ளது. பௌர்ணமி பூரண நிலவு பூரணத்தைப் பற்றி ஆண்டவர்கள் தங்களுடைய ஆதி மெய் உதயபூரண வேதாந்த நூலில் பல இடங்களில் அருளியுள்ளார்கள்.

**வளர்பிறை**: வளர் பிறை என்பது வளர்மதி, மதி என்பது அறிவு, மதி வளர அதைத் தேடணும். ஆண்டவர்களும் அறிவைத் தேடு என்கிறார்கள். எங்கு என்றால் அறியாமைக்குள்தான் தேடவேண்டும். ஆண்டவர்கள் தாங்கள் பெற்ற அரிய தவக் கிள்நாமத்தை தங்கள் மக்களுக்கு சிரசில் அறிவின் அடையாளமாகச் சூட்டி அழகு சேர்த்தார்கள்.

கோடாயிதக் கூர்வாக்கியம். எண் 62 சபையில் படிக்கப் பெற்றது

**விஸ்வரூபக் காட்சி:**-பூமியிலிருந்து பல கோடி மைல் தூரத்திலுள்ள ஒரு பொருளைப் பார்க்கக் கூடிய அதிசய சக்தி மனிதனைத் தவிர மற்ற எந்த உயிரினங்களிடத்திலும் இல்லை. அப்படியான அறிவுப் பொருளை, பட்டினத்தார் பூரணமாலையில் "உள்ளும் புறம்புமாய் உடலுக்குள் நீயிருந்தது எள்ளவும் நான் அறியாது இருந்தேனே பூரணமே." என்று அனுபவிக்கின்ற பொருளும், அனுபவிப்பதற்கான பொருளுமாய் இருப்பதை அறியாமல் இருந்தேனே என்கிறார்கள்

ஞானமுறையிடு பாடல் 34: "உள்ளது னூறேயாண்டில்..." பாடல் படிக்கப்பெற்றது மனிதனுடைய பூரண ஆயுள் கணக்கு பற்றி இந்தப் பாடலில் அருளியுள்ளார்கள். நமது வயது வாழ்நாள் பற்றிய ரகசியத்தையும், வீணாகப்போகும் நாளை வீணாகாமல் இருப்பதற்கான உபாயத்தையும் இந்தப் பாடலில் விளக்குகிறார்கள்.

திருவாசகம் அன்னைப்பத்து பாடல் 2 படிக்கப்பெற்றது. அதில் வரும் அன்னே என்பது ஆண்பாலாகிய இறைவனைக் குறிக்கும் ஒன்றாகும். கருனணக் கடலாகிய தங்கள் குரு பிரானைப் பார்த்து அன்னே, அம்மே, என்று உருகி உருகிப் பாடுகிறார்கள்

தேவாரத் திருப்பதிகம்: முதல் திருமுறை - ஸ்தலம் - திருவலிதாயம் - பாடல்: 10 படிக்கப்பெற்றது. அதில் இப்பாடலில் திருவெனும் ஓரறிவாக விளங்குகின்ற வலிதாயமாக இருப்பது குருபிரானுடைய அருளாகிய அறிவின் கிரணமாகும். அத்திருவருள் நம் மனதைப் பண்படுத்தி வலிமையான அறிவாக, ஓரறிவாக ஆக்குகிறது.

ஆதிமான்மியம்: சன்னதம் பெரும் பருவம் ஓதப் பெற்றது "ஒத்தையான் மறைஊணிய முத்திய "பொன்னிலமாகிய அழியாத நாட்டில் ஆமென் வித்தை ஊணி வைக்கிறார்கள். அட்சரம் தாண்டி ஏகாட்சர நாயகர் ஒத்தையாய் ஒரே மனமாய் ஒரே எண்ணமாய் முக்குணங்களற்ற நிர்குணமாய் ஒன்றுக்குள் நிற்கவைத்த சொற்குணா உற்பரன். எமன் எல்லையில் நம்மை வெற்றிபெற வைப்பதற்காக வந்ததுவே வேதத்தாய் மான்மியம்'' ஆண்டவர்களுடைய இச்சை இந்த உலகத்தை உய்விக்கும் பெருங்காரியத்திற்குத் துணைக்கருவிகளாக நாம் இருக்க வேண்டும் என்பதே. ஆண்டவர்களின் உத்திரவின் படி யதார்த்த நன்மன மக்களிடத்தில் இதைக் கொண்டுபோய்ச் சேர்ப்பது நம் தலை மீது கடமையாக உள்ளது. அதற்குத் தகுதியான வர்களாக நாம் ஆகிக்கொள்ள வேண்டும். இவையாவும் ஆதி மார்க்க னீதி அவையின் குருபிரான் அவர்களால் அருளப்பெற்றது.



Copyright © AMNA Trust, Chennai

**11th July, 2021 சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

புதுமனை குடியேற்றம்: இந்த இடம் பூமி உண்டான காலத்தில் இருந்து இருக்கிறது. அறிவில் குடியேற்றம் நடக்கக்கூடிய நாள் புதுமனைக் குடியேற்றம்.

அறிவு: ஒன்றைப் பற்றி அறியாமல் இருக்கும் போது அறியாமை. அதைப் பற்றி அறிய முற்படும்போது அறிவு. அறிவைத் தேடுவது அறியாமைக்குள் தான்.நான் இந்த உடல் என எண்ணுவதே மிகப்பெரிய அறியாமை. நான் என்பது இந்த உடல் அல்ல என்பதை அறிவதே அறிவு. இறைவனைப் பற்றி அறியாமையில் இருப்பதால் தெய்வ நம்பிக்கையில், வழிபாட்டு முறைகளில் நாம் ஏமாற்றப்படுபவர்களாக இருக்கிறோம். உலக காரியங்களுக்கு இறைவன் தேவையில்லை. "தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்." என தெய்வப்புலவர் கூறுகிறார். இறைவனை நினைவூட்ட மெய்ஞானிகளால் ஏற்படுத்தப் பெற்றுள்ள நகல்களே கோவில்கள். அதிலுள்ள தெய்வ மூர்த்தங்கள் யாவும் எதற்காக என்று சிந்தித்தால் அசலைக் கைக் கொள்வதற்காகத்தான். நிஜமான தேடுதலுடன்"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினோர்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" எனத் தாயுமானவர் அருளியுள்ளார். இறைவனை வணங்குபவன் மனிதன் மட்டுமே. தன் தேகமாகிய கடத்துள் ஒரு தலைமுறை காலம் குடியிருந்து வருவதால் ஆதித்தமிழன் கடவுள் என்று பெயர் வைத்தான். இறைவனை அடைவதற்கான வழி வேதத்தில் கூறப் பெற்றுள்ளது. வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ள நற்றாள் தான் வேதப் பொருளாக பிள்ளையார் சுழியாக எழுதாத எழுத்தாக நம் எல்லோர் தலையிலும் இருக்கிறது.தாய் வயிற்றில் நம் தலையைக் கட்டியது எதுவோ அதுவே தலையான தலையாகிய "சா காத்தலை" எனும் இறைவன்.


*ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்*

இறைவனை அடையத் தடையாக இருப்பது மாயையாகிய மனமே. மனச்சம்மதம் மெய்ஞானத்தின் அடிப்படையாக இருக்கிறது. மனதிற்கு கடிவாளம் போடும் இரகசியத்தையே "மயங்காதிரு மனமே" என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மனம் எனும் உள்ளம் தெளிந்தால் அதுவே நித்தியமான சந்தோஷம். மூச்சு லயமாகிய மனோலயத்தை குருவின்பால் பெற்றுக்கொள்பவனே மறுபிறப்பாளன். மனதை அறிவாக மாற்றுவதே பிரம்மவித்தை. அறிவை முன்னும் அந்த அறிவின் வழி மனதையும் நடக்க வைப்பது தான் மெய்வழி. அறியாமையில் இருந்து அறிவில் குடியேறிக்கொண்டால் நித்திய சந்தோஷமான வாழ்க்கையாக இருக்கும். நினைவென்னும் ஆகாயத்துக்குள் அறிவைக் குடியேற்றி உள்ளத்தெளிவு பெறுவதுவே புது மனைக் குடியேற்றம் என ஆதிமார்க்க னீதி அவையின் குருபிரான் அவர்களால் அருளப் பெற்றது.

**15th July, 2021 வியாழன் சபை**
**தொகுப்பு: ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி**

பிறவா இறவா முதல்வன் என்ற நாமம் இறைவனுக்கு தான் உண்டு.தன்னை அறிந்த பெரியோர்களின் அன்பு நமக்கு கிட்டினால் எமனிடத்தில் சிக்காமல் தப்ப முடியும் எனவும் இறைவனால் மனிதனுக்கு மட்டும் தன்னை அறியும் அறிவு கொடுக்கப்பட்டுள்ளது எனவும் ஞான முறையீடு பாடலில் வரும் வீணது


Copyright © AMNA Trust, Chennai

வாகிடாமல் மேலவரிடத்தில் சார்ந்தால் என்பது ஒரு ஆசீர்பாதமாக உள்ளது எனவும் அருளினார்கள். மேலும் திருவாசகம், தேவாரம் ஆகியவற்றிலிருந்து பாடல்களும் அதற்கான விளக்கங்களாக ஆசானின் நாதம் இன்னமுதம் ஆக உள்ளது எனவும்,கலிமா என்பது இன்சானிடத்தில் பூரணமாக உள்ளது எனவும், மால் பட்டம், பிரம்ம பட்டம், வான் பட்டம், யாவும் படித்து வாங்குவது அல்ல பழகி வாங்குவது எனவும், ஆசானின் வாய்மைக்குள் ஆகும் பொழுது தான் இது நமக்கு விளங்கும் எனவும் பேசப் பெற்றது.

தொடர்ந்து குருபிரான் அவர்கள் நா னிலத்தில் தான் நர ஜென்மம் என்பதை அறிந்து அதிலிருந்து மாறி தெய்வ யோனியில் பிறக்க வேண்டும் எனவும்,தேவராய் பிறக்க தேரைந்து மந்திரம் எனவும் கூறினார்கள். மாசு மருவற்ற ரத்தம் மாமிசம் கலவாத ஆவிடை யோனியின்

மூலம் வேதமணி எனும் கருவறையில் நாம் மறுபிறப்பு பெற்ற பின்தான் எழுவகைத் தோற்றங் களையும் நம்மால் விளங்கிக் கொள்ள முடியும் எனவும்,னாத வடிவாகிய இறைவன் ஆசானின் னாவின் மூலமாக வெளியாகி மெய் மணம் கமழ்கிறது எனவும்,முந்திய ஜென்மம் என்பது முந்திய மனம் எனவும், னரன், மனு, தேவன் என்பதற்கான அடையாளம் வாக்கில் உள்ளது எனவும்,சர்வ தோற்றத்திற்கும் காரணமாக இருப்பது ற்றமில்லாமையாகிய வஸ்து எனவும் அதைத் தன்னில் அறிபவனே னால் வகை யோனி மற்றும் எழுவகைத் தோற்றத்தையும் அறிந்தவனாகிறான், என குரு பிரானவர்கள் அருளி அவையை நிறைவு
செய்தார்கள்.

***17th July, 2021 இசை வகுப்பு***
***தொகுப்பு: ஸ்ரீ. பார்த்திபன்***

குரு கொண்டல் அவர்கள் அறிவிப்பின் படி ஆதி மெய் உதய பூரணம் பக்கம் 290ல் உள்ள "ஐம்மணிப் பொதிகையின் முகப்பு பாடலான பரவிரதாச் சாரியென்று" தொடங்கும் பாடலையும் அதனை தொடர்ந்து வரும் பாடலும் குழந்தைகளால் தனித் தனியாக பாடப்பெற்றது. அதனைத் தொடர்ந்து ஆதி மெய் உதயபூரணம் முகப்புப் பாடலாகிய "னீதியெனும் பொருளான" பாடல் குழந்தைகளால் தனித்தனியே பாடப்பெற்றது. அதன் பின்னர் "தந்தருள வேண்டுமென்ற" மற்றும் "உண்டுறங்கும் ஊனக்கண்கா ணாதபஞ் ஞாட்சரமே" பாடல்களை இரண்டு விதமான இராகத்தில் குரு பெருமான் அவர்கள் படித்துக் காட்டியபின்னர் தொடர்ந்து இசைக் கருவி கொண்டு இசைத்து ஆதி மெய் உதய பூரண வேதாந்நம் பக்கம் 288ல் உள்ள "ஆறிரு சமயத் திற்கும்" என்ற பாடலையும், "தேகம்னம்போ லுள்ளஎம்குரு" என்ற பாடலையும் படித்துக் காட்டினார்கள். "பரவிரதாச் சாரியென்று" வரும் பாடலில் ர, ரா, ரி வரிசை இருப்பதாகவும், படிக்கும் போது பிழையில்லாமல் படிக்க வேண்டும் எனவும் 'ழ' 'ள' போன்ற உச்சரிப்புகள் மிகவும் முக்கியமென்றும் கூறி சாலை ஆண்டவர்கள் எழில் பல கலைகள் பாடலை அருளியதன் னோக்கமும் எழுத்துக்களை சரியாக உச்சரிப்பதற்காகத்தான் எனவும் அருளினார்கள். தொடர்ந்து வெஞ்ஞமரி லேவிஜயன்", "தந்தருள வேண்டுமென்ற" பாடலும் தாளத்துடன் பாடப் பெற்றது, இந்த பாடல் "னீதியெனும் பொருளான" இராகத்தில் அமைந்துள்ளதையும், தெய்வம் தவத்திலிருந்து பாடியதையும், இதில் உச்சரிப்பும், கவனமும் மிக மிக முக்கியம் என திருவாய் மொழிந்நார்கள்,

"அறியவென்று மறைகளெல்லாம்" என்ற பாடலை இரண்டு இராகத்துடன் பாடி காண்பித்து அதை பழக உத்திரவிட்டார்கள்,
இந்த பாடல் மிகவும் பொறுமையாக சுருதியுடனும், தாளத்துடனும் பாட வேண்டும் என்றும், "இருனிலத்தி லெவருமெழு" என்ற பாடலை "எழுதாத" என்பதை இருமுறை பாட வேண்டுமென்றும்,

சுருதி மாதா, லயம் பிதா என்றும், "னம்மை பேச வைப்பதும், கேட்க வைப்பதும், பார்க்க வைப்பதும் எதுவோ அதுவே பஞ்ஞாட்சரம் என்றும்", இதயத்தை தைத்து னினைவில் உட்கார்ந்து அதை செயலாக பிரட்டி காட்டும் பொழுதுதான் உயிரோட்டமாக சிறப்பிக்குமென்றும்,


Copyright © AMNA Trust, Chennai

சாலை ஆண்டவர்கள் அனுபவத்திற்காக தான் பாடல்களெல்லாம் இயற்றினார்களென்றும், அவரவர்களுக்கு அந்த அனுபவம் பெற்று பாடும் பொழுது கற்பித்தவர்கள் மகிழ்ச்சி அடைவார்களென்றும், அதற்காகவே ஆதி மார்க்க னீதி அவை இசைப் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டதையும்,

தெய்வமே னம் னாவில் னின்று பாடுவதாக உணர வேண்டுமென்றும், வேதத்தில் இருமுறை பாடலை பாட வேண்டுமென்று இருந்தால் அதில் இரகசியமும், விசேசமும் பொதிந்நிருப்பதாகவும், திருவாய் மொழிந்நார்கள், தொடர்ந்து "தேகம்னம்போ லுள்ளஎம்குரு", "தந்தருள வேண்டுமென்ற", "ஒன்றான ஐம்மணியாம்" மற்றும் "அறியவென்று மறைகளெலாம்" என்ற பாடல்களை வரும் னாட்களில் பயிற்சி செய்ய உத்திரவிட்டார்கள்.

**17th July, 2021 மான்மியம் சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. பழனிவேல்**

ஆதிசக்தி மஹமூது தாய், பரமேஸ்வரனுக்கு பரமேஸ்வரியாக, சகோதரியாக உள்ளது தத்துவ ரகசியம் எனவும் தோற்றங்கள் யாவும் ஒரு நாள் மறைந்தே போகும் என்றும், தோற்றத்திற்கு காரணம் மூன்றாவது கண் எனவும் கூறினார்கள். அறுசுவை அனுபவிப்பதும் ஆறாவது அறிவின் மூலம் இறைவனை அறிவதும் மனித குலம் மட்டுமே என்றும், எல்லோரும் ஓர் குலம் என அறியும் போது தான் சமத்துவம் உண்டாகும் எனவும் கூறினார்கள். ஐம்பூதங்களால் ஆனது உடலன்றி ஆன்மா அல்ல என்றும் கிரகங்களை நிக்கிரகமாக்குவதே அறம் எனவும் அருளினார்கள்.

திருவாசகம் மற்றும் தேவார திருப்பதிகம் பாடல்களுக்கான விளக்கங்களும், அனந்தரும் ஆனந்தரும் ஒன்றல்ல எனவும் வெளிக் காற்றைப் பிராணனாக மாற்றும் சக்தி நம்மிடம் இல்லை என்றும் அளக்கவே முடியாத ஆகாயத் திலிருந்து வரும் சப்தத்தை அளவிட முடியும் என்றும், ஞானப்பாலாகிய தில்லை அமுதம் செவிச் சுவை எனவும்

தமிழில் உள்ள நெடில், குறில்,காலத்தின் ரகசியம் எனவும் 12 ராசி, 27 நட்சத்திரம், 9 கிரகங்கள் யாவும் தமிழுக்குள் உள்ளது எனவும் சாலையில் உள்ள நடைமுறை பழக்கங்கள் சாமித் தோப்பு வைகுந்தர் அய்யா அவர்களைப் பின்பற்றுபவர்களிடமும் உண்டு எனவும்

தென்தமிழக கோயில்களில் சட்டையுடன் உள்ளே செல்ல அனுமதி இல்லை எனும் ஐதீகம் மானிடச் சட்டையை விட்டு தான் இறைவனை அடைய முடியும் என உணர்த்துவதாகவும், அறிவு வடிவாக மாறினால் மட்டுமே இறைவனிடம் போக முடியும் எனவும் கூறினார்கள்.
சாணார் குல வேதமாகிய அகிலத்திரட்டு அம்மானை பற்றிய விளக்கங்களையும் கூறிய பின் தென்னாடுடைய சிவனே போற்றி என்பது சிவன் குடியிருக்கும் தென்பாகமாகிய தலையைக் குறிப்பது எனவும் வைகுண்டரகசியமும், கடலுக்குள் நாராயணன் பள்ளி கொண்டு இருக்கும் நிலைகளை உபதேச ரகசியங்கள் மூலம் அறியலாம் எனவும், தேவ குரு என்பது உருவ அடையாளம் இல்லை. அறிவின் பூரணச் செயலின் அடையாளம் என்பதையும் கூறினார்கள். சபை என்பது உலக காரியத்திற்குத் தேவை இல்லை எமனிடமிருந்து மீட்பு அடைந்து மரணமில்லா பெறுவாழ்வு பெறுவதற்கே தேவை எனவும் அருளினார்கள்.

**18th July, 2021 சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

மாசிலான் மறைப்படியும் என்ற அமுத கலை ஞான போதம் இரண்டாம் காண்டம் பாடலை ஆதி மார்க்க னீதி அவையின் குருபிரான் அவர்கள் பாடியதைத் தொடர்ந்து "அளவி லாவெகு காலமிப் பூமியிற்" என்கிற குரு ஸ்தோத்திரப் பாடல் பாடப்பெற்றது. அதில் நிழல் என்பது என்னவாக இருக்கிறது என்பதையும் சத்திய வேதத்தில் கூறப்பட்டுள்ள

"நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவதுமில்லை"
என்பதைத் தெரிந்து கொள்ள ஒரு மெய்க் குருபிரான் கட்டாயம் வேண்டும்
என்பதையும் அண்டத்தில் உள்ள இறை பொருளே பிண்டத்தில் இருந்தும்


Copyright © AMNA Trust, Chennai

ஆட்சி செய்கிறது, இறைவன் மனிதனை தன் சாயலில் படைத்து இருக்கிறார், இறைவனின் சாயல் சப்தமாக உள்ளது என்பதையும், கால் வழியில் பிறந்தவர் னரர், அந்த னரர் என்ற நாமத்தை ஒரு ஆசான் வந்து தன்னுடைய ஆவிடையோனியில் பிறக்க வைத்து மனு என்ற நாமத்தை தந்தருளுகிறார் என்பதையும் இந்த உடலை இயக்கிக் கொண்டு இருப்பது பிராணனாக இருக்கிறது, அதுவே இறை சக்தியாக இருக்கிறது என்பதைப் பற்றியும் பேசப்பட்டது. தொடர்ந்து, கோவிலும் ஆகம விதிகளும் பற்றி வலைத் தளத்தில் பேசப்பட்ட பகுதிகளின் சாரம்சம் பற்றியும் இதற்கான விரிவான விளக்கங்களை *www.amnatrust.org* என்ற இணைய தளத்தில் பார்த்தும் கேட்டும் பயன்பெறலாம் எனவும் கூறப்பட்டது.

மேலும் சிற்றறிவில் இருப்பவர்களை தன் னாதத்தின் மூலமாக பேரறிவில் ஏற்றி வைக்கிறவரே மெய்யான குருபிரான் எனவும், அடிமுடினடு, அலிபு லாம் மீம், அகரம் உகரம் மகரம், இவை யாவற்றையும் மெய் உணர்வைத் தரும் ஆசான் னாதத்தால் மட்டுமே பெற முடியும் எனவும் கடவுள் அளித்த மகத்தான பரிசே இந்த மானிட வாழ்க்கை, மனிதனுக்கு தரப்பட்ட அமானிதம் என்கிற அறிவு ஒரு மேன்மையான விஷயமாக உள்ளது எனவும் மூச்சுபயிற்சி மற்றும் யோகா செய்தாலே முத்தி கிடைக்கும் என்ற அறியாமையைப் பற்றியும் பேசப்பட்டது.

மேலும், மனிதனுக்கு மட்டுமே இந்த ஞானம் என்பதும் இதற்கான தேடலும் உள்ளது எனவும், வேதங்களில் கூறப்பெற்றுள்ள. அம்மா என்பது பெண்ணையும், அம்மே என்பது ஆணையும் குறிக்கும் என்பதையும், மாரியாத்தா என்பது மழையாய் மாறி இந்த உலகத்தை வாழ வைப்பது என்பதும் விளக்கப் பெற்றது,

தொடர்ந்து ஆறாவது பிறவியின் பெயர் தெரிவை என்பதும் அது பொய்யைப் பொய் எனத் தெரிந்து கொள்வது எனவும் அறிவியல் என்பது ஒரு மனிதனுடைய நினைவில் இருந்து வருவது எனவும் இதனையே பெரியோர்கள் நினைவில் பதியும் னாத மின்னுடல் என்று சொல்கிறார்கள் எனவும் மரணத்தில் செய்யும் சடங்குகள் யாவும் மனிதனுக்கு பயத்தின் மூலம் பக்தியைக் கூறும் பதினெட்டு கான் வாதக்களில் ஒரு வழி என்பதையும் னரகம் என்பது னரகவாதி வசிக்கும் இடம், னரன் என்பது கால் வழி பிறந்த சூத்திரன் எனவும் பிரம்மம் என்பது மனிதரின் முகத்தில்தான் உள்ளது எனவும் ஆறாவது அறிவை இன்னது என தொட்டுக்காட்டி, முறை சங்நாரம் செய்து மனு வாய் மாற்றுகிறார்கள் எனவும் பேசப் பெற்றது.

**18th July, 2021 சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. வடிவேலன்**

**சதாசிவ பாகம்:** சர்வமும் ஆகாயத்திற்குள் தான் அடக்கம்.எழு வகை தோற்றம், சொர்க்கம்,னரகம், அனைத்தும் னினைவென்னும் ஆகாயத்திற்குள் கட்டப்பெறுகிறது என்பதைப் பற்றி விரிவாக பேசப்பெற்றுள்ளது.

**எண்குணத்தான்:** ஓர் அறிவு முதல் ஐயறிவு வரை அனைத்தும் முக்குணத்திற்குள் தான் அடங்கும்.முக்குணமற்ற மெய் ஞானிகளுக்குத்தான் எண்குணத்தான் என்ற பெயர் பொருந்தும்.அதுவே னிற்குணம்,சற்குணம் என்பதைப்பற்றி ஆதி மான்மியம் சாட்சிகளுடன் பேசப்பெற்றுள்ளது.

**மூன்றாவது கண்:** பார்வை இல்லாத குருடனுக்கு ஒரு மருத்துவரின் மூலம் ஆபரேஷன் செய்து பார்வை வந்நால் அவனுக்கு எவ்வளவு பெரிய ஆனந்நம் சந்நோஷம் கிடைக்கும்,ஆனால் அவனால் அனித்தியமான அழிந்து போகக்கூடிய பொருட்களைத்தான் பார்க்க முடியும்.ஒரு மெய்க்குருபிரான் மூலம் னமக்கு மூன்றாவது கண்ணாகி அறிவுக்கண் திறப்பிக்கப்பட்டால் தான் னித்தியத்தை, அழியாத பொருளை, உத்தமப் பொருளாகிய ஆண்டவரை காண முடியும் ,என்பதைப் பற்றி பட்டினத்தார் பாடல்,திருமந்நிரம்,ஆதி மெய் உதய பூரண வேதாந்நம்,ஆதி மான்மியம் ஆகிய னூல்களின் மூலம் விரிவாக பேசப்பெற்றுள்ளது.

**திருச்சிற்றம்பலம்:** சிவாயனம வென சிந்நித்து இருப்பது என்றால் வாயால் சொல்வது என்று னினைத்தோம்.ஆனால் னமது வாழ்க்கையில் வாயால் சொல்லிக்கொண்டிருந்நால் எந்த வேலையாவது னடக்குமா னிச்சயமாக



*Copyright © AMNA Trust, Chennai*

னடக்கவே னடக்காது. அதுபோல னமசிவய என்று வாயால் சொல்வதால் பலன் கிடைக்காது என்பதைப் பற்றியும் அதை எவ்வாறு அசலாகப் பெறுவது என்பதையும் சிவவாக்கியம் பாடல் (ஐந்நெழுத்திலே பிறந்து), ஆதி மெய் உதய பூரண வேதாந்நம் னூலின் மூலம் பேசப்பெற்றுள்ளது.

**னாலு வகை யோனி, எழுவகை தோற்றம்:** இந்ந உலகமாகிய வீட்டிற்க்குள் உயிரினங்ஙள் எவ்வாறு வருகின்றன, அவை எழு வகை தோற்றங்ஙளாகவும், ஓர் அறிவு முதல் ஐயறிவு வரை முக்குணங்ஙளாகவும், இதில் னரனாகிய னாம் ஆறாவது அறிவைப் பெற்று மனிதனாகிப் பின் தேவனாகும் னிலைகள் குறித்தும், மேலும் எவனொருவன் தனக்கு சொந்த தேகம் தேவையில்லை என்று லட்சியம் இல்லாமல் வாழ்கின்றானோ அவன் னரன் என்றும், சொந்த தேகத்தை தேடுபவன் மனிதன் என்றும், சொந்த தேகம் தெரிந்து அதில் குடியேறி வாழ்பவன் தேவன், அமரன் என்பதைப் பற்றியும் மாணிக்க வாசகர், வள்ளலார், சாலை ஆண்டவர்கள் அருளிய வேத சாட்சிகள் மூலம் பேசப்பெற்றுள்ளது.

**மனித தேகம் யாரால் எப்படி கட்டப்படுகிறது?** இந்ந உலகத்தில் னாம் தங்ஙி வாழ ஒரு வீடு கட்டுவதற்க்கு கொத்தனார் மற்றும் கட்டுமானப் பொருட்கள் எவ்வாறு தேவையோ அது போல, னாம் இந்ந உடலில் யாரால் எப்படி கட்டி குடியேறினோம் என்பதைப் பற்றி ஔவையார், விவேக சிந்நாமணி, சாலை ஆண்டவர்கள் அருளிய வேதங்ஙளின் மூலம் விரிவாக பேசப்பெற்றுள்ளது. மேலும் தவன துவசம், சத்தம் பிறக்கும் இடம், னாபிக்கமலம், அறுசுவை யொளிக்கும் இடம், பிரம்மா, விஷ்ணு, தொப்புள் கொடி ரகசியம் இவைகளைப் பற்றியும் பைபிள், ஆதி மெய் உதய பூரண வேதாந்நம் னூல்களின் மூலம் பேசப்பெற்றுள்ளது.

**22nd July, 2021 சிவகாசி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. வடிவேலன்**



22-07-2021 வியாழக்கிழமை. மாலை 06 மணியளவில் சிவகாசி வேலாயுதம் ரஸ்தா வடக்குப் புறத்திலுள்ள ரோட்டரி சங்க அரங்கத்தில் ஆதி மார்க்க னீதி அவையின் மெய்க்குருபிரான் முன்னிலையில் னடைபெற்ற ஆதி மார்க்க னீதி அவையின் சிறப்பு னிகழ்வுகளின் போது சபையில் தம் மக்களின் முகம் னோக்கி மொழிந்த னீதி போதனைகள். னான் உங்ஙளுக்கு எதற்காக வேண்டும்? பிறவாமையை பெறுவதற்கான ஒரு வழியை னமது தெய்வமவர்கள் ஜீவன் கண்ட சென்ம சாபல்யம் என்று அருளியுள்ளார்கள். இதற்காகத் தான் னான் உங்ஙளுக்கு வேண்டும். உலக தேவைக்காக னாம் இங்ஙு வரவில்லை. உலகில் எங்ஙுமே னடக்காத ஒரு காரியத்திற்காக னீங்ஙள் கேட்காமலே னா னாகவே உங்ஙளைத் தேடி மெய் உணர்வை உங்ஙளுக்கு பெற்றுத் தர வந்நிருக்கிறேன். இதை னன்றாக ஞாபகம் வைத்துக்கொள்ளுங்ஙள். இந்ந உண்மை னமக்கு வேண்டும் என்று அவரவருக்குள் இருக்கும் யதார்த்த னினைவே னம்மை இங்ஙு சேர்த்து வைத்தது. இந்ந னினைவுக்கும், அறிவுக்கும், சொத்துக்கும், சொந்நக்காரர் சாலை ஆண்டவர்கள். அவரால் ஏவப்பட்ட ஒருவர் மெய்வழி குழந்நைசாமி கவுண்டர் ஐயா அவர்கள். அவர் இட்ட பணி இது. னாம் ஒரு கருவி அவ்வளவுதான். இங்ஙு பாடப்பெறும் பாடல்கள் ஒவ்வொன்றும் அனுபவம். ஜீவன்- ஜீவசக்தி என இரண்டு இருக்கிறது. ஜீவன் என்பது உன் பார்வையில், கேள்வியில், சுவாசத்தில், ருசியில், தொடு உணர்வில் இருப்பது. அது பஞ்ஞ பூதத்திற்கும் தலையாக பஞ்ஞ பூதத்தலை அரசனாக விளங்ஙுகிறது. அதை மடக்கிப் பிடிக்கும் செயலே அடக்கம். ஆனால் அது அடங்ஙாமல் மனமாக மாறி ஓடிக்கொண்டே இருக்கிறது ஏனெனில் மனம் னீரின் அம்சம் அது கீழ் னோக்கியே பாயும். அதையே னில்லாத னீர்சடை



Copyright © AMNA Trust, Chennai

மேல் னிற்கவைப்பனவாகிய என்பது. அப்படிப்பட்ட அந்த னீராகிய மனதை ஆவியாக்கினால் மேல் னோக்கிப் பாயும். இது தான் பிரம்ம வித்தை, என்னைப் பேச வைப்பது அதுதான். இதை பழகியவரிடத்தில் கற்றால் சுலபமாக தெரிந்து கொள்ளலாம். இல்லையெனில் கோகரணம் கஜகரணம் போட்டாலும் தெரிந்து கொள்ளவே முடியாது.

**மனிதன் என்றால் என்ன**?

மனிதரிலே ஆறாவது அறிவை தெரிந்நவனுக்கே ஜீவன் என்று பெயர். மற்றவை எல்லாம் ஜீவன் அல்ல.ஆறாவது அறிவின் தன்மை இன்னது என்று தெரிந்து அதன் பயன் தெரிந்து பலன் பெற்றவன் எவனோ அவனே மனிதன். விஸ்வரூப தரிசனத்தின் சத்தம் எங்ஙே புழங்ஙுகிறது என்று தேடுபவனே மனிதன்.

ஆறாவது அறிவே சர்வ மூலமந்நிரங்ஙளின் இருப்பிடம். அஷ்டாட்சரம், பஞ்ஞாட்சரம், காயத்திரி, கலிமா, அருட்ஜோதி வடிவமாக விளங்ஙுவது ஆறாவது அறிவு. அதை பார்த்தவனுக்கே பார்த்தன் என்று பெயர்.இதுவே ஜீவன் கண்ட சென்ம சாபல்ய குலம் ஆகும் செயல். இந்ந னெடும் செயலை உங்ஙளுக்கு ஆக்கி வைக்கவே 29 ஆண்டுகள் ஒரு பெரியோரிடத்தில் பழகி அனுப்பி வைக்கப்பட்டுள்ளேன்.னானாக வரவில்லை. Purpose of visit, னமக்குள் உள்ள பிரணவ தேகத்தை, சுத்த தேகத்தை அறிந்து கைகொள்வதே ஆகும். எனவே என் வார்த்தைக்கு செவி கொடு அது போதும்.என்னுள் இருக்கும் மெய்ஞ்ஞான னிலைகளை னீங்ஙள் உணர்ந்து கொண்டால் அது வரமாதி வரங்ஙளை உனக்கு தந்நருளும்.

மேலும் இச் சபையில் அடி முடி னடு, சொந்ந தேகம், எமனணுகா தேகம், அன்னம், இசை, மான் மழு, பஞ்ஞாட்சர மேனி (மனம்), மெய் வணக்கத்தின் பலன், Positive Energy, பிரபஞ்ஞ ஆற்றல், தமிழ், வாசியோகம், காலச்சக்கரம், னவகிரக னிலைகள், னால் வகை யோனி, எழு வகைதோற்றம், இவைகளைப் பற்றி விரிவாக னமது குருபிரான் அவர்கள் திருவாய் மலர்ந்து அருளியுள்ளார்கள்.மேலும் “நால்வகை யோனி எழுவகைத் தோற்றம் அறிவது உன்னுள் ஆசான் தன்னிடத்தே” என்று னமது தெய்வமவர்கள் அறிவு அறி பாடத்தில் கூறியிருப்பதை மையமாக வைத்து, அமரர், மனு, விலங்ஙு, புள், ஊர்வன, ஜலம் வாழ்ஜந்நு, தருக்கினம் என்னப்பெற்ற எழு வகை தோற்றத்தில் காணப்படாத னரனாக இருந்ந னம்மை, குருபிரான் அவர்கள் தன் கருணையினால் மனு என்ற தோற்றத்திற்கு மாற்றி பிறகு அமரர் (தேவர்) என்ற பதத்திற்கு னம்மை ஏற்றி வைப்பார்கள் என்றும் பேசப் பெற்றது. இவை யாவும், ஒரு மெய்க்குரு பிரான் அவர்கள் தன் சீடனை அழிவிலிருந்நு அழியாமைக்கு ஆக்கி னித்தியனாக்கும் செயலேயன்றி, புறத்தில் உள்ள அழிந்நு போகிற உயிரினங்ஙளை வகைப்படுத்தி கூறுவது அல்ல, என்பதையும் மனிதனிடத்தில் மட்டும்தான் மோட்சம் அடைவதற்கு சாதனப் பொருளான மனம், அமானிதமாக, ஆறாவது அறிவாக, ஜீவனாக, பிரம்மமாக இருக்கிறது என்றும், அந்ந மனமே மாயையில் சிக்கி னபுசுகளாக மாறி கீழ் ஏழு லோகத்திற்கு சென்றுவிடுகிறது. அப்படி இருக்கும் மனதை ஆசான் அவர்கள் மெய்க்கல்வியின் மூலம் மெய்யறிவு உதயம் காட்டி அக விளைவு குடியேற்றி வைக்கும் செயலே னால்வகை யோனி, எழு வகை தோற்றம் என்பதையும் தொல்காப்பியர் அருளிய ஒன்றறி வதுவே உற்றறி வதுவே" என்று தொடங்ஙும் பாடலை ஆறு அறிவுக்கும் சாட்சியாக வைத்து, அதை னமது தெய்வமவர்கள் அருளியுள்ள, ஆதி மெய் உதய பூரண வேதாந்நத்தில் உள்ள பாடல்களின் மூலம் தெய்வத் தமிழின் வல்லபத்தோடு ஒப்பிட்டு மிகவும் சிறப்பான அனுபவத்தோடும் உணர்வுடனும் இன்னும் பல மேம்பட்ட னிலைகளும் சபையில் பகிர்ந்நு கொள்ளப் பெற்றது. மேலும் குருபிரான் அவர்கள் தோற்றம் என்றால் மறையும். எதில் இருந்நு வந்நதோ அதிலேயே போய் மறைந்நு விடும். எழு வகை தோற்றம் என்பது, உயிரின் ரகசியம்- அறிவின் ரகசியம்- உடல் உயிர் ஆன்மாவின் ரகசியம் என்று கூறி

***மெய்வழிக் குருமார் சொல் மேல் னோக்கமும்***
***பொய்வழிக் குரு போதங்ஙீழ் னோக்கமும்***
***பொய்யும் மெய்யும் பிரித்துனக் கோதிடும்***
***மெய்ன்னி லைப்போத மென்ற விதாகுமே.***

என்ற பாடலை பாடி சபையை னிறைவு செய்தார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

**23rd July, 2021 சிவகாசி சிறப்பு சபை (காலை)**
**தொகுப்பு: ஸ்ரீமதி. சித்ரா**

என்னமோ வென்று உம்மை எண்ணி விட்டிருந்தேன் இந்நாள் எனும் ஆதி மெய் உதயபூரண வேதாந்த நூலில் உள்ள பாடலில் "தன்னகம் துறந்த மூர்த்தி தங்குவது எங்கே தன்னில்" என்று இருந்தாலும் நான் எங்கே இருக்கிறேன் என தெரியவில்லையே!! என்று பாடுவது ஏன் என்று கேள்விக்கு மெய்ன்னிலைப்போதம் என்ற பாடலில் ஆண்டவர்கள் எங்கே என 71 முறை கேட்டு அதற்கான பதிலை இங்கே எனக் காட்டினாலும் வஞ்சப் புலன்களின் சதியால் நம்மால் அதை அறிய இயலவில்லை எனக் கூறினார்கள், அருள் அமுதத்தை வாரி வழங்கினாலும் வினையினால் அதை விழுங்க முடியாமல் அது போய் தொண்டையில் விக்கி கொண்டது என்கிறார் மணிவாசகப் பிரான்.தொடர்ந்து, உபதேசம் என்பது ஞானிகளின் மொழிகளைக் கவனத்துடன் உள் வாங்குகிற சக்தி நம்மிடம் இருந்தால் மனம், செம்மையாகி அதிலிருந்து உருவான நான், கவனம், இவற்றை அறிவதுவே உபதேசம் எனவும், அன்பெனும் ஓர் விசேஷத்தால் மட்டுமே மனமாகிய வினையை வென்று உய்ய முடியும் என அருளினார்கள்.

மேலும், வாசி என்பது பேசரிய பாதம் எனவும் இதுதான் அறிவு என்று உன்னுள் பிரட்டிக் காட்டுவதே வாசியோகம் எனவும்,உடலின் உயிரோட்டத்திற்குக் காரணமான பிராண ஓட்டத்தை பார்க்கும் வித்தையே வாசியோகம் எனவும்,அவ் வோட்டத்தின் மீது அன்பையும், கவனத்தையும், வைத்தால்அது ஏறாத நிலமிசை ஏற்றி வைக்கும் என்றும் "ஏற்றி இழுத்து இருகாலும் பூரிக்கும் காற்றைப் பிடிக்கும் கணக்காக" இருப்பதுவும் இதுவே என்றும், வாசி யோகத்தின் ரகசியத்தை அறியக்கூடிய இடமே கோயில் எனவும் அருளினார்கள். மேலும், தன்னை அறிவதற்குத் தடையாய் இருப்பது மனம். இந்த உடல் நாம் என்ற அறியாமையில் இருப்பதே ஞானத்திற்கு முதல் தடை. இந்த உடம்பு நான் அல்ல அது கடந்து அப்பால் உள்ள ஒரு பொருளாக இருப்பதை சைவத் திரு மேனியராக வரும் மெய்க் குருபிரான் தொட்டுக் காட்டினால்தான் சூட்சுமமாக உள்ள அந்த "நான்" என்பதை அறிகின்ற அதுவே தன்னை அறிவதாக இருக்கும் என அருளி அவையை நிறைவு செய்தார்கள்.

**23rd July, 2021 சிவகாசி சிறப்பு சபை (மாலை)**
**தொகுப்பு: ஸ்ரீமதி. சித்ரா**

காலம் தான் வாழ்க்கை. காலத்தின் ரகசியத்தை அறிவதுவே வாழ்வின் அர்த்தம் .வயது தந்ததின் பிரயோஜனம் மெய்ப்பால் அறியவே. அந்த வயதின் ரகசியம் அறிவதற்கான சத்திய ஸ்தலம் ஒவ்வொரு மனுத் தலையினுள்ளும் இருக்கிறது. அதனை அறிவதற்காக இறைவன் தந்தது தான் வயது, வாழ்நாள், காலம். அறிவறிந்த ஒருவர் மூலம் அறிவு வடிவாக ஆகிக்கொள்ளும் அந்த உண்மையான அறிவே வாழ்வின் அர்த்தமாக விளங்குகிறது.

வள்ளல் பெருமான் இந்திரிய, கரண, ஜீவ, ஆன்ம ஒழுக்கம் என்று 4 வகையாகக் கூறுகிறார். பார்வை, கேள்வி, பேச்சு, முகர்தல், தொடுதல் இந்த ஐந்தில் இருப்பது இந்திரிய ஒழுக்கம் .மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இந்த நான்கு சரியாக இருப்பது கரண ஒழுக்கம் .இதில் அகங்காரம் என்பது 'நான்' 'நான்' என எல்லாவற்றிலும் முன் வந்து நிற்கும். புலன்களின் தலைவனான மனம் அந்த கரணக் கூட்டத்துக்குள் செயல்படுவதை அறிவதுவே கரண ஒழுக்கம். அந்தக்கரணக் கூட்டத்துக்குள் இருக்கும் ஜீவனை அறிவதுவே ஜீவ ஒழுக்கம். அடுத்து ஆன்ம ஒழுக்கம். அதை அறியும் போதுதான் தன்னை அறிந்தவனாக ஆகின்றான். இதுதான் ஜீவகாருண்ய ஒழுக்கம் எனவும் ஞானத்தின் ஒட்டுமொத்த பிழிவுகளை வள்ளலார், புருஷார்த்தம் என்ற நிலைக்குள் வைத்துச் சொல்கிறார். அவை 1) ஏம சித்தி 2) சாகாக்கல்வி 3) தத்துவ நிக்கிரகம் செய்தல் 4) கடவுள் நிலையறிந்து அம்மயமாதல். மேலும் அருட்பெருஞ் ஜோதி என வள்ளலார் ஏற்படுத்தி வைத்த ஜோதி அருளுடன் ஆசானிடத்தில் நிறைந்திருப்பதேயாகும் எனவும் மாயையின் தோற்றமாகிய மயில் போல இருக்கும் நம்மைக்குயில் ஆக்கி வைக்கும் அறிவை அருளுவதே அருட் பெருஞ்ஜோதி என்றும், ஆதிசங்கரர் வகுத்தளித்த அறுவகை சமயத்துள் இருக்கும் பொருள் 'ஓம்' எனவும் அருளினார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

ஆடி மாத அம்மன் வழிபாட்டில் காப்புக்கட்டுவது, ஊருக்குள் இருப்பது, பத்தியம் இருந்து மாவிளக்கு ஏற்றுவது, கூழ் ஊற்றுவது, தீ மிதிப்பது இவற்றின் அகமியச் செயல் பற்றி பேசப் பெற்றது.

சுவை ஊறு ஒளி ஓசை நாற்றம் இவை ஐந்தின் வகைதெரிவான் கட்டே உலகு. அகமிய உலகமாக ஆன்ம ஜோதியாய் விளங்கும் சுயம் பிரகாசத்தை மெய்யாகவே விளங்கிக் கொள்ள ஆசானின் இரக்கம் ஒன்றினால்தான் முடியும் எனவும், ஒன்றே ஒன்றாக அவரவரின் இதயத்துக்குள் நின்று விளங்கும் ஆன்ம ஜோதியை அறியும் போதே மெய் மெய் ஆகின்றது எனவும் அவரவரின் வினையை அறுக்கும் ஒரே ஒரு காரியத்திற்கு மட்டுமே இறைவன் வேண்டும் எனக் கூறி அவையை நிறைவு செய்தார்கள்.

**25th July, 2021 தூத்துக்குடி சிறப்பு சபை**
**தொகுப்பு:ஸ்ரீ. விஜயகுமார்**



பொய்ப்பொருள் என்பது நமது தேகம். இதனை விட்டு அசலாகிய ஜீவனைக் காணவேண்டும் என்றும், பொய் என்பது உடல், மெய் என்பது இந்த உடலினுள் "நான்" என்று அமர்ந்திருக்கும் அவரவர் நாமமாக உள்ளது என்று அருளினார்கள். உலக காரியங்களில் தெளிவாக உள்ள நாம் கடவுள் எதற்காக வேண்டும் என்ற தெளிவு பெறவே இங்கு வந்துள்ளோம், அறியாமையிலிருக்கும் நாம் இறைவனைப் பற்றிய தெளிவான அறிவோடு வாழ்வதற்கான சூதானங்களை இங்கு பகர்கின்றோம். இந்த உலக காரியத்திற்கும் தெய்வத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை, உன் முயற்ச்சியும், நல் எண்ணமுமே எல்லா காரியத்தையும் செய்ய உதவுகிறது. "தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சி தன் மெய்வருத்த கூலி தரும்." மேலும் தீதும் நன்றும் பிறர் தர வாரா எனும் கூற்றின்படி அத்தனையும் நம்முள்தான் உள்ளது. 5 முக்கிய இடங்களாகிய காஞ்சிபுரம், காசி | திருவாரூர், திருவண்ணாமலை, சிதம்பரம், இவை யாவும் நம்முள் பார்க்கக் கூடிய ஒன்றாக இருப்பதை அருளினார்கள். பாடல்கள் படிக்கும் போது அதில் உள்ள ஏற்றஇறக்கத்தின் அவசியமும், எங்கு மூச்சு வாங்கணும் எங்கு விடணும் என்ற விபரமும், ஆண்டவர்கள் தங்கள் பாடல்களில் இதனை எவ்வாறு அமைத்துள்ளார்கள் என்பதையும் விவரித்தார்கள். கையெழுத்து என்பது தலைஎழுத்திற்கு ஒப்பானது, இதைப் போடவேண்டிய இடத்தை அறிந்து போட்டால் விதி என்பது மாறி மதியோடு வாழலாம் என்று அருளினார்கள். இங்கு நடக்கும் அவையின் நிகழ்வுகள் யாவும் பரிசுத்தஆவித் தெய்வத்தின் ஆசீர் பாதத்தினால் தொடர்கிறது என்பதை அருளிய பின்னர் இறைவணக்கத்துடன் சபை நிகழ்ச்சிகள் இனிதே நிறைவேறியது.

**29th July, 2021 வியாழன் சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

வியாழக்கிழமை (29/07/2021) ஆதி மார்க்க னீதி அவையின் காணொளிக் காட்சியில் வான்மதிக் கொரல், வாக்கியம் எண்-35, ஞான முறையீடு பாடல் எண்-37. திருவாசகம், சென்னிப் பத்து, பாடல் எண்-03. தேவாரத் திருப்பதிகம் முதல் திருமுறை, பாடல் எண்-01, ஆகிய வாக்கியம் மற்றும்|பாடல்களுக்கு ஆதி மார்க்க னீதி அவையின் குருபிரான் அருளிய விளக்கங்கள்: தொடர்ந்நிருந்து னோக்குங்நால் அவர்னாமம் தொல்புவியும் வானும் கொள்ளா" என்ற பாடலுக்கு யார் னாமம்? என்ற கேள்வியும் அதற்குரிய பதிலாக நாமத்திற்கு உரிய பொருளாக, சொந்த தேகமாக,


Copyright © AMNA Trust, Chennai

ஜீவனாக, அகரமாக, மூலமந்நிரமாக, பஞ்சாட்சரமாக விளங்குவதே அது என அருளினார்கள்.

ஆண்டவர்கள் தனது குருபிரானிடம் பெற்ற சொர்க்கபதி னித்திய பேரின்பக் கீர்த்தியின் சிறப்பையும்,மனிதன் பெற வேண்டிய பிறவாமை பலனையும் திருவாக்கியங்கள் மூலம் அறியலாம் எனவும் "பாய்மன வீட்டிற்" எனும் பாடலில் மனதோடு புலன்களின் மூலம் வாழும் நிலையை பேய் வாழ்க்கையென்றும், மனதற்ற வாழ்க்கையின் நிலையை ஒரு நிஜமான சற்குரு மூலம்தான் அறிய இயலும் எனவும் அதுவே அறிவுடைய வாழ்க்கை எனவும் கூறினார்கள். ஆறாவது அறிவு என்னவென்று அறியாதவன் நரன், அறிவை அறிந்து இறைவனை தேடுபவன் மனு, அறிவிருக்கும் தலம் அறிந்து அதில் வாழ்பவர்கள் தேவர்கள் எனவும் திருவாசகம், மற்றும் தேவாரப் பாடல்களின் மூலம் அறிந்து கொள்வது யாதெனில் குருபிரான் என்பவர் ஆண் சீடன் என்பவன் பெண் எனவும் னிரந்நர மகிழ்ச்சியை, சாதிமத வேற்றுமையின்றி மனுக்கோலம் எடுத்த அனைவரும் பெற்று மகிழவேண்டும் என்பதே அப் பெரியோர்களின் மேன்மையான னோக்கமாக உள்ளதை அறியலாம். ஆண்டவர்களும் மெய்ம்மணஞானத்தில்
"சீத ளஇரு பாத மென்சிரம் சேர்த்து என்னுளம் பூத்ததில் "என்றும் "சென்னிமலை வாசலுக்கு ளுட்புகுத வைத்து ஜீவனெனும் சிரஞ்சீவிக்கு செப்புமுபதேசம் எனவும் அருளிய வண்ணம் திருப்பெருந்துறையில் இருந்து நம்மை காத்து ரட்சிக்கும் குருபிரானே அழியும் தலையை அழியாத தலையாக மாற்றி சிரஞ்ஜீவி பதத்தை அளிக்கிறார்கள். இமையாத முக்கண்ணனையும், அவன் இருக்கும் இருதயக் கோயிலையும் அதிலிருந்து வணங்கக்கூடிய மெய்வணக்கத்தையும் காட்டி தந்த குரு வாழ்க குருவே துணை குருவைப்போற்றிகுடியோங்கி வாழ்கவே.

**31st July, 2021 மான்மியம் சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

31.07.2021 சனிக்கிழமை நடைபெற்ற ஆதி மார்க்க னீதி அவையின் காணொளிக் காட்சியில், குருபிரான் அவர்களால் "வாழ்வனைத்தும் தன்னெனது குலமுழுதும் தனையாண்டு" எனும் பாடலும் "வந்ந வேதம்வ ரைந்நப யத்தினால் " எனும் பாடலும் பாடப்பெற்றது. நாதநாமகிரியை என்னும் ராகத்தில் வரும் இதே சாயலில்தான் மான்மியத்தில் வரும் அனைத்து பாடல்களும் உள்ளன என்றும் கூறினார்கள். நாலுவரி பாடல்களான கலிவிருத்தமும்; நாதநாமகிரியை ராகத்தில் வரும் பாடல்களையும் நாம் நன்கு கற்றுக்கொண்டால் மான்மிய பகுதியில் வரும் பாடல்களை நம்மால் எளிதில் பாட முடியும் எனவும்; இந்த ராகத்தில்தான் எல்லா விருத்தங்களும் உள்ளது என்றும் கூறினார்கள்;

தொடர்ந்து பழஞ்ஞாலைப் பொன்னரங்க ஸ்தாபிதம் என்னும் தலைப்பில் உள்ள "வரந்நரு வாயில் னிற்பர்" என்னும் பாடலும் அதனை தொடர்ந்து மான்மியத்தில் தீர்க்க தரிசனப் பகுதியில் உள்ள "தொடர்ந்நுமே சென்றார் பின்னே " என்ற பாடல்களைப் பாடிய பின்னர், அவற்றின் பாவனைகளை உணர்ந்து பாடினால்தான் பாடலின் சுருதி சரியாக வரும் என்றும் கூறினார்கள்;

தெய்வத்திருப் பாடல்களின் திரட்சி என்னும் தலைப்பில் உள்ள "ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வ மாகி" என்ற பாடலின் சூட்சுமம் அதன் வார்த்தை முடிவில் உள்ள "உம்" "இ" யில்தான் உள்ளது எனவும் அதை அப்படியேதான் பாட வேண்டும்;அவற்றை நாமாக மாற்றக்கூடாது எனவும் அவை தேவரகசியங்களாக உள்ளது என்றும்; பாடல் வரியின் முடிவில் " உ" "இ" "ம்" "அ" என்று வருவதை ஆண்டவர்கள் ஏன் வைத்தார்கள் என்று பிள்ளைதமிழ் பாடலின் சூட்சுமத்தை அறிந்தவர்களுக்குப் புரியும். என்றும் கூறினார்கள். திருவிழா காலங்களில் பாடப்படும் பாடல்களில் உள்ள தேவரகசியங்கள் அறிவு பிராயம் வரும் பொழுது புரியும் என்றும் கூறினார்கள்.

அதனைத் தொடர்ந்து ஐம்மணிப் பொதிகை பாடலில் வரும் "குருகுலா திபர்கள்பதி யதிபா தீப" என்னும் பாடலில் வரும் ஈஸ்வரா என்னும் வார்த்தையை பிரித்துப் பாடக்கூடாது என்றும்; பாடலின் சொல், பொருள்,


Copyright © AMNA Trust, Chennai

பிரிக்காமல் பாட வேண்டும் என்றும், ஏனெனில் மெய்ஞானப் பாடல்களின் வார்த்தைகள், சொல், பொருள் மிகவும் முக்கியம் என்றும், அனைவரும் எளிதாக பாடக்கூடிய ராகங்களையே ஆண்டவர்கள் ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறினார்கள். தொடர்ந்து "வந்ந வேதம்வ ரைந்ந பயத்தினால் " மற்றும் "ஆறிரு சமயத் திற்கும்" பாடலும்"வஞ்ஞ மில்பர மார்த்தத வத்தினர்" என்ற பாடல்களும் பாடப் பெற்றதைத் தொடர்ந்து குருபிரான் அவர்கள், உடல், உயிர், ஆன்மா இவற்றை இணைக்கும் பொருளின் ரகசியமே இந்த பாடலில் உள்ளது என்றும், மனிதனிடத்தில் மட்டுமே தனிசீதானமாக உள்ள ஒன்று அறியாதவர்களுக்கு அது நெருப்பாகவும், அறிந்தவர்களுக்கு அதுவே பாலமாகவும் உள்ள அதுவே நெருப்பாறு மயிர்ப் பாலம் என்று கூறினார்கள். தொடர்ந்து "சீரிய வழியென் னாவைச் செலுத்திய தேவ தேவே" என்னும் பாடல் வரியில் வரும் "னாவை" எனும் சொல்லை பிரித்துப் பாடக் கூடாது என்றும் சிவானந்த போதத்தில் வரும் "னாவுதனிற் பிரிக்கின்ற பேதமற்று னாம்சிவமாய் வாழலாம்

னாடிப்பாரே." என்றும் கூறினார்கள். "சீரிய வழி" என்பதை நன்றாக மேலே தூக்கி "னாவை" என்னும் சொல்லை பிரிக்காமல் பாட வேண்டும் என்றார்கள், தொடர்ந்து "காவ லானபு ராதன வேதியர்" எனும் பாடலுக்கான விளக்கமாக, நீ உன் தாயின் வயிற்றில் உண்டான முதல் இன்றுவரையிலும், மேலும் தாயின் வயிற்றில் உண்டாகும் முன்பும் அதற்கு முன்பு வேறு எங்கு இருந்தாலும் அப்பொழுதெல்லாம் உன் கூடவேதான் காவலாக இருந்தார்; அதனை உணர்ந்து பாட வேண்டும் என்றும் கூறினார்கள். பாடல் என்பது சாதகத்தில்தான் உள்ளது என்றும்; வைரம் இழைக்க இழைக்க மிளிர்வது போல்தான் ராகமும் என்று கூறினார்கள்;

இடப்பாக ஆசாரக் கண்ணி பாடல் தகிட தகதிமி (1.2-1.2.3) என்னும் ராகத்தில் பாட வேண்டும் என்றும், அதற்கான ராகம், தாளம், பல்லவியுடன் பாட வேண்டும் என்றும், தோத்திரப் பாடலாகிய இதனை உணர்கின்ற

அந்தளவுக்கு அந்த பாடலின் அலங்காரம் அமையும் என்றும் கூறினார்கள்; மேலும் பாடல்களை மெதுவாக அதன் அழகு மாறாமல் பாடவேண்டும் என்றும், ஆண்டவர்கள் சில பாடல்களை நன்றாக வாய்விட்டுப் பாடும் படியும் அமைத்திருப்பார்கள்; அப்படிப் பாடினால்தான் உணர்வு வரும், உணர்வு கலந்தால்தான் பாடல் பாடலாக வரும் என்றும் கூறி அவையை நிறைவு செய்தார்கள்.

**அருள்மிகு பாபநாச சுவாமி திருக்கோயில் பாபநாசம் அமைவிடம்:** திருநெல்வேலியிலிருந்து சுமார் 50 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. திராவிடக் கட்டிடக்கலையில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் இறைவன் பாபநாசநாதர், இறைவி உலகம்மை ஆவர். கோயிலின் அனைத்துக் கருவறைகளயும் உள்ளடக்கியவாறு கோயிலைச் சுற்றிக் கருங்கல் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. சாளுக்கிய பாண்டியர்களால் கட்டப்பட்ட இக்கோயில் பின்னர் 16 ஆம் நூற்றாண்டில் விஜயநகர அரசர்களாலும் நாயக்கர் அரசர்களாலும் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நாயக்கர் காலக் கலைப்பாணியிலான சிற்பங்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன.

**தல வரலாறு:**
இந்து சமயப் புராண வரலாற்றின்படி, இறைவன் சிவனுக்கும் பார்வதிக்கும் கயிலை மலையில் நடந்த திருமணத்தை அகத்தியர் காண முடியாமல் போனது. அகத்தியரின் இறைவனின் திருமணக் கோலத்தைக் காண விரும்பி இறைவனை வேண்டினார். அவரது விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணம் அகத்தியருக்கும் லோபமுத்திரைக்கும் இத்தலத்தில் இறைவன் தன் இறைவியுடன் திருமணக் கோலத்தில் காட்சியளித்தார். இக்கோயிலுக்கு அருகிலுள்ள அருவி அகத்தியர் அருவி என அழைக்கப்படுகிறது.மற்றொரு மரபு வரலாற்றில், உரோசம முனிவர் தாமிரபரணி ஆற்றில் ஒன்பது மலர்களை மிதக்க விட்டு அம்மலர்கள் கரைசேர்ந்த இவ்விடங்களில் சிவாலயங்கள் அமைந்து சிவனை வழிபட்டதாகவும், அவற்றில் முதலாவது மலர் கரைசேர்ந்த பாபநாசத்தில் அமைத்த கோயில் பாபநாசநாதர் கோயிலெனக் கூறப்பட்டுள்ளது. இக்கோயில் சிவவடிவான இலிங்கமானது நவகோள்களில் ஒன்றான சூரிய தேவனின் அம்சமாக கருதப்படுகிறது. கைலாயநாதரை முதன்மைக் கடவுளாகக் கொண்டு



Copyright © AMNA Trust, Chennai

நவகோள்களுக்குரியவையாக தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள நவகைலாய கோயில்களின் வரிசையில் முதலாவதான இக்கோயில் சூரியனுக்குரியதாகும் கோயிலின் வரலாறு சரியானபடி கணிக்க முடியவில்லையென்றாலும் மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆண்ட சந்திரகுல பாண்டியன் என்ற பாண்டிய அரசனால் இக்கோயிலின் நடுக் கோயிலும் விமானமும் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது. மதுரை நாயக்க வம்சத்தைச் சேர்ந்த, வீரப்ப நாயக்கரால் (கிபி1609-23), யாகசாலை, கொடிமரம், நடராசர் மண்டபம் கட்டப்பட்டன. தற்காலத்தில் தமிழக அரசின் இந்து சமய அறநிலைத்துறையால் இக்கோயில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**கோவிலின் அமைப்பு**

**:** கோவிலிலுள்ள அனைத்துக் கருவறைகளையும் உள்ளடக்கியவாறு கருங்கல்லலான சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. நுழைவாயில் கோபுரம் ஏழடுக்குகள் கொண்டதாகும். கோயிலின் முதன்மைக் கடவுளாக பாபநாசநாதர் இலிங்க வடிவிலுள்ளார். இறைவி உலகம்மையின் கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறையின் வெளிச்சுவற்றில் விநாயகர், சுப்பிரமணியர், தட்சிணாமூர்த்தி, துர்க்கை, நவகோள்கள் ஆகியோரின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொடிமரத்தை அடுத்துள்ள சிறுகோயிலில் யாளிகளைமைந்த தூண்களைக் கொண்ட மண்டபத்தில் நடராசர் உள்ளார். இங்கு ஆனந்த தாண்டவ கோலத்தில் காணப்படும் நடராசர் புனுகு சபாபதி என அழைக்கப்படுகிறார்.இக்கோயில் குளம் பாபநாச தீர்த்தம் எனப்படுகிறது. மேலும் அகத்திய தீர்த்தமும் கல்யாணி தீர்த்தமும் இக்கோயிலைச் சேர்ந்தவையாகும்




**சொரிமுத்து அய்யனார் கோயில்**
**பாபநாசம்-காரையார்**

**தல வரலாறு:**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள காரையாறில் அமைந்துள்ளது சொரிமுத்து அய்யனார் திருக்கோவில். முருகனுக்கு ஆறுபடை வீடு இருப்பது போல் ஐயப்பனுக்கும் சொரிமுத்து அய்யனார் கோயில், அச்சன்கோவில், ஆரியங்காவு, குளத்துப்புழை, பந்தளம், சபரிமலை என ஆறுபடை வீடு உள்ளது. சபரிமலையிலேயே சாஸ்தா முதலில் அமர்ந்தார் என்று சொல்வதுண்டு. ஆனால், அதற்கும் முன்னதாக அமைந்த கோயிலாக இந்த சாஸ்தா கோயில் கருதப்படுகிறது. இங்குள்ள சாஸ்தா இடதுகாலை மட்டும் குத்துக்காலிட்டு, வலது காலை தொங்கவிட்டபடி, சற்றே இடப்புறமாக திரும்பியிருக்கிறார். இவருக்கு எதிரே ஒரே பீடத்தில் நந்தி, யானை, குதிரை வாகனங்கள் இருப்பதும், இவரது சன்னதியிலேயே சப்தகன்னியர்கள் இருப்பதும், முன்மண்டபத்தில் உள்ள பைரவரின் எதிரே நாய் வாகனம் இருப்பதும் விசேஷமான அம்சம். குலதெய்வம் தெரியாதவர்கள் இவரை வழிபடுகிறார்கள். கைலாயத்தில் சிவ, பார்வதி திருமணம் நடந்தபோது பூமியை சமப்படுத்த அகத்தியரை பொதிகை மலைக்கு அனுப்பினார் சிவன். அகத்தியர் பொதிகையில் தங்கியிருந்த போது, லிங்க பூஜை செய்தார். காலப்போக்கில் அந்த லிங்கம் மண்ணால் மூடப்பட்டுவிட்டது. பிற்காலத்தில், இவ்வழியாக சென்ற மாடுகள் ஓரிடத்தில் மட்டும் தொடர்ந்து பால் சொரிந்தன. இதுபற்றி அப்பகுதி மன்னரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. அங்கே தோண்டிய போது, ஒரு லிங்கம் உள்ளே இருந்ததைக் கண்டெடுத்து கோயில் எழுப்பினார். இத்தலத்திலேயே தர்ம சாஸ்தாவுக்கும் சன்னதி கட்டப்பட்டது. சாஸ்தாவை கிராமப்புறங்களில் அய்யனார் என்பர். அய்யன் என்றால் தலைவன். இதில் மரியாதைக்காக ஆர் விகுதி சேர்ப்பர். பக்தர்களுக்கு அருளைச் சொரிபவர் என்பதால் இவர் சொரிமுத்து ஐயனார் எனப்பட்டார்.


Copyright © AMNA Trust, Chennai

# ஆகஸ்ட் மாத நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



திரு.சாலை ரவி அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்களுக்கெல்லாம் என்னுடைய நல் ஆசீர்பாதங்கள். சென்ற மாத ஆதி மார்க்க னீதி அவையின் இனிய நிகழ்வுகள் யாவும் அங்கத்தினர்களால் அழகாக தொகுக்கப் பெற்றுள்ளது. இறைநிலை ரகசியங்களும் அவற்றை அடைவதற்காக கூறப்பெற்ற சூதானங்களும் இதில் தொகுத்து வழங்கப் பெற்றுள்ளது. உலக மக்களின் நன்மைக்காக ஒவ்வொரு மாதமும் ஒரு முக்கியமான விஷயமானது இந்த சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனும் நோக்கத்துடன் சில விஷயங்களை இதில் பகிர்வதற்காகவே இந்த முன்னுரை. உண்ண உணவு உடுக்க உடை இருக்க இருப்பிடம் என்பது உயிர்களின் அடிப்படைத் தேவை. இதில் உடுக்க உடை என்பது மனிதனுக்கு மாத்திரம் மிக அவசியம். ஏனெனில் மான அபிமானம் மற்ற ஜீவராசிகளுக்கு கிடையாது. மனிதனுக்கு உணவு உடை இருப்பிடம் இவை அனைத்தும் இருந்தாலும் இவன் வாழ்வதோ அற்பகாலம். ஆமை, யானை, மரம் போன்றவற்றின் ஆயுட்காலங்களை ஒப்பிடுகையில் மனிதனின் ஆயுள் மிகவும் குறைவுதான். சொற்ப காலம் வாழும் மனிதனின் வாழ்க்கை எல்லாக் கேள்விகளுக்கும் பதில் அளிக்க கூடிய ஒன்றாக இருக்க வேண்டுமேயன்றி அதுவே கேள்விக்குறியாக இருக்கக்கூடாது. பிறப்பின் ரகசியத்தை அறியக்கூடிய அறிவை தனிச் சீதனமாக மனிதனுக்கு இறைவன் கொடுத்துள்ளான். மனுமுளை கண்ட ஆதிகாலம் தொட்டு வேத விற்பன்னர்களாகிய அருளாளர்கள் மனிதனின் பல ரகசியங்களை வேதங்களின் மூலமாக அருளியுள்ளார்கள். கோயில்களும் ஆகம விதிகளும் அவற்றைத் தான் சொல்கின்றன. ஆகம விதிகள் பற்றி பல நிலைகளாக ஆதி மார்க்க னீதி அவையின் வாயிலாக வலையொளிக் காட்சியிலும் (YouTube) வெளியிடப் பெற்றுள்ளது. மனிதனின் உன்னத லட்சியம் தன்னை அறிதலே. இறை ரகசியம் பொதியப் பெற்றுள்ளதால் தன்னை அறியக்கூடிய ரகசியம் மனிதனுக்கு மட்டும் விதியாக்கப் பெற்றுள்ளது. மனிதன் தான் இறைவனின் ரகசிய பெட்டகம் என வேதங்கள் கூறுகின்றன. அந்த ரகசிய பெட்டகத்தை ஒருவராலும் தானாகத் திறக்க இயலாது. அதனைத் திறக்கக்கூடிய அதிகாரம் பெற்றவர்கள் இரக்கம் கொண்டு திறந்தால் தான் அதைக் காண முடியும். அகக் கண்ணாகிய அறிவுக்கண் கொண்டு காணக் கூடியதாக இருப்பதே ரகசியப் பெட்டகம். அதனுள் அவரவரைப் பற்றிய ரகசியமும், நாம் யார்? நம் முன்னோர்கள் யார்? நாம் எப்படி இந்த உலகத்திற்கு வந்தோம்? வந்ததின் நோக்கம் என்ன? அது நிறைவேற்றப்பட்டதா? என்கின்ற இத்தனை ரகசியங்களும் அதனுள் உள்ளன. நாம் அறிந்திராத ஒரு பொருளை நம் வீட்டில் யாராவது வைத்தால் அதைப் பற்றிய அனேக கேள்விகள் நம் உள்ளத்தில் எழும். ஆனால் வேதங்கள் எல்லாம் கூறுகின்ற நமக்குள் இருக்கும் ஒன்றைப் பற்றி கேள்விகளோ அதைத் தேடி அடைவதற்கான எண்ணமோ நமக்கு வரவில்லை. தன்னில் இருந்தும் இதை அறியாமல் நாம் இருக்கிறோம் என்பதால் வேத வாயிலாக பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் தங்கள் திருவாய் அமுதமாக, "அரியானை அறிய வைத்து அந்தணனாய் எனைப் பிரட்டிப் பிறப்பித்து" என்ற பாடலை அருளியுள்ளார்கள். தேவாரப் பதிகத்திலும் "அரியானை அந்தணர்தம் சிந்தையானை" என்று கூறப் பெற்றுள்ளது. நாம் வளர வளர நம் உணவு, தாய் தந்தை, சகோதர சகோதரிகள், நண்பர்கள், கல்வி, மணவாழ்க்கை, செல்வம், எல்லாவற்றையும் அறிந்தாலும், வேதம் நம்மை அறியான் என்று கூறுகிறது. இறைவனைப் பற்றி நமக்குத் தெரியும் என்ற பாவனையை நாம் வளர்த்துக் கொண்டவர்களாக இருக்கிறோம். இதனை வேதம், புறத்தில் நாம் ஆத்திகனாகவும் அகத்தில் அந்தரங்க நாத்திகனாக இருப்பதாகவும் கூறுகிறது. பலவற்றையும் சிந்திக்கும் நாம் இறைவனைப் பற்றிய சிந்தனையில் மட்டும் உஜார் ஜாக்கிரதை அற்றவர்களாக உள்ளோம். இறைவனை அடைவதற்கான நேர் பாதை போட்டுக் காட்டியிருக்க அதை விட்டுவிட்டு தள்ளப்பட்ட



Copyright © AMNA Trust, Chennai

கடையர்களாக விருதாவாக நாம் சுற்றிக் கொண்டிருக்கிறோம் என வேதங்கள் நம்மைக் கூறுகின்றன. இதை அறிந்து அதிலுள்ள பெரும் பலனை அனுபவிக்கக்கூடிய அருகதையுடையவன் மனிதன் மாத்திரம்தான் என்பதால்தான் இத்தனை நிலைகளும் சொல்லப் பெற்றுள்ளது. இதனைப் பலவித நிகழ்வுகள் மூலமாக மனிதனுக்கு தேவையானது, தேவையற்றது இன்னது இன்னது எனவும், எதனை ஒதுக்கி, எதனைப் பாதுகாத்து, எதை அடைந்து, அதன் மூலமாக பேரின்பத்தை அடையலாம் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டே ஆதி மார்க்க நீதி அவையின் மூலமாக இத்தனை நிகழ்வுகளும் ரத்தினச் சுருக்கமாக உங்கள் முன் வைக்கப் பெற்றுள்ளது. இதனை காணக்கூடிய எதார்த்த நன்மன மக்கள் கேள்விகளோடு எங்களைச் சந்திக்க விளைந்தால் அதற்காக ஆதி மார்க்க னீதி அவை வழி மேல் விழி வைத்து வரவேற்கக் காத்திருக்கிறது. இந்த சஞ்சிகையை கண்டு இன்புறும் மக்கள் பெரும் பலனை அடைவதற்காக எனது நல் ஆசீர்பாதங்கள். நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2021 ஆகஸ்ட் மாத சபை நிகழ்வுகளின் சாரம்சம்

**1st August, 2021 சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ.தியாகராஜன்**

ஆதி மெய் உதய பூரண வேதாந்நம் சோடச னிலை காப்புப் பாடல் குருபிரான் அவர்களால் படிக்கப் பெற்றபின், சோடசம் என்பது, ஜீவன், அறிவு, பதினாறு கலைகள் கொண்ட பூரணமாக, கலிமாவாக, பாதமாக உள்ளது என அருளி, தொடர்ந்து ஐவழி விளைவுக்கு அப்பால் உள்ளதே மெய்வழி என்பதையும், நான் என்பது உடல் அல்ல ஆன்மா என்பதையும், பொருள் என்பது உணர்வதாகவும், பதில் என்பது சொல்வதாகவும் இருக்கிறது எனவும், ஆசானும் அறிவும் ஒன்றே என்பதையும், மெய்க் குருவானவர் ஏற்றுக் கொண்ட பின்பே ஒருவன் மனுவாக முடியும் எனவும், தீர்க்க தரிசனங்கள் நிறைவேறுமிடம் மனிதனுடைய இதயமாக உயிராக உள்ளது எனவும் அருளினார்கள். மேலும் துந்துமி என்பது, அந்தரத்தில் முழங்குகின்ற அம்பலத்தில் ஆடுகின்ற தெய்வம் எனவும், தாய், தந்தை குரு, தெய்வம் என்ற நான்கு நிலைகளிலும் காணப் படுகிறவரே குரு என்றும், ஞானம் என்பது படிப்பதன்று, பழகி உணர்வதாக, சாலை என்ற மெய் மேனியின் ரகசியத்தை அறியும் வழியாக உள்ளது எனவும், ஜீவனை மூன்றாவது கண் கொண்டே அறியமுடியும் என்றும், உயிர் உள்ள குரு பிரானால்தான் நம் உயிரைக் காட்டித்தர முடியும் என்றும், தேவர்களுக்கு பூமியில் கால் படாததின் ரகசியம் பற்றியும் பேசப் பெற்றது. மேலும் மெய்யறிவை அறிய அறியாமை விலக வேண்டும், அதற்கு மெய்க் குரு பிரான் வேண்டும் எனவும் பேசப் பெற்றது.

மேலும் திரு நீற்றுப் பதிகப் பாடலின் புரிதலாக, மந்திரக் கோல் என்பது, ஆலவாயான் திருநீறாக, விபூதியாக, பஞ்ஞாட்சரமாக, ஆசானின் வாய்மையாக உள்ளது, எமன் எல்லையில் வெற்றி காணச் செய்யும் தீயே விபூதி, என்பது ஆண்டவர்கள் திருவாக்கு என்றும் பேசப்பெற்றது.
தொடர்ந்து செவியின் சிறப்பைப் பற்றி திருக்குறள், தேவாரம், விநாயகர் அகவல், மூலம் சாட்சியுடனும், செவியின் பயன் னித்திய தேகம் எடுப்பதற்கே எனவும், அதில் சுவை உணர்ந்தவர்களே தேவர்கள் என்றும் பேசப் பெற்றது.

தொடர்ந்து அண்டம் அணுவாக, அணு அண்டமாக இருந்த காலமே கற்ப கோடி காலம் என்றும், மூச்சு துண்டாடப்பட்டு னஷ்டம் அடைவது பாவம் என்றும், மெய்க்குருவின் திரு உருவே புண்ணியம் எனவும், மற்றும் பரிசுத்தம், இடம், என்றால் என்ன என்பது பற்றியும் வேத சாட்சியாக பேசப் பெற்றது. மேலும், நீரின் பெயரானது வானில் இருந்து வரும் போது மழை என்றும், அருவி, ஏரி, குளம், ஆறு என்றும், பின்னர் கடலில் கலந்து காற்றின் துணையோடு அலை என்றும் பல்வேறு பெயரில் உள்ளது போல் நமது அகமியத்தில் பிரம்மத்தின் செயலானது உள்ளது என்றும் பேசப் பெற்றது.

மேலும் நம்மைத் தாங்கி வழி நடத்துவதே திருவடி என்றும், இவை யாவும் ஆசானின் அருளால்தான் அறிய முடியும் எனவும் அன்னவரின் திருப்பாதத் தாள் மலர் முன்தான் நம் சுவாசமானது ஒரு நிலைப்பட்டு ஒடுங்கி இருப்பதையும், நாம் தான், கோள் மலிந்த பவக்காடு என்பதையும், உணர முடியும் என்றும், நவக்கிரக கோள் மற்றும் னாத ஜோதிடர், ஆசான் தான் என்ற பகிர்வுகளுடனும் சபை இனிதே நிறைவேறியது.

**1st August, 2021 சத்துவாச்சாரி சபை, தொகுப்பு: ஸ்ரீ.நாகலிங்கம்**

***“நம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான் நமசிவ இருப்பறியான்”*** என்ற, ஞானமுறையீடு பாடல் பாடப் பெற்றது, அதில் வரும், "தற்கொலை" என்பது உயிரை மாய்த்துக் கொள்வது அல்ல மாறாக உலக

இச்சையினால் மனமானது ,அவாவாகவும், விருப்பு வெறுப்பிற்கு ஏற்றவாறு தன் ஜீவ மூச்சை சதாசர்வ நேரமும் துண்டாடி நஷ்டமடையச் செய்வதையே தற்கொலை என்றும், இதுவே பைபிளில் "பாவத்தின் சம்பளம் மரணம்" என்றும்


Copyright © AMNA Trust, Chennai

சொல்லப் பெற்றுள்ளது. மனிதன் இந்த உலக செயல்களில் கூர்மையாகவும், தெளிவாகவும், ஜாக்கிரதையாகவும் இருக்கிறான். ஆனால் இவனுள் இருந்து அத்தனைக்கும் துணையாக ,நன்மை தீமை சொல்லிக்கொண்டு சதாசர்வகாலமும் காத்துக் கொண்டும் ஊழியம் செய்து கொண்டும் இருக்கும் உயிரைப் பற்றி ஏதாவது தெரியுமா என்றால் தெரியாமலும் ,மேலும் ஜீவனைப் பற்றி வேதம் சொல்வதை அறியாமலும் இருக்கிறான். உலக காரியங்களான படிப்பு, வேலை, சம்பாதனை, திருமணம், மற்ற அனைத்திலும் இலக்கை நோக்கி ஓடும் நாம், "ஞானம்" என்று வரும் போது இலக்கின்றி இருக்கிறோம். மேலும் நேர்முகமாக ஒரு மெய்க் குருவை சந்திக்கும் போது தான் புறத்தில் மனம் ததும்பி, விசாரப்பட்டுப் போவதே "பாவம்" என்றும், மனம் உள்ளடங்கி இருப்பதை "சைவம் "என்றும், அதைத் தன் கையகத்தில் ஆக்கும் போது, நாமே சைவப் பொருளாக இருக்கிறோம் என அறியமுடிகிறது. இவற்றையெல்லாம் விளக்கும் வேதத்தை அறியாமலும், தன் ஜீவனைப் பற்றியும் அறியாமல், இருளிலேயே இருக்கின்றோம். ,அதைப் பற்றிய அறிவைப் பெற்று, தெளிவைப் பெறுவதே, மனுவின் கடமையாக இலக்காக உள்ளது. ஜீவனே நமச்சிவாயமாக, நற்றாளாக, உள்ளதை, ஒரு மெய்க் குரு பிரான் வந்து தன் அமுத னா கொண்டு அறிவித்து, அதைக் காட்டி அதில் ஆக்கி வைக்கின்றார்கள். இதனைத் தன் முயற்சி கொண்டு தன் ஜீவனைத் தரிசிக்க ஒருவராலும் முடியாது என்றும் விளக்கப் பெற்றது. இதற்குச் சான்றாக மான்மியம், திருவாசகம், திருவெம்பாவை சொல்லப் பெற்றது. மேலும் ஆசான் அவர்கள் தன் நாதம் மூலம் நம் ஜீவனுக்கான இரட்சிப்பைத் திரு வசனமாக சொல்லுவதே உயிராணித் திருவசனம் எனவும், நினைவே, பாதமாக உள்ளது என்றும், அது 4 பாதம் ஆகவும் ,பல நிலைகளாகவும் உள்ளது எனவும் பேசப் பெற்றது. "அடிபேரிகை" எனச் சொல்லும் போது, கையை உயர்த்துவது கையாகிய நினைவு, கீழ்முகமாக இல்லாமல், மேன்மையாக, இருப்பதற்காக எனவும், தன் ஜீவன் பறி போகாமல் காக்கும் செயலுக்கே "அறம்" என்ற பெயராகும் எனவும், அமலில் இருக்கும் "பஞ்சாட்சரம்" ஆகிய தன் ஜீவனைப் பற்றிய ரகசியத்தை அம்பலப் படுத்தும் செயலே திருச்சிற்றம்பலம் ஆகும், எனும் பகிர்வுகளுடன் சபை இனிதே நிறைவு பெற்றது.



ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்

ஜீவன் பறி போகாமல் காக்கும் செயலுக்கே "அறம்" என்ற பெயராகும் எனவும், அமலில் இருக்கும் "பஞ்சாட்சரம்" ஆகிய தன் ஜீவனைப் பற்றிய ரகசியத்தை அம்பலப் படுத்தும் செயலே திருச்சிற்றம்பலம் ஆகும், எனும் பகிர்வுகளுடன் சபை இனிதே நிறைவு பெற்றது.

**5th August, 2021 வியாழன் சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

ஆண்டவர்களின் திருவாக்கியம் ஓதப் பெற்றபின்பு, சைவத்தின் தலையாக சொல்லப்பட்ட ஏகாட்சரமே "உ" - சிவமயம். வைணவத்தில் "ஓம் நமோ நாராயணா " என்ற அஷ்டாச்சரமே மூலமந்திரம். "நலம் தரும் சொல் நான் கண்டுகொண்டேன் நாராயணா எனும் நாமம்" என்பது பெரியோர்கள் திருவாக்கு சைவத்தில் சொல்லப் பெற்ற, "நற்றாள் ,சிவனடி பாதம், சிவமயம் ,எழுதாத எழுத்து, பிள்ளையார் சுழி, என்ற மெய் நிலைகளை உள்ளடக்கியது "நான்" என்பதாகும். "நான்" ஒவ்வொருவரிடத்திலும், நாமமாக, ரூபமாக, நிறமாக, குணமாக, முக்காணி சுடராகவும் "அலீப் லாம் மீம்" ஆகவும் ஆதி அந்தம் நடுப் பொருளாகவும் னின்றிலங்குகிறது என்பதை மெய்வழி நூலில், "***முகமென்ற னடுக்கருவூ டுருவிப் பார்க்க மூதண்ட வெண்டரள மாகு மையா***" "நடுக்கரு" என்பது மூன்றாவது கண்ணாக, ஃ-எனும் பிரம்மமாக, நின்று விளங்குகிறது. பிறப்பு, இறப்பான (முதல்-முடிவை) "நடு அறிந்து உறைப்பவர் சன்மார்க்கர்" என அருளுகின்றார்கள். வினை இருந்தால் பிறப்பு உண்டு என்பதே இறை சட்டம்.

பிறப்பு ,பிறவாமைக்கான ரகசியமாக உள்ள வினையை அறுத்து பிறவாமை அளிக்க வல்லவரே மெய்குரு


Copyright © AMNA Trust, Chennai

மனிதனின் குணங்கள் எழுவகைத் தோற்றமாகும். முக்குணத்திலிருந்து மாறி நிர்குணமாகி கடவுள் நிலை அறிந்து அம்மயமாக ஏகாட்சரமாகிய '"மனதை" பழக வேண்டும். சகல உயிர் ஜீவனிலும் ஆடும் பாதம். தன்னை அறிந்தவர்களே "சகல உயிராகும்" "ஒத்தது அறிந்தவன் தான் உயிர் " "அந்த உயிர், ஜீவனாக, அறிவாக உள்ளதை அறியும் அறிவு ,மனிதனிடத்தில் மட்டுமே உண்டு". பிராணன் நீங்கி, சரீரம் சரிவதை அறியும் அறிவு மனிதனுக்கு மட்டுமே உண்டு. வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் உண்மையை மெய்ச்செயலை தெய்வீகத்தை அறிவு வடிவைப் பெறவே நாம் வந்துள்ளோம். இந்த ***"உண்மையுண ராமனிதர் யானமைக்க வில்லையென ஓதிவரும் வேதபாடமே". "உள்ளமையை உண்மையாக வேயாக்க வுதவுமின்னூல்"***

பஞ்சபூதங்களே செல்வமாகும். அதனை விட மேலானது, "செல்வம்" என்ற நாமத்திற்கு உரிய "ஆன்மா" அதிலும் மேம்பட்டது ,"செவிச்செல்வம்".

***"செல்வமுச்சீரும் பொங்க***
***சேர்ந்த பேர் ஜென்ம சாபல்யம் ஓங்க",***

***"மறுப்படாச்சிப்பி தானும்***
***மழைத்துளி திறந்து வாங்கி***
***இருக்கி வாய்மூடி முத்து***
***ஈன்றிடும் உவமை போல"***

இறுக்கி மூடினால் தான் முத்து விளையும், மறுப்பட்டால் முத்து விளைவதில்லை. அதுபோல் ஆசானின் ஆலவாய் என்னும் திருநீற்றை கைக்கொண்டால் அதுவே சொரிமுத்து ,நன்முத்து, கருமுத்தாகிய கலிமா ஆகும். ***"முத்து ஈன்றிடும் உவமை போல"*** ஈன்றிடும் என்பது கொடுப்பது, இன்னொருவர் மூலமாக தேவ பிறப்பை பெறுவது. இந்த மெய்ன்னிலைகளுக்கு எல்லாம் காரணகர்த்தாவான, ஆதி பரமகுரு, பரிசுத்த ஆவி தெய்வம் பரம்பொருள், பிரம்ம பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் திருவடியைப் போற்றி வணங்கி இந்த அவையை நிறைவு செய்தார்கள்

இசை அரசராகிய ஆண்டவர்கள் அமுதனா கொண்டு அருளிய ஆதி மெய் உதய பூரண வேதாந்தத்திலுள்ள ஐவணத் தளிர் பாடலைப் பாடி குருபிரானவர்கள் அவையை துவக்கினார்கள்.

***"அஞ்ஞானக் கிழங்குகளைந் நெடுத்துவுப***
***னிடதமழை பொழியும் அருள்னாவோய்***
***மெய்ஞ்ஞானச் செயல்தேர்ந்து னாத்தழும்பங்***
***நேறிவிளை கின்ற வாக்கால்***
***பொய்ஞ்ஞானப் புலையர்தமை வாட்டிடுமெய்ச்***
***சவுக்கையென வலுனா வீந்து***
***எஞ்ஞான்றும் செலும்படினீ யளித்தனையே***
***பதிலுமக்கென் செய்வேன் அத்தா"***

கடவுளைப் பற்றிய இரகசியங்ஙள் பொதியப் பெற்றதே வேதம். வேதத்தின் சான்று மனிதன். ஆறாவது அறிவை அறிந்தவர்களே வேதத்தின் சான்றாக விளங்க முடியும். னாவுக்கு பெரிதாக உலகம் இல்லை. கலைவாணி குடியிருப்பது னாவில் என்று வேதம் சொல்லுகிறது. அந்த னாவை னீட்டி அகட்டி வேதனாவாக மாற்றி சாகாக்கலையைப் பழக வைப்பதே மெய்க் கல்வியின் செயல். குழந்தைகள் முதல் சிறியோர் பெரியோர் என்ற பாகுபாடு இல்லாமல் மெள்ள மெள்ள மெய்க்கல்வியை கற்பிக்கவே நம் முன்னிருந்து அந்த ஆணிப் பொன்னம்பலமானது விளையாடிக் கொண்டிருக்கிறது.

தெய்வத்திருப் பாடல்களின் திரட்சி (தோத்திரப் பாடல்கள்) பகுதியில் உள்ள ***ஆறிரு சமயத்திற்கும்*** பாடலை னாத னாம கிரியை ராகத்திலும், இடப்பாக ஆசாரக் கண்ணி பாடல்களை னீலாம்பரி ராகத்தில் பாடவும் குரு பிரானவர்கள் பயிற்றுவித்தார்கள். தெய்வமவர்கள் வானனாட்டிலிருந்து இறக்கப்பெற்ற வேத



Copyright © AMNA Trust, Chennai

வேதாந்த பாடல்கள் அனைத்துள்ளும் அவர்களின் னாதமானது உயிரானது அறிவானது கலந்துள்ளது.

வேதத்திலுள்ள 8 வரி பாடல்கள் 1 நிமிடத்தில் பாடக்கூடிய வகையில் அமைக்கப்பட்டு இருக்கிறது என்பதையும், சாதகத்தின் மூலமே பாடல்களிலுள்ள சங்கதிகளையும், ராகத்திலுள்ள னுணுக்கங்ஙளையும் அறிய முடியும் என்பதையும் ஆசான் உணர்த்தினார்கள்.

கதியாகிய உயிரோட்டமானது ஏறி இறங்ஙுவதே தாளம்.

பூரணப் புதையல் ***னடையெனும் உஜூதைக் காண லகுவல்ல தன்னாலாகா***.

ஆதி மான்மியம் - வளர் குழந்நை குமார பருவத்தில்

***றாரிராறோ றாறாரோ-***
***ஆறறிவு னேரேறே***
***பேரூர்பி றந்ந பசும்***
***பொன்னேனீ கண்வளராய்.***

என்ற பாடல் னீலாம்பரி ராகத்தில் தெய்வமவர்கள் அருளியுள்ளார்கள். இப்பாடலைப் பாடுவதற்குப் பழகிக் கொண்டால் ***சீர்மேவு மெய்ஞ்ஞான*** எனத் துவங்கும் இடப்பாக ஆசாரக்கண்ணி பாடல்களை எளிதாக பாட முடியும் என்று கூறி ஆசானவர்கள் அவையை னிறைவு செய்தார்கள்.

**7th August, 2021 மான்மியம் சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. வடிவேலன்**

திருவடி மறவாத னிலை ஒன்று வேண்டும் அரசே. எங்ஙிருந்நாலும் னினைவால் பிடித்துக் கொள்வதுதான் சிறப்பு. சிற்றின்பம் கடந்ந பேரின்ப னிலையே சமரசமும் சமத்துவமும் என அருளி அவையின் னிகழ்ச்சிகள் தொடங்ஙப் பெற்றது.

01. எமபட ரடிபடு கோடாயிதக்கூர் வாக்கியம் எண்: 65.

னித்திய தூலம், அறிவு தூலம் என்பது ஒரே பொருள் தான். எண்ணத்தின் மூலம் தூலம், சூக்குமம், காரணம், மகா காரணம் என மாறி மாறி மேல் னோக்காக போகும் போது, அதற்கு வேறு வேறு பெயர்கள். கீழ் னோக்கி வந்நால் எல்லாம் னபுசுகள் ஆகிவிடும். எனவே அறிவு வடிவான ஒருவர் வந்நு அறிவிக்கும் போது தான் னாம் அறிவு வடிவு ஆகிறோம்.



***திரு.சாலை ரவி அவர்கள்***
***நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை***

இதையே "***னீதியில் னடக்க னித்தியன் ஆவாய்"*** என அறிவு அறி பாடத்தில் தெய்வமவர்கள் அருளியுள்ளார்கள்.

02. ஸ்ரீமாணிக்கவாசகர் அருளிய அன்னைப் பத்து பாடல் எண் - 05.

***"நீண்ட கரத்தர் நெறிதரும் குஞ்ஞியர்***" எனத் தொடங்ஙும் பாடல். நீண்ட கரம் என்பது ஆசானின் னாதம். அது அலை கடலின் ஓசையைப் போன்றது. இதனையே ***"ஆலடி தோன்றி வளர்ந்நரசில் ஆளுடை எங்ஙள் குல குருவே"*** என்றும்,"***பிறந்ந தினி இறவாதும் பேசும் பஞ்ஞாட்சரமே - பேசரிய மோனமும் போதிக்கும் பஞ்ஞாட்சரமே***" என்றும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். குஞ்ஞியர் என்பது குஞ்ஞித பாதர், பாதம், பிரம்ம முடி, சாகாத்தலை என்பதைக் குறிப்பதாகும். அறச்செயல் செய்பவரே அன்னே என்பவராகும் என பேசப் பெற்றது.

03. திருஞான சம்மந்நர் அருளிய தேவாரத் திருப்பதிகம். பாடல் எண்.03. ***"கன்னியராடல்கலந்நுமிக்க***" எனத் தொடங்ஙும் பாடல் பொன் மேனியாகிய மாடமாளிகையில் உலாவும் குருபிரானின் யாழ் என்னும் னாவின் மூலம்



Copyright © AMNA Trust, Chennai

வெளியாகும் திருனடத்தில் கலந்து அறச்செயலின் மூலம் உயர்ந்து நாம் னடுவீடாகிய புகழுடம்பில் கலக்க வேண்டும் என்பதை ஆதி மெய் உதய பூரண வேதாந்தம் சாட்சிகளுடன் பேசப் பெற்றது.

04. ஆதி மான்மியம் சன்னதம் பெறு பருவம். பக்கம் - 251-254.

சர்வாகமக் கிரந்நம்.

***கலியன் என்பவன் யார்?***

பொய்யாகிய இந்ந உடலை மெய் என னம்பி வாழும் அத்தனை பேரும் கலியனே எனவும், தான் மனிதன் என்பதற்கு சான்று சொல்ல தெரியாதவன் கலியன். வினையை விதைப்பவன் கலியன் எனவும் இவையெல்லாம் தனக்குத் தெரியாது என்ற விசனம் கூட இல்லாதவன் கலியன் எனவும் விளக்கியருளப் பெற்றது. ஒவ்வொரு மனிதனுள்ளும் இதயமாகவும் அதனுள் இருந்நு உதயமாவதையே னமது தெய்வமவர்கள் "ஆதி மெய் உதய பூரண வேதாந்நம்" எனப் பெயரிட்டார்கள் எனவும் அதுவே (5 னிலைகளாக) பஞ்ஞாட்சரமாக னின்று விளங்குகிறது எனவும், வந்ந வேதமாகிய உன் ஆசான் தான் உன்னிடத்தில் வேதம் விளங்கும்படி செய்து வைக்கிறார்கள் எனவும் அருளினார்கள். மேலும்,வேதம் "அலீப் லாம் மீம்" ஆக இருக்கிறது என்பதை ஆதி மான்மியம் சாட்சிகளுடன் விரிவாக அருளப் பெற்றது. தீர்க்க தரிசனம் என்பது மெய்யே எனவும், அது செயலோடும் உயிர்ப்போடும் னின்று விளங்கிக் கொண்டிருப்பது சத்தியம் எனவும், மேலும் "ஊர் ஆன ஊர் உயிர்ப் பயிரேற்றும் ஊர்" என்பது னம் உள்ளே மெய் உணர்வு தூண்டப்படும் ரகசிய செயலாக உள்ளது எனவும், இவ்வாறான மெய்ச் செயலோடு ஒவ்வொரு மனிதனும் தனக்குள் இருக்கும் அறிவு தேகத்தைக் கைப்பற்றி அதன் மூலமாக னித்திய தேகத்தையும் அதன் மூலமாக அழியாத் திரு னாட்டை ஆளக்கூடிய ஒரு வல்லமையான செயலைத்தான் தீர்க்க தரிசனங்ஙள் மூலமாக சொல்லப்பட்டிருக்கிறது என அருளினார்கள். இது என்றோ தனிகைமணிப் பிரானுக்கும் சாலை ஆண்டவர்க்களுக்கும் னடந்ந சம்பாஷணை அல்ல என்றும், இப்பொழுதும், இனி வரும் காலத்திலும் வாழக்கூடிய எல்லோருக்கும் இத் தீர்க்க தரிசனம் முக்காலத்திற்கும் வைத்து பேசப் பெற்ற ஒரு அரும் பெரும் செயல் என்பதை னாம் தெரிந்து கொள்ள வேண்டும் என அருளினார்கள். மேலும் ஆண்டவர்களுக்குப் பிறகு கலியனை அழிப்பது யார்? கானகம், விடுகதை, வானம், வாய்மையே வெல்லும், மிடிமை இடர், தொலைந்நனர் பிறவிதானே, என்பதைப் பற்றியும் விளக்கி அருளினார்கள்.



***ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்***

வேத முடிவான னிதி எது? என்பது பற்றியும் உள்ளமாகிய மகா மகசூக்கை அசைக்கக் கூடிய வாக்கு வல்லபம் பற்றியும் முருகப் பெருமான் தந்நைக்கு உபதேசம் செய்த ரகசியம். தகப்பன் சாமி, குழந்நை சாமி, எனும் தேவ ரகசியச் செயல் பற்றியும் அருளப் பெற்றது. இன்று னாம் படித்துப் பாடிய யாவும் னம்முடைய அனுபவமாக சாட்சியாக னின்று விளங்கி அதன் மூலம் பிறவாமையை அடைய வேண்டும் என்பதே ஆதி மார்க்க னீதி அவையின் னோக்கம் என்றும் அருளி சபையை னிறைவு செய்தார்கள்.

**8th August, 2021 சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெயக்குமார்**

84 இலட்சம் ஜீவராசிகளில் னால் வகை யோனி எழுவகை தோற்றம் மற்றும் எழு வகை பிறப்பு இவற்றின் வகைகளை அறிவினில் வைத்து விளக்கி, னரன் என்ற னிலையில் இருந்த னம்மை, "னீ" மனிதன் எனவும், மனிதனின் கடமையான தன்னையறிதலே ஆறாவது அறிவு எனவும், அமானிதப் பொருள் என்பது இன்னதுதான் என உணர்த்தி தேவப் பிறப்பிலே னிலைனிறுத்தி சாகும் முன்



Copyright © AMNA Trust, Chennai

சாகப்பழகும் பிரம்ம வித்தையை னமக்குக் கற்றுத் தருபவர்களே ஆசான் என அருளினார்கள்.

ஒரு மனிதனின் அடையாளம் என்பது, மூன்றாவது கண்ணாக, பிரம்மமாக தத்துவ ரூபமாக உள்ளது. அமானிதத்தை அறிந்திட மனம் ஒருமைப் பட வேண்டும் எனவும் முத்தி பூரணம் என்று உள்ளதில் முத்தி என்பது விடுதலை அது பூரணமாக வேண்டும் எனக் கூறி மேலும் பூரணம் என்பது கலிமா, பஞ்சாட்சரம் அஷ்டாச்ரம், பிரணவம், காயத்ரி, சூக்குமம் எனவும், மனிதனுக்கு மாத்திரமே னீதி எனும் ஆசானின் வாக்காகிய அறிவுப் பொருள் எனவும், தேவரகசியத்தை அறிந்நவர்கள் தேவர்கள் எனவும், வாதம் என்பது கலை மலிந்ந அழியாத னாத உடம்பு எனவும் அருளினார்கள்.

மேலும், மனதை அறிவாக மாற்றி தேவனிலையில் னிலைக்கச் செய்வதே மெய்க்கல்வி. பாவங்களை சுட்டெரிக்கும் ஆசானின் வாளாயுதமாக என்றும் செயலுடன் இருப்பதுவே அமலாம் பஞ்சாட்சரம் எனவும்
பரு, மன, வளி, அறிவு, ஆனந்த எனும் உடல் ஐந்தையும் ஒருங்கிணைப்பது ஆசானின் அறிவு எனவும் கூறினார்கள். சான்றிதழ் படிப்பு சாப்பாடு மட்டுமே போடும் எனவும், கண் பார்க்க கை வேலை செய்வது கல்வி எனவும் உடலுள்ள போதே, தெய்வத் திருனாடாகிய பிரணவ னாட்டிற்குப் போய்வரும் திருவிளையாட்டைப் பழக்கித் தருவதுவே மெய்க்கல்வி. அதுவே சாகாக் கல்வியாகிய பிரம்ம வித்தை எனவும் அருளினார்கள்.

தூய்மையான மனமே கேசரியின் அடையாளமாக விளங்கும் ஜீவகங்கை எனவும், அதுவே அஜபை , உஜூது , சூக்குமம் எனவும், அசைவற்ற னிலையிலிருந்து வரும் ஆசானின் னாதமாகிய தென்றலே னம் பிறவிப் பிணியை மாற்றும் எனவும், மனம் இருப்பதற்கான அடையாளம் மூச்சு அது துண்டாப்படுவது பாவம் எனவும், அசையும் பொருள் அசைவற்று பூவனக்குகையில் னிலைப்பதே பிரம்ம வித்தை. எனவும் குருபிரானவர்கள் அருளி அவையை னிறைவு செய்தார்கள்.

**8th August, 2021 சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி**

குரு பிரான் அவர்களின் ஆசீர் பாதத்துடன் நடைபெற்ற ஆதி மார்க்க னீதி அவையின் சத்துவாச்சாரி காணொளிக் காட்சி நிகழ்வுகள்:

**1. மருந்து**
உலகில் எல்லோருக்கும் ஒரு நோய் இருக்கிறது. அது பிறவி நோய் வெண்நோய். அந்த நோயிலிருந்து விடுபட திருவள்ளுவர் பிரான்,

***நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்***
***வாய்நாடி வாய்ப்பச் செயல்***

என்ற திருக்குறளை அருளியுள்ளார். இதில் வாய் நாடி என்பது ஆசானிடத்திலிருந்து வருகின்ற திருவாய் மொழி. அதுவே அமுதம். இம் மருந்நை உட்கொண்டால் தான் பிறவி நோய் தணியும். அந்த மருந்து சித்தா, அலோபதி, நாட்டுமருந்து, கைவைத்தியம் போன்ற மருந்து அல்ல, அது பஞ்ஞாட்சர மருந்நு. பஞ்ஞாட்சரம் என்பது ஒரு பரிபாஷை. இதை ஒரு மெய் குருபிரான் தொட்டு காட்டும் போது தான்
பிறவி நோய் போகும்.

**2. அதிர்ஷ்டம்**

மனிதனுக்கு உள்ளே இருந்து எண்ணம் வெளியே வருகிறது. இதையே

***"எண்ணம் பல கோடியதாய் விரிந்தே***
***மன்னும் பல உயிர்களெலாம் னமவாய்"***

என்று ஆண்டவர்கள் அருளி உள்ளார்கள். எண்ணம் பிறக்கும் இடம் னினைவு.
அங்கிருந்து நான்வெளிப் படுகிறான்.



Copyright © AMNA Trust, Chennai

ஆசான் அவர்கள் நம்மிடத்தில் உள்ள மூன்றாவது கண்ணை திறந்த பிறகே நான், நினைவு, எண்ணம் இவைகளைப் பற்றி தெரிந்து கொள்ள முடியும். இச் செயலையே உலகநாதப் புலவர், ***"ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்"*** என்று உலக நீதியில் கூறியுள்ளார். நமது தெய்வமவர்கள்

"சர்வ னாமங்களுக்கும் இருப்பிடமாய், தனக்கென ஒரு னாமமுமிலதாய் விளங்கும் "அது" என்றதின் இஷ்டத்தில் கலப்பது அதிஷ்டம் என்று அதே செயலை அருளிள்ளார்கள்.

**3. அணு:**

குருபிரான் அவர்கள் பேசுகின்ற ஞானம் புறத்தில் காண்கிற அழியக்கூடிய பொய் பொருட்களைப் பற்றி பேசுவது அல்ல. நம்மிடத்தில் உள்ள அழியாத மெய்ப்பொருளை பற்றிப் பேசுகின்ற மெய் ஞானம். அந்த மெய்ப் பொருளையே அணு, எழுதாத எழுத்து, தோற்றமில்லாமை யென்னும் அரூபவடிவம் என பல நாமங்களில் அனைத்து வேதங்களும் கூறுகின்றன. மேலும் சூரியனுக்கும், சந்திரனுக்கும் சக்தி அளிக்ககூடிய பொருளாக சுடராக இருப்பதே அணு. இந்த சுடரை பற்றி பேசுவதே மெய்ஞ்ஞானம் ஆகும், என்ற பகிர்வுகளுடன் அவை நிறைவு பெற்றது.

**12th August, 2021 வியாழன் சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

நாம் செல்கின்ற கோவிலானது மனநிம்மதி, மற்றும் வேண்டுதல் நிறைவேற்வதற்கான இடம் அல்ல. ஏனெனில்

***தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்***
***மனக்கவலை மாற்றல் அரிது***

என்கிறது குறள். 'தனக்குவமை இல்லாதான் தாள் இன்னதென்று அறிவதற்கான நகல் அடையாளமாக கட்டப்பட்டதே கோயில். இதற்கான விளக்கங்களை அறிய கோவிலும் ஆகமவிதிகளும் எனும் தலைப்பில் 13 நிலைகளாக YouTubeல் *www.amnatrust.org* என்ற இணைய தளத்தில் காணலாம்.

உலகில் மாதா, பிதா, குரு, தெய்வம் என தனித் தனியேதான் நாம் காணமுடியும். ஆனால் ஒரு மெய்க் குருவானவர்
1.சீடனை பிரணவ சூலில் பெற்றெடுக்கும் போது தாயாகவும்,
2.அருளமுதத்தின் மூலம் அறிவுச் செல்வத்தை வேதச்சாட்சி வைத்து பஞ்சாட்சரத்தை உள்ளத்துள் உரிமையுறச் செய்யும்போது தந்தையாகவும்,
3.ஓதாமல் ஓதும் செயலின் மூலம் கால்மேலும் தலைகீழாய் நிற்கும் பிரம்ம வித்தையையும் சர்வ மூலமந்திரத்தையும் தனதாக்கிக் வைக்கும் போது குருவாகவும்
4.உயிருள்ள போதே அறிவிருக்கும் தலமாகிய காலன் அணுகாத எல்லையாகிய கைலாசம், வைகுண்டம், மெகராஜ் என்ற அதி மகோன்னதத்தில் வாழும் தேவர்களாக அகமுகத்தில் ஆக்கி வாழ வைக்கும் போது தெய்வமாகவும் விளங்குகிறார்கள் என்று அருளினார்கள். மேலும் அங்கத்தினர்கள், குருமணிமாலை காப்பு பாடலுக்கான தங்களது புரிதலை, "வந்த வேதமாகிய ஆசான் தங்களின் ஒளிர் நாவு கொண்டு தௌஹீது என்ற மெய்ஞானத்தின் மூலம் அதோகதிக்கு போய் கொண்டிருந்த நம்மை கேசரி, அஜபா,உஜூதுனடை செயலில் பழக்கி வைக்கும் வள்ளலாகவும், காமீலாகவும், அன்சாரிமார் ஆகவும், மதி இனத்து அரசராகவும் உள்ளார்கள் எனப் பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து, சென்னி பத்து பாடல் எண்.4 "***பத்தர் சூழப் பராபரன்***" என்ற பாடலுக்கான புரிதலானது, பத்தர், சித்தர், முத்தர், தொண்டர், ஞானிகள் என்ற இவர்களின் இதய மாளிகையில் பராபரனாக, இறைவன் விளங்குகின்றான். ஆதி மதமாகிய சைவத்தில் உள்ள தில்லை நடனம் என்பது மாமலர் என்ற ஆசானின் பூம்பாத நடனமாக சீடனின் அறியாமை விலகவும் சேவடிக் கண்ணாகிய மூன்றாவது கண் திறந்து சென்னிமலை வாசலுக்குள் உட்புக வைத்து ஜீவனெனும் சிரஞ்ஜீவிக்குச் செப்பும் உப தேசமாகவும் உள்ளது. எத்தன் என்பது எத்திராஜனாக வந்து எத்தா நிலைகளில் நம்மை ஏத்தி வைக்கின்ற செயல்
எனவும் பேசப் பெற்றது.


Copyright © AMNA Trust, Chennai

3. தேவாரத் திருப்பதிகம்-பாடல் எண் 4)
"***நாகப ணந்திகழல்***" என்றபாடல் பற்றி, எல்லா தெய்வத்திடமும் காணப் படும் பாம்பு மூலம் பெரியோர்கள் பல உண்மைகளைப் போதிக்கின்றார்கள். குரு பெருமானும் "படம் தான் காட்டி என்னுள் பதிய வைத்தாரே " என்ற பெரியோர்கள் முது மொழிக்கு இணங்க படம் வரைந்து பாத லட்சணத்தின் உண்மையை போதிப்பதை குறிக்கிறது, என பேசப் பெற்றது.

தொடர்ந்து குருவானவர்கள் அருளியது: வெவ்வேறு காலங்களில் நடந்த நான்கு யுகங்களிலும் பஞ்சுமா பாதகச் செயல்களாகிய கொலை, கள், களவு, காமம், பொய் போன்ற அனியாயங்கள் நடந்திருப்பது புராண மற்றும் இதிகாசங்களில் உள்ளது. ஆக நன்மை மட்டுமே நடக்கின்ற யுகம் என்பது மனிதனின் அகத்திலன்றி புறத்தில் இல்லை எனக் கூறி சாட்சியாக
ஆதி மெய் உதயபூரண வேதாந்தத்தில்

"***கண்ட தில்லை கலியுகம் மாறுதல்***
***பண்டு னின்ற பழயுகங் நாலத்தை***
***விண்டு சாலை கை வந்த அனந்நர்கள்***
***பண்டைக் கால யுகம் பரிசுற்றரே.***"

ஆதி மான்மியம் முதுமொழி உதய பருவத்தில் "***யுகங்ஙள் னான்நுங் னை கொண்ட கோடூழியர் மகதி ஆண்டவர் வந்ந வதாரமே***" என அருளி அவையை நிறைவு செய்தார்கள்.

**14th August, 2021 சிவகாசி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

ஞானம் என்பது அறிவு. அறிவை அடைய தடையாக இருப்பது மாயையாகிய மனமே

"***தேகம் உள்ளவரைக்கும் நீங்கா***
***ஏகபேத ஜாதி சண்டை***"

"ஓம் சாந்தி" ஓம் -உணர்வு, உணர்வின் மூலம் அடைவதுவே மன சாந்தி. "குருபாதம் வாக்கே போதம்" குருவின் வாக்கின் வழிநடந்து உணர்வு மேலோங்கினால் அதுவே அனுபவமாகவும் அறிவாகவும் ஆகும். குருவின் நாத மருந்து உட்கொண்டு அறிவின் வழி சென்றால் பிறவி நோயை போக்கி பிறவியற்று இருக்கலாம். பிறவியற்று இருக்க படைப்பவனை பிடித்து அடக்கம் பண்ணும் செயலை ஆண்டவர்கள் தௌஹீது மக்கா மில் அருளி இருக்கிறார்கள்.
காய்கறி, மாமிசம் எது உண்டாலும் ரத்தம் ஊறும். மாமிசம் இந்த உடல்.. உடல் மேல் இச்சை வைப்பது பாவம் .இதை விட்டு உள்ளே இருக்கும் சைவ திருமேனியை, ஒளி உடம்பை, அறிவு தேகத்தை பெற்று இறை நிலையை அனுபவத்தால் அறியும் போது சைவம்.

ஆசீர்பாதம் என்பது வாயில் சொல்வது அல்ல. பசி, தாகம், தூக்கம், ஓய்வு ஆகியவற்றை உணர்த்துவது நினைவு. நினைவென்னும் ஆகாயம் சர்வ சம்பத்தும் இருக்குமிடம். நினைப்பும் மறப்பும் நிலைப்பிடம் , தனக்குவமை இல்லாதான் தாள் இருக்குமிடம் அறியும்போது அவ்விடம் தான் "நான் "அறிவு" "கடவுள்" இருக்கும் இடம் .இதை அறிவதுவே ஆசீர்பாதம்,
"எந்த நேரத்திலும் சந்திர கலானிதி என் முன்னே இருக்க" அறிவு மயமாக இருந்தால் உன் முன்பு இறைவனும் இறைவன் முன்பு நீயும் இருக்கிறாய் என்பதாகும்.

தெய்வமவர்கள் தங்களின் அமுதனாவு கொண்டு வெளியாக்கிய தேவ ரகசியப் பாடல்களை நாம் உள்வாங்கிப் பாடும்போது அந்தப்பெருமானே நம் நாவில் அமர்ந்து பாடுவதாக உள்ளச்சத்தோடு பாடுவது பெரிய வரமாகும். ஒவ்வொரு பாடலும் வாழ்க்கை. வாழ்க்கை என்பது அனுபவம். பாடல் மட்டும் வாயினால் படித்தால் போதாது. அனுபவித்து வாழ்ந்து பார்க்க வேண்டும், கடவுளைப் புறக்கண்ணால் காண முடியாது. "கடத்தின் உள் இருப்பதால் அவர் கடவுள். உள் இருக்கும் இறைவனை உள்ஞானக்கண், மூன்றாவது கண், அறிவுக்கண் கொண்டு தான் காண முடியும். அதே போல் குருவையும் புறக்கண்ணால் பார்க்க முடியாது. காதால்தான் பார்க்க முடியும். "இடும்பறா நர ஜென்மத்தே இருந்திளைப்பவர்க்கு மீட்பு"

நாம் முதலில் நரஜென்மமாக பாதாளத்தில் விழுந்து கிடந்தோம். குருதேவர் வந்து அருளமுதம் ஊட்டி, மீட்டு ,மனுவாய்மாற்றி அறிவில் ஏற்றிவைத்து திடம் தருகிறார்கள். ஆறறிவு உள்ளவன் மனிதன்..நரை, திரை, மூப்பு, சாக்காடு இந்த உடலுக்கு உண்டு. இது கடந்து அப்பால் அறிவுடலைக் கைப்பற்றி அதில்


Copyright © AMNA Trust, Chennai

குடியேறி, உடலுள்ள போதே கைலாயம், வைகுண்டம், மெஹராஜ், பர மண்டலம் போய் வரும் பிரம்ம வித்தைச் செயலை பழகக்கூடிய ஆறாவது அறிவின் ஆற்றலை உணரும் போதுதான் மனிதன் .

நாம் அறுசுவையில், உணர்வில் ஒரே மாதிரி இருந்தாலும் அவரவருக்குள்ளும் நின்று திகழும் சிவன் எனும் வாடாத தீபத்தை அறியும் போது தான் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" எனும் சமரசத்தில் ஆகிறோம். மனிதப் படைப்பே தத்துவத்தில் உயர்ந்த தத்துவம். தத்துவ நிலைகளை தன்னுள் உணர, "சண்முகனும் நான்முகனும் சராசரப் பொருளனைத்தும் என் முகத்தில் காட்டி வைத்து "போதனையாக ஆதி மார்க்க நீதி அவையில் உணர்த்தப் பெறுகிறது .அறிவு விளக்கம் பெற்று அறியாமை அகன்று "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்ற மெய்வழியானது ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது என்பதை உணர்ந்து அழியாத நிலையை அடைய வேண்டும், என்பதே ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கமாகும்.

**15th August, 2021 சிவகாசி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீ கௌதம்**

***"வெஞ்சமரிலே விஜயன்"*** என்ற ஐம்மணிப் பொதிகையின் பாடல் படிக்கப் பெற்றதைத் தொடர்ந்து, பொதுவாய், அதியசங்களை விரும்பும் அதிசயம், மனிதன் எனவும், அழிய நிற்கிற அதிசயங்களை கண்டதிசயிக்கும் இவன், ஏன் இந்த பாடலில் பகர்ந்துள்ளபடி, அந்த விஸ்வரூப தரிசனை என்னும் அதிசயத்தைக் காண முற்படவில்லை என குரு பிரானவர்கள் கேட்ட பின், தொடர்ந்து, வேதம் தன்னகத்தே 3 கருத்துக்கள் கொண்டது. அது, நரன், மனு, தேவன் என்றும், இங்கு அறிவைப் பிரதானமாக வைத்தே இந்தக் கருத்து உள்ளது என்றும், உலகில் நாம் வாழ்வதற்கு சுவை ஊறு ஒளி ஓசை நாற்றம் என 5 அறிவு போதும், ஆனால் மனிதனுக்கு மட்டும் ஆறாவதாக ஒரு அறிவு தரப் பெற்றுள்ளது. எனவும், அதன் பயன் என்ன என அறியும்போது தான் நமக்கு மனிதன் என்று பெயர், அது வரை நாம் பார்க்க மனிதனின் தோற்றத்தில் இருந்தாலும் நம் பெயர் நரன் தான் என குரு பிரான் அருளினார்கள்.




தொடர்ந்து, இருப்பது, இல்லாதது, இவை இரண்டில் இல்லாததுதான் நிஜம் என அருளப் பெற்று, இருப்பவனும் இல்லாதவனுமாகிய இறைவன் குணம், குறி, செயல் அற்றவனாய், சர்வவியாபியாய் நீக்கமற எங்கும் நிறைந்துள்ளான். இந்த அரும்பெரும் ரகசியத்தை குருவினிடத்தில் தான் அறிய முடியும் என விளக்கியருளிய பின், ஆயுதபூஜை தினத்தில், நாம் செய்யும் தொழில் பெருக, நாம் உண்டாக்கிய ஆயுத்ததை நாமே பூஜை செய்து வணங்கி எடுத்து வைக்கிறோம், ஆனால் நிஜ ஆயுதபூஜை என்பது, அறியாமையில் இருக்கும் ஒருவனை அறிவு பிரகாசத்திற்க்கு ஏற்றிவைக்க ஒரு மெய் குருபிரான் பயன்படுத்தும் பொருளே நிஜமான ஆயுதம் என்றும், அதுவே, வில், வேல், வாள், சூலம், பராங்குசம், கோடாயிதம் என வேறு வேறு நாமங்களில் இருந்தாலும், அதன் செயல் ஒன்று தான் எனவும் அருளினார்கள். மேலும், நம்பிக்கை எல்லா மனிதர்களிடமும் இருக்கக்கூடிய முக்கியமான ஒன்று, உலக நம்பிக்கை நமக்கு நன்றாகத் தெரியும், ஆனால் இந்த ஞானத்திற்கான நம்பிக்கை என்பது நரனாய் இருப்பவன், மனுவாகி, பின் தேவனாக ஆகின்ற இந்த ஒரு செயல்தான் என அருளி மேலும், பொய் எது மெய் எது என்று போதிப்பதற்கும் பொய்யாகிய உடலையும், மெய்யாகிய, உடல் கடந்த ஆன்மாவாக உள்ளதையும் அறிவிப்பதுதான் ஞானம் எனக் கூறி, இதை அறிவிக்க வந்த *நாம்* ஒரு காரணக்கருவி எனவும் அருளினார்கள்.

மேலும், நமக்குத் தெரியாத ஒன்றை நம்மிடம் கேட்டு, அது நமக்குத் தெரியவில்லை என்று உணர்த்தி, பின் அதற்கான பதில் சொல்வது தான் எம் வேலை என அருளிய பின், ஆண்டவர்களின் கொடி நம் சிரசில் அணியும் பாகையே என்றும், உதாரணமாக ஒரு கொடி ஏற்றுவதற்கு;


Copyright © AMNA Trust, Chennai

1.கம்பம்
2.கொடி ஏற்ற கயிறு
3.கொடித் துணி
4.கொடி ஏற்றுவதற்கு ஒரு ஆள்
5.கொடி ஏற்ற ஓர் இடம் என்பது, வெளியில் உள்ள நகலாகவும், இதுவே அகமியத்தில்,

1.கொடி ஏற்றும் இடம் நம் தேகமாவும்,
2.கயிறு - நம் சுவாசக் காற்றாகிய கயிறாகவும்,
3.கொடி என்பது, ஆசான் அறிவிக்கும் அறிவின் ரகசியமாகவும்,
4.கொடி ஏற்றுபவர் ஆசானாகவும்,
5.கொடி கம்பம் என்பது ஏகம்பம் எனவும்,

மேற்கூறிய அனைத்தும், ஒரு குருபிரான் மூலம் தன்னகத்தே அறிந்து, அறிவெனும் நாட்டில் கொடி ஏற்றப் பெறும் போது தான் உண்மையான ஜீவ சுதந்திரத்தை அடைந்தவர்கள் ஆகின்றோம். அங்கனம், ஏற்றப் பெரும் வரை நம் கொடியானது, துக்க உடல் மற்றும் மனதின் ஆளுமையால், அரை கம்பத்திலேயே பறக்கவிடப்படுகிறது என்ற ரகசியமும் அருளப் பெற்றது. தொடர்ந்து, புலன், பொறி, மும்மலம், பிராணன் அனைத்திற்கும் மனமே தலைவன், அதை நடத்துவதில் மிகுந்த ஜாக்கிரதை வேண்டும் என்றும், அதன் குணம், குறி, செயல் யாவும் இறைவனின் அம்சம் எனவும், அதுவே பிரம்மம் எனவும் அருளப்பெற்றது. தொடர்ந்து, சித்தம் -அறிவு எனவும், சித்தர்- அறிவை அறிந்தவர் எனவும், மனுவைத் தவிர மற்ற உயிர்களுக்கு இருளைப் பற்றிய பயம் ஏன் இல்லை, என்பதற்கான பாரதூர ரகசியமும் வெளியாக்கப் பெற்றது.

சூரிய குடும்பத்தில் ஓர் சிறிய கிரகமாகிய பூமியில் உள்ள மலைகள், கடல்கள், ஆறு, அருவி, ஜீவராசிகள், இவற்றில் மனிதன் அணு வடிவினன் என்றும், அவனுக்கே, சூரியனையும் சந்திரனையும் அறியக் கூடிய ஆற்றல் உள்ளது. அவ்வாற்றலே மனிதனுள் விஸ்வனாகவும், விஸ்வ ரூபமாகவும் உள்ளது என புத்தெழில் பிறங்கும் புதுமொழி புகன்றார்கள்.
அழியாத ஒன்றை அறிவிப்பதுவே மெய்க் கல்வி எனவும், அதன் பயன் நற்றாளை காண்பதும், கசடாகிய அறியாமையை நீக்குவதுமாகும் என்றும், சிவானுபவம் எனும் சுகானுபவத்தை, ஒருவரோடு ஒருவர் பகிர்வதற்கே இங்கு நாம் கூடி உள்ளோம் என்பதையும் உணர்த்தி அருளினார்கள்.

தொடர்ந்து, அவையில் கலந்து கொண்ட புதிய மக்களுக்கு, இதுவரை கேட்டறியாத நம் புழக்கத்தில் இல்லாத ஒரு பேச்சானது, நல்ல செவி உணவாக இருந்திருக்கும் எனவும், நமக்கு இவையெல்லாம் தெரியவில்லை என்ற எண்ணம் தோன்றுவதும் சகஜம் எனவும் பேசப் பெற்றது. மேலும் மேற்கூறிய அனைத்தையும் அடைய காலம் மிக முக்கியம் என்றும் அந்த காலம் நம்மிடையே எவ்வாறு இருக்கிறது என்றும் பேசப் பெற்றது.

தன்னை அறிதலே இன்னில வாழ்வு, அப்படி தன்னை அறிய ஓர் மெய்க் குருவை முதலில் அடையவேண்டும், அந்த குருவே அருட் பெருஞ்ஜோதியாகவும், அவர்களின் திரு உள்ளமே, தனிப்பெருங் கருணையாகவும் உள்ளது எனவும் பேசப் பெற்று அவை நிறைவு செய்யப் பெற்றது.

**15th August, 2021 சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி.ஹேமலதா தியாகராஜன்**

சுதந்திரம் என்பது என்ன? நாம் யாருக்கு அடிமை? உண்மையில் நாம் சுதந்திரமாக இருக்கிறோமா என்றால் இல்லை. மனம், பொறி, புலன்கள் இவற்றிற்கு அடிமையாகவே உள்ளோம்.பொய்யின்ப உணர்ச்சியினால் மனம் அதன் கொடியை 'நான்' மேல் ஏற்றி உள்ளது. அதனால் நிஜமான னன் னிலத்தை வசமாக்கும் வகை தெரியாமல் இருக்கிறோம். ***"அழியாத் திருனாட்டில் ஆளும் திருவாக்கு"*** கொண்டு மனத்தின் அடிமைகளாக இருக்கும் நம்மை மீட்பித்து சு-தன்-திறம் மூலம் தன்னை அறிய வைத்து சுதந்திரத்தைப் பெற்றுத் தருபவர்களே ஆசான். ***"அடைக்கலம் பட்ட அடிமைக டமக்கு துடைத்திடும் பாவ னாசமா முதலாய்"*** அறிவு ரூபமாக வரும் ஆசான் அவர்களே துக்கமும் துயரமுமாக அரைக்கம்பத்தில் பறந்துகொண்டிருக்கும் கொடியை மின் வீசி சுதந்திரக் கொடியாக பறக்கும் வண்ணம் மாற்றி வைக்கிறார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

மனத்தைக் கொண்டு வாழும் வாழ்க்கை நரக வாழ்க்கை. மனமற்ற பரிசுத்த நிலையில் ஏறி வாழும் வாழ்க்கையே சொர்க்கம். இருக்கும்போது அனுபவிக்கின்ற சிற்றின்பம் போல் பேரின்பத்தையும் இருக்கும்போதே அனுபவிக்க வேண்டும். அதுவே சொர்க்கம். ஐம்புலன் வழியாக வாழ்ந்து தணியாத தாகத்தில் தவித்துக் கொண்டு இருக்கும் நமக்கு ஆசான் அவர்கள் தங்களின் நாதத் தொனி கொண்டு நமது தாகம், மோகத்தை எல்லாம் மாற்றி செத்துக் கொண்டிருக்கும் நம்மை சன்மார்க்கி ஆக்குகிறார்கள் . ***"வல்லபமான கலைகள் திரண்டு வருமொரு பெருங் நிரணமாக***" ஆசானின் நாதம் திரண்டு வந்து னரனை மனிதனாகவும், மனிதனைத் தேவனாகவும் மாற்றுகிறது. தாகம் தணியாதவர்களுக்கு மனம் தான் பதியாக உள்ளதால் அவனை அது அறியாமைக்குள் ஆக்கிவிடுகிறது. ஆனால் அப்படி ஆகி வீழ்ந்து விடாமல் ஆசானின் தேவபாஷையின் துணை கொண்டு உணர்வெனும் கம்பத்தின் மூலமாக ஏகனாகிய இறைவனை அறிந்து கொள்ளலாம். நாம் எப்பொழுதெல்லாம் மனமாக உள்ளோமோ அப்பொழுதெல்லாம் அவித்தையாக கீழ் நோக்கமாக உள்ளோம். பிரணவ நாட்டில் நாம் னிற்பதற்குப் பெயர் பிரம்ம வித்தை. ***"ஒடும் சுவாசம் ஒடுங்குமிட முரீது***"என்பது வித்தையாக உள்ளது அந்த பிரம்ம வித்தையை ஆசானின் துணைக்கொண்டே அடைய முடியும். ***''அளவிலா வெகுகாலமிப் பூமியில்***" என்ற பாடலில் வரும் ***"னிழற் போலும் பிரியாதெனை யாண்ட வென் தலையிலென் குரு தாள்வாழி வாழியே"*** என்ற வரிகள் னிழல் சாயலற்ற மெய்யுடம்பை அடைவதற்கு உடல் ,உளம், குளிர, நளபாக உணவளித்து அருங்களைப்பினை அகற்றி, அந்த அழியாத சொர்க்கபதி வாழ்வில் நம்மை ஏற்றி வைக்கும் குருபிரானவர்களின் வாய்மையே துணை செய்வதாக உள்ளது. என்று சத்துவாச்சாரி சத்சங்க சபையில் அறிவார்ந்த கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

**21st August, 2021 மான்மியம் சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. வடிவேலன்**

**வரலாற்று னிகழ்வு;**

ஆதி புராதன பழமைக்கு பழமையான மெய்க்கல்வி சுவிசேஷ னற்செய்தியானது இன்று ஆதி மார்க்க னீதி மொழி என்ற னாமத்தில் மின்னணு சஞ்ஞிகையாக (E-MAGAZINE) செய்தி மலர் பௌர்ணமி திருஓணம் னன் னாளில் னமது குரு பிரான் முன்னிலையில் சிறப்பாக வெளியிடப்பெற்றது. மாறிக்கொண்டே இருக்கும் வாழ்வில், மாறிக்கொண்டே இருக்கும் உடலில் உள்ளே இருக்கும் ஆன்மா மாறாது. ஏனெனில் உருவமும் பெயரும் உடைய பொருள் மாறும் இவை இரண்டும் இல்லாத பொருளாகிய ஆன்மா மாறாது. இதை அறியக்கூடிய ஒரு சக்தியாக அறிவு என்பது மனிதனிடத்தில் வைத்து படைக்கப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் ஒரு பெரும்பதவியை அடையவே வேண்டும் என்பதற்காக இறைவன் இந்த அறிவு வல்லபத்தை தந்நுள்ளான். அந்த அறிவே இறைவனாக உள்ளது. இந்த ஒரே ஒரு னோக்கத்தை அடைவது தான். எல்லா ஜாதி, மதம், குலம், கோத்திரம், மார்க்கம், வேதம், ஆலயம், வழிபாடு இவைகளின் மூலம் அந்த சுவிசேஷ னற் செய்தி உலக மக்களுக்காக தொடர்ந்து வெளியாகிக் கொண்டே இருக்கிறது இந்த மெய்ச்செயல் னமக்கு மெய்யாக வேண்டும் என்பதற்காகவே இந்த *ஆவணி - ஆவ னீ* மாதத்தில் ஆதி மார்க்க னீதி மொழி என்னும் மெய்க்கல்வியானது னம் உயிருக்கான ஜீவனுக்கான பலனை அளக்கக் கூடிய மகா பெரிய வரப்பிரசாதமாக இன்று அருளப்பட்டுள்ளது.

01.எமபடரடிபடு கோடாயிதக் கூர்.வாக்கியம்.எண்- 66.
னீதி என்றைக்கும் உறங்காது. இந்த அவையின் னோக்கம் அடுத்த தலைமுறைக்கு இந்த மெய்ச்செயலை கொண்டு போய் சேர்க்க வேண்டும். இதை னிறைவேற்ற அந்த னீதியானது ஒரு திட்டமிட்டிருக்கும். அது சரியானதாக இருக்கும். இன்னும் எவ்வளவு பேர் வந்நாலும் அனைவருக்கும் இந்த அறிவு போய் சேரவேண்டும் அறியாமை அகல வேண்டும் அதற்கு உண்டான பாடுகளையும் வழிகளையும் னாம் சிந்நிந்து செயல்படுவோம்.

02.ஆதி மெய் உதய பூரண வேதாந்நம்.
குருமணி மாலை. பாடல் எண்- 02. ***இதம் பூத்த லாசமுடன்*** எனும் பாடல்.


Copyright © AMNA Trust, Chennai

இதமாக பூத்த குருபிரானவர்கள் தன் னாதத்தால் தம் மக்களின் அறியாமையை போக்கி சரிகத்து ஒழுக்கத்தை சொல்லி செயலாக்கி வைத்து னம் பாவத்தை மாற்றி, அதாவது னமது வாழ்னாளாகிய மூச்சை துண்டாடப்பட்டு னஷ்டம் அடையாமல் காத்து புண்ணியத்தில் ஆக்கி னமக்குள் முச்சுடர் என்னும் ரகசியத்தை பூக்க வைக்கிறார்கள். பிறகு அழியாத னித்திய வாழ்வை அளிக்கிறார்கள். இதுவே குரசிக் குலத்தில் பிறந்த னபி பெருமான் அவர்கள் அருளிய செயல் என்பதை ஆதி மான்மியம் சாட்சிகளுடன் பேசப்பெற்றது.

சீர் எனும் அமானிதம் ஆசானிடத்தில் இருந்து னமக்கு வருகிறது. அந்த அறிவு கொண்டே னம் பாவம் னாசமாகிறது. ரிக் முதலாகிய நான்கு வேதங்களும் சீர் எனும் அமானிதத்தை வைத்தே

03.ஸ்ரீமாணிக்கவாசகர் அருளிய அன்னைப்பத்து.
பாடல் எண்- 06. உன்னற்கரிய சீர் ...எனும் பாடல்.
பேசப்படுகிறது. பெரியோர்கள் எல்லோரும் சத்தியம் தவறாமை என்ற ஒரே னிலையில் தான் னிற்கிறார்கள். சத்தியம் என்றால் மாறாதது. அறிவு மயமாக இருக்கும் பொழுது மாறுவது மாறாதது எது என்று னீ தெரிந்து கொள்வாய். அது போலவே இந்த ஞானமானதும் பூட்டப்பட்டுள்ளது. அதை ஒரு பெரியோர்களின் துணையோடு ஒரு சாவி கொண்டு திறந்து கொண்டால் மாறுவதையும் மாறாததையும் சுலபமாக தெரிந்து கொள்ளலாம்.

04.திரு ஞான சம்மந்நர் அருளிய தேவாரம்.பாடல் எண்-05.சந்நள ரேரு தடங்னொள் ...எனும் பாடல்.
வெந்த வெண்ணீறு என்பது பஞ்ஞாட்சரம். னாம் அதில் வேக வேண்டும். அந்த பஞ்ஞாட்சரம் என்பது இரண்டு னிலைகளாக உள்ளது. குரு பிரானிடத்தில் இருந்து னாத வடிவாக வருவது னாத பஞ்ஞாட்சரம். மற்றொன்று அழியாத னித்திய தேகமாக பஞ்ஞாட்சர மேனியாக சொந்த வீடாக இருப்பதை ஆதி மெய் உதய பூரண வேதாந்நம் சாட்சிகளுடன் பேசப்பெற்றது
05. ஆதி மான்மியம். சன்னதம் பெறு பருவம். பக்கம் எண்: 254 – 258, சர்வாகமக் கிரந்நம். ஆசானின் மூலம் உத்தி (உபாயம்) இன்னது என்று அறிந்து ஓ வண்ணம் ஆனவர்களே இந்த ஆதி மான்மியத்தை ஓத தகுதி பெற்றவர்கள். இதையே உத்தியோவனரே ஓது மான்மியம் என்று முக்காலத்திற்கும் பொருந்தும் படியாக அருளியுள்ளார்கள். வங்னலியன் - வெங்னலியன் இவை ஊர் என்பதை குறிக்கும். அது பையூறு, பாழூறு, தோலூறு ஆகிய இந்த உடலாகிய ஊர்தான். ஆதி மான்மியத்தில் கூறியுள்ள அனைத்தையும் னம்மிடத்தில் வைத்து தான் பார்க்க வேண்டும். வெளியில் வைத்து பார்த்தால் குழப்பம் தான் வரும். அறிவோடு னின்று பார்க்கின்ற ஒரு பார்வை யாருக்கு வாய்த்திருக்கிறதோ அவர்களுக்கு இந்த வேதத்தின் பலன் பயன் இன்னதென்று தெரியும். தனிகைமணி பிரானவர்கள் சாலை ஆண்டவர்களிடம் னீ கை குவித்தால் எனக்கு மிகத் தாங்னரிது என்பது "கை" என்றால் இவ்வுடலில் உள்ள கை அல்ல. தெய்வமவர்களின் னினைவிற்குள் உள்ள எண்ணமாகிய உள்ளங் னை. அது அனீதிகளைக் கண்டு உள்ளே (குவிய) யோசிக்க ஆரம்பித்தால் அதற்கு காரணமானவர்கள் அழிந்து விடுவார்கள். எனவே உன்னை னம்பினவர்களுக்கு னாலாம் பதம் கொடு என்றும் சண்டாளரானாலும் சாபத்தை கூறாதே என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே னீ கை குவித்தால் இந்த உலகம் தாங்னாது எனவே யோசிக்க வேண்டாம் என்று குருபிரான் அருளியுள்ளார்.

**னாம் ஏன் தலையின் பின்னால் கை வைத்து வணங்ன வேண்டும்?**
வினாயகப் பெருமானை வணங்னும் போது தோப்பு கரணம் போட்டு கையை மூடி தலையில் வைத்து வணங்னுவோம். அதை மாற்றி மூடி இருந்நதை னாம் திறக்கின்ற செயலே, நமஸ்காரம்

***"சீதக் களப செந்நாமரைப் பூம் பாதச்சிலம்பு பல இசை பாட"*** என்று னாம் இந்த வணக்க முறையை வெளியில் எடுத்து வைத்தோம் என்று தெய்வமவர்கள் அருளியுள்ளார்கள்.
மெய்யறிவு மெய்யுணர்வு பெற்று விளைவேறி வந்தவர்களால் மட்டுமே உணரக்கூடியதாக இருப்பது இந்த ஆதி மான்மியம். மக்களுக்கு னன்மை னடக்க வேண்டும். அது உயிருக்கான ஜீவனுக்கான னித்திய னன்மையாக மேலும் மேலும் சிறக்க வேண்டும் என்று கூறி சபையை னிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**26th August, 2021 வியாழன் சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

இந்த உலக வாழ்க்கைக்குப் பிறகு மனிதன் தன்னோடு எடுத்துச் செல்லக் கூடியது, தான் நிஜமாகச் சம்பாதித்த கசப்பு ஜல தீட்டு, நரக தண்டனை யாவற்றையும் தன்னுடனேயே கொண்டுதான் போகிறார். ஆனால் புண்ணியத்திற்கு உருவாக வந்துள்ள சற்குருவின் உதவியால் ஆறாவது அறிவை அறிந்து அதன் மூலம் அகமுக வாழ்வை வாழ்ந்து புண்ணியத்தைச் சம்பாதித்தால் இன்னிலையை மாற்றிக் கொள்ளலாம் என்று பேசப் பெற்றது.


ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்

குருமணி மாலையின் மூன்றாவது பாடலான ***"ஜலாலெனும் கடலும்"*** என்ற பாடலின் கருத்து: ஜலால் ஜமால் என்பது சிவ சக்தியாக உள்ளது. இவை இரண்டும் உணர்வின் மூலமாக இணைந்து ஹூவாக, அர்த்தநாரியாக, முச்சுடராக, மந்திரப் பொருளாக விளங்குகிறது. இருதயம் எனும் தலத்தில் விளங்கும் நடுவாகிய இறைவனுடன் இணையச் செய்யும் பொருளாக விளங்குவதே "யாகூ" என்றும் பேசப் பெற்றது.

மாணிக்கவாசகப் பெருமான் அருளிய சென்னிப் பத்து பாடல் .5: ***"மாய வாழ்க்கையை மெய் யென்றெண்ணி"***
என்ற பாடலுக்கான புரிதல்: மாயை என்ற ஒன்றுக்குள் தான் சர்வமும் அடங்கி உள்ளது. அந்த மாயையாகிய கருங் கடலைத் தாண்டுவதே ஞானம் அந்தகரணமும், புறக்கரணமும் கொண்டு வாழும் வாழ்க்கையில் இந்த உடல் தான் நாம் என்ற அறியாமையில் நிலையற்ற இந்த உடலை வளர்ப்பதிலேயே, கவனம் செலுத்துகிறோம். அதனை மாற்றிப் பிரட்டி யோக சாதனத்தின் மூலம் நம்முள் திருப்பெருந்துறை என்ற சென்னியில் அமுதூறக் காணச் செய்த குருவின் மாமலர் சேவடியைப் போற்றிப் பணிவதுவே மாயையை வெல்லும் வழி என்பது பாடலின் கருத்தாக விளக்கப்பட்டது.

ஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் முதல் திருமுறை பாடல் எண். 6,: ***"சங்கொளியிப்பி சுறா மகரந் தாங்கி"*** என்ற பாடலுக்கான புரிதல்: சங்கின் ஓசை ஆசானின் நாதத்தைக் குறிப்பதாக இருக்கிறது. "இக்க டத்தை நீக்கி அக்கடத்துள் ஆக்கும்" புண்ணியத்தில் சேர்த்து வைப்பது குரு பிரானின் வாய்மையே."கு" என்ற அறியாமையை வெல்லும் "ரு" என்ற அறிவு வெளிச்சம் ஆகிய ஆசானின் நாதமே திருவீழிமிழலை யாகத் திகழ்கிறது.

**குருபிரானவர்களின் அருள்மொழி:**
மெய்வழி குழந்தைசாமி ஐயா அவர்கள் நிஜம் என்ற ஒன்றைத் தன் காதில் புகுத்திப் பெரிதைப் பெரிதென்று உணரச் செய்து அதில் தன்னைப் பிரட்டி ஆக்கி யுகப்புரட்சி செய்து அதி உன்னதத்தில் ஏற்றிவைத்த பெருநிலையை இன்றளவும் எண்ணி எண்ணி வியப்பதாகக் கூறினார்கள்.

**வேத கலை**: பாதம் நான்கு வகையாக இருக்கிறது. இந்த நான்கு பாத ரகசியமே வேத கலையாக விளங்குகிறது. கலை என்பது காலப்பெட்டகமாக விந்தை ரகசியமாக மனிதனுக்குள் வைக்கப் பெற்றுள்ளது. பிராணனும் பிரணவப் பொருளும் இரண்டும் ஒன்றாகச் சேரக்கூடிய நிலையைத்தான் வேதம் முழுமைக்கும் அருளப்பட்டிருக்கிறது. குணங்களைக் கொண்டு தான் ஏழு வகைத் தோற்றங்களை உண்டாக்கி இருக்கிறார்கள். இந்த குணங்களை கடந்து நிர்க்குணனாக நிற்கும் இரகசியத்தைப் பெரியோர்கள் வேதத்தில் இறக்கி அருளியுள்ளார்கள் .


Copyright © AMNA Trust, Chennai

**துறவலர்:-** மனத்தைத் துறந்தவர்களே துறவலர். ஏகாட்சரப் பொருளாகிய அறிவாக விளங்குபவர்களே துறவலர். அப்படியான "படைப்பு அனைத்தும் திரண்டு வந்த திருமேனியராக அத்தனை அறிவையும் ஓர் அறிவாகத் திரட்டி நின்று விளங்கிக் கொண்டிருக்கும் பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் அந்த மறைமணி ஞான வாழ்க்கையை தம் மக்களுக்கு வாழ்ந்து காட்டினார்கள், என அருளி அவையை நிறைவு செய்தார்கள்.

**28th August, 2021 மான்மியம் சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

கோடாயிதக்கூர், வாக்கியம்-67.
அனித்திய உலக வேலைகளையே ஒரு நாளில் பழகித்தேற முடியாது என்றால் னித்திய வேலையாகிய ஜீவஇரட்சிப்பு பிரம்மவித்தைச் செயலைச் சிற்றறிவு கொண்டு ஒரேநாளில் பழகித்தேற முடியுமா? சத்தியமாக முடியாது.

காலத்தின் ரகசியம் தெரிந்து, ஜீவ இரட்சிப்பு செயலாகிய பிரம்ம வித்தையைப் பழகி, னிர்க்குணமாகிய பெருங் குணம் கொண்ட பேரறிவுப் பெரியோர்களின் பெருந்தகையால் மூன்றாவதுகண் திறக்கப்பட்ட பிறகுதான் அறிவுச்செல்வத்தைப் பெற்று பெருஞ்செயலாகிய எமன் எல்லையில் வெற்றி பெற்று ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் பெறலாம்.

***"அங்குமதிடத்தில் ஐம்புலக்கதவை யடைக்கும் பேரறிவெனக் கருளி எங்குருனாத ரெனக்குபதேச",*** உபதேசம் என்பது படிப்பது, கேட்பது அல்ல.பழகும் பிரம்ம வித்தைச் செயல்.

குருமணிமாலை-பாடல் - 4. "***அவ்வலில் தையிபான உட்பொருளாய்...***" எனத்தொடங்கும் பாடல். அவ்வு-சிவசக்தி, அர்த்தநாரீஸ்வரர் ,ஆண் பெண்ணற்ற நிலை, கங்குல் பகலற்ற நிலை, ரகசியத் துறைப்பெருங்கடல் நல்ல தண்ணீர் கடல் திருப்பாற்கடலாக கன்சுல்-கூரிய இருள் வஸ்துவாக, புள்ளியாக, ஆதியே துணையாக, நாதமாக உள்ளது. திவ்யமான கோடி சூரிய பிரகாசம் பொருந்திய குருபிரான் நம் மேல் அன்பு வைத்து அறியாமை எனும் இருளைப் போக்கி அன்பெனும் பொருளான ஜீவனே சிற்றம்பலப் பொருள் என்பதை நமக்குள் காட்டும் போது தான் அன்பே சிவமாக இருப்பதை உணரமுடியும். ***சிவானந்த போதம் "ஜீவனே னீயாகும் அறிவும் னீயாம் சிவன் தானே னீயா கும்."***

திருவாசகம்- அன்னைப்பத்து பாடல் -7 "***வெள்ளை கலிங்கத்து"*** எனத் தொடங்கும் பாடல். வெள்ளை ஆடை வேத வலச்சி- சரஸ்பதி யாகிய அறிவின் லட்சணம். வெள்ளை ஆடையை (அறிவே ஆடையாக) அணிந்து வரும் குரு பெருமான் திருக்கரத்தில் உள்ள வென்னீராகிய நாத பஞ்சாட் சரத்தினால், நம்முடைய பாய் மனமாகிய குதிரையை பின் வைத்து அறிவை முன் வைத்து நடக்கும் மெய் வழியைக் காட்டி ஜாதிக் குதிரையாக பழக்கி வைக்கிறார்கள்
மனதை அறிவாக மாற்றி அன்னம், மயில், வாசி என்ற குதிரை ஏறி கைலாயம் வைகுண்டம் பரமண்டல மெகராஜ் போய் வரும் பிரம்ம வித்தை செயலில் வழி கூட்டி வைக்கிறார்கள்.

தேவாரம். முதல் திருமுறை - பாடல் -7. ***"காமனெரிப் பிழம்பாக நோக்கி"*** எனத் தொடங்கும் பாடல். காமனைக் கண்ணால் எரிக்கும் செயல். குருபிரானவர்களின் நெற்றிக்கண்ணில் இருந்து வெளியாகும் தீ -நம்முடைய அறியாமையை எனும் பாவங்களைச் சுட்டெரித்து அறிவெனும் பிரகாசம் ஏற்றும் விபூதி, ***"தொட்டவுடன் சுட்டுவிடும் எங்கள் பஞ்சாட்சரமே"*** வெற்றி தரும் பூப்போன்ற தீ. பூ -மலர் சீர் மணம், அறிவின் மணம், மெய் மணம், என்றும் குன்றாத மணம், மாறா மணம். ***"தெய்வப் புண்ணியன் பூ மலர்சரணம் சஞ்சீவி".***

ஆதிமான்மியம் சன்னதம் பெரும் பருவம்: சாணார் குல னாயகவேதம் ஓதப் பெற்றது. பாட்டையா இறக்கிவைக் கொணாத மதிச்சுமையை "ஒரு சொல்லில் நின்ற உத்தம சுத்த உறுதி நாயகமான." எல்லா சன்னதங்களும் பெற்று உலகம் உய்யக்கூடிய செயலைக் கைவரப்பெற்ற ஆண்டவர்களிடம் இறக்கிவைத்து மனசடவெல்லாம் தீர்ந்தார்கள். அறிவு வடிவாக அருவுருவான நாரணன் எனும் நாத வடிவமாக நாவிலிருந்து கூடவே வருவதாக அருளியுள்ளார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

***"பகவான் சுழற்றும் பாருலகமும்"***

திருக்குறள்:- ***சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்***
***வகை தெரிவான் கட்டே உலகு.***

குருவின் அருளால் நம்முள் அகக்கண் கொண்டு பார்க்கும் போது பார் உலகம் சுழற்றும் பகவானை தெரிந்து கொள்ளலாம்.

**29th August, 2021 சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**



***திரு.சாலை ரவி அவர்கள்***
***நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை***

***"இணங்கிய சுபாவம் பார்த்து***" என்ற ஆதிமெய் உதயபூரண வேதாந்தத்தில் உள்ள தோத்திரப் பாடல் பாடப்பெற்று சபையானது தொடங்கப்பெற்றது.

**இணங்கிய சுபாவம்:**
ஞானத்திற்கு இணக்கம் என்பது ஓர் முக்கிய அம்சமாகும். பெரியோர்களின் தேகத்தை மட்டும் பார்த்தால் இணக்கம் வராது. பெரியோர்கள் அமுதனா கொண்டு அருளும் ஞானப்பாலை நம் செவி வாயிலாக அருந்திய பிறகே இணக்கமானது வரும். மேலும் ஒருவனின் அறியாமையை நிர்மூலமாக்கி அறிவை ஊட்டிய பின்புதான் அந்த இணக்கம் ஆரம்பமாகிறது. ஆசானை சந்திக்கும்போது ஒருவனிடத்தில் ஒழுக்கம் அவசியம் வேண்டும். கொலை, களவு, கள், காமம், பொய் எனும் பஞ்சமா பாதக செயலிலிருந்து நீக்கி தன் தாய்மை குணத்தின் மூலம் இணங்குதற்கு உளவு சொல்லி நம்மை இணக்கம் ஆக்குகிறார்கள். இதனை, ***புறந்தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்*** எனும் திருக்குறள் மெய்ப்பிக்கிறது.

மேலும், குரு ஸ்தோத்திரத்தில், "***தாகம் தீர்த்த தனிப்பெருங்கடலே***" என்ற பாடல் மூலம் மனதின் வேகத்தைக் காட்டி, அதனை அறிவின் வழி ஆசான் தான் செலுத்துகிறார்கள் என்பதும் பகிரப்பட்டது.

**பாவ - புண்ணியம்:** ஜீவனானது முக்குணங்களுடன் அசையும் நிலையில் இருப்பது பாவம் என்றும், அதே ஜீவனானது (ரஜோ, தாமஸ, சாத்வீக) முக்குணங்கள் அற்று நிர்க்குணமாக, அசையா நிலையாகிய சைவத்தில் இருந்தால் புண்ணியம் என்றும் கூறப்பட்டது. பல கோடியாய் விரிந்திருக்கும் எண்ணத்தை ஆசான் ஒருவரே ஓர் முகத்தில், ஓர் புள்ளியில் நிறுத்த வல்லவர். அதுவே ஆதிப்புள்ளி, ஆதியே துணை. ஆதியை அறிய குருவே துணை. '**தாவா**' என்றால் வழக்கு என்று பொருள்படும். அதாவது மனிதனுக்கும் எமனுக்கும் இடையில் உள்ள வழக்கையே குறிப்பிடுகிறது. இதனை பிள்ளைத் தமிழில் ஆண்டவர்கள், ***"தாவாவொன் றில்லாத என் இறைவர் தாலோ தாலேலோ***" என்றும் அருளி உள்ளார்கள். நாம் பிறந்ததிலிருந்து மூச்சானது துண்டாடப்பட்டு நஷ்டமடைந்து கொண்டே இருக்கிறது. அதுவே பாவம். ஆனால் மூச்சு லயமாகிய மனோலயத்தில் எமனுக்கு வேலை இல்லாமல் ஆகிறது. வழக்கானது ரத்து செய்யப்படுகிறது. இம் மெய்ச்செயலை அறிந்த மக்களுக்கு காருண்ய மூர்த்தியாகவும், அறியாத மக்களுக்கு கருணா மூர்த்தியாகவும் இறைவனானவன் நின்று விளங்குகிறான்.
"***வழக்கை ஒழிக்கவே வாழ்த்தொலி செய்தனர்"*** என்று நம் ஆண்டவர்கள் திருப்பஞ்ஞனை எழுச்சியில் பாடியுள்ளார்கள். மேலும் சித்த வேதத்தில், சிவானந்த பரமஹம்சர் 'இருப்பது நிஜமல்ல - இல்லாமல் போவதே நிஜம்' என்றும் கூறுகிறார். இந்த உலக வாழ்க்கையே சதம் என்று வாழ்வது நிஜமல்ல, ஏதுமற்றதாய் போய் நீ ஒடுங்கி தூங்காமல் தூங்கி சுகம்பெறும் வாழ்வே நிஜம் என்பதையும்


Copyright © AMNA Trust, Chennai

விளக்குகிறார். நம்முள் அறிவுக்கும் அறியாமைக்கும் இடையில் ஏற்படும் போர்க் களமே குருஷேத்திரம் என்றும் விளக்கப்பட்டது.

**புத்த பகவான் தீர்க்க தரிசனம்**:
"பருவதங்களின் ராஜாவாகிய சினீரும் எரித்து அழிக்கப்படும்" என்ற வாக்கியத்தில் சினீர் என்பது மனம். மனமே அழி அவாவினனாகிய கலியன். ஆசானின் பரிசுத்த ஆவியாகிய சிவாக்கினியில் மனமாகிய கலியானது அழிந்து தலையுகமான பிரம்ம உலகு தோன்றி உண்டாகி உதயமாகும். அதுவே பொன்னரங்க தேவாலயம், கைலாயம், வைகுண்டம், மெகராஜ் என்பதாகும். அறிவுத் தெளிவே இப்பெருநிலையில் நம்மை குடியேற்றி வைக்கும் என்பதை திருமூலர் பிரான் திருமந்திரத்தில் நான்கு விதமாக கூறுகிறார்கள்.

***தெளிவு குருவின் திருமேனி காண்டல்***
***தெளிவு குருவின் திரு வார்த்தை கேட்டல்***
***தெளிவு குருவின் திருநாமம் செப்பல்***
***தெளிவு குருவின் திருவுரு சிந்தித்தல்தானே***

**மான்மியம் காப்புச் செய்யுளில் வரும் "சொன்னயனக் கலை": *"நாதமது விளைந்தவர் பேர் நாதனாகும் நாரியர் மேல்கலந்திடினும் கசியாநாதம்*"** ஆசானின் சொன்னயனக் கலையின் மூலம் தான் வான் துறையாகிய சொர்க்கபதிக்கு செல்லமுடியும் என்றும், அவித்யாபாதத்தில் (மனமாக) இருக்கும் நம்மை, தங்களின் சொன்னயனக் கலையின் மூலம் வித்தியா பாதத்தில் (அறிவு நிலையில்) ஏற்றிவைக்கிறார்கள் என்றும் கூறப்பட்டது.

எல்லோருக்கும் சொர்க்கம் செல்ல ஆசை இருந்தாலும் அங்கு செல்லக்கூடிய வழியை ஆசான் ஒருவரே தொட்டுக்காட்ட முடியும். அதுவே சொர்க்க புரியின் திறப்பு வாசல். இதனையே "***நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன்***" என்று சத்திய வேதத்தில் கூறப் பெற்றுள்ளது என்ற விளக்கங்களுடன் அவை நிறைவு பெற்றது.

## ஞானமேதை குணங்குடி சுல்தான் அப்துல் காதிர் ( என்ற ) மஸ்தான் சாகிபு (ஒலியுல்லா ) அவர்களின் மகிமை

குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் தொண்டிக்கு அருகில் உள்ள குணங்குடி எனும் ஊரில் கி.பி.1788 ஆண்டு நயினார் முகம்மது- பாத்திமா இவர்களுக்கு மகனாக பிறந்தார். இவரது இயற்பெயர் சுல்தான் அப்துல் காதர். இவர் தன்னுடைய 17-ஆம் வயதில் துறவு பூண்டு, கீழக்கரை சென்று அங்கு நான்கு ஆண்டுகள்(கி.பி.1805-1809) மார்க்கக் கல்வி பயின்றார்.

பிறகு திருச்சிராப்பள்ளி மற்றும் பல இடங்களில் தங்கி 14-ஆண்டுகள் தவம் புரிந்தார். இறுதியாக சென்னையில் 12-ஆண்டுகள் வாழ்ந்தார். 47-வது வயதில் (கி.பி.1835 ஆண்டு) அடக்கமானார். குணங்குடியாரை மக்கள் தொண்டியார் என்றே அழைத்தனர். அவர் இருந்த இடம் தொண்டியார் பேட்டை என்று கூறப்பட்டது. தற்போது அந்த இடமே தண்டையார் பேட்டை என்று அழைக்கப்படுகிறது.

குணங்குடியார் பாடிய ஞான நூல்களில்;

***சூத்திரப்பாவை கயிறற்று வீழும் முன்***
***சூட்ச்சும கயிற்றினை பாரடா***
***அதி சூட்ச்சும கயிற்றினை பாரடா***
***நேத்திரம் இரண்டிலும் நேரில் இலங்குது***
***நீடொளி போன்றது தேட அரிதாகி காத்திரம் உள்ளது***
***யாவும் பொதிந்தது***
***கையிலும் காலிலும் எட்டப்படாதது .***

என்ற பாடல் மிகவும் சிறப்புவாய்ந்தது.


Copyright © AMNA Trust, Chennai

மேலும் நாகூரில் உள்ள சாகுல் ஹமீது அவர்களின் அடக்கஸ்தலத்தில் பாடிய;

***திக்குத் திகந்தமும் கொண்டாடியே வந்து தீன் கூறி நிற்பர் கோடி***
***சிம்மாச னாதிபர்கள் நகரேந்தியே வந்து ஜெய ஜெயா வென்பர் கோடி***
***அக்கனருள் பெற்ற பெரியோர்கள் ஒலிமார்கள்***
***அணி அணியாக நிற்பர் கோடி அஞ்ஞான வேரறுத்திட்ட மெய்ஞானிகள்***
***அணைந்தருகில் நிற்பர் கோடி***
***மக்க நகராளும் முகம்மது றசூல் தந்த மன்னரே யென்பர் கோடி***
***வசனித்து நிற்கவே கொலு வீற்றிருக்கும் உம்***
***மகிமை சொல வாயுமுண்டோ***
***தக்க பெரியோனருள் தங்கியே நிற்கின்ற தவராஜ செம் மேருவே***
***தயவு வைத்தென்னை யாள்***
***சற்குணங் குடிகொண்ட சாகுல் ஹமீதரசரே.***

என்ற பாடலும் சிறப்புடையதாகும்.

**ஐயறிவுத் தோற்றங்களும் அதனை அளவிடும் ஆறாவது அறிவும் !**
**தொகுப்பு: ஸ்ரீமதி.ஜீவிதா வடிவேலன், சென்னை**

**குரு கீதை:**
ஸ்தாவர சங்கமமான இச்சராசரம் எதனால் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ அந்த துவம்பதம் எவரால் காட்டப்பட்டதோ அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு நமஸ்காரம். இறைவன் 84 லட்சம் ஜீவராசிகளை இவ்வுலகில் படைத்ததற்கான காரண காரியங்கள் என்ன? இப்படைப்பினங்கள் மூலம் மனிதன் பெற வேண்டிய அறிவுத் தெளிவு என்ன?

"படைத்தான் படைப்பனைத்தும் மனுவுக்காக மனுவை படைத்தது தன்னை அறிய" என்று வேதம் கூறுகிறது. தன்னை அறிந்த பெரியோர்கள் வந்து அறிவு தீபத்தை ஏற்றிய பிறகே படைப்பின் சூட்சமங்களை அறிய முடியும். வண்டலூர் பூங்காவிற்கு (Zoo) சென்ற போது அங்குள்ள சில படைப்புகளை கண்டபோது ஏற்பட்ட சிறிய புரிதல்.



**குரங்கு:** குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்று பழங்காலம் தொட்டேபேசப்பட்டு வருகிறது. வேதங்களில் குரங்கு என்பதை மனதோடு ஒப்பிட்டு கூறுகிறார்கள். "***மனமெனும் ஓர் பேய் குரங்கே மடப்பயலே***" என்று வள்ளல் பிரான் அருளியுள்ளார்கள். எண்ணத்தின் சேர்க்கையே மனம். மனிதனின் எண்ணமே இம்மானிட தேகமெடுக்க காரணம். ஞான முறையீடு -***"எண்ணமாம் வன்னியாலே எடுத்திடும் தேகமெல்லாம்"*** குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்பது செயலை வைத்து கூறப்பட்டதே தவிர உருவத்தை வைத்து அல்ல.

**மயில்:** மயில் அழகாக தோகை விரித்தாடுவதை பார்த்துகொண்டே இருக்கலாம். ஆயிரம் கண்களைக் கொண்டு தோகையை விரித்து நடனம் ஆடி நம்மை மாயையில் இழுத்து செல்வதால் தான் மயிலை மனதோடு ஒப்பிட்டு கூறுவார்கள். மனமாகிய மயிலை அறிவாக மாற்றிக் கொண்டால், அதுவே கைலாயத்திற்கு கூட்டிச் செல்லும் வாகனமாகவும் மாறும்.

**பறவைகளின் வர்ணங்கள்:** இறைவன் பல வகைப்பட்ட வர்ணங்களையும், பலவிதமான குரலோசையையும் பறவைகளுக்கு படைத்துள்ளான். வர்ணம் என்பது உடலில் இல்லை. ஜீவனில் தான் உள்ளது என்பதை மனிதன் தன்னுள்


Copyright © AMNA Trust, Chennai

உணரவேண்டும் என்பதற்காகவே அவைகளுக்கு கண்ணாடிப் பொருளாக வைத்து படைத்துள்ளான். இவற்றையெல்லாம் பிரித்து பார்த்து ரசிக்கக்கூடிய அறிவு மனிதனிடத்தில் மட்டுமே வைத்து படைக்கப்பட்டுள்ளது.

**விலங்குகளின் வலிமை:** யானை,சிங்கம், குதிரை, புலி நீர் யானை போன்ற விலங்குகள் எப்பெரும் வலிமையாகவும், பெருத்த தோற்றத்தில் காட்சியளித்தாலும், இவையனைத்தும் னித்தியமற்ற உடல் வலிமையை குறிப்பதே. ஆனால்

இறைவன் னித்திய வலிமை எனும் அமானிதத்தை மனிதனுக்கு மட்டுமே சீதனமாக அளித்துள்ளான் என்றால் மனிதன் எப்பேர்ப்பட்ட உன்னத சிறப்புடையவன்.

**ஜலம் வாழ் ஜந்துக்கள்:** மீன், முதலை, ஆமை, போன்றவைகளுக்கு ஜலத்தில் வாழ்வதற்கான உடலமைப்பை இறைவன் அளித்துள்ளான். அந்த சூழ்நிலையில் மட்டுமே அவைகளால் வாழ முடியும். ஆனால் மனிதன் மாத்திரம் எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் வாழ்வதற்கான ஆறாவது அறிவுடன் படைக்கப் பெற்றுள்ளான். அந்த அழியா தேகமாகிய ஆறாவது அறிவை அறிய வேண்டியதே மனுவின் தலையாய கடமை. அதுவே ஏழாம் பிறப்பு. ஆறறிவு கொண்டு ஏழாம் பிறப்பை ஒரு சற்குரு பிரான் மூலம் பெற்றுக் கொண்டவனே தேவன். இல்லையெனில் னரன். இந்த வித்தியாசத்தை எடுத்துக் காட்டவே எழுவகைத் தோற்றமும் எடுத்து வைக்கப்பட்டது என்பது தெய்வத் திருவாக்கு.

**மரம்:** ஓரறிவு உள்ள மரமானது ஒரே இடத்தில் இருந்து தனக்கான உணவை எடுத்து கொள்கிறது. பறவைகளுக்கு இருப்பிடமாகவும் நின்று இலங்குகிறது. இறைவன் இட்ட கட்டளைப்படி வாழ்ந்து மனிதனுக்கு அறிவையும் புகட்டுகிறது. மரம் மட்டுமல்ல எல்லா ஜீவராசிகளும் தன் கடமையை முடித்து அதற்குரிய வாழ்க்கையை வாழ்வதால்தான் பாவ புண்ணியம் அவைகளுக்கு இல்லை. ஆனால் சர்வ படைப்புகளையும் ஆட்சி செய்யும் அறிவை அளித்திருப்பதால் மனிதனுக்கு மட்டும் பாவ புண்ணியம் இருக்கிறது.

*“தருக்கினம் புள்ளூர்காலி ஜலம் வாழ்ஜெந்தும்*
*தான் பிறந்த அதன் கடமை முடித்து னிற்க*
*அரிய பிறப்பான மனு னானென்று ஓதும்*
*அவ்வுருவை னோக்கி உன்றன் கடமையென்ன*
*விரித்துரை செய்யெனக் கேட்டால் விழிக்கு மந்த*
*வெறி கொண்ட வீணறிவுப் படிப்பை னோக்கில்*
*னெறியறியார் உயிருடனிங் ஙலகை யல்லால்*
*னிலத்திலது வேறில்லை சட்டம் தீர்ப்பே.”*

தனித்திருப்பாடல்கள் மனுவின் கடமை புண்ணிய உருவாக வரும் குரு பெருமானவர்கள் நம்மை சீடனாக ஏற்றுகொள்வது ஒன்றே உலகில் கிடைத்தற்கரிய வரமாகிய னித்திய பேரின்ப பெருவாழ்வு. அவ் வாழ்வே இத்தகைய அறிவுத் தெளிவுகளை அளிக்கும் என்று கூறி, வண்டலூர் பூங்காவிற்கு சென்றதின் மூலம் பெற்ற அனுபவங்களின் பகிர்வை நிறைவு செய்கிறேன்.

**August, 2021 இசைப் பயிற்சி சாரம்சம்**
**தொகுப்பு: ஸ்ரீ.தியாகராஜன்**

**01.08.2021**

ஐம்மணிப் பொதிகையில் வரும் “***தந்நருள வேண்டுமென்ற மைந்நர் தம்மைத் தனிகையர்தன் திருக்குமர குபேர ரான”*** என்ற பாடலை எப்படி தாளத்துடன் பாட வேண்டும் என்பதையும் தொடர்ந்து, பஞ்ஞாட்சர பதிகமான முதல் பத்து பாடல்களையும் தாளத்துடன் எப்படி பாட வேண்டும் என்பதை லயம்பட கற்றுத் தந்தார்கள்,

**08.08.2021,**

குரு ஸ்தோத்திரத்தில் இருந்து


Copyright © AMNA Trust, Chennai

***"காவ லானபு ராதன வேதியர் மேவ லானவ ரோதயென் னாதர்மேல்***"என்ற பாடலை தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், தொடர்ந்து 1-2, 1-2, 1-2, என்று கைத் தட்டி தாளத்தைகற்கும் பயிற்சியும் நடைபெற்றது.

**22.08.2021,**

தெய்வத் திருப் பாடல்களின் திரட்சி தோத்திரப் பாடல்களில் இருந்து ***"இணங்னிய சுபாவம் பார்த்து என்னிருதயத்தி னுள்ளே"*** என்ற பாடலை சபையில் இருந்த அங்ஙத்தினர்களை தனித் தனியாக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. தொடர்ந்து, ***"தனித்தனற் றலைமைப் பெரும்பதி யரசைத் தரும்புனற் றுறைசிங்னாசனரே"***என்ற பாடலுக்கான பயிற்சியும் அளிக்கப்பட்டது.

**29.08.2021,**

***"அளவி லாவெகு காலமிப் பூமியிற் பழமை யானபு ராதனப் பூர்வீகர்"*** குரு ஸ்தோத்திர பாடலுடன் இசை வகுப்பு தொடங்கப்பட்டது. தொடர்ந்து, ஆதி மான்மியத்தில் இருந்து

" **எல்லாண்டு எல்லாண்டு**
**எண்ணாய்கி றத்தாண்டு"-எவ்வேத ஆசானுமாய்ப்**
**பல்லாண்ட பழமைப் பரிசே அவதாரா**
**இங் – ஙோவடி கொள்ளுங் நுடிகாப்பே**"

என்கிற பாடலை கலிவிருத்தமாக எப்படி பாட வேண்டும் என்பதையும் மேலும் "***அருண்மணி விரிந்து பெருந்நுறை சிறந்த ஆதியின் மேனாள் னீதியின் றலையாய்***"என்கிற அகர வரிசை பாடலையும் தாளத்துடன் எப்படி பாட வேண்டும் என்பதையும், அங்ஙத்தினர்கள் தனித்னியாகப் படித்து பயிற்சி மேற் கொண்டனர்,

## 'சாலை' என்பதைப் பற்றி ஆண்டவர்கள் அருளியது

"சாலை என்றதும் முள் வேலியிட்ட இந்நஊர் என்று தான் உங்கள் எல்லோர் எண்ணமும் ஓடும் இன்று முதல் அந்த எண்ணத்தை மாற்றி விட்டு சாலை என்றோர் மெய் மேனி இந்நா வந்நுலாவுதே- இதன் பால் உங்கள் பூரா கவனமும், ஆத்திரமும் வழிபாடும் இருக்கட்டும். அப்பத்தான் அந்த அமளி நேரத்தில் தலை தப்பும்."

சாலை என்பது மெய் மேனியாக மகாபிரம்மம் ஆக மானிட உருவில் உலாவும் மெய் ஞான சிவ குரு பிரானே. அவர்களின் பால் உங்கள் பூரா கவனமும், ஆத்திரமும், வழிபாடும் இருக்கட்டும் என்பதே பிறவாமையில் ஆகிக் கொள்வதற்கான நமது பாடுதான் வழிபாடு.

ஆதி மான்மியம் பக்கம் 9, 10, ல் ***"விளங்னு மென்றன் ஞான சபை மலர்ந்நு ஓங்ங"*** என்ற (இரண்டாம் காண்டம் 56 வது செய்யுள் முதல்) ***"னிற்பதுவே பணரதுவுந் நலை கீழாக"***-எனும் 65வது பாடல் வரை அதனுள் அடங்னி யிருக்கும் பரிசுத்த உட்பொருள் வியாக்யானத்தை இவ்வுலகிற்கு எக்காலத்தும் தெய்வத்திருனாட்டிலிருந்து இறங்கி வந்நு விளங்னத் துலக்கிக் கொண்டிருக்கும் அரிய சோங்னாகிய மெய்ஞான ஓர் சிவகுரு பிரானை ஆய்ந்நு தேடி அவர்களின் செழுஞ் ஞீதள மனோ னோக்கிற் கிணங்னி மேலே குறித்திரானின்ற பத்துச் செய்யுள்களையும் வருங்கால மக்கள் எல்லோரும் விளங்னிக் கொள்வார்களாக என ஓர் ஆசீர்பாதமாக அருளி யுள்ளார்கள்.

அதன்படி விளங்ன வைக்கும் மெய்க்குருபிரான் ஒருவரைத் தேடி அடைய வேண்டியது ஒவ்வொரு மனுவின் தலையாய கடமையாகும்.

ஆதி மான்மியம் பக்கம் -334 ல் "அங்ஙே மான்மிய மகாத்மியமானது மகாவிஸ்தார அலங்காரமாக எழுதப்பெற்று வருகிறது"என்று அடீ பேரிகை என வீரப்பிரம்மம் அவர்கள், நிகழ்கால நிகழ்வுகளையே அருளியுள்ளார்கள்.

திருமெய்ஞானக்கொரல் (பக்கம். 250)

"ஞானசபை" ஒரு தெய்வ ஆசானுடைய சுத்த கிரண ஆவி பரவி னின்று இலங்கும் எல்லையே சபை. சபை என்பது தன் ஆசரியரின் மெய் மேனியே



Copyright © AMNA Trust, Chennai

என்ற எண்ணம் னேர் பெற உறுதிப்படும் போது மெய்ஞானம் எளிதாகிறது என்று ஆண்டவர்கள் அருளியுள்ள படி ஆசானின் அமிர்தவர்ஷிப்பு இலங்கும் இடமே ஞாசைபை. மேலும், இந்த மெய்யைப் பற்றி பேசவேண்டும் என னினைத்தால் உன்னாவில் னின்று னாம் பேசுவோம் என ஆண்டவர்கள் அருளியுள்ள படி இதற்கு அருகதையான பூரண அறிவு பெற்றவர்களுக்கே இது வாய்ப்பதாக உள்ளது. எதார்த்த நன்மன மக்கள் யாவராயினும் இதற்கு அருகதை உடையவர்களே.ஆண்டவர்கள் எனப் படங்களில் நாம் காணும் திருவுருவம் தெய்வமல்ல எனும் உஜார் ஜாக்கிரதையை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆண்டவர்கள் என்பது மகா பிரம்மமான பூரண அறிவாக அழிவற்றதாக மானிட இனம் உள்ள வரை இருப்பதாகும்.


Copyright © AMNA Trust, Chennai

# செப்டம்பர் மாத நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



திரு.சாலை ரவி அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, செப்டம்பர் மாத மின்னணு சஞ்சிகையின் தொகுப்புகளை ஆதி மார்க்க நீதி அவை மிகுந்த மகிழ்ச்சியுடன் உங்களுக்கு வழங்குகிறது. மூன்றாவது முறையாக மலரும் இச் சஞ்சிகை எங்கள் பெருமையைப் பறைசாற்றுவதற்கு அல்ல. இதில் உள்ள செய்திகளை உள்வாங்கி தனக்கும் இது வேண்டும் எனத் தேடுகின்ற தேட்டமுடைய மக்களாக, இப்பேர்ப்பெற்ற பெரும் பொருளை பெற்றவர்கள் நாம் எனும் எண்ணம் உடைய மக்களாக இதன் நிலைகளை உணர்ந்து வாழ்ந்து, இதனை மற்றவர்களுக்கும் சொல்லக்கூடிய நிலைக்கு அருகதை உடையவர்களாக ஆகி இருக்கின்றோம் என்பதே, இம் மின்னணுச் சஞ்சிகையின் வெற்றியும் பெருமையும் ஆகும். இதனை ஊன்றி நோக்கி உணரும் பொழுது தான் இது உலக பத்திரிகைகளைப் போன்ற ஒன்றல்ல என்பதை உணரமுடியும். அப்படி உணர்ந்து எங்களை நோக்கி நீங்கள் உங்கள் அறியாமை அகலுவதற்கான கேள்விகளுடன் வருவதற்கு வழி மேல் விழி வைத்து காத்திருக்கிறோம். இஸ்லாத்தில் உள்ள அருமையான வாசகம் "அஸ்ஸலாமுஅலைக்கும்" "வஅலைக்கும்ஸலாம்" அதாவது "உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக" என்பதாகும். வேதங்களும், அதன் தலையான மூல மந்திரங்களும், இவை யாவற்றையும் உள்ளடக்கிய மதங்களும், அதன் உட்பிரிவுகளாக ஜாதிகளும், குலம், கோத்திரங்களும், பரந்து விரிந்து இருந்தாலும் இவற்றின் அடிநாதமாகத் திகழ்வது சமத்துவமும் சமாதானமும் சமரசமும்தான். இவை யாவும் உடல் சார்ந்தது அல்ல, மாறாக உயிர் சார்ந்த ரகசியமாக உயிர்ப்புடைய அறிவாக உள்ளது. மெய்யான அறிவைப் பெற்றவனே நிஜமான சமத்துவத்தைப் பெற்றவன். சமத்துவமும் சமாதானமும் நிச்சயமாக உலகிற்கு வேண்டிய ஒன்று. பசி பஞ்சம் பட்டினி இவற்றிற்கு சமத்துவமற்ற நிலையே காரணம். செல்வந்தன் ஏழை என்னும் ஏற்றத்தாழ்வு கொண்ட எண்ணங்களே சமத்துவமற்ற நிலைக்குக் காரணமாகவும், இதனால் பல நாடுகளும், இனங்களும், குலங்களும், கோத்திரங்களும், ஜாதி, மதங்களும், உண்டாகி உள்ளன. இதனை எடுத்துச் சொல்லும் என்னுடைய மன நிலை என்னவென்றால், இப்படியான வேதங்களையும், அவதூறான விஷயங்களையும், மக்களிடையே பிளவு உண்டாக்குகின்ற மதம், குலம், ஜாதி, கோத்திரம், இவற்றை உள்ளடக்கிய மூலமந்திரம், வேதம், இவையாவும் தேவையில்லை என்றுதான் சொல்வேன். மனிதனை பிரித்து ஆளுகின்ற சக்தியாக விளங்கும் மதங்கள் மதங்களாக இருக்காது. மாறாக யானைக்கு பிடித்திருப்பது போன்ற மதமாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை. மதங்கள் வந்தது ஒரு உன்னத காரியமான சமத்துவம், சமாதானம் இவற்றை விளங்கிட விளக்கி அதில் நம்மைத் துலக்கி ஆக்குவதற்காகத் தானே அன்றி மனித குலத்தை நாசம் செய்வதற்கு அல்ல. அப்படி இருந்தால் அது மதமல்ல, அதனைப் பெரிதாக பேசுபவர்களும் மனிதர்களாக இருப்பதற்கு அருகதையற்றவர்களே. மனிதனின் பசி மற்றும் சுகத்தின் முன்பாக சமாதானம் சமரசம் யாவும் பஞ்ஞாகப் பறக்கும் தூசிதான். துக்க நிவர்த்தி சுக ப்ராப்தி என்பது சகல உயிர்களுக்கும் பொருத்தம் என்றாலும் இதை நிறைவேற்றும் தகுதி படைத்தவன் மனிதன் மாத்திரமே என்பதற்கு சாட்சி, இவன் வேற்று கிரகங்களிலும் அதை நாடுவதுதான். ஒட்டுமொத்த உலகமும் தேடி அடைய வேண்டிய ஒன்று சமத்துவம். இது வாயில் பேசுவதல்ல இதைக் காண வேண்டுமாயின்


Copyright © AMNA Trust, Chennai

அவரவரின் ஆறாவது அறிவின் தெளிவை நோக்கிய ஒரு பயணமாக இருக்க வேண்டும் என்பதே ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கம். பல நிலைகளில் ஒரு மாதமாகப் பேசப் பெற்ற ஒன்றை நன்மக்கள் தொகுத்து ஆதி மார்க்க னீதி மொழியாக வழங்கியுள்ளார்கள். அப்படியான அறிவுக்கான சமத்துவம் சமாதானம் சமரசத்தை அத்தனை பேரும் அறிந்து அனுபவித்து அதுவாகவே வாழ வேண்டும் என்பதுவே இந்த ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கம். மேலும் மேலும் மேலான நிலைகளை மக்களுக்குப் பகிர்ந்தளிக்க இந்த அவையானது காத்துக் கொண்டிருக்கிறது. இதனைப் பார்த்துப் படித்து அனுபவித்து வரும் மக்களுக்கு நல் ஆசீர்பாதங்களைக் கூறி மேலும் உங்கள் அறிவுத் தெளிவிற்கான பல கேள்விகளையும் உங்களிடமிருந்து எதிர் பார்த்து காத்துக் கொண்டிருக்கிறேன்.

நமஸ்காரங்களுடன் சாலை ரவி.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2021 செப்டம்பர் மாத சபை நிகழ்வுகளின் சாரம்சம்

**02-09-2021 வியாழக்கிழமை சபை:**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 39**
ஆண்டவர்களின் திருவாக்கின்படி, 'உள்ளம்' என்பது மகாமகசூக்கான இருதயம். அதில் மரண அச்சம் சதா உலவுவது மெய்ஞ்ஞான அறிவு சுடர்விட்டுப் பிரகாசிப்பதற்கான மேன்மையான னிலையாகும். பிரம்மோபதேச வைப்பே மெய். ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவே உபதேசம். ஆசானுடைய திருவாய் அமுத மொழிகளே, 'பிறந்ததினி இறவாது பேசும் பஞ்சாட்சரமாக' என்றென்றும் அழியாத னாதமாக, மெய்யாக இருப்பது. ஆறு அடுக்கு தாண்டி, மேலே சிபத்துக்களாகவும், கீழே னபுசு களாகவும் விளங்கும் ஏழாவது அடுக்காகிய அந்த அரங்கமே அமானிதமாக, நிலைக் கண்ணாடியாக, உபனிடத வைப்பாக விளங்குவது என்றும் கூறப்பட்டது.

**குருமணிமாலை:-*"சத்தியம் திரண்ட சாயுச்சியக் கடலே"*** பாடல் எண் 5.

**சாலோக, சாரூப சாமீப சாயுச்சியம்** என்பதில் சாயுச்சியம் மேலான னாலாம் பதம். அழிதுயர் மரணம் தன்னை அனுபவித்தறிந்து வந்து அருளும் அவர்கள் கையில் சன்னதங்கள் இலங்க னின்று சாற்றுவோன் சாயுச்சியன். அவர்களிடமே சத்தியம் மாறாததாய் திரண்டு னிற்கிறது. இந்த நான்கு பத னிலைகளையும் னம் உடலுக்குள்ளேயே பார்க்க வேண்டியுள்ளது.

1) உடம்பு சாவதற்கென்றே பிறந்தது அதுவே சாலோகம்.

2) இதனைத் தூலம் எடுத்து ஒருவர் வந்த னிரூபிக்க வேண்டும். அப்படி அரூபமாக இருந்து ரூபமாக,
உயிரோட்டமாக வருவது சாரூபம்.

3) அதன்மூலம் சாவு வரப்போவதை உணரும் பொழுது அதற்குப் பெயர் சாமீபம்.

4) இந்த மூன்று ரகசியத்தையும் தாண்டி னிற்பதுதான் சாயுச்சியம்.

னிர்க்குணமாக விளங்கும் சாயுச்சியர் சகலராக கல்யாணக் குணமாகிய இரட்சிப்பு குணத்தில் னாம் நெருங்கும் வண்ணமாக முத்திரைக் கரம் கொண்டு ரட்சிப்பதற்காக இறங்கிவரும் மதினா வேந்தராகத் திகழ்கிறார்கள், என்று குருமணி மாலை பாடல் விளக்கப் பெற்றது.

**துறவு**

***பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்***
***பற்றுக பற்று விடற்கு***

உடல், மனம் ,கடந்து அப்பால் விளங்குகின்ற இறைவனுக்கு வள்ளல் பெருமான் தந்த பெயர் இயற்கை உண்மைக் கடவுள். அறிவுப்பூர்வமாக அவ்விறைவனை, நம்முள் ஆவிப் பொருளாக, உருவம் அற்றதாக, ஒன்றும் இல்லாதவனாக உணரும் போதே நாம் பற்றற்றவன். தூல வாசனை அற்று மனம், நான் அற்ற நிலையில் போய் இரண்டறக் கலக்கும் னிலைக்குப் பெயர் துறவு; சன்யாசம்; இதுவே பிரம்ம வித்தை. னினைப்பு மறப்பு இவற்றின் னிலைப்பிடமாக துர்நாற்றம் அண்ட முடியாத பரிசுத்த தலத்தில் தான் இருக்கிறாய் என்பதை அறிவு கொண்டு, சாட்சிபூர்வமாக, அனுபவமாய் அறிந்தவனுக்குப் பெயர் துவிஜன்.

"ஓங்குவ ருயிர்க்கு னாளும் உறுதுணை வருமா னிற்பர்" உயிருக்கு, நாளாக ஆண்டவர்கள் உறுதுணையாகின்றார்கள் என்றும், மனுத் தலையில் இருக்கும் பேசரும் பெரும் பொருளை மும்மூர்த்தி கரம் கொண்டவர்களால் மாத்திரமே மிகச்சுலபமாக விளக்கித் தரமுடியும். தேடுகின்ற தேட்டமும் சுனசுனப்பும் உள்ளவனுக்கு சாயுச்சிய பதம் என்பது
நிச்சயமாகிறது என்றும் தெளிவாக்கினார்கள்.
குருபிரான் -மக்கள் சந்திப்பு.
அச்சமயம் மக்கள் பாடிய பாடலுக்கு ஏற்ற விளக்கம் தரப்பெற்றது.


Copyright © AMNA Trust, Chennai

குரு ஸ்தோத்திரம்:- ***"காவலானபுராதன வேதியர்"*** . கண்ணாடிக்கு பளிங்கு என்ற பெயருண்டு.

***"அண்ட பகிரண்டமெல்லாம் தொண்டரிதயத்தின் மனக்***
***கண்ணாடிக்குள்ளிருந்த காரணத்தை யான் மறவேன்".***

சுயம்பிரகாச நித்தியானந்த பொருளை உன்னுள் கண்டு வணங்குவதே தன்னையறிதல். அதற்கு ஆசான் துணை வேண்டும். மனிதன் உருவமற்றவன் ஆதலால் எண்ணிக்கையில் அடங்காதவன் என்று விளக்கினார்கள். மேலும் ஆறாவது அறிவை அறியாமல் இருப்பதே கொடிய தரித்திரியம் ஆகும் என்றும் ."ஓம்" எனும் பிரணவ மந்திரமே உணர்வு. பொய்யாக உள்ள அதனை மெய்யுணர்வு ஆக்கி மூலமந்திரத்தை னிரூபிக்கும் எமனை வெல்லும் செயலாகப் பெரியவர்கள் மூலம் பழகி வருவதே பஞ்சாட்சரம். அது உன்கைவசம் ஆனால் இறைவன் உன் வசம் என்றும், ***"பொய் புகலேன், புனைந்துரையேன், சத்தியம் சொல்கிறேன், மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம், சிற்சபையும் பொற்சபையும் புகும் தருணம்"*** ஆகிய இவை அனைத்தும் செயலுடன் இருக்கிறது. பஞ்ச பூததத்துவத்தின் ஒட்டுமொத்த உருவம் தான் இறைவன். னாத வடிவினனான அவன் ஒவ்வொருவரின் னாமமாக உள்ளான் என்றும் அறிவித்தார்கள் ."வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க " மனவேகத்தைக் கெடுத்து சரகதி, சர்ப்ப கதி, மயூரகதி, இடி ,மின்,மனோகதி என அறுவகைப் பாய்ச்சலை சுருட்டி வைத்திருப்பது அறிவின் ரகசியம். திருக்கயிலாயப் பரம்பரையாக வருபவர்களுக்கே அந்த மதிவேக அறிவின் முனை துளிர்த்து னிற்கும். சீடர்களைக் கண்ணாடியாக குருபிரான் பார்த்து தங்களுடைய அமிர்தவர்ஷிப்பை, சீடனின் அறிவில் தைக்கும் வண்ணமாக அருளுகின்றார்கள். இன்ப துன்பத்தை சமமாக பாவிக்கும் பக்குவம் பெற்றவனுக்கு துக்கம் துயரம் இல்லை. அதற்கான பழக்கங்கள் தான் ஆதி மார்க்க னீதி அவையில் சொல்லித் தரப்பெறுகின்றது .இந்த ஞான அகவலாகிய அழைப்பை அதற்கான சட்ட ஆண்பிள்ளை கள் எம் சார்பாக ஆங்காங்கே னடத்துகிறார்கள். ஐம்மணிப் பொதிகையில் "தந்நருள வேண்டுமென்ற மைந்நர் தம்மை"என்ற பாடலுக்கு தன்னாமம் மாறி குருவின் அறிவு வடிவு பெறுவதே குருவின் அருள் பெறல் என்றும் விளக்கினார்கள். ஆதி மார்க்க னீதி அவையின் மூலம் இரத்த உறவிற்கு மேம்பட்ட உயிர் ஒட்டே நம்மை ஒன்றாக இணைத்துள்ளது என்று கூறி அவையை னிறைவு செய்தார்கள்.

**04-09-2021 மான்மியம் சபை:**
**தொகுப்பு: ஸ்ரீ. வடிவேலன**

***" மாயக் கூத்தின் வகை யறியாமல் யான்***
***காயப்பட்டுக் களைத்தந்ந னாளையில்***
***தூய ஞானச்சுடர் விளக் கென்னுளே***
***பாய வைத்த பதத்தை மறப்பனோ"***

என்ற குரு ஸ்தோத்திரம் பாடலைப் பாடி குருபிரான் அவர்கள் சபையை தொடங்ஙினார்கள்.

**01. மாயக்கூத்து**.

இந்ந உலகில் தோன்றி மறைவது அனைத்தும் மாயக்கூத்து. இதை அனுபவிக்க ஒரு உடல் வேண்டும். இந்ந உடலும் ஒரு மாயக்கூத்து. ஏனென்றால் இதை உண்டாக்கியவரின் பெயர் மாயவனார். மாயவனார் செய்த மண்பாண்டம் என்று நந்நனார் அவர்களும் கூறியுள்ளார்கள். இந்ந மாய வாழ்க்கையை னாம் இறைவனிடம் வேண்டி விரும்பி கேட்டு கடனாக வாங்ஙி வந்நோம். இதையே னமது தெய்வமவர்கள் ;

***"வானெலாம் சிறப்போனாகி***
***வருகுவே னென வாக்கீந்து***
***தானெழு கடனும் வாங்ஙித்***
***தரைதனில் னரனா வந்நோன்***
***ஈன னன்றி கெட்டோனாகி***
***இருங்ஙடன் பளுப் பாவத்தால்***
***வீண் புகைத் தலையாய்ப் போக***
***இருக்கின்ற தோற்றமந்நோ"***


Copyright © AMNA Trust, Chennai

என்று அருளியுள்ளார்கள். அப்படி வாங்கிய கடனை இறைவன் திரும்ப கேட்கும் போது நாம் இல்லை என்று கூறுகிறோம். ஏனெனில் ஈன னன்றி கெட்டவனாகி மறந்து விட்டோம். இதை னமக்கு னினைவூட்டவே வேதங்களும் அவற்றை அருளிய வேத கர்த்தர்களும் இந்த னில உலகத்திற்கு தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறார்கள். பழமைக்கு பழமையான இதை அறிந்து னமது கடனை திருப்பி செலுத்தும் செயலே இறை வழிபாடு. இதுவே னிஜமான மெய்ஞானம்.

**02.கோடாயிதக் கூர்: வாக்கியம் எண்- 68**.

ஒவ்வொரு மனிதனும் ஈசனுடைய ரூபத்தில் தான் படைக்கப் பெற்றுள்ளான். ஈசனுடைய ரூபத்திற்கு வாக்தேவி, சரசுபதி தேவி என்று பெயர். மனிதனுடைய அதாவது மெய்ஞான மகத்துக்களின் னாவினில் தான் "சரசு னதி பதியாகிய" அந்நத் தாய் குடியிருக்கிறாள். இதுவே ஓசையும் ஒலியுமாக னின்று விளங்கும் ஈசனின் ரூபமாகும். இச் செயலை அறிந்து மனு ஈசன் ஆவதும் அல்லது மனுனீசன் ஆவதும் ஜீவ சுதந்திரமாக ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. "சு-தந்திரமாக" இருக்கும் பொருளே அமானிதம். இதுவே தானெழு கடனும் வாங்கித் தரைதனில் னர னா வந்நோன் என்பதாகும். ஆகவே னாம் னர னா, மனித னா, தேவ னா என்பதற்கு மேற்கூறிய ஈசனுடை ரூபமே (ஓசைஒலி) அடையாளம் ஆகும். மனிதனை விட பெரிய னீளமான னாக்கும் வலிமையும் உள்ள விலங்குகளிடத்தில் சரசுபதி இருப்பதில்லை. ஏனெனில் இறைவனுடைய மூலமந்திர வார்த்தைகள் அவைகளின் காதில் கேட்காது. கேட்கும் அறிவு அதற்கு கிடையாது. இதையே திருவள்ளுவர் பிரானும்,



*ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்*

***"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்***
***அவியினும் வாழினும் என்"***

என்று கூறியுள்ளார்கள். ஆகவே செவிச்சுவையை அறியக்கூடிய ஒரு சக்தியை இறைவன் னரனுக்கு வைத்திருக்கிறான். அந்த சுவையை அறிந்து "மூன்றாவதுகண்" அறிவுக்கண் திறக்கப்பட்டு னரன் மனிதனாக பிறந்து பிறகு தேவனாக மனுஈசனாக வாழ்வதே னம் தலையான கடமையாகும்.

**03. குருமணி மாலை: பாடல் எண்-06**:

**"தத்துவம் கடந்த தயானிதிக் கடலே"...**என தொடங்கும் பாடல். புறத்தில் னாம் காணும் கடலானது பல மக்களின் வாழ்வுக்கும் இறப்புக்கும் காரணமாக இருக்கிறது. ஆனால் இறை தத்துவத்தை கைக்கொண்ட மெய் ஞானிகள் தமது வாய்மை என்ற பேரொளி கடலால் னம்மை இந்த ஆழி சூழ் உலகில் இருந்து காப்பாற்றி பிறவிப் பிணியைப் போக்கி னித்திய பேரின்பக் கடலில் கொண்டு போய் சேர்த்து னித்தியனாக பேரின்ப வாழ்கையில் னம்மை வாழ வைக்கிறார்கள். இதையே னமது தெய்வமவர்கள் ஞான முறையீடு என்ற பாடலில், ***"கார்க்கும் ஞானக் கடல் வாய் மடுக்கவே பார்க்கவும் பிறவிப் பிணி தீய்க்கவும்"*** என்று அருளியுள்ளார்கள். இச் செயலையே னீ னான் என்று இரண்டிலாக் கடல், தயானிதிக் கடல், முத்தியின் கடல் என்றும் வீடடைதல் என்றும் கூறுகிறார்கள்.

**04. ஸ்ரீமாணிக்கவாசகர் அருளிய அன்னைப்பத்து:பாடல் எண்-08**:

**"தாளி அறுகினர்"...** என தொடங்கும் பாடல். ஆளுடைப்பிள்ளை என்பது இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் என்று பொருள். ஆலமரத்தின்



Copyright © AMNA Trust, Chennai

அடியில் இருந்து தெற்கு னோக்கி அமர்ந்நிருக்கும் தட்சிணா மூர்த்தியிடமிருந்து ஆதம் னபி மூலமாக தென்னாடுடைய சிவமாக என்னாட்டவர்க்கும் இறைவனாக இந்த உலகில் பரவியது. இந்த ரகசிய செயலை செய்பவர்களே ஆளுடைப்பிள்ளை என்று அழைக்கப்படுகிறார்கள். இதையே னமது தெய்வமவர்கள் ***"ஆலடி தோன்றி வளர்ந்நரசில் ஆளுடை எங்குள் குலகுருவே"*** என்று பாடிவைத்துள்ளார்கள்.

**05. திருஞான சம்பந்நர் அருளிய தேவாரம்: பாடல் எண்-08:**

**"இலங்கையர் வேந்தெழில்"...** என தொடங்கும் பாடல். அழகும் வலிமையும் உள்ள புலன்களை எஜமானாகிய மனமானது சிற்றின்பத்தில் பழக்கி வைத்து இறுதியில் னம்மை எமன் கையில் சிக்க வைக்கிறது. அத்தகைய வலிமையான மனதை குருபிரான் அவர்கள் தன் பெரு விரலால் ஊணி அழுத்தி அதை அறிவாக மாற்றி வைக்கிறார்கள். மீண்டும் அந்த மனமானது சிற்றின்பத்தை னாடும் போது தம் வாய்மை எனும் னாதத்தால் னம் அறிவு சுடராகிய தீபத்தை தூண்டி விடுகிறார்கள். இதையே னமது தெய்வமவர்கள் ஆதி மான்மியத்தில், ***"ஒத்தை யான் மறை ஊணி யழுத்திய உத்தியோவனரே ஓது மான்மியம்"*** என்று அருளியுள்ளார்கள்.

**06. ஆதி மான்மியம்: சன்னதம் பெறு பருவம்:சர்வாகமக் கிரந்நம்**:

அகிலத்திரட்டு அம்மானை சாணார்குல வேதனாயகம் அவர்களால் அருளப்பட்டது .இது ஒரு தீர்க்க தரிசனப் பாடல்.16-ஆம் னூற்றாண்டில் பேசப்பட்டது. 300-வருடங்களுக்குப் பிறகு 19-ஆம் னூற்றாண்டில் மீண்டும் இந்த அவதாரச் செயல் எப்படி னிகழும் என்பதை குறித்து எழுதி வைத்துள்ளார்கள். ஒரு மெய்க்குருபிரான் இரக்கத்தால் "சொன் னயனக் கலை" மூலமாக மூன்றாவது கண் திறக்கப்பட்டு உத்தி ஓ வண்ணமாக ஆனவர்கள் முக்குணமற்று னிர்குணமாகி னின்றால் மட்டுமே இந்த பாடலை அறிந்து கொள்ள முடியும். மேலும் புலன்களுக்கு தலைவனாக இருந்து னமது வயது வாழ்னாளை வீணாக்கி வஞ்சுத்தை செய்யக்கூடிய மனதை, அலையாமல் பாதுகாக்கும் அறம், தர்மம் என்ற பிரம்ம வித்தை செயலை பழக்கி அறிவு சார்ந்த ஒரு தெளிவான வாழ்க்கையை மோட்சத்தை அளிக்கும் னிலைகள் குறித்தும் பேசப்பட்டது.

**அம்மாவாசை**:

"***திங்க ளென்குலத் தெய்வத்த னிப்பிரான்***
***பங்கு னிமாத மாம்பவு ரணையில்***
***பொங்கு பிரம்மோப தேசம்புனைந்நனாள்***
***எங்கும் மெய்வழி ஏர்குல னோன்ம்பிதே***".

இதுவே முழு னிலவு னாளாகும்.கங்குல் பகல் அற்ற இடம். இரண்டும் ஒன்றான இடம். இதுவே அம் மாவாசி ஆகும். னாம் எல்லோரும் இந்த னாளோடு பழகி இறைவன் அருளை பெறவேண்டும் என்று கூறி குருபிரானவர்கள் சபையை னிறைவு செய்தார்கள்.

**05-09-2021 சத்துவாச்சாரி சபை,**
**தொகுப்பு: ஸ்ரீ. நாகலிங்கம்**

**பாத பூஜை:**
***"சுயம்பிரகாச நித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது***
***அஞ்ஞானம் என்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை***
***ஞானம் என்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே!***
***தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்களுக்கே னமஸ்காரம்"***

இதன் புரிதலாக இறைவனுடைய திருவடியை கண்டு அடையும் பெரும்பேறு என்பது அவ்வளவு எளிதல்ல. அது அதிக முக்கியமானதும்,அரிதான ஒன்றாகவும் உள்ளது.மேலும் அத்திருவடிப் பேறு ஒரு மெய் குருபிரான் ஒருவருக்கு வாய்த்து அக்குருவின் மூலமே அடையும்


Copyright © AMNA Trust, Chennai

ஒன்றாக உள்ளது. அப்படி இன்றி நாமாக அடைய முடியாததாக உள்ளது. சிவபுராணப் பாடலாகிய ***"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்.மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்"*** என்று மாணிக்கவாசகரும் மேலும் "துயரறு சுடரடி தொழுதெழு மனனே" என்று திருவாய்மொழியிலும் திருவடியின் பெரும் பேற்றை பெரியோர்கள் கூறியுள்ளார்கள். மேலும் அத் திருவடியானது சுயம் பிரகாசமாகவும், ஜீவ சுடராகவும் உள்ளது. அதை அடைவதற்கு முதலில் நாம் நம் மனதின் தன்மையை அறியவேண்டியுள்ளது. மனிதனிடத்தில் மனமே பிரதானமாகவும் அத்தனைக்கும் அடிப்படையாகவும் உள்ளது. அத்தகைய மனதை ஒரு ஆசாரியரின் வழிகாட்டுதலின்படி அணுகும்போது அது செம்மையாகிறது அதை உலகப் பராக்கில் மயங்குறச் செய்யாமலும், நலிவுறாமலும் காக்கவேண்டும் என்றும் விளக்கப்பட்டது. மேலும் ஐம்மணிப் பொதிகையில் ***"தேகம்னம்போ லுள்ள எம்குரு னாதருக்கு"*** எனும் பாடல் பாடப்பெற்றது. அதன் புரிதலாக, ஒரு மெய்க் குரு பிரான் பார்ப்பதற்கு தூலத்தளவில் நம்மைப் போலவே இருந்தாலும் அவர்கள் ஏதும் இலதாய் யாதும் உளதாயும், ஆதியும் அந்தமும் கடந்தவராகவும் உள்ளார்கள். உயர்திணை அஃறிணை ஆகிய ஜீவன்களிலும் நின்று விளங்கும் பரம்பொருளான "அது " எனும் வஸ்து எந்த நாமத்திற்குள்ளும் அடங்காததும் அனைத்து நாமங்களுக்கும் உரியதான ஏக வஸ்துவாக உள்ளது. ஞானிகள் அதனைத் தன்னில் அறிந்து செயலளவில் அதுவாகவே வாழ்கிறார்கள். நம்முடைய அகங்காரங்களையும், அறியாமையும் தன் நாதத்தின் மூலம் நீக்குகிறார்கள். அவர்கள் நம் போன்றே ஒத்த தேகத்தில் இருப்பினும் நிஜத்தில் தூலம் கடந்த ஒப்பனைக்கு எட்டாதவராகவே இருக்கிறார்கள். அவர்கள் எங்கோ காட்டிலோ மலையிலோ இன்றி வீட்டினில் நம்முடனே இருப்பார்கள். அவர்கள் ரூபமற்ற அறிவாகவே விளங்குவதுடன், என்றென்றும் நமக்கு அறிவு வெளிச்சம் அளிப்பவராகவும், இரவி மதிக்கு வெளிச்சம் அளிக்கும் சுடரை, அடைந்தவராகவும், தன்னை அண்டியவர்களுக்கு அச்சுடரை அளிப்பவராகவும் இருக்கிறார். ஆகமம் புராணம் வேதங்களிலும் சொல்லப்பட்ட நாமங்களும் அவர்களுக்கே தகும் என்றும், அவர்கள் அருளும் உளவின்மூலமே சோகமற்ற மனதை வாகனமாகக் கொண்டு கைலாயத்தை அடையலாம் என்றும் விளக்கப்பட்டது. மேலும் ஐந்தறிவின் தலையரசன் சிவன் எனும் ஆறாவது அறிவாக, மூன்றாவது கண்ணாக, மனமாக, ஜீவனாக உள்ளது. நிஜ அன்பு என்பது உலகப் பொருளைத் தவிர்த்து, பிரகாசப் பொருளான தன் ஜீவன்மீது வைக்கும் அன்பே நிஜ அன்பு என்றும், ஜீவனே நம் தலைக்கு தலையாகவும், தீண்டா திலகமாகவும்,தூண்டா மணியாகவும் உள்ளது எனவும் நம் மனமே சிறிய திருவடியாகவும், உற்சவராகவும் பின் அதுவே அறிவாக மாறும்போது பெரிய திருவடியாகவும், மூலவராகவும் உள்ளது எனவும் பேசப் பெற்றது. புறத்திலே ஓடிக்கொண்டிருக்கும் மனம் நம்முள் ஓர் நிலையில் இருக்கும் இடமே நிலையம் ஆகும். அனைத்து மதத்திலும் சொல்லப்பட்ட "பிறை" என்பது அறிவின் குறியீடாகவும் அறிவே பிரதானமானதாகவும் உள்ளது அதன்மூலமே எமனை வெற்றிகொள்ளமுடியும் எனப் பகிரப்பட்டு குருவின் திருவருளால் சபை இனிதே நிறைவுபெற்றது

**05-09-2021 சிவகாசி சபை:**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

இன்று ஆசிரியர் தினம் என்பதை நினைவூட்டி சபை தொடங்கப் பெற்றது.

***"வாழ்வனைத்தும் தந்நெனது குலமுழுதும் தனையாண்டு***' - ஞான அகவல் பாடலை குரு பிரான் அவர்கள் தங்கள் னாத தொனி கொண்டு இசைத்த பின்பு ***"காயமன வாக்கினால் அடைந்ந கன்மங் னாயமன வாக்கினால் கடக்க வேணும்"*** என்ற சிவானந்த போதப் பாடலின் புரிதல் பகிரப்பட்டது,

**காயம்:**

காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா, என்று பெரியோர்கள் கூற கேட்டு இருக்கிறோம். சுவரில்லாமல் சித்திரம் வரைய முடியாது. இந்த தேகம் இருந்தால்தான் நம் ஜீவதேகத்தை அறிந்து குருவின் அருளால் பேரின்பத்தை அனுபவிக்க முடியும்.

**மனம்:**



Copyright © AMNA Trust, Chennai

மனம் எதைப் பார்த்தாலும் ஆசைப் படும், மனம் பூரித்தால் பாவம் கை வரவாகும், அறிவு பூரித்தால் ஞானம் கிட்டும், நினைவின் இன்னொரு வடிவம் மனம். மனம் பதட்டம் அடைந்தால் சுவாசம் அதிகம் செலவாகி வாழ்நாள் வீணாகும், மெய்க் குருபிரானின் செவியுணவு பருகும் போது மூச்சு அடங்கி இருக்கிறது, வயதைப் போக்குவது உன் மனமாகிய ராஜா. அதைப் போகாது தடுப்பது அறிவாகிய மந்திரி என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**வாக்கு**:

குருவின் வார்த்தையே திருவாக்காகவும், சஞ்ஜீவியாகவும், பிறவிப்பிணிக்கு மருந்தாகவும் இருக்கிறது, அதுவே அருளாக யுகாந்த நாட்டு செல்வமாகவும் இருக்கிறது.

**கன்மம்:**

காய மன வாக்கினால் வரும் கன்மம் என்பது வினையாக உள்ளது, வினையினால் பிறப்பு எடுக்கிறோம், எண்ணம், சொல், செயல், எனும் மூன்றினால் நாம் வாழும் வாழ்வில் நல்வினை, தீவினை இரண்டுக்கும் மனமே காரணமாக உள்ளது.

**மாயை:**

மாயை என்பது நிலை போல் காட்டி நிலையில்லாமல் மாறிக் கொண்டேயிருக்கும் இந்த உடல்தான். ஞானத்திற்கு தடையாக இருக்கும் மாயையை, வெல்வதற்கு குருபிரானின் வாக்கில் நம்பிக்கை வைத்து அவர் சொல் கேட்டு நடக்க வேண்டும். வஞ்சுகமான எண்ணங்களை விட்டு குருபிரானை சரணடைய வேண்டும். ஸ்ரீமாணிக்கவாசகப் பிரானவர்கள் அருளிச்செய்த திருஞானத் தாழிசை பாடலில் மனதைப் பற்றி அருளியுள்ளார்கள், சுழினை என்பதை இருதயம் என வேதம் கூறுகிறது. உலகக் கல்வியென்பது வயிற்றுப் பிழைப்புக்காகத்தான் என்பது சாகாக்கல்வியாகிய மெய் கல்வியைக் கற்கும் போதுதான் தெரியவரும்.

**திரு அருட்பா** :

*“கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே*
*காணார்க்கும் கண்டவர்க்குமங் கண்ணளிக்குங் கண்ணே*
*வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே*
*மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே*
*நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே*
*நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே*
*எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே*
*என்அரசே யான்புகலும் இசையும் அணிந்தருளே*”.

எனும் வள்ளலார் பாடல் இசைக்கப் பெற்று அதன் புரிதல் பகிரப்பெற்றது.

மெய்க்கல்வி கற்றுத் தேர்ந்தோரிடம் ஏற்றத்தாழ்வு என்பது கிடையாது. தூல தேகத்தைக் காண்போர்க்கு ஏற்றத்தாழ்வு இருக்கும். ஜீவதேகத்தைக் காண்போர்க்கு ஏற்றத்தாழ்வு இருக்காது என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஜீவ தேகம் என்பது பிரணவ தேகமாக, நற்றாளாக, ஏழ்நிலைக் கம்பமாக, ஊமை எழுத்தாக, பிள்ளையார் சுழியாக, திருப்பாதமாக இருக்கிறது. குருவின் வாய்மைக்குள் ஆகி விடுவது ஒன்றுதான் மெய்க்கல்வியை கற்போரின் ஒரே லட்சியம் என்று கூறப்பெற்றது.

***“அந்த னாளில் அணைத்தெனை யாட்கொண்டு”*** என்ற குரு ஸ்தோத்திரம் இசைக்கப் பெற்று அதன் புரிதலாக, நாளின் சிறப்பை அறிந்தவர்கள் மட்டுமே நாளை ஆட்கொள்ள முடியும். மனிதனுக்கே உரித்தான "நாள்" என்பதை அனுபவிக்க மனிதனுக்கு மட்டுமே தெரியும். ஐம் புலன்களின் வழியாக கழிந்து கொண்டே போகும் நாட்களை, ஒரு மெய்க்குரு பிரான் அருளால் வீணாகாமல் கற்க முடியும். தன்னைத்தான் ஆண்டுக் கொண்டவர்களே ஆண்டவர்களாகவும், ஆண்டாளாகவும், ஆண்டியாகவும் இருக்கிறார்கள். தலை வணங்கி வணங்கும் வணக்கத்திற்கு உரியவர்கள் தென்முக தெய்வமாக இருக்கும் குருவாக இருக்கிறார்கள். அவர்களே சாகாக்கல்வியின் பயனாகிய மரணமிலாப் பெருவாழ்வை நமக்கு கற்றுத் தந்து அதற்கான ஜீவ உணவை உட்கொள்ள செவி வாயிலை நமக்கு திறப்பிக்கிறார்கள், மேலும்



Copyright © AMNA Trust, Chennai

பேரின்பம் அளித்து, நம் அறியாமையை சுட்டிக் காட்ட வல்லவர் மெய்க்குருவே, என்றும், தீண்டும் பொருட்களை தீயானது தன்மயமாக்கிக் கொள்வது போல ஆசானும் தன் மாணாக்கர்களை தன்னைப் போல் அறிவு வடிவாக ஆக்குகிறார்கள் என பேசப் பெற்றது.

**ASH WEDNESDAY (திருநீற்றுப் புதன்)**

***“அனைத்தும் மண்ணிலிருந்து உண்டாகி மண்ணுக்கே திரும்புகிறது.”***

பிரசங்கி 3:20 (பழைய ஏற்பாடு)

மண் என்பது உயிர்ப்பிக்கும் சக்தியாகவும், இடமாகவும் இருப்பதைப் போல், ஆசானின் னாதமானது உயிர்ப்புடன் பஞ்ஞாட்சரமாக இருக்கிறது, ஆசானின் நினைவாகிய ஆகாயத்தில் இருந்தே நாம் வளர்கிறோம், நம் அறியாமையும், அகங்காரமும் சாம்பலாக, ஆசான் தன் னாதம் கொண்டு நம் பாவங்களை சுட்டு எரிக்கிறார்கள், பாவம் என்பது மூச்சு துண்டாடப்பட்டு நஷ்டம் அடைவது. எதார்த்தம் என்பது உள்ளதை உள்ளபடிக் கூறுவது.

மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் மிக சமீபமாக இருக்கிறது, மனம் திரும்ப ஆசானின் னாதத்தை செவியுணவாகப் பருக வேண்டும். ஜீவன் அவாவுடன் தாவும் போது மனமாகவும், மனம் திரும்பும் போது ஜீவனாகவும் மாறுகிறது, ஜீவனே "நானாக" வெளிச்சம் தரக் கூடிய பொருளாக இருக்கிறது. இருளில் இருந்து வெளிச்சம் வருவதையே ASH WEDNESDAY வாக கொண்டாடப் படுகிறது, இதன் பின் EASTER வருகிறது.



மெய்வழி
திரு.குழந்தைசாமி கவுண்டர்

தொடர்ந்து வேத முத்துக்களாக குரு பிரான் அருளியது:- பேச்சு என்பது உணர்வின் மூலமாகவும், உணர்வு என்பது அனுபவமாகவும், அனுபவம் பெறுவதற்கான பொருள், திருச் சிற்றம்பலப் பொருளாகவும் உள்ளது. மூன்றாவது கண் என்பது, நான் எனும் பொருளாய், அறிவாய், மனமாய், உலகமாய், இறைவனாய், ஜீவனாய், உணர்வாய், உகார ரகிதமாய், இருக்கிறது, இந்த மூன்றாவது கண்ணை அறிவதுவே தன்னையறிதல் ஆகும் என அருளி மேலும் படம் காட்டி பாதரகசியம் விளக்கி, உயிர்ப்பிக்கின்ற பொருளே உயிராக விளங்குவதையும், ஆசரியர் தினமான இன்று "உற்றதே குருவிடம் ஒதிடல் வேண்டும்" எனக் கூறி மெய் மற்றும் பொய்க் குருவிற்கு உள்ள வேறுபாட்டினை விளக்கினார்கள். பொய்க் கல்விக்கு “ஆ-சிரியர்கள்" எண்ணிலடங்காமலும், மெய்க் கல்விக்கு "ஆ-சரியர்" ஒரே ஒருவராகவும். பொய்க் கல்வியைக் கற்றுத் தருபவருக்கு மரியாதையும், மெய்க் கல்வியை உரத்த குரலில் உண்மையாக உரைப்பவருக்கோ, மற்றவர்களின் ஏச்சும் பேச்சும்தான் உலக வழக்காக உள்ளது. "ஆசிரியர்களுக்கு பணி ஒய்வும், "ஆசரியர்களுக்கு ஓய்வற்ற பணியுடன் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையாகவும் உள்ளது. பொய்க் கல்வியில் பல தரப்பட்ட பாடத் திட்டமுடன் தோல்வியும், மெய்க் கல்வியில் அனைத்து வேதங்களும் பொதிந்த ஒரே அழியாத மெய்க் கல்வியாக, சாகாக் கல்வியாக சரசுபதித் தாய் நடத்தும் கல்வியாக உள்ளது என அருளி அவையை நிறைவு செய்தார்கள்.

**05.09.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை:**

**இசை வகுப்பின் தொகுப்பு**

ஆதி மெய் உதய பூரண வேதாந்நத்தில் இருந்து குரு ஸ்தோத்திரம் பாடல் எண்5

***காவ லானபு ராதன வேதியர்***
***மேவ லானவ ரோதயென் னாதர்மேல்***
***ஆவ லோங்குவ வாவுங்கு ழன்றன்னாள்***
***பாவ னாசம்ப டப்பளிங் னானதே***



Copyright © AMNA Trust, Chennai

என்ற பாடல் பாடப்பெற்றது, தொடர்ந்து ஆதி மான்மியத்தில் இருந்து ***"எல்லாண்டு எல்லாண்டு"*** என்று தொடங்கும் பாடலை கலிவிருத்தத்தில் எப்படி பாட வேண்டும் என்பதையும் தொடர்ந்து, ***அருண்மணி விரிந்து பெருந்நுறை சிறந்த*** என்ற பாடலை எப்படி தாளத்துடன் பாட வேண்டும் என்பதையும் பயிற்சி அளிக்கப்பட்டது,

மேலும் ஆதி மெய் உதய பூரண வேதாந்நத்தில் ஞான முறையீடு பாடல் எண் 3

***சுருளிமுப் பத்திமுக் கோடிதே வர்மனு***
***ஜின் கள்வான் பூமியெலாம்***
***சூலில்வைத் தேவெளி யாக்கின் னுமாக்கும்***
***தூலாதி சூட்சவித்தே***

என்ற பாடலை தாளத்துடன் எப்படி பாட வேண்டும் என்பதை கற்று தந்தார்கள், மேலும்

***ஓங்நா ரத்தொனி யானக பாலத்***
***தேசிறு வழியறியார்***
***ஆங்நா ரங்னொண் டேமணி யாட்டி***
***யலுத்தோ டிச்சலித்துச்***
***சாங்நா லம்தலை யோட்டை யுடைக்கும்***
***சண்டியர் களைவிட்டே***
***பாங்நா யிறையே உம்மிடம் காவற்***
***பாடது தேடுகின்றேன்***

என்ற பாடலையும் ராகம், மற்றும் தாளத்துடன் கற்று தந்தார்கள்

**10-09-2021 வினாயகர் சதுர்த்தி சிறப்பு சபை :**
**தொகுப்பு: ஸ்ரீமதி.ஜீவிதா வடிவேலன்**

பிலவ வருடம் ஆவணி மாதம் 25-ம் தேதி சுக்லபட்சம் சதுர்த்தி திதி வெள்ளிக்கிழமை (10.9.2021) வினாயகர் சதுர்த்தி திருனாளன்று னாயகன் இல்லத்தில் நம் வேத னாயகமவர்களின் திருஆலவாயினிடத்தில் இருந்து வெளியாகிய னாத முத்துக்கள்

***ஞானஅகவல்:***

***வந்த வேதம்வ ரைந்நப யத்தினால்***
***சிந்நை வீணர்கை சிக்கிமெ லிந்நனாள்***
***அந்நெ ழுத்தை யழித்தே எழுதிய***
***எந்ந னாளும் என்றன் குரு னந்தியே***

***முந்ந ளாளினில் மூண்ட அகவலும்***
***பிந்ந னாள் கைபிடித்ததகவலு***
***மிந்ந னாளி லிசைக்க அகவலுக்***
***கெந்ந னாளு மென்றன் குரு னந்நியே***

**வினாயகர் சதுர்த்தி**
உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் அனைவரும் வெகு விமர்சையாக கொண்டாடும் திருவிழா வினாயகர் சதுர்த்தி. ஆவணி ( ஆவ-னீ ) மாதம் வளர்பிறை திதியில் சுக்லபட்சத்தில் அமாவாசையிலிருந்து நான்காவது நாளான சதுர்த்தி திதியில் வினாயகர் திரு அவதாரம் செய்ததாக இன்னாளில் மக்கள் திருவிழா கொண்டாடுகிறார்கள். ***"மூஷிக வாகன மோதக அஸ்த ஷியாமள கர்ண விளம்பித சூத்ர வாமன ரூப மகேஷ்வர புத்ர விக்ன வினாயகா பாத நமஸ்தே"*** என்று ஔவை பிராட்டியார் வினாயகப் பெருமானை போற்றி வணங்குகிறார்கள். மேலும் 72 வைர வரிகளைக் கொண்டு வினாயகரின் தத்துவ உருவத்தை வர்ணனையோடு **வினாயகர் அகவல்** என்ற நூலின் மூலம் குரு பெருமானிடம் தான் பெற்ற பேருண்மைகளையும் அருளியுள்ளார்கள். வினாயகர் சதுர்த்தியன்று எல்லோரும் வினாயகர்


Copyright © AMNA Trust, Chennai

சிலையை வைத்து வணங்கி வழிபடுகிறோம். மூன்றாவது நாளில் குளத்தில் கொண்டுபோய் கரைத்துவிடுகிறோம். இதன் தாத்பரியம் என்னவெனில், நீரிலிருந்து அமைந்த பிறப்பு மீண்டும் நீரில் கரைக்கப்படுகிறது என்பதாகும். கணங்களுக்கு அதிபதியாகிய கணபதியானவர், பஞ்ச பூத கணங்களில் ஒன்றான நீரில் கரைந்து விடுவாரா? இத்தத்துவம் உணர்த்தும் பொருள் என்னவென்றால் மனித பிறப்பின் ரகசியம், மற்றும் அகமிய நிலையை உணர்த்தவே இச் சம்பிரதாயத்தை பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். உலகில் அதிகமான கோவில்களைக் கொண்டவர் வினாயகர். முழு முதற்கடவுளான இவர் இந்திய தாய்நாட்டில் நீக்க மற நிறைந்திருக்கிறார். பல நாடுகளில் வினாயகர் சிலைகள் கண்டெடுக்கப்பட்டதாக அகழ்வாராய்ச்சியில் கூறப்படுகிறது. இந்தோனேசியா, ஐரோப்பா, வடஅமெரிக்கா, பிலிப்பைன்ஸ், கம்போடியா நாடுகளில் வினாயகரை வழிபடும் முறைகள் அழியாமல் இன்றளவிலும் மக்கள் பின்பற்றி வருகின்றனர். வினாயகப் பெருமானின் தத்துவ இரகசியங்கள்

***"ஐந்து கரத்தனை ஆன முகத்தனை
இந்தில் இளம்பிறைபோலும்
எயிற்றனை னந்திமகன்தனை
ஞானக்கொழுந்தினை புந்தியில்
வைத்தடி போற்றுகின்றேனே"***

**திருமுகம்**:

கணேசரின் திருமுகத்திற்கு, ஆன முகம், குருமுகம், வேழ முகம் (வியாழ முகம்), கரிமுகம், பிரம்ம முகம் என பல னாமங்கள் உண்டு. இத்திருமுகமானது, மூன்றாவது கண்ணின் இரகசியத்தை உணர்த்தக் கூடியதாக இருக்கிறது. ஐந்தொழிலுக்கு அரசாகிய குரு பெருமானின் ஓரெழுத்து மாத்திரை கோல் எனும் மூல மந்திர சாவி கொண்டு மூன்றாவது கண்ணான அறிவுக்கண் திறக்கப்பட்ட பிறகே இத்தத்துவ உருவத்தின் மெய் னிலைகளை நம்மால் அறியமுடியும்.

**திருச்செவி** :

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும் செவியில் சுவை உணரும் ரகசியமே **திருச்செவி.** பிள்ளையாரின் திருவுருவத்தில் காதுகள் முறம் போல் காணப் படும். அரிசி, தானியங்களில் இருக்கும் கற்களையும், தேவையற்றவைகளையும் முறத்தில் புடைத்து நீக்குவதைப் போல, நாமும் தீயவற்றை ஒதுக்கி நல்லவைகளை மட்டுமே செவி மூலம் கேட்க வேண்டும் என்பதையே இத்திருவுருவம் உணர்த்துகிறது.

***"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"***

**பேழை வயிறு**:

உலகிலுள்ள செல்வங்கள் அனைத்தும் பேழை வயிற்றிலிருந்துதான் வெளிவந்தது என்பதை அறிவிக்கவே முந்தியவன் துந்தி னந்தி னடு பந்தியாக, தொந்தி கணபதியாக, மணி வயிறாக, வினாயகரின் திருவுருவத்தில் வயிறு முன்னிருப்பது போல வடிவமைக்கப்பட்டுள்ளது.

**அங்குசம்**:

யானைக்கு மதம் பிடிக்காமல் இருப்பதற்காக காதில் அங்குசத்தை மாட்டி வைப்பார்கள். அதைப் போலவே, யானைக்கு ஒப்பாக இருக்கும் மனிதனின் மனதை செம்மைப்படுத்தவே சடங்கு சம்பிரதாயங்கள், னேம நிஷ்டைகள் என்ற சரிகத்து ஒழுக்க நிலைகளை பெரியோர்கள் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

**நான்ற வாய் - துதிக்கை**:

சோடச திருமேனியரான வினாயகர் தன் நான்ற வாயில் தான் பூரணக்கும்பத்தை சுமந்துகொண்டிருக்கிறார். கலைகள் 16-ம் பூரணமே - சோடசம். பூரணத்தை கற்பகக்கனியை அளிக்கக்கூடியதாக இருப்பது நான்றவாய். தும்பிக்கை அறுபட்டால் யானை இறந்து விடும். அது போல், மனிதனின் பிறப்புக்கும் இறப்புக்கும் காரணமாகவும், துதிக்கை உணர்த்தும் பொருளாகவும் இருக்கக்கூடியது பிராணன்.


Copyright © AMNA Trust, Chennai

**கோடாயிதம்**:
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே நாம் கொண்டுவந்த வினை - கொடுவினை. கருப்பை கூடி கலந்த வினைத்தொடர் நம் வினையை களையக்கூடிய ஒரே ஒரு காரியத்திற்கு மட்டுமே தெய்வம் வேண்டும். வேறு எதற்காக தெய்வத்தை வேண்டினாலும் பாவமே வரும் என்பது தெய்வவாக்கு.

**ஒற்றைக் கொம்பன்**:
சிபத்து - நபுசு என்ற வித்தியா தத்துவ நிலைகளில், கீழ் பாதமாக இருக்கும் நபுசை ஒடித்து மேல் பாதாமாகிய சிபத்தாக்கி அதன் மூலம் புராணங்களை எழுதியதாலும், வினாயகர் ஒற்றை கொம்பன் என்ற னாமத்திற்குரியவராக நின்று விளங்குகிறார்.

**எலி - மூஞ்ஞுறு**:
பெரிய தோற்றமுடைய வினாயகரால் சிறிய உருவமான எலியை வாகனமாக கொண்டு, அதன் மீது எப்படி ஏறி அமர முடியும்? எலி என்பது மனதின் செயலை குறிப்பது. மனம் மிகச்சிறியதாக (எண்ணம்) விரியாமல் ஓர் நிலையாக இருக்கும்போது, அறிவாக சூக்குமமாக மாறும் என்பதே மூஞ்ஞுறு வாகனத்தின் தத்துவமாகும். அணுவுக்கு அனுவாய் அண்ட பிரம்மாண்டமாய் கணுமுற்றி நின்ற கரும்புள்ளாக விளங்கக்கூடிய அந்தப் பரம்பொருள் மனதிற்குள் ஒடுங்குகிறது என்பதற்கு அடையாளமாகவே வினாயகப்பெருமானின் வாகனமாக சிறிய உருவத்தில் மூஞ்ஞுறு உள்ளது.

**சுத்த பிராமணர்**:
வினாயகர் ,பிரம்ம முடி தரித்த பூணுலை ஒளி மார்பில் அணிந்து கொண்டிருப்பவர். அறுபுரி நூல் பிராண னிலையின் இரகசியத்தை அறிந்தவர். பிரம்மச்சாரி.

**வினாயகரின் படையல் உணவுகளின் சிறப்புகள்:** கொழுக்கட்டை, கருப்பு மூக்குகடலை சுண்டல் இவை இரண்டும் விநாயகருக்கு விருப்பமான உணவுகள். கொழுக்கட்டைக்குள் பூரணம் இருக்கிறது. ஐந்து விரல் களும் சேர்ந்து உள்ளிருப்பதை உணர்த்துகிறது. மூக்கு கடலை என்பதும் பிராணனிலையை, மெய்ஞ்ஞான இரகசியத்தை உள்ளடக்கியதாக இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும் என்பதற்காக பெரியோர்கள் உணவிலும் ஞானத்தை வைத்துள்ளார்கள்.

**வினாயகரின் திருஅவதாரம்:**
சூரியனின் பயணமானது, ஆடி மாதத்தில் தொடங்கி தட்சிணாயனத்திலிருந்து மாறி உத்ராயணத்திற்கு போகக்கூடிய நிலையில் வினாயகரின் திருஅவதாரமானது நிகழ்வதாக தாத்பர்யம். ஞானிகள் கூறுவதும் இது தான். கணபதியின் திருஅவதாரம் உணர்த்தும் மெய்ப் பொருளை, இவ்வுலகிற்கு முன் வந்த அவதார மூர்த்திகளான கிருஷ்ண பரமாத்மா, ராமபிரான், வள்ளல் பிரான், பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருஅவதார நிகழ்வுகளை முன்வைத்து வேத சாட்சிகளோடு குரு பெருமான் அருளியவை, துவாபரயுகத்தில் லட்சத்து இருபத்தி நான்காயிரம் நபிமார்களில் ஒருவரான ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் செய்த நாள் **கிருஷ்ண ஜெயந்தி**.

***"சாவாது பிறவாது***
***தனிமுதலா இருந்நனான்***
***ஆவாஇவ் வுலகுபடும்***
***அழிதுயர்தீர்ப் பதற்காக***
***மேவாது னின்றேஎன்***
***மாயையினான் மெய்யேபோல்***
***ஓவாதுவந்து பிறந்திடுவேன்***
***யுகந்தோறும் யுகந்தோறும் "***

அழிதுயரான பிறவிச் சூழலில் - பிறந்தது இறந்து, இறந்தது பிறந்து என்பது மாறி மரணமிலா பெருவாழ்வை மனிதன் வாழவேண்டும் என்பதற்காக இத் திருஅவதாரமானது நிகழ்ந்தது.


Copyright © AMNA Trust, Chennai

**ராம நவமி** (நவமி திதியில்) ராமபிரானின் திருஅவதாரமானது நிகழ்ந்தது. இன்றும் நாம் இத்தினத்தில் ராமபிரானை வழிபடுகிறோம்.
வள்ளல் பிரான்:
1823-ம் ஆண்டு புரட்டாசி மாதம் அக்டோபர் 5 ம் தேதி வள்ளல் பிரானவர்களின் திரு அவதாரமானது நிகழ்ந்தது.

**மெய்வழி ஆண்டவர்கள்**:
"மார்க்கம்பட்டி எனும் சிற்றூரின் கண்ணே ஜமாலுசேன் பெரியதாய் என்பவர்களுக்கு ஆண் குழந்தையே இல்லாமல் வேண்டி வரம் வாங்கி றாரிறாரோ பாடி நெய்விளக்கு ஏற்றி நேர்ந்து தவமிருந்தே வையகத்தில் என் வயிற்றில் வந்து பிறந்த கண்ணே என்றெல்லாம் பாடப்பெற்று வந்த திரு அவதாரம், பிரம்ம பிரகாச **மெய்வழி சாலை ஆண்டவர்கள்.**

***ஜகத சற்குணா லங்கிர்த சன்னதர்***
***அகம்பு றம்புங்ஙண் டாண்டாச லாசனர்***
***யுகங்கள் னான்நுங்கை கொண்டகோடுழியர்***
***மகதி ஆண்டவர் வந்நவ தாரமே***

பிறந்தனர் அறிவு பிழம்பெனும் கிரணர் பிறந்தனர் வித்துனாயகம் பிறந்தார் என்ற திருஅவதார திருளாளை நாம், மார்கழி மாதத்தின் நிறைவு நாளில் வணங்குகிறோம்.

இத் திருஅவதாரங்கள் நிகழ்ந்த நாளை இன்று நாம் திருவிழாக்களாக கொண்டாடுவதன் பயனை அறிந்து அடைய வேண்டும் என்பதற்காகவே, இவ்வுண்மை நிலைகளானது இன்று வெளியாக்கப்பட்டுள்ளது. நம் தெய்வமவர்கள் இத் திருஅவதார செயலை ஞானச் சங்***நு என்ற*** பாடல் மூலம் அருளியுள்ளார்கள்.

வினாயகரின் அம்சமாக, பிரம்மத்தின் அம்சமாக வரக்கூடிய குரு பெருமானவர்களின் செழுஞ் சீதள மனோ னோக்கிற்கு இணங்கி நடப்பவர்களின் இருதய கமலத்தில் வினாயகப்பெருமானின் திரு அவதாரமானது விளைந்து விளைவேறும் என்ற ஆசீர்பாதத்துடன் குரு பெருமானவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.



***ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்***

## 11-09-2021 மான்மியம் சபை:தொகுப்பு:
## ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

சப்தம், நாதம்: ஆசானின் வாக்கு முதலில் நமக்கு புரியாத போது சப்தமாக இருந்தது. சப்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி வீண் மனுவை ஈசன் ஆக்கும் செயலையு டைய நிலையில் அதுவே நாதமாகிறது. நம் நினைவில் உள்ள பல குப்பைகளை விலக்கி இருத்தி ,திருத்தி, தவ நிறுத்திய சத்குருவாய் வர்ஷிப்பு சப்தமாக, போதனையாக, நாதமாக இருக்கிறது.

**கோடாயிதகூர் வாக்கியம்-69**: நன்மை தீமை அறியக் கூடிய சக்தி மனிதனுக்கு மட்டுமே உண்டு. மற்ற ஜீவராசிகளுக்கு நினைவு உண்டு. நன்மை தீமை என்ற எண்ணம் இல்லை. அதற்கு தீங்கு செய்தால் நம்மை எதிர்த்துப் போராடும். நமக்கு நினைவு ஒன்றாக இருந்தாலும் குணங்கள் வேறுபட்டு சார்ந்ததின் வண்ணம் அமைகிறது. நரனுடைய அகம் நரகம். மறதியற்ற பொருளாக அறிவெனும் பிரகாசமாக இருக்கும்போது நினைவு. மறதி மறலியாக அறியாமையாக இருக்கிறது. ***"னீங்நுறா னேர்மையாளர் னினைவிலென் னாளும் னிற்பர்"*** நினைவில் தீமை



Copyright © AMNA Trust, Chennai

கலக்காத போது நேர்மையாளர். சுத்த நினைவாக அறிவாகும்போது சொர்க்கமும், அசுத்த நினைவாக அறியாமையாகும் போது நரகமும் கட்டப்பெறுகிறது.

**குருமணி மாலை பாடல்-8: "ஆதியாய் மூல வஹதெனுங் ஙடலென்"** எனத் தொடங்கும் பாடல்-அஹது, நம்மைக் காக்கும் முதற் பொருளாகிய அகரம். அகரப்பொருளைக் கைக்கொண்ட பெரியோர்கள், வாய்மை மூலம் நமக்கும் அதை உணர்த்தி ஆக்கி வைக்கிறார்கள். "தன் அகரப் பொருள் கை கொண்டோர் தேவர்". "வா தியூர்கடலே " வாதி - காற்றின் ரகசியம் உணர்ந்தவர். திருவாதவூரர் என்ற னாமம் ஸ்ரீ மாணிக்கவாசகர்க்கு உண்டு. "வட்டமிட்டாரூர்" -அறுசுவை கொண்டொளித்த இடத்தின் நிலைகளையும், ஓயாத் தொழுகையின் செயலையும் விளக்கி உள்ளம் தித்திக்கச் செய்கின்றவர்கள் மெய்க்குரு பிரான் ஆவார். அறுசுவை கொண்டொளித்த இடம் அறிந்தவர்கள் தேவர்கள். பழம்பொருள் ஞானம் வேத வேதிய னாத புராதனனாகிய குருபரனின், மூலப்பழம் பண் ஆரமணி உண்டைப் பெட்டகத்திலிருந்து, பண்டு பழுத்தமறை விண்ட ரகசியமாக, பண்டை னான்மறை பேசும் பரிசாக ,பண்டை நாள் அமுதாக, ஓர் வார்த்தை சொல்லும் சற்குரு "வா" ஆக, ஆதியிலே வார்த்தையாக, ஆசான் திருமேனியாக, வேதமாக, பிரம்மக்குன்றென்னும் சூல் புடைத்த பூர்வ புராதன குடையிருட் கோளமாக னின்று இலங்குகிறது.

**திருவாசகம் -அன்னைப்பத்து-பாடல் – 9: "தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்"** எனத் தொடங்கும் பாடல். தையலோர் பங்கினர்- சிவசக்தி பாகம்-பனிமதி மங்கை பங்கன் பரமர், அறியாமை எனும் பித்தை, கசப்பை பிய்த்து எடுக்கும் பிச்சை ஆண்டவர். பெரியோர்களின் செழுஞ்சீதள மனோ னோக்கிற்கு இணங்கி னடக்கும்போது அறியாமை உள்ளமாகிய மனம் நைந்து தெளியும் மதியாகிறது. காலகாலங்களை எல்லாம் உள்ளடக்கிக் கொண்டு பழம் புராதனச் செயலாகிய அறிவானது, வருகின்ற பெரியோர்கள் மூலம் அதற்கான மக்களைத் தேடி தனுவினுடைய னாணியினிடத்திலிருந்து கிளம்பி வருகிறது.

**ஆதிமான்மியம்: சன்னதம் பெறு பருவம்.**- சென்னிமலைவாசல் - தலைவாசல். தலைக்கு வாசல் செவி, செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம். செவியிற் சுவை உணர்பவர்கள் தேவர்கள். சொன் னயனக்கலை வைத்து, ஒத்தையான் மறை ஊணி அழுத்தி, சாவக்கடவதென்றென்னைச் சபித்து, சாவோலை கிழித்து மரணமிலாப் பெருவாழ்வை அளிக்கும் அரும்பெரும் செயலை உள்ளடக்கியது முகப்புப் பா. சர்வாகமக் கிரந்தத்தில் உபதேசம் பெற்றனிலைகள், தவனிலைகள், ஞானனிலைகளையும், அதை மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும்போது சந்தித்த ஆபத்துகள், ஆண்டவர்களுக்கு நடந்த நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளது. **"னீகைகுவித்தால் எனக்கு மிகத் தாங்ஙரிது"** னிபுணமணி விளக்கா மென் னாசான்பாதம்" என்றும், எந்ந னாளுமென் றன்குரு னந்நியே" என்றும், மலையரசி மதியரசி யருளால் என்றெல்லாம் பல இடங்ஙளில் வணங்கிப் பாடுகிறார்கள். இது எதைக் குறிக்கிறது என்றால் கை குவியக்கூடிய இடமாகிய தூலம் கடந்து னிற்கும் சூக்கும னிலையைக் குறிக்கிறது. நீ ,நான் என்பது தூலமல்ல. தூல மற்று இருக்கும்போது எல்லோரும் ஓர் சாதி. 69 ஜாதிகள் அடங்கிய பல்லாயிரக்கணக்கான மக்களை ஈன்றெடுத்தவர் எம் தந்தை ஞானபிதா.

**புத்த பகவான் தீர்க்கதரிசனம்:** தமது சொந்த பூமிக்கு ஏறிவந்துவிட்டார்கள். காலச் சக்கரமானது புதுப்பிக்கப்பெறுகிறது. சொந்த பூமி, மறுபிறப்பு பூமியாகிய சொர்ண பதிக் கயிலைனாடு. அதுதான் அசல். **"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"** என்ற ஜாதியின் ரகசியம் சுக்கிலத்தில் இருக்கிறது. **"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்"** அறியும் போது எல்லோரும் ஒரே சாதி, சாதிக்கும் பிள்ளை எவனோ அவனே சாதி. தன்னையறிந்து சிவமான சாதி உயர்ந்த சாதி-சிவானந்த போதம்.

**"சாதியிரண்டொழிய வேறில்லை -சாற்றுங்கால்
னீதி வழுவானெறிமுறையில் - மேதினியில் –
இட்டார் பெரியோர் இடாதார்
இழிகுலத்தோர் பட்டாங்ஙில் உள்ளபடி "**

என ஔவையார் கூறியுள்ளார். **"வாய்மை ஔிர் என்மகனே வருவேன் உன் கண்ஙாண"** என்ற தீர்க்கதரிசனம், தூலத் திருமேனியைக் குறித்துச் சொல்லவில்லை. மூன்றாவது கண்திறப்பிக்கப்பெற்று அறிவுக்கண் கொண்டு பார்த்தால் அவர் வருவார். கீழ் திசைக் குணக்கடலிலிருந்து வையமும் வானும் னிறைந்த இருளனைத்தையும் எடுத்தெடுத்து உண்டுவிட்டுப் பிரகாசம்



Copyright © AMNA Trust, Chennai

கொப்பளிக்க உதயம் செய்வது ஞானசூரியன். "சம்பூர்ண ஞான சம்பன்ன சம்பந்நர்" மூன்றாவது னிலையில் உள்ள "ச" வின் ரகசியம் ."ச"என ஓசை இல்லாத ஒன்றுக்குள் அகரத்தைச் சேர்த்து ஓசையுடையதாக, 12 வரிகளாக, உயிர்மெய்யாக, தமிழாக அதன் விரிவுகளை உண்டாக்கி வைத்துள்ளார்கள்.

**12-09-2021 சத்துவாச்சாரி சபை:**
**தொகுப்பு: ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி**

**அனந்நர்கள்:** ஆண்டவர்கள் இடத்தில் மறுபிறப்புப் பெற்றுள்ள மக்களுக்கு னிஜமான சோதிடம் தெரியும். எமன் எல்லை கடந்து சிவன் எல்லையாகிய அத்திருத்தலத்தில் குடிபுகுந்து கொண்டவர்களே அனந்நர்கள். அவர்கள் அரக்கி அரக்கர் விலக்கித் துலக்கி ஆக்கும் அனந்தர்கள். அடியும் முடியும் னடுவும் கண்டவ் வான அனந்தர்கள். அடக்கம் மடக்கிப் பிடிக்கத் தெரிந்நோர் அனந்நர்கள். அந்தர்மாமுகங் கண்டு ஓங்குபவர்கள் அனந்தர்கள். வேத வியாக்யான விற்பனங்நடந்ந மந்நிரோற்பன்ன சூக்கும ஆரூர்ச்சுலாம் ஏற்றுனிற்கும் சௌபாக்கிய ஜெயசீலர்கள் அனந்தர்கள். என ஆண்டவர்கள், அனந்தர்கள் என்ற னாமத்திற்குரிய செயலினைச் சொல்லி வைத்துள்ளார்கள்.

**னடு:** கண், மூக்கு, வாய், காது, ஸ்பரிசம் என்ற ஐம்புலன்களைக் கொண்டு அனுபவிக்கும் உலக இன்பம் ஆறாவது அறிவின் மூலம் அனுபவிக்கும் இன்பத்திற்கு ஒரு ரோமத்தளவு கூட இணையாகாது. உலக மக்கள் அனுபவிக்கும் இன்பத்தைச் சுருக்கமாகச் சொல்லுமிடத்து அதுதான் சாவு. மக்கள் அஞ்சி நடுங்கக் கூடிய சொல்லாக இருக்கும் சாவினை மாற்றுபவர்கள் அவதார செம்மல்களே. அவர்கள் சொல்லும் செயலை வாயை மூடி ஓதி, ஊத வேண்டியவர்களாய் இருக்கிறோம். மனதோடு சேர்ந்து னான் ஓடிக் கொண்டே இருக்கின்றது. அது ஒரு இடத்தில் னிற்க வேண்டும். அதுவே னடுவுநிலை. அந்த னடு னிலையான பொருள் னாயகமாகவும், சுயம் பிரகாசமாகவும், னித்திய ஆனந்நமாகவும், இருந்து வருகிறது.

**சுயம் பிரகாசம்:** னமக்குள் வெளிச்சப் பொருளாய் ஒன்று இருக்கிறது. இதை யாராலும் ஏற்றி வைக்கப்படாமல் அதுவாகவே கொழுந்து விட்டு எரியும் பொருளாக இருக்கிறது. எல்லா மதங்களும் குறிப்பிடுகின்ற வெளிச்சப் பொருளாகிய அது குருபிரான் அவர்களின் னாதத்தால் தொட்டுக்காட்டப் பெற்றவர்களின் னினைவுக்கு மட்டுமே தோற்றத்திற்கு வரும். குரு பிரானின் சுகம் நல்கும் வைத்திய னாத மருந்தை உட்கொண்டவர்களுக்கே அச் சுயம்பிரகாசம் தோற்றத்திற்கு வரும். இதையே திருவள்ளுவர் பெருமான்

***"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்***
***செல்வத்து ளெல்லாந் தலை"***
என்று கூறுகிறார்.

அறிவை அடைந்தவர்களுக்கே எல்லா மதமும் ஒரே மதம் தான் என்ற உண்மை தெரியும். வேதமே னம்மை அறிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லும் வெளிச்சப் பொருளாய் உள்ளது .
**மந்திரம்:-** அகத்தியர் ஞானப்பாடல் கூறுவது, **"மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்."** மந்திரம் என்பது அவரவருடைய சொந்தவீடு. சொந்த வீட்டில் மனம், னான், கவனம், எண்ணம், னினைவு போன்றவை எல்லாம் பிரகாசப் பொருட்களாக இருக்கிறன. இதுவே மின்னல் கிரணமாகிய ஜீவ தேகம். அதற்குள் னாள்தோறும் னுழைந்து னுழைந்து பழகுவதே சன்மார்க்கம். இவ்வாறு பழகி, இந்ந அனித்திய வீட்டை விட்டு அந்நப் பிரணவ வீட்டிற்குள் பாய்ந்து னிற்கும் செயலே னிஷ்டை. இதனை ஒரு பிரம்ம னிஷ்டரிடத்தில் பழகுபவர்களுக்கு இப் பிரம்மச் செயல் னிஜமாகவே கைவரவு ஆகிவிடுகிறது.

**சங்நு:-** ***"இலஞ்நுழி சுழித்து ஏகமாய் விம்மி"*** என்ற ஞானச் சங்நு பாடலும், ஆதி மான்மியம் சன்னதம் பெறு பருவத்தில் வரும் ***"பூமி யதிரும் ஓசையுடைய கடலறியாத திரு வலம் புரிச் சங்நும்"*** மற்றும் ***"பிறவி தொலைந்நதென்று ஊதூது சங்நே, பேரின்பக் கொடிகை பிடித்தூ திடுஞ்ஙங்நே"*** என்ற பாடலும் வலம்புரிச்சங்கின் ரகசியத்தை வெளியாக்கும் சான்றுகளாக கூறப்பட்டன. சர்வ மதங்களின் வேத வாக்குகளும் வந்து வட்டாடும் அப் பெரியோர்களின் திருக்கரத்தில் வேல் உடுக்கை சங்நு சக்கரம் முதலிய தெய்வீக முத்திரை சன்னதங்நளானது பிரத்தியட்சத்தில் காண எழுந்து விளங்கும். அப்பேர்க்கொத்த னாதம்



Copyright © AMNA Trust, Chennai

விளைந்தோரிடத்தில் பழகி வரும் போது தான் சங்குக்குள் இருக்கும் ஐந்து நிலைகள் தெரிய வரும். அவைகள்

1. **ஊதூது சங்கே**
2. **ஊதிடுஞ் ஞங்கே**
3. **ஊதடா சங்கே**
4. **ஊதுதே சங்கு**
5. **ஊதுமே சங்கு**

ஊதாமல் இறைவனைப் பார்க்கவே முடியாது இறைவனை பார்க்காமல் பிறவியை கடக்கவே முடியாது. கோடி சூரிய பிரகாசப் பொருளே அறிவுதான் எனப் பேசப் பெற்ற பின்னர் குருவின் திருவருளால் சபை இனிதே நிறைவு பெற்றது.

**18-09-2021 மான்மியம் சபை:**
**தொகுப்பு: ஸ்ரீ. வடிவேலன்**

புரட்டாசி மாதம் பௌர்ணமி னாளில் மெய்வழிச் சாலையில் பிச்சாண்டவர் திருவிழா னடைபெறும். புரட்டாசி மாதத்தில் னம்மிடத்தில் இருந்து பிய்த்து பிடுங்கி எடுக்க வேண்டிய ஒரு பொருளாக இருப்பது னம் அறியாமை என்பதாகும். இந்ந அறியாமையை பிய்த்து எடுக்கும் அகமிய செயலை "பிச்சை ஆண்டவர் திருப் பா" என்ற பாடலில் னமது தெய்வமவர்கள் பரி பாஷைகளாக வைத்துள்ளார்கள். ஆகவே னம் அறியாமையை பிய்த்து எடுக்கும் வல்லபராகிய ஒரு குருபிரானிடத்தில் னாம் இணக்கமாக இருந்நு மெய் அறிவைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**01. கோடாயிதக்கூர்: வாக்கியம் எண்-70:**

னாம் பெற்றுள்ள இந்ந அனித்திய அசுத்த தேகத்தோடு இறைவனுடைய பரிசுத்த சன்னிதிக்கு செல்ல முடியாது. பெரு னிதியம் கொண்ட அருள் வர்ஷிப்பு வரக்கூடிய எல்லையே சன்னிதி ஆகும். பரிசுத்த னினைவாகிய சுத்த ஆகாயத்தில் இருந்நு அருளக்கூடியதே னம் அறியாமையை போக்கக்கூடியதாக இருக்கிறது. இந்ந அறியாமையானது விலகி மெள்ள மெள்ள மெய்யறிவு உதயம் காட்டிக் காட்டி அக விளைவு குடியேற்றி படிப்படியாக தூலதேகம், சூக்குமதேகம், காரணதேகம், மகா காரணதேகம் என்ற னிலைகளை னம்மிடத்தில் வைத்து தொட்டுக்காட்டும் போது தான் இறைவனுடைய சன்னிதி இன்னது என்று தெரியும்.ஆகவே ஒரு மெய்க் குருபிரானின் துணையோடு இந்ந அனித்திய தேகத்தில் இருக்கும் போதே கோடி சூர்ய பிரகாச ஜெயவீர தேகமான ஈசனுடைய னித்திய தேகத்தை னாம் கைகொள்ள வேண்டும்.



*மெய்வழி*
*திரு.குழந்தைசாமி கவுண்டர் அவர்கள்*

**02. குரு மணிமாலை: பாடல் எண்-09**

**"சுத்த சைதன்யச் சுகந்ந வான் கடலே"** என தொடங்கும் பாடல். சைதன்யம் என்பது தூய்மையான னுண் அறிவு. அதுவே தூய சலனமற்ற னினைவாகும். னம் மனமானது மாயையில் சிக்கி ஒரு பிசாசாக இருக்கிறது. அதுவே ஒரு மெய்க் குருபிரானை அடைந்ந பிறகு சைதன்ய மாகிறது; பொருட்காட்சி யாகிறது; னிலையாகிறது; பிரம்மமாகிறது. இதுவே பரிசுத்தம் ஆகும். இதற்கு சாட்சி குருபிரான் தான். குரு என்றால் தூல உடல் அடையாளம் அல்ல. னாத உடல் அதாவது னாத தேகம் ஆகும். னம் அறியாமையை போக்கி னம் பாவங்ஙளை சங்ஙாரம் செய்யக்கூடிய அந்ந னாதத் தொனி எங்ஙிருந்நு வருகிறதோ அதுவே னாத தேகம். அது தான் அடையாளம். இதை னமது தெய்வமவர்கள் மெய்ம்மண ஞானம் பாடலில்



Copyright © AMNA Trust, Chennai

*"னாத லட்சணம் னாதன் லட்சணம்*
*னாதன் வாய்மையின் லட்சணம்*
*னாத தேகத்தின் லட்சணம் பவ*
*னாச மாகிடும் லட்சணம்"*

என்று அருளியுள்ளார்கள். மேலும் மெய்ன்னிலைப் போதம் என்ற பாடலில் ***"சுத்த சைதன்ய னாதர் சொல்லொரு பொருளினாலே செத்து னீ தினம் பழகத் தெரிந்நிடும் உளவு தானே"*** என்றும், ஆதி மான்மியத்தில் "**சைவ சைதன்ய சைவரூர்ச் சையதை**" என்றும் இச் செயலை குறித்தே அருளியுள்ளார்கள்.

**03.ஸ்ரீமாணிக்கவாசகர் அருளிய அன்னைப்பத்து;**
பாடல் எண்-10. கொன்றை மதியமுங் கூவிள... என தொடங்கும் பாடல். கொன்றை மலரை மாலையாக அணிந்நவர் சிவபெருமான். இம் மலரை சரக்கொன்றை என்றும் கூறுவார்கள். சரம் என்பது னம்மை வாழ வைக்கும் பொருளாக உள்ளது. இறை சக்தியாக னின்று விளங்நுவது. இதையே பெரியோர்கள் "**சரம் பார்ப்பான் பரம் பார்ப்பான்** " என்று பரிபாஷையாக கூறியுள்ளார்கள். னமது தெய்வமவர்களும்

***"அச்சர மமைத்தோன் அறுந்நு போனது கண்***
***டமைந்நறை யமைத்து அறைந்நதிக் கிரந்நம்***
***அறிவினை யறிந்நோர் அறிவரிவ் வாய்மை"*** என்றும்

**"சரமதுவே சமரசசன்**
**மார்க்கபஞ்ஞாட் சரமே**
**சாலோக ரூபனிலை**
**சாரும்பஞ்ஞாட் சரமே"**

என்றும் அருளியுள்ளார்கள். மேலும் சிவபெருமானை அர்ச்சனை செய்ய பயன்படும் வில்வ இலை மூன்று பகுதிகளாக இருக்கும். இது ரவி, மதி, சுடராக னம்மிடத்தில் உள்ள "முச்சுடர்" ரகசியத்தை உணர்த்தும் பொருளாக இருப்பதாகும்.

**04. திருஞான சம்பந்நர் அருளிய தேவாரம்; பாடல் எண்-09. செறி முளரித்தவி சேறி**...என தொடங்கும் பாடல். னமக்கு மிகவும் னெருக்கமான அன்பான னுண்ணியன் னம் இதய கமலத்தில் உள்ள பீடத்தில் வீற்றிருக்கிறான். அந்ந னுண்ணியனாகிய இறைவனை னம் அறியாமையினால் னம்மால் காண முடியவில்லை. விஷப் பாம்பாகிய மனம் ஐம்புலன்கள் வழியாக னபுசாக மாறி வெளி உலக வாழ்விலே னம்மை அலைய வைக்கிறது. இதனால் னாம் அனு தினமும் இறந்து கொண்டிருக்கிறோம். இதிலிருந்து னாம் மாற வேண்டுமானால் புகலியாகிய குருபிரானின் வாய்மைக்குள் ஆக வேண்டும். அவர் கூராகிய அறிவைக் கொண்டு னம் அறியாமையை வெட்டி வீழ்த்தி மனதை அறிவாக மாற்றி னம்மை னீதியான வாழ்கையில் னித்தியனாக வாழ வைப்பார்கள். இதை னமது தெய்வமவர்கள் **"னீதியில் நடக்க னித்தியன் ஆவாய்" என்று அருளியுள்ளார்கள்.**

**05.ஆதி மான்மியம்: ஜீவ சிம்மாசனப் பருவம்: பக்கம்- (269-272).**

**ஜெகத்ரட்சகர்:**

தேவாதி தேவன் என்றால் இந்நிரன். தேவர்களுக்கு அரசன், தேவர்கோன் என்று பெயர். இந்நிரன் னம் எல்லோரிடத்திலும் இருக்கிறார். அவர் னம்மிடத்தில் இப்படித்தான் இருக்கிறார் என்று தொட்டு காட்டுகிறவர் யாராக இருக்கும், அதை சொல்லக்கூடிய வல்லபம் பெற்றவரை என்ன னாமம் கொண்டு அழைப்பது, ஏனெனில் அவர் தான் யுக னாதன். யுகத்திற்கு ஓர் முத்தென வந்நவர். ஒரு யுகம் என்பது 5000 வருடங்ஙள் ஆகும். ஒரு யுக வித்தானது முத்தாக விளைய வேண்டுமானால் 5000 வருடங்ஙள் காத்திருக்க வேண்டும். அப்படி அது விளைகிறது என்றால் அதை விளைவிக்கும் பொருளாக னின்று விளங்நுவதே ஆசான். ஆசானின் னாதமே னிழலாக மணியாக திரண்டு அருள் விளக்கமாக வருகிறது. இதையே "அருண்மணி விரிந்து பெருந்நுறை சிறந்ந" என்று ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். இதய கமலத்திற்கு தான் பெருந்நுறை என்று பெயர். அங்ஙிருந்து தென்னாடுடைய சிவம் என்பதை தொட்டு தான்


Copyright © AMNA Trust, Chennai

பரம் பொருளானது இரங்கி வருகிறது. இச்செயலையே ஆண்டவர்கள் ஆதி மான்மியத்தில் மறைனடன வருகை வருகும் கிரண மரகத மாலி திருவுருக் கொண்டு னீத போத வேத னாத னாதாந்ந குருபிரான் அவர்கள் னாம் முன்னரே தெரிந்து கொண்டிரா னின்ற அழியாத மெய்ப்பொருளும் வெகு மதிச்சுமையாகிய இறக்கி வைக்கொணா இவ் விருபெரிய சுமைகளையும் தூக்கிச் சுமந்து கொண்டு ஒரு தனி முதல் மணிவிம்ப உருவானது தன்னை தேடி வந்நநாக கூறியுள்ளார்கள். அப்படி இரங்கி வந்து எனக்கு பிறகு னீதான் இனிமேல் ஜெகத்ரட்சக செயலை இந்த மெய்ஞான ஒருருளை தேவ ரதத்தை எப்படி எல்லாம் னடத்தி செல்ல வேண்டும் என்று சொல்லி அனுப்புகிறார்கள்.

**பிரம்ம தத்துவம்**:

சாயுச்சிய பிரம்மமாக வரும் குருபிரானை அறிந்து உணர வேண்டும் என்றால் னாம் பிரம்மம் ஆகாமல் உணர முடியாது. பிரம்ம தத்துவம் என்பது மலர் மீது அமர்ந்நிருக்கிறது. நான்கு தலைகள் உடையதாக இருக்கிறது. வேதத்தை தன் திருக்கரத்தில் ஏந்திய னிலையில் இருக்கிறது. ஆனால் வயதான தோற்றத்தில் இருக்கிறது. பிரம்மா யாருடைய புத்திரன் என்றால் என்றும் இளமையாக இருக்கும் மாப்பிள்ளையின் (விஷ்ணு) புத்திரன். அவர் தொப்புள் கொடியில் இருப்பவர் ஏன் வயதானவராக இருக்கிறார்.இத் தத்துவத்தின் ரகசியம் எங்நே இருக்கிறது என்றால், அது மூன்றாவது கண்ணில் தான் இருக்கிறது. மூன்றாவது கண் என்பது ஞானக் கண்ணாக உள்ளது. அது வார்த்தை அல்ல. அந்த ஒரே ஒரு பொருள் தான் னம்மை உருவாக்கியது. இந்த உடலை பாதுகாத்து இயக்குகிறது. னம்மை பேச வைப்பதும் அது தான். அனைத்து வேலைகளையும் செய்வது அது தான். "அதற்கு பெயர் தான் உயிர்". உயிர்பிக்கின்ற செயல். அதை அறிவதே தன்னை அறியும் செயல். இப்படியான ஒரு பெரும் பாரச் செயலைத் தான் யுக புருஷர்களாக வரும் பெரியோர்கள் வந்து செய்து வைக்கிறார்கள். இதுவே "தன்னை அறிந்நது உன்னை ஐயா" என்பதாகும். னாம் னம்மை அறியும் போது தான் எதிரே இருப்பவரை அறிய முடியும். இச் செயலையே

***"சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞான மென்னும் திமிரத்தால் குருடாயிருந்ந எங்களுடைய கண்களை (புறத்தில் உள்ள கண்களை அல்ல) ஞானமெனும் அஞ்ஞன சிலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே ! என்று பாத பூஜையில் கூறியுள்ளார்கள்.***

மூன்றாவது கண் இன்னது அதன் சக்தி இன்னது என்று எப்பொழுது தெரிகிறதோ அதுவே விஸ்வரூப தரிசனை என்று பகவத்கீதையில் ரகசியமாக வைத்து பூட்டப்பட்டுள்ளது. விஸ்வம் என்பது அணுவுக்கு அணுவாகவும் அண்ட பிரம்மாண்டமாகவும் இருப்பது. இதையே னமது தெய்வமவர்கள் "•" ஆதியே துணை என்று எடுத்து வைத்துள்ளார்கள். புள்ளியதே அவர் வைத்த கூர். கூர் என்றால் அறிவு. அந்த அறிவின் மூலம் உடல் னான் இல்லை, ஆன்மா மெய் என்பதை உயிருள்ள போதே அறிந்து அடையும் செயலே பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் உண்டாக்கிய மெய்வழி. இதை கைகொள்வதே ஆதி மார்க்க னீதி அவையின் னோக்கம் என்று கூறி குருபிரானவர்கள் சபையை னிறைவு செய்தார்கள்.

**19-09-2021 சத்துவாச்சாரி சபை:தொகுப்பு:**
**ஶ்ரீமதி.ஹேமலதா தியாகராஜன்**

**1.மெய்:**

பலவகையான மூல மந்திரங்கள் இருந்தாலும், அவற்றின் சாராம்சமாக ஆண்டவர்கள் அருளிய மூல மந்திரத்தில் **"மெய்யாக மெய்யாகவே"** என்று கூறுகிறார்கள். அப்படியென்றால் எது மெய்யாக வேண்டும், தேகம் மெய் என்கிறார்கள், ஆனால் ஆண்டவர்கள் திருவாக்கியத்தில் சிறுத்தது, பெருத்தது, ஒருநாள் இல்லாமலே போகும் இது எப்படி மெய்யாகும் என்று கூறுகின்றார்கள். அப்படியென்றால் இந்த தேகத்திற்குள் மெய்யானது ஒன்று உள்ளதால் இந்த தேகத்திற்கு மெய் என்ற பெயரானது வருகிறது. அத்தகைய மெய் ஆதியும் அந்தமும் கடந்த அனாதிப் பொருளாக உள்ளது. அதுவே ஜீவனாகும். அதனை ஓர் பிரம்மனிஷ்டர் வந்து தொட்டு காட்டாமல் நம்மால் அறியமுடியாது. அத்தகைய மெய் நம்முள் இருந்தும் நாம் பொய்யாக உள்ளோம் என்றும், அதனை குரு பிரான் அவர்களே நமக்கு புரிய வைத்து நாம் உடல் அல்ல, உடல் கடந்த ஒரு பொருள். பஞ்சபூதங்களின் தலைஅரசன் என்றும் அறிய வைக்கிறார்கள், ஒவ்வொரு மனிதரிடத்திலும் ஜீவன் மெய்யாக னின்று விளங்குகிறது, ஜீவன் வேறு ஆன்மா வேறல்ல;


Copyright © AMNA Trust, Chennai

ஆன்மாவே பொதுனடத்தரசாக உள்ளது; அதனை அறியக்கூடிய ஓர் சீதனப் பொருள் மனிதனிடத்தில் மட்டுமே உள்ளது. அத்தகைய சீதனப் பொருளை ஓர் பிரம்மனிஷ்டர் அவர்களே "வல்லபமான கலைகள் திரண்டு வருமொரு பெருங்ங்கிரணம்" போல் அவர்களின் அருள் மாரியின் மூலம் நமக்கு அறிய வைத்து பூத ஆத்மாவாக உள்ள நம்மை ஜீவ ஆத்மாவாக மாற்றி மெள்ள மெள்ள பரமாத்மா எனும் நிலையில் ஆக்கி வைக்கிறார்கள்.

**2.சதுர்யுகங்கோடி கால மக்கள்:**

**"ஜகத சற்குணா லங்ங்கிர்த சன்னதர்"** என்னும் பாடலில் **"யுகங்ங்கள் னான்ஙுங்ஙை கொண்டகோ டூழியர்"** என்று கூறுகிறார்கள் சதுர்யுகங்களிலும் அடிப்படையாக காலம் உள்ளது. அத்தகைய காலத்தை நாம் வீண்காலமாக ஆக்கிவிட்டோம் இதனை ஆண்டவர்கள் **"ஆலப்பொன் னரங்ங்கத்தை அரசரெடுத்துக்கொண்ட காலச் செலவில் விட்ட காரணத் தாலின்று"** என்று கூறுகிறார்கள். அத்தகைய காலத்தை நாம் மெய்க்கு செலவு செய்வது சொற்பமாகவே உள்ளது.

**3. மந்திரம்**:

**"மந்திரமாவது நீறு"** என்று திருவாசகத்தில் கூறியுள்ளார்கள்.மந்திரம் என்பது எழுத்தோ, வார்த்தையோ அல்ல; மந்திரம் என்பது இறைவனின் இல்லமாக உள்ளது .அது அவரவரிடத்தில் உள்ளது. இதனை ஆண்டவர்கள்

***"ஏட்டினி லிருந்து பேசும்***
***இருந்நவ மந்நிர முன்***
***கூட்டினில் னிஜமதாக்கிக்***
***கோதறக் கண்டா யானால்***
***வீட்டுடை விபர மெல்லாம்***
***விளங்ஙிடும் மெய்யன் பாலே"***
என்று கூறுகிறார்கள்.

அந்த வீட்டிற்குள் நுழைவதே பள்ளியறை பூஜை. அதனை ஒரு பெரியோர்கள் வந்து மெய்பாலை நமக்கு ஊட்டிய பின்னரே அதன் மகத்துவத்தை நம்மால் அறிய முடியும்.

**4. ஜீவாத்மா**:

பூத ஆத்மாவாக, மனமாக இருந்த ஒருவர், ஓர் மறைமொழி மாந்தரின் அருளால் ஜீவாத்மாவாக மாறுகிறார்கள் இதனை ஆண்டவர்கள் எமபடரடி கோடாயிதக்கூரில் **"ஒரு தேவ குரு சன்னிதியில் உன் ஜீவன் வேறு உடல் எடுக்கிறது"** என்று கூறுகிறார்கள்.

**5. முதல்நூல்**:

நாம் வாங்கிவந்த அமானிதமே முதலாகும். அந்த முதலைக் கொண்டே நாம் தேகம் எடுத்து, இதுவரை உள்ளோம்; அத்தகைய முதலைப் பற்றிக் கூறுவதால் இது முதல்நூலாகும்

**6.காமீல்கள் னோக்கம்:**

காமீல்கள் என்றால் குருபெருமான். நரனை மனுவாக மாற்றி மனுவை தேவனாக மாற்றுவதே அவர்களின் னோக்கமாக உள்ளது. இதனை ***"உருமுர சறைந்து காட்டி யுன்னிதம் காட்டல் போலே"*** என்பது போல் நம் அகக் கண்களானது திறப்பிக்க பெற்று நம் நீதத்தை காட்டி ஞானேந்திரிய கருவிகளை கொண்டு இந்திரலோகத்து காட்சிகள் காட்டி ***"உள்ளது னூறே யாண்டிலிளமையி லீராறு போகும்"***
என்னும் பாடலில் உள்ளதுபோல் மருவிய கணிதம் காட்டி; வினையின் மூலமாக நாம் பிறந்தோம் மீண்டும் வினையில் மாட்டிக் கொள்ளக்கூடாது என்று திருவினைக்காட்டி; இசைமொழியின் மூலம் மின்பொருளான ஜீவனை காட்டி, திசையினைக் காட்டிக் காட்டித் திருப்பள்ளி காட்டிய அவர்களே திசையிலாத் தவத்தையும் காட்டுகிறார்கள்; அப்படி அந்த பேரின்ப பெருவாழ்வில் நம்மை ஏற்றி, வீண் பொழுதாக இருந்ததை ***"சென்றனாட் சென்றிட் டாலும் செல்லுனாட் சென்றி டாது"*** என்பது போல் காலனாக இருந்த காலத்தை, காலனை சங்காரம் செய்யும் மூர்த்தியாக வந்து ***"குன்றில்வாழ் பவன்பே ரின்பம் கொள்ளுத லெவர்க்கும் வேண்டும்"*** என்பதுபோல் நம்மை அந்த பேரின்ப பெருவாழ்வில் ஏற்றிவைக்கிறார்கள். அதுவே காமீல்களின் நோக்கம் எனக் கூறி சபை நிறைவு செய்யப் பெற்றது.



Copyright © AMNA Trust, Chennai

## 19-09-2021 ஞாயிற்றுக்கிழமை மாலை : இசை வகுப்பின் தொகுப்பு

***ஓங்னா ரத்தொனி யானக பாலத்***
***தேசிறு வழியறியார்***
***ஆங்னா ரங்னொண் டேமணி யாட்டி***
***யலுத்தோ டிச்சலித்துச்***
***சாங்னா லம்தலை யோட்டை யுடைக்கும்***
***சண்டியர் களைவிட்டே***
***பாங்னா யிறையே உம்மிடம் காவற்***
***பாடது தேடுகின்றேன்,***

என்கிற ஞான முறையீடு பாடல் 21பெற்றது. தொடர்ந்து ஞான முறையீட்டில் இருந்து

***சுருளிமுப் பத்திமுக் கோடிதே வர்மனு***
***ஜின் கள்வான் பூமியெலாம்***

என்ற 3-ம் பாடலும்

***அழியாப்பதி குடியேறிய***
***னாயக மென்குருவின்***
***மொழியாம்படி குடியேறிய***
***பாயம துட்புகவே***
***தெளியும்மதி யமுதம்மது***
***வாதக சாந்நமதில்***
***பழியாகிய எமனேபயந்***
***நோடிவி ரண்டனனே.***

என்ற 29-ம் பாடலும் மற்றும்

***உள்ளது னூறே யாண்டி***
***லிளமையி லீராறு போகும்***
***மெள்ளவே முதுமை தன்னில்***
***மூன்றுபத் தாறாம் மைந்நா***
***கள்ளமா முறக்கந் நன்னிற்***
***கணக்கிரு பத்தாறு போக***
***விள்ளுவா யிருபத் தாறே***
***மீந்நதி லுரைக்கக் கேண்மோ***

என்ற 34-ம் பாடலையும் அவையின் அங்ஙத்தினர்களுக்கு தாளத்துடன் எப்படி பாட வேண்டும் என்பதையும் அங்ஙத்தினர்கள் தனித்தனியாக பாடி பயிற்சி மேற் கொண்டனர்,



மெய்வழி
திரு.குழந்தைசாமி கவுண்டர்

**23-09-2021 வியாழக்கிழமை சபை:**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

ஞானம் பெற்றவர்களுக்குதலை இரண்டு என்று வேதம் கூறுகிறது. (மெய்வழி நூல்): "***தலையான தலையறிந்து தலையைக் கண்டு"*** எனவும் (அறிவு அறி பாடம்): "***தலைஇரண்டு கண்மூன்றுதான் மறு பிறப்பே***" எனவும் உள்ளது. நாம் காணும் நம் தலை அழியக்கூடிய ஒன்று. ஆனால் நம்மை தாயின் கருவறையில் கட்டிய அழியா தலை ஒன்று உள்ளது. இந்த அழியாத் தலையில் னீதமான எண்ணங்களைப் போதித்து நம்முள் இருக்கும் ஜீவனை அறிய வைக்கும் செயலுக்கே விஸ்வரூபதரிசனை என்றும் தர்மம் என்றும் அறம் என்றும் பெயர். அச்செயலை செய்து வைப்பவரே தர்மரும், பரமாத்மரும் ஆவார். குறைந்து போகாத அழியாத செல்வத்தை


Copyright © AMNA Trust, Chennai

தருவதுவே தர்மம். தூலத்திற்கு வாயிலும் ஜீவனுக்கு செவியிலும் உணவு அருந்துகிறோம். "வாயுணவால் தூல உடலும், செவியுணவால் ஜீவதேகமாகிய யோகதேகமும் விளைவேறுகிறது." சென்னிமலையாகிய ஜீவனுக்கு வாசலாக இருப்பது செவியே. "சத்திய வேதத்தில்" காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றும் **"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள் என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள்".** ( நீதிமொழிகள் 8 : 32 ) தீர்ப்புத் திருவசனங்கள் யோக உணவு. உணவுற - உடலுறும் உணவற - உடலறும் நம்மை ஆண்டுகொண்ட குருபெருமானிடம் செவி உணவு அறுந்த வேண்டிய அவசியத்தைக் கூறியுள்ளார்கள். செவிச் செல்வத்தின் சிறப்பை திருவள்ளுவ பிரானும் திருகுறள் வாயிலாக கூறியுள்ளார்கள்.

மெய்க்கல்வி என்பது சாலை என்ற மெய்ம்மேனியில் விளங்கும் திருவடி, பாதம். நற்றாளைப் போதித்து, நம்மை ஜீவ வாழ்வில் பழக்கி வைப்பதாகும்." மெய்யன் னித்திய இன்பத்தையும், பொய்யன் னீங்னா அவஸ்தையாகிய அழிவையும் தேடுவான்.

**ஆதி மெய் உதயபூரண வேதாந்தம் - குருமணி மாலை:-** "சாங்குகோள் கடந்ந" என்ற பாடல் படித்து சாங்குகோள், சாங்கிசம் என்ற நிலைகள் பேசப் பெற்றது. சாங்கியம் சடங்கல்ல. அது நம்முள் காண வேண்டிய தீட்சை ரகசியமாக உள்ளது. இதனை மெய்வழி னூலில்

***"கிளம்பிவரம் வாங்குதற்கே சாங்கிய தீட்சை***
***குருதேவி சமூகமதில் வேண்டும் போது"*** *எனவும்*

***"சாங்கியம்கை யேந்நினீ னிற்கும் போது***
***சதகோடி முத்தரெல்லாம் சூழ்ந்து போற்றி***
***ஓங்கியவேல் வாங்குதற்கே சாங்கியம் பெற்ற***
***ஒருவர் துணை னிகரில்லாச் சிங்கு மென்று"***

எனவும், அமுத கலைக்ஞான போதம் ***"வாச்சுதென்ற பெரியோர்கள் சாங்கிய மிங்கே"*** என்ற தேவ ரகசியங்களை குருபெருமான் மூலம் அறிய வேண்டும். திருவடி நிலையை பெற்றவனே அடியேன், அடியார்கள் என்றும் அவர்களே பிறவா நிலையை பெற்றவர்கள் என்றும் திருமந்திரம், திருவருட்பா போன்ற பல வேதங்கள் கூறுகின்றன. திருவடியே பாதமாக, நற்றாளாக, ஜீவனாக, நானாக, நெற்றிக்கண்ணாக, அமானிதமாக னின்று விளங்குகிறது என்றும் பேசப் பெற்றது.

**திருவாசகம் சென்னிப் பத்து:- "பிறவி யென்னுமிக் கடலை "** என்ற பாடல் பாடப்பெற்றது. கடலுக்கு ஒப்பானபிறவி என்பது நல்வினை, தீவினையினால் உண்டாகிறது. வினைக்கு காரணம் மனம். இந்த பிறவியை கடப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. இதனையே வள்ளுவபிரானும்

***"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்***
***இறைவன் அடி சேராதார்."***



*ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்*

என்று கூறியுள்ளார். சாலை ஆண்டவர்களும்

***"பிறவிப்பெ ருங்கடலில் பிறப்பொழியாப் பாவியனைக்***
***குறை தவிர்க்க வந்நகுல குருபாதம் யான்மறவேன்"***

என அருளியுள்ளார்கள். சற்குருவின் பேரருள் துணை கொண்டே பிறவிக் கடலை கடக்க முடியும்.

**தேவாரத் திருப்பதிகம் முதல் திருமுறை திருவீழிமிழலையும் என்ற தலைப்பில் வரும் "பத்தர் கணம் பணிந் தேத்த வாய்த்த"** என்ற பாடலின்


Copyright © AMNA Trust, Chennai

விளக்கமாக குரு பிரானவர்கள் தம்மை அண்டி வந்த பத்தர்களுக்கு நன்மை, தீமை கலவாத சமநிலையை அருள்கிறார்கள். குரு முறாதி பாடலில்

***"பழுதணுகா தாலயத்தி னடன பாதம்***
***பக்தருள்ளக் கோயிலுளம் பூத்த பாதம்***

பத்தர் உள்ளத்தில் ஆசானின் னாதமே கோயிலாக விளங்குகிறது. புத்தராக வரும் பெரியோர்களின் ஓரெழுத்து தாமரை மலராக விளங்குவது னாதமேயாகும். பெரியோர்கள் என்பவர் **"குறைமனத்துப் பிழைஒதுக்கப் பழகித் தேர்ந்த குருகுலாதிபர் ஆவர்"**.
ஓரறிவாகிய பேரறிவைப் பெற்ற வித்தகர்கள் வாழும் உலகமாக ஆசானின் னாதம் விளங்குகிறது. விநாயகர் அகவலில்

***"தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட***
***வித்தக விநாயக விரைகழல் சரணே!"***

என்றுள்ளதில், மனித உடலே முதன்மையான தத்துவம் என்று கூறினார்கள்.
கடவுள் நம்பிக்கை என்று புற உலகில் அறியாமையால் மக்களுக்கு நடக்கும் பல ஏமாற்றங்களும், அதிலிருந்து மீண்டு நிஜமான மெய்ச் செயலை மக்களுக்கு அறிய வைப்பதற்கான ஆதி மார்க்க னீதி அவையின் அறிவு சார்ந்த மெய் நிலைகளும்:

1. மெய்யறியாத மக்கள், மனிதனிடத்தில் கழிவுகள் தேங்கும் இடத்தில் இறைவனை வைத்து குண்டலி சக்தியை கீழிருந்து னினைவால் மேலே எழுப்ப வேண்டும் என்று கூறுகிறார்கள். இது நிரூபணைக்கு வராத ஒன்று. மெய்வழியில், எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்று இறைவனை தன்னுள் அறியும் அறிவை அளிக்கிறார்கள்.

2. புற உலகில் சரிந்து கொண்டிருக்கும் சரீரத்தின் அங்கங்களை காக்க இறைவனை வேண்டுகிறார்கள். அக உலகாகிய மெய்வழியில், தூலம் கடந்து சூக்கும, காரண, மகா காரண தேகங்களை னம் அறிவு சம்மதிக்க அறியும் வண்ணம் உணர வைக்கிறார்கள்.

3. பொய் பாசாண்டியர்களின் ஞானம் என்பது பயில் பண்ணி பணம் பறிக்கும் அயல் வேச பண்டிதர் கூட்டமாக உள்ளது. மெய் குருவானவர், சிற்றின்பம் எனும் அறியாமையை விலக்கி பேரின்ப வாழ்வின் உன்னத அனுபவத்தை உணர வைக்கின்றார்.

4. பொய்யர்களிடத்தில் அறியாமைக்கும் அறிவுக்கும் வித்தியாசம் தெரியாமல் இருக்கின்றது. மெய்யன்பர்களிடத்தில், அறிவு என்பது அவரவருக்குள் இருக்கும் அறியாமைகளை அறிந்து அகற்றி அறிவாக விளங்குகிறது.

5. சாமி யார்? என்பதை அறியாத சாமியார்களே இன்று எண்ணிலடங்காமல் உள்ளனர். சாமி என்பதன் மெய்யான பொருள் (சா = சாவு , மி=மீறியவர்கள்) சாவை மீறக்கூடிய செயலை கைக்கொண்டு, பூட்டடங்கா சாவி கொண்டு நம்முடைய மனப்பூட்டைத் திறந்து அதனுள் இருக்கும் அறிவு மாணிக்கத்தை எடுத்து வழங்குபவர்கள்.

**25-09-2021 மான்மியம் சபை:**
**தொகுப்பு: ஸ்ரீமதி. விஜய சித்ரா**

அமுத கலைக்ஞான போதம் இரண்டாம் காண்டத்தில் வரும் ***"எந்தை சுக்கிலாம் பர னாட்டில் வாழும் னாளில்"*** என்ற பாடலை குருபிரான் அவர்கள் இசைத்து சபையைத் தொடங்கினார்கள். புரட்டாசி மாதத்தின் சிறப்பும் கோடாயிதக்கூர் வாக்கியம் எண்(71) பற்றிய விளக்கமும் பேச பெற்றது. மெய்ஞ்ஞானப் பாரவான்களின் னூலுக்குத் தானாகவே அர்த்தம் புரிந்து கொள்ள முடியாத வண்ணம் நமது பாவத் திரையானது உண்மையை மறைத்துக் கொண்டிருக்கிறது ஞான நூல்களுக்கான உரையை எத்தனை காலம் படித்தாலும் ஓதினாலும் விளங்கிக்கொள்ள முடியாது. அதை அனுபவத்தால் அறிந்துணர்ந்த பெரியோர்களின் அஞ்ஞன சலாகை எனும் வாய்மையின் துணை கொண்டு மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும். மறைநூலாம் திருக்குறளின் ஒரு குறளான

***"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை***
***ஆரிருள் உய்த்து விடும்"***


Copyright © AMNA Trust, Chennai

என்ற குறள் ஒன்று மட்டும் தனக்கு நிஜமானால் போதும் என்று தமிழ் வித்துவான் ஒருவர் ஆண்டவர்களிடம் கேட்க அதற்கு ஆண்டவர்கள், நீ வித்துவான் அல்ல வான் வித்து என்று பாராட்டிச் சொல்லி அது நிச்சயம் உனக்கு கிடைக்கும் என்று ஆசீர்பதித்தார்களாம். பெரியோர்களிடம் எதைக் கேட்டுப் பெறவேண்டும் என்ற யதார்த்தமான உள்ளம் ஏக்கம் இருந்தாலே அந்த சூதானத்தைச் சொல்லுவதற்கு ஒரு பெரியார் கண்டிப்பாகக் கிடைப்பார்கள். அந்த திசை னாதத்தை கேட்கும் தேவயோனியின் சிறப்பை

***"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு***
***மாடல்ல மற்றை யவை"***

என்ற திருக்குறளை கொண்டு விளக்கி அருளினார்கள். ஞானத்தின் ஆழம் தெரிந்த அவர்களிடமே நம் பாவத் திரையை விலக்கும் சக்தி இருக்கிறது.

**திருவாசகம்:**

மாணிக்கவாசகர் தில்லையில் அருளிய குயில் பத்தின் முதல் பாடல் **."கீதம் இனிய குயிலே கேட்டியேல்"** என்ற பாடலுக்கான விளக்கம் பேசப் பெற்றது. குயிலானது வலம்புரிச்சங்காய் னின்று எழுதாத எழுத்தைக் கூவுகின்றது, அப்படிக் கூவுவது ஆசானே என்றும், எதற்காக? என்றால் தன்னை அண்டிய மக்களுக்குச் சத்தத்தின் உள்ளே சதாசிவமாக னின்று விளங்கக்கூடிய, தான் உணர்ந்த பரம்பொருளின் நிலையை னாத போதமாக தன் சீடர்களுக்கும் போதிக்கவே கூவிக்கொண்டு இருப்பதாகவும், மேலும் அனாதியிலிருந்து ஆதி வந்தது என்றும் பதி பசு பாசம் என்ற மூன்றில் பசு, பாசம் அனாதியானது அதிலும் பாசம் உன்னிலிருந்தே உண்டானது அதை நீயாகத்தான் மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற கருத்தும் விளக்கப் பெற்றது.

**தேவாரத் திருப்பதிகம்:**

திருப்புகலியும் திருவீழிமிழலையும் **"விண்ணிழி கோயில் விரும்பி மேவும்"** என்ற பாடலுக்கான விளக்கம் பேசப் பெற்றது. ஆசானின் னினைவென்னும் ஆகாயத்திலிருந்து இறங்கி வந்த வாய்மையே புண்ணியத்தின் உருவாக திருவீழிமிழலையாக உள்ளது. அது புலனுக்கு ஆளாகாமல் காக்கும் தெய்வப் புண்ணிய பூமலர் சரணம் சஞ்ஞீவியாக உள்ளது. அப்படியான அந்த னிபுண மணி விளக்காம் ஆசானின் வாய்மைத் துலக்கத்தில் ஆகிக் கொண்டவர்களுக்கு அது "வா" சுகியின் சஞ்ஞீவியாகத் திகழ்வதாக விளக்கப்பெற்றது. ஒட்டுமொத்தமாக திருவீழிமிழலையின் சிறப்பு னாத பஞ்சாட்சரத்தின் ரகசியமாக னின்று விளங்குகிறது என்றும் கூறப் பெற்றது .

**குரு மணிமாலை:**

***"மன்னுயிரனைத்தும் மற்று விண்ணுயிரும்"*** என்ற பாடலுக்கான விளக்கம் :மன்னுயிர் விண்ணுயிர் எல்லாம் அறிவு கண்ணுக்குள்ளே தான் இருக்கின்றது. அந்த அறிவுக் கண்ணாகிய மூன்றாவது கண் திறப்பிக்கப் பெற்றவர்கள் தான் தன் உயிரின் ரகசியம் அறிந்தவர்கள். அவர்களே முத்திரை பதித்த கரத்துடன் தயாபரக் கடலாக, முகம்மது கடலாக, முன்வந்து நம்மை பாவச் செயலில் இருந்து மீட்டு, தவனம் தீர்த்து, புண்ணியத்தில் ஆக்கி வைக்கிறார்கள் என்ற விளக்கம் பேசப் பெற்றது.

**மான்மியம்:**

மான்மியம் முகப்புப் பாவில் ***"முப்ப திப்படிமுக்குணத்திற்குடி"*** என்ற வரிகளை விளக்கும் போது மனுத்தலைகள் உள்ள வரை இந்த வார்த்தைகள் செல்லுபடியாகும். முக்குணத்தில் குடி கொண்டவர்களாகிய நாம் மாற வேண்டியவர்களாக இருக்கிறோம். முக்குணமற்ற னிர்க்குணா அலங்கிர்தத்தால் மட்டுமே அவர்கள் உற்பரனாகத் திகழ்கிறார்கள். அப்படியான அவர்கள் தன் அமுதனாவு கொண்டு வெளியாக்கிய உன்னத வார்த்தைகளைச் செவிமடுத்து இன்று அதன் மூலமாக நாம் அடையப்போகும் பெரும் பதமானது எப்பேர்ப்பட்ட உன்னத முடையது என்பதை உணர வேண்டும் என்று தெளிவாக்கினார்கள் .

**ஜீவ சிம்மாசனப் பருவம்:**

ஆண்டவர்கள் அளப்பரிய மதிச் சுமையைச் சுமந்து கொண்டு ஞானத்தேட்டமே சிறிதுகூட இல்லாத மதுரைக்கு ஒத்தையாய் வருகிறார்கள். தெய்வமென்று எதையோ னினைத்து வேடிக்கை பார்க்கும்



Copyright © AMNA Trust, Chennai

அக்கூட்டத்தினரைப் பார்த்து ஆண்டவர்கள், அறுசுவையும் அதற்கான அண்டங்களையும் இறைவன் நுணுகி நுணுகிப் படைத்த திறத்தையும், அந்த அறுசுவையும் ஆறு அறிவுகளும், குணங்களின் மூலம் மனிதனுக்குள் நின்று விளங்குவதையும் அந்த அறுசுவைக்கூட்டு உள்ளடங்கும் இடத்தை அறியும் சக்தி மனிதனுக்கு மட்டும்தான் உண்டு என்பதையும், அது இருளற்ற வாய்மை துலங்கும் ஓர் மெய்க் குருபிரானின் செவிச்சுவை சேகரமாகிக் கலந்துவரும் வாக்கின் மூலமே அறியக்கூடிய ரகசியமாய் இருக்கிறது என்பதையும் விரித்துரைத்தார்கள். ஆனால் இதை விளங்கிக் கொள்ளாத மேதாவிகள் வேதம் எல்லாமே தெய்வத்தை வைத்துத்தான் பேசப் பெற்றிருக்கிறது .நமக்குள்ளே ஒன்றுமே இல்லை என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். உனக்குள் இருப்பதை நீ தானே அறிய வேண்டும். ஆனால் வேதத்தை படித்தால் போதும், மூல மந்திரம் சொன்னால் போதும், எல்லாம் வந்து விடும் என்று கூறுவது போலி பக்தியை வளர்ப்பதாகவே இருக்கிறது. **"நம் அனைவரையும் கடவுள் அப்படிக்கு விட்டிடாமல் இருளற்ற வாய்மை துலங்கும் ஓர் மெய்க் குருபரனிடத்தே ஒப்புவித்து நம்மை ஆள்வாராக"** என்ற ஆண்டவர்களின் வாக்குப்படி தெளிந்த அறிவுடன் வேத சாட்சி வைத்து சொல்லக்கூடிய நிலைகளைப் பெற்ற மக்களைக் கொண்டு விளங்குகிறது இந்த ஆதி மார்க்க நீதி அவை .முழுக்க முழுக்க வேதசாட்சி கொண்டு அறிவைச் சார்ந்திருக்கிற நிலையும், செயல் பழக்கமும், பழக்கத்தின் மூலமாக மெய் உணர்வு தூண்டப் பெற்று, எக்காலத்திலும் சொல்லப் பெற்ற எந்த வேதமானாலும் அந்தச் சொல் இதைத்தான் சொல்லுகிறது என்ற தெளிந்த நுண்ணிய அறிவைப்பெற்ற மக்களை உடையது இந்த ஆதி மார்க்க நீதி அவை என்று மொழிந்தார்கள். மேலும் ஆகஸ்ட் மாத நிகழ்வுகளுக்கான செப்டம்பர் மாத மின்னணுச் சஞ்சிகையையும் குருபிரான் அவர்கள் வெளியிட்டு சபையை நிறைவு செய்தார்கள்.

**26-09-2021 சத்துவாச்சாரி சபை:**
**தொகுப்பு: ஸ்ரீமதி.பானுமதி குமரேசன்**

**மனம் எனும் மாயை**:

***"சென்மந்நோறும் செய்த கன்மங்நடைத் தேற்ற வந்ந..."*** என்ற இடப்பாக ஆசாரக் கண்ணி பாடல் வரிகள் உணர்த்துவது, மெய் ஞானப்பாதையில் நாம் நம் வினைகளை கடந்து செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். அதை கடந்து செல்ல நம்மால் முடியாது. வினைகளை தீர்க்கும் ஒரு மெய்க் குரு பிரான் தான் நம்மை வினைகளில் இருந்து கடத்தி வைப்பார்கள். வினைக்கு காரணம் மனம். மனதை கடந்து நாம் அறிவு வடிவாக ஆக வேண்டும். இதனையே ***"அறுக்குமட்டு மாய்கைதனை யறுத்தே விட்டு, அருமறையின் னெறிவழியே ஆசான் பின்னே...."*** என்று மெய்ம்மண ஞானம் பாடலில் மனம் அறிவாக மாற வேண்டும் என்பதை கூறியுள்ளார்கள்.***"மனமே முருகனின் மயில் வாகனம்"*** என்ற வரிகளுக்கேற்ப மனதை மயிலுடன் ஒப்பிடுகிறார்கள். மயில் தன் தோகையை விரிக்கும் போது ஆயிரம் கண்களாக தெரிகிறது. அதுபோல் மனமானது ஓர் அறிவாக இருக்கும் போது அது நிர்குணமாக இருக்கும். மனதில் பல எண்ணங்கள் தோன்றும் போது, தோகை விரித்தாடும் மயில் போல் மனம் ஆயிரம் கண்கள் கொண்டதாக மாறி விடுகிறது. அப்படி விரிந்த 'மாயை' எனும் மனதை அறுக்க வேண்டும். உலக வாழ்வில் குழம்பிய மனதை குருபெருமான் தெளிந்த மனமாக, அறிவாக மாற்றி அறிவு பாதையில் நம்மை வாழ வைக்கிறார்கள். அந்த அறிவே ஆசானாக நின்று விளங்குகிறது.

**மனம் அறிவாக மாறும் நிலை**: ஒரு இரும்பை உருக்க வேண்டுமென்றால் அதற்கு நெருப்பு வேண்டும். அது போல மாயையில் சிக்கியுள்ள மனதை உருக்க 'சிவாக்கினி' எனும் ஆசானின் நாதத்தினால் மனதை உருக்கினால் அது தூய்மை அடைந்து அறிவாக மாறும். நாதம் என்பது ஆசானின் வாய்மை. அறியாமை எனும் இருள் ஆசானின் நாதத்தினால் விலகி அறிவெனும் வெளிச்சம் தோன்றி நமக்கு வழியாக அமைகிறது. இதுவே உள்ளம் உருகும் பிரம்ம வித்தை செயலாகும். இம் மனித தேகம் எடுத்து பிறந்த ஆன்மா, இனி பிறவாமை என்னும் நிலையை அடைய ஆசானின் வாக்கே நமக்கு துணையாக நிற்கும். அந்த வாக்கில், சொல்லில் நம் கவனத்தை வைத்து ஊணி நடக்க வேண்டும். அதுவே நான் வேறு ஆசான் வேறு என்றில்லாமல், அறிவு வடிவாக ஒன்றியிருப்பது. உறைந்து இருப்பதாகும். அப்போது ஆசானின் அடி நிழலில் ஒரு சீடனானவன் முளைத்தெழும்புகிறான். அவ்வாறு ஒருவன் விருப்பமுடன் மனம் ஊணி உறைந்தால் அவன் மெய்ஞானத்தில் வெற்றி பெறுவான். இதையே நமது தெய்வமவர்கள்,


Copyright © AMNA Trust, Chennai

***"வெறுக்காமல் மனம்வெறுத்து னின்றாயானால்
வேதாந்தத் திசைனாத வெளியும் தோணும்
விருப்பமுடன் மனமூணி யுறைந்நா யாகில்
வெல்லாமற் போவதிலை மெய்ஞ்ஞானத்தை."***

என்று மெய்ம்மண ஞானம் பாடலில் அருளியுள்ளார்கள்.

**சன்னதம்.**

ஒரு அரசன் தன் நாட்டின் பாதுகாப்பிற்காகவும், எதிரிகளை போரில் வெல்வதற்காகவும், நீதி வழியில் மக்களை வழினடத்தி செல்லவும், பலவிதமான ஆயுதங்ஙளை பயன்படுத்துகிறான். அதுபோல இறைவனாகிய அரசன் தன்னை நாடி, தேடி வரும் மக்களின் அறியாமையை வெல்வதற்காகவும், மாயை என்னும் இருளை போக்கி, அறிவு பிரகாசத்தை அவர்களிடத்தில் வைத்து பதிப்பிக்கவும், தன்னுடைய சிபாரிசுக்குரிய தீர்க்க தெரிசியர்களாகவும், வழிகாட்டியர்களாகவும் வரும் குருபிரான்களின் கைகளில் கொடுக்கும் சன்னத முத்திரைகளாக, ஒவ்வொரு காலங்ஙளுக்கு ஏற்றவாறு அனுப்பி வைக்கும் ஆயுதங்ஙளுக்கு சன்னதம் என்று பெயர். அதுவே அறிவெனும் ஆயுதம். அத்தகைய அறிவின் கூரோங்ஙிய நிலைகளே இங்கு சன்னதங்ஙள் என்று குறிக்கப்பெறுகிறது. னமது குல தெய்வம் பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் இப்படியான நிலைகளை எல்லாம் கைகொண்டு சன்னதப் பாரவானாக வந்து இந்த மெய்ஞானத்தை நடத்தி உள்ளார்கள். புறக்கண் கொண்டு காண முடியாததாக ஆசானிடத்திலிருந்து வந்து நம்முடைய அறியாமையை நீக்கி அறிவுத்துலக்கத்தை உண்டாக்கும் வல்லபம் உள்ள ஆயுதங்களாக விளங்குவதே சன்னதங்ஙளாக இருக்கிறது, என்று கூறி சபை இனிதே நிறைவேறியது.

**26-09-2021 சிவகாசி சபை:**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெயக்குமார்**

கரம் (கை) - வேதத்தில் கரம் என்பது, உள்ளமாகிய மகா மகசூக்குமமான இருதயத்தை குறிக்கிறது. குருவின் மூலம் மூன்றாவது கண் திறப்பிக்கப்பட்ட பிறகே, இருதயமே சரண கமலாலயம் எனவும், அதுவே ஈசன் இருப்பிடம் எனவும் அறிய முடியும். இதையே வள்ளுவர் பெருமான்,

***மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்***

எனவும், பிரம்ம பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் ஆதி மான்மியம் - சன்னதம் பெறு பருவம் (பக்: 227-ல்)

***செய்த்தலைச் செவிகண் வாயும்
தீக்குணப் பேழை யெங்ஙும்
கைத்தலை மலர்க்கை வைத்துக்
களைந்தெடுத் தெறிந்தாங் ஙாங்ஙு
வைத்தனர் புதிதா யெங்ஙும்
வலிமைகள் குழுறி னிற்க
மெய்த்திறன் வாரிப் பின்னும்
வான்முகட் டெத்தினாரே***

என்ற பாடல் மூலம் அருளியுள்ளார்கள்.

ஔவையார் வினாயகர் அகவலில் ,

***"சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட"***என்று அருளியுள்ளார்கள்.

**மலர்க்கை:** ஆசானின் திருக்கரமான ஓரிதழ் தாமரை ஆகும்.

**பொதிகை:** இறையாத தீர்த்தமாக, வற்றாத பொய்கையாக ,போகாப் புனலாக, ஆசானின்
னன் னாதமாக உள்ளது. தீர்த்தமாவது தேசிகர் வாசகம்.



Copyright © AMNA Trust, Chennai

**உடுக்கை:** உடுக்கை எனும் டமாரம் சிவனின் திருக்கரத்தில் இருப்பது.

நீதித் திருமணத்திற்கும் கரத்திற்கும் உள்ள தொடர்பு. மான்மியம் - ஆதியோதயத் தலைப் பருவம் (ப.எண்:02)

***னித்தியகு ரியர்களை***
***உத்தியோவ னத்துண்டாக்கி***
***னீதித் திருமணமும்***
***ஓதும் ஒரேகுலமும்***

புறத்தில் உள்ள திருமணச்சடங்குகளில் கங்ஙண ஏற்றம், காப்பு கட்டுதல், மணமகளின் இடது கையில் வெள்ளைப் பூ கங்ஙணமும் மணமகனின் வலது கையில் சிவப்பு பூ கங்ஙணமும் கட்டுவார்கள் மூல மந்திரம் சொல்லி ,ஆலய மணி ஒலிக்கும். அகத்திருமணம் என்பது நெஞ்சுகரமாகிய, சரண கமலாலயத்தில் வைத்து ஆலய மணி என்னும் ஒரெழுத்து மந்திரத்தால், திரு – மணம், சிவன்- சக்தி, உடல் – உயிர் இப்படி நீதிகரமாக இணைகிறார்கள். குருவின் காருண்ய கருணைதான் நீதித் திருமணம்.

ஆசானின் னா ஆட நம்முடைய அனைத்து பாவங்களும் விலகிவிடும்.

***“கங்ஙையது எங்ஙெயென்று கேட்பா யாகில்***
***கேசரியா மடையாளம் கவன மாய்க்கேள்”***

கங்கையில் நீராடினால் அனைத்து பாவங்களும் விலகும் என்பார்கள். பிரம்மா, விஷ்ணு, சிவன் வேறு வேறு அல்ல. மும்மூர்த்திகளின் செயல்களையும் ஒருங்கிணைந்த தோற்றமே குரு பெருமான். குரு பெருமான் நம்மீது இரக்கம் கொண்டு அறிவுப் பிறப்பில் பெற்றெடுத்த பிறகே (ரஜோ, தாமச, சாத்வீக) முக்குணங்கள் அற்று நிர்குண நிலையில் மெய் உணர்வு மேலோங்க நாம் இந்த உடல் அல்ல என்பதை உணர்ந்து இறைவனை அறிய முடியும்.

***தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே***
***நாவினாற் சுட்ட வடு.***

தீயினாற் சுட்டபுண் ஆறிவிடும் ஆனால் அதன் ரணம் வடு போல் மறையாதிருக்கும். அது போல ஆசான் முதன் முதலில் மெய்ப்பொருளை தன் நாவினால் தொட்டுக் காட்டிய வடு என்றும் பூரணமாய் நிலைத்திருக்கும். தேவ ரகசியமாகிய அந்த பூரண ரகசியத்தை அறிவிக்கும் சாவியாக இருப்பது ஆசானின் வாய்மை. எம் வாய்மைக்குள் ஆகி விடுவது ஒன்றே உன் வேலை என்பது தெய்வத் திருவாக்கு. மனம் என்னும் கால் வழி பிறந்தவன் நரன். ஆசானின் அறிவெனும் கால் வழியில் (தேவ யோனியில்) பிறந்தவன் தேவன். இங்கு கால் என்பது சூட்சுமமாக பரிபாஷையாக இருக்கிறது.

***“வேர்ப்பாய்ந்தோர் விண்மூலம் சொல்ல மாட்டார்***
***வேணுமென்று சொன்னாக்கால் வெகுசூட் சந்நான்”***

கரம் என்பது பற்றி மக்களுக்கு பல நிலைகளில் விழிப்படைய செய்துள்ளது இச்சபை எனக் கூறி ஆசான் அவர்கள் சபையை நிறைவு செய்தார்கள்.

### 30-09-2021 வியாழக்கிழமை சபை:
### தொகுப்பு: ஸ்ரீமதி.ஜீவிதா வடிவேலன்

இறைவன் வீற்றிருக்கும் மகா பரிசுத்த தலமாகிய னினைவென்னும் ஆகாயத்தில், துன்பத்தையும் துகடத்தையும் தரக்கூடிய சலனத்தை ஏற்படுத்தாமல் இருப்பதே அமரத்துவத்தை பெறுவதற்கான உளவாகும். ஏனெனில், நீ மனதின் மூலம் செய்யக்கூடிய வினைகள் அனைத்தும் பதியக்கூடிய இடம் னினைவென்னும் ஆகாயமே. வினைகளை போக்கும் வல்லமையானது குரு பெருமானவர்களின் திருக்கரத்தில் இருக்கிறது. தீர்த்தமாவது தேசிகர் வாசகம். ஆசானின் னாதமே சர்வ பாவங்களையும் தீர்த்து, கிரகங்களின் பிடியில் இருக்கும் நம்மை மீட்டு, மரணமிலாப் பெருவாழ்வில் வாழ வைக்கும்.

எமனை அணுகவிடாது காக்கும் சத்திய பரிசுத்த வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் :41 ஓதப்பெற்றது. பிரம்மம் என்பதற்கும் பிரம்மன்


Copyright © AMNA Trust, Chennai

என்பதற்கும் உள்ள வேறுபாட்டிற்கான அறிவுத்தெளிவை ஆசான் அருளினார்கள்.

**"பிரம்மம் என்பது உருவமற்றது. (அனாதி)**
**பிரம்மன் என்பது உருவமுடையது. (ஆதி)"**
மெய்வழி னூல்
***"ஆதிய னாதியென்றும் சோதி யென்றும்***
***அடினடுவு முடியண்ட பிண்ட மென்றும்"....***

**உணர்வின் இரகசியம்**- சுவை, ஊறு, ஒளி, ஓசை, னாற்றம் என்ற ஐந்திற்குள் இருக்கிறது. மெய் உலகை அறிந்து , மெய் உணர்வோடு வாழ்பவனை துவிஜன் என்று வேதம் கூறுகிறது.

ஆதி மெய் உதய பூரண வேதாந்தம் – (குருமணிமாலை: 11-ம் பாடல்) ***"ஆரணம் கடந்த பூரண கடலே....."*** பாடல் பாடப்பெற்றது முடிவற்றதற்கு பெயர் ஆரணம். சிற்றின்ப சுவையை கடந்த பிறகே ஆரணத்தின் சுவையாகிய பேரின்பத்தை அடையமுடியும்.

ஆனந்த களிப்பு

***"வடியும்சீ யோனிக்கு ளாசை - மாறா***
***வம்பர்க்கு மரணமாய் வருகும்சஞ் ஜீவி"***

பூரண ஒளிவாய், பூமுகம் மதுவென மயக்கும் மதி கடலாய் வரக்கூடிய ஆசான், செங்கமல பாற்கடலில் விளையும் ஞானச்சங்கை ஊத வைத்து, முடிவற்ற பேரின்ப பெருவாழ்வில் குடியேற்றி வைப்பார்கள்.

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் சென்னிப்பத்து: ***"புழுவினாற் பொதிந்திரு குரம்பையிற்"*** எனத் துவங்கும் 8 - வதுபாடல் பாடப்பெற்றது சென்னி பத்து என்பது பத்து தலையை குறிப்பது. மெய், வாய், கண், செவி, மூக்கு. இந்த ஐந்தும் இரண்டு இரண்டான எண்ணங்களை வெளிப்படுத்தும் என்பதால் பத்து தலையாக கூறப்படுகிறது. எண்ணம் பல கோடியாய் பிரிந்தால் னபுசாக மாறிவிடும். அதே எண்ணம் ஓர் நினைவாகும்போது கூர்ந்த ஒன்றாக சிபத்தாக மாறும். ***"கூர்ந்ந ஒன்றினிலே இன்னும் கோடியாய் பிரித்தாய் போற்றி"***

திருஞானசம்பந்தர் அருளிய தேவார திருப்பதிகம்: திருக்காட்டுப்பள்ளி தல வரலாறு படிக்கப்பெற்றது தசலிங்கத்தின் சிறப்பு: எட்டிரண்டும் பத்தான இடத்தில் அமரும் இரகசியமே தசலிங்கம். ஒரே லிங்கத்தில் இரண்டு பானங்கள் என்று கூறப்படுவது, இரண்டெனும் வாசியாகிய சிவமயப் பொருளைக் குறிக்கும் மெய் செயலாகும்.

**மனுவின் சிறப்பு:**

***முகத்துக் கண் கொண்டு பார்க்கின்ற மூடர்கள்***
***அகத்துக் கண்ணனை யாரென்ற றிந்நிலர்***
***அகத்துக் கண்ணன றிந்தன்பு கொண்டிடில்***
***ஜகத் தெமபடரை தாண்டி வாழ்குவார்.***

மனிதப் பிறப்பானது தாயின் கருவறையில், இருளில் பத்து மாதங்கள் இருந்து, அழற்காற்று, துருசு அவஸ்தையில் வளர்ந்து, தொப்புள்கொடி அறுத்து பிறப்பது.

சத்தியவேதம்(யோவான் 3:3): ***"இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்"*** என்றார். மீண்டும் எப்படி பிறக்க முடியும் என்ற கேள்வி எல்லோர் உள்ளத்திலும் எழும். இதற்கான பதிலும் அதே சத்தியவேதத்தில் (யோவான் 3:5): ***"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்திலே பிரவேசிக்க மாட்டான். மாமிசத்தினாலே பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்"*** என்றும் அருளப்பட்டுள்ளது.

மனிதப் பிறப்பின் உன்னதத்தையும், மறுபிறப்பின் இரகசியத்தை பற்றியும் நம் தெய்வமவர்கள் அருளிய திருவாக்கியம்:


Copyright © AMNA Trust, Chennai

***"சந்திர சூரியர் அனைவரையும் வெளியாக்கிய அக்காணி முளை ஆறுபடைவீட்டின் கருவறையிலிருந்து தீப தூப அலங்கார வாசனையுடைனே என்றும், தொடர்புடைய தொப்புள்கொடி அறுக்காமலும், அசுத்தங்களையும் அவமானங்களையும் தரித்திரியங்களையும் போக்கி விடுகின்ற மகாச்சுத்தம் மகாமானம் மகாச்சீரும் சிறப்பும் மகாவாக்கும் மகாவலியையும் மகானிதியும் மகாக் காலங்களும் நிரம்பிய பெருங்களஞ்ஞியமாக வெளியாகி மறுனாளிலே வாய்திறந்து பேசி பாடும். இப்படி பிறப்பதுதான் மனிதப்பிறப்பு".***

**மனிதனின் உன்னதங்கள்** :

**1. அறிவு இன்னது என்று அறியும் சக்தி பெற்றவன் மனிதன்.**

**2. ஜீவாத்மா - பரமாத்மா இன்னது என்று அறியும் சக்தி பெற்றவன் மனிதன்.**

**3. இருள் - பிரகாசம் இரண்டையும் பிரித்து அறியும் சக்தி பெற்றவன் மனிதன்.**

**4. மேலாம்பரமான னாலாம் பத வாழ்வை கைபோட வந்தவன் மனிதன்.**

**5. ஜீவசக்தி மேலெழும்பும் தன்மை கொண்டவன் மனிதன்.**

**6. எவ்வுயிரும் எமன் கைவசம் அதிலிருந்து தப்பிக்கும் பிரம்மவித்தையை அறியும் உன்னதம் பெற்றவன் மனிதன்.**

***எல்லாண்டு எல்லாண்டு***
***எண்ணிலடங்காக்காலம்***
***வல்லமையும் சீர்சிறப்பும்***
***வாழ்வினுக்கே வந்த மனு***
***பரம்பத வாழ்வினுக்கே***
***பாரில் படைத்த மனு***

என்று மனுவின் சிறப்பை "எமவாதையைத்தடுக்கும் -என்திறம்" என்ற பாடலில் பலனிலைகளில் தெய்வம் அருளியுள்ளார்கள். ஈசனுடைய வல்லபமும், மனித தேகமும் தாங்கி வரும் ஒரு அதிவல்லபர் வந்து பெருங்கருணை கொண்டு, ஆறாவது அறிவின் வல்லபத்தை அறிவித்து, அறிவுக்கண்ணை திறந்து நம்மை மனு என்ற பதத்திற்கும் தேவன் என்ற பதத்திற்கும் உரியவர்களாக ஆக்கி வைப்பார்கள். குரு பெருமானவர்கள் இப்பெரும் னிலைகளை அருளி, அவையை இனிதே னிறைவு செய்தார்கள்.

## பஞ்சு பூத தத்துவம்

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இப் பூமண்டலத்தில் தாவரம், ஊர்வனம், நீர் வாழ் உயிரினங்கள், பறவை, விலங்கு ஆகிய அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்கு அடிப்படை ஆதாரமாக இருப்பது பஞ்சுபூதங்கள். அவை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து அம்சங்களாக பிரம்மாண்டமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இவை ஐந்தும் இருந்தால் தான் உயிர்கள் வாழ முடியும். இதில் ஒன்று இல்லை என்றாலும் உயிர்கள் வாழ முடியாது. பஞ்சு பூதங்களை நம்மால் உண்டாக்கவும் முடியாது. அவற்றை பஞ்சு பூத கணத் தலையரசனாக, அதிபதியாக, நீதியாக இருக்கும் இறைவன் தான் உண்டாக்கினான். இப் படைப்புக்குள் தான் நாம் எல்லோரும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பஞ்சு பூதங்கள் ஒருவருக்கு நீதியாகவும், மற்றவருக்கு அநீதியாகவும் இருப்பதில்லை. அவை சாட்சியாகவே நின்று விளங்குகிறது. இவைகளை தனக்கு உதவியாகவும், ஆபத்தாகவும் மாற்றக் கூடிய தன்மை மனிதனுக்கு உண்டு. பஞ்சு பூதங்கள் நமக்கு மட்டும் சகாயமாகவோ, எதிரியாகவோ இல்லை. பூமியில் உள்ள அனைத்து வகையான (84 லட்சம் வகை) உயிரினங்களுக்கும் பொதுவாகத்தான் இருக்கிறது. ஆனால் அவைகள் எப்படி வாழ வேண்டுமோ அப்படியே தான் வாழுகிறது. அதிக ஆபத்தில் போய் சிக்கிக் கொள்வதில்லை. ஆபத்துகளை மனிதன் தான் உருவாக்குகிறான். பஞ்சு பூதங்களையும் அதற்குள் இருந்தே ஒருவன் ஏவுகிறான், இயக்குகிறான். அவன் தான் அறிவு வடிவினன். அந்த அறிவு வடிவாக நின்று விளங்குகிற இறைவனை முதலில் நம்முள் அறிய வேண்டும். ஏனெனில் இறைவன் பஞ்சு பூதங்களிலும் பிரம்மாண்டமாக இருக்கிறான். மனிதனின் உடலுக்குள் அணுவுக்கு அணுவாக இருக்கிறான். அப்படி அணுவாக நின்று விளங்கும் அப் பொருளை



Copyright © AMNA Trust, Chennai

அறியக்கூடிய சக்தியை இறைவன் மனிதனுக்கு மட்டும் வைத்திருக்கிறான். வேறு எந்த ஜீவராசிக்கும் தன்னுள் இப்படித்தான் இருக்கிறது என்று அறிந்து சொல்லக்கூடிய வல்லபம் கிடையாது. பஞ்சு பூதங்களும் மனிதனுக்குள் தத்துவங்களாக இருக்கிறது. இத் தத்துவ நிலைகளை நாம் அறியும் போது தான் இறைவனே அனைத்துக்கும் உயிர்ப்புடைய ஒரு தத்துவமாக, என்றும் மாறாதவனாக விளங்கி இருக்கிறான் என்பது தெரியும். இதை நாம் எப்படி அறியலாம் என்றால், இந்த பஞ்சு பூதத்தின் மூலமாகத்தான் அறியமுடியும்.

ஒரே ஒரு பொருள் வெளிச்சமாகவும், சத்தமாகவும், சுவையாகவும், வாசனையாகவும், தொட்டால் தெரியக்கூடிய உணர்வாகவும், இந்த ஐந்து நிலைகளையும் கடந்த மேம்பட்ட ஓர் பொருளாக மனிதனுக்குள் ஒன்று உள்ளது. அதே பொருள் எல்லா உயிரினங்களிடத்திலும் இருக்கிறது. அதற்கு பெயர் தான் அறிவு என்பதாகும். அறிவாகிய நான் எனும் பொருளானது உணர்வின் மூலமாக செயல்படுகிறது. ஏனெனில் நாம் தூங்கி விழித்தவுடன் நான் வந்துவிடும், ஆனால் உணர்வு வரவில்லை என்றால் நான் எங்கே இருக்கிறேன் என்று தான் கேட்போம். இங்கு தான் இருக்கிறேன் என்று அறிவிப்பது உணர்வு ஆகும். உணர்வு தான் ஜீவனாக இருக்கிறது. அந்த ஜீவன் என்ற ரகசியப் பொருள் நம்மிடத்தில் இப்படித் தான் நின்று செயல்படுகிறது என்பதை அறிகின்றவன், அறிவதற்கு தலைப்படுகிற அனைவருக்கும் பிறவா நெறி கிடைக்கும் என்று வேதம் கூறுகிறது. ஏனெனில் சர்வ மூலமந்திரார்த்த என்று சொல்லும் போது மூலமந்திரம் என்பது ஒரு பொருள். அப் பொருள் எப்படி இருக்கிறது என்பதை அறிவிக்க கூடியதாக இருப்பது தான் இந்த காயம், உணர்வு, ஆவி, நினைவு, குணம், என பல நிலைகள் நமக்குள் இருக்கிறது. இப்படி இருக்கின்ற ஒவ்வொன்றையும் நாம் வேதத்தின் வாயிலாக பார்க்கும் பொழுது இது தான் ஜீவனாக விளங்குகிறது என்பது தெரியவரும். இந்த ஜீவனே அவாவுடன் தாவி மனமாக மாறி வெளியே பாய்ந்து வரும் போது பாயும் சுவாசமாக மாறுகிறது. இம் மனித உடல் இப்படித் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதையே வேதத்தில் ***“நானே, வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன்”*** என்று அருளப்பட்டுள்ளது.

ஒரு மனிதன் தன் ஜீவனை அறிய வேண்டுமென்றால் முதலில் இறைவன் அருளால் அவனுக்கு ஒரு மெய்க்குருபிரான் கிடைக்க வேண்டும். பிறகு அவர்களுடன் தொடர்ந்து இருந்து பழகி அவர்களின் இரக்கத்தால் மெய்க்கல்வி கற்று, மெய்ச்செயலை பழகி பஞ்சு பூதங்களும் கடந்து, தாண்டி, புலன்கள் ஒடுங்கி, பொறிகள் ஒன்று திரண்டு அதன் மூலமாக மூச்சு லயமாகிய மனோலயம் ஆகக்கூடிய பிரம்ம வித்தை ரகசியத்தை தன்னுள் தானே அறிந்து ஜீவனை கண்டு விளங்கிக் கொள்கிறானோ அவனே நீதியான மனிதன். இதை பெறுவதற்கான உளவுகள்;

**01. கடின மனமும் வைராக்கியமும் வேண்டும்.**
**02. இத்தேகம் பொய் என்பது தெரிய வேண்டும்.**
**03. இந்த அழிஉலக வாழ்க்கை மட்டுமே நமது வாழ்க்கை அல்ல என்பது தெரிய வேண்டும்.**
**04. இது கடந்து அப்பால் உள்ள மெய்பொருளை அடைய, பொய் உணர்ச்சி அவா அடங்க வேண்டும். மெய் உணர்வில் அவாவை திருப்பி விட வேண்டும்.**
**05. உடலுக்கான சுகத்தையே அனுபவிக்கும் ஆசையை நீக்கிவிட்டு, இம் மெய்யை பெறுவதற்கான ஏக்கமும், நினைவும் தொடர்ந்து இருக்க வேண்டும்.**

இதையே நமது தெய்வமவர்கள் ஆனந்தக் களிப்பு என்ற பாடலில்.

***"வடியும் சீ யோனிக்கு ளாசை - மாறா***
***வம்பர்க்கு மரணமாய் வருகும் சஞ்ஜீவி”***

என்று அருளியுள்ளார்கள்".

வேதத்தை படிப்பதின் பயன் இறைவனை காண்பதே, எனில் இறைவன் எங்கோ அந்தரத்தில் தனியாக இருக்கிறான் என்பதல்ல. இந்த பஞ்சுபூத-பூதிதயத்துக்குள் உந்து சக்தியாக நின்று விளங்குபவனே இறைவன்.நாம் சந்தோஷமாக வாழ வேண்டும் என்று தான் இத்தனை பூத பூதியங்களையும் படைத்தானே தவிர துக்கப்பட்டு, கவலைப்பட்டு, கஷ்டப்பட்டு, நஷ்டவாளியாக போவதற்கு இறைவன் படைக்கவில்லை. அப்படிப்பட்ட அந்த இயற்கை உண்மை இறைவனை அறிவதற்கான ஒரு அவையாக நின்று விளங்குவதே இந்த ஆதி மார்க்க நீதி அவை



Copyright © AMNA Trust, Chennai

## மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா!

ஐயா! தூலப் பிறப்பெடுத்து நூறாண்டுகள் ஆகி விட்டது, தன்னையறிந்து தன்னையாண்டு கொண்ட சாலை ஆண்டவர்களின் னாதத்தில் பிறந்து தன்னையாளும் அறிவைப் பெற்று, தூலம் அழிந்தாலும் தன் அறிவின் மூலம் இப்பொழுதும், எப்பொழுதும் வாழும் ஐயாவின் பொற் பாதம் போற்றி வணங்குகிறோம்,

ஐயாவைப் பற்றி நமது குரு பிரான் சொல்லக் கேட்டுள்ளோம். ஐயா தன் ஆசான் சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் மெய்யை மெய்யாகப் பழகி, மெய்வழியில் நல்வழி கண்டு தனிவழியைத் தனதாக்கிக் கொண்டு, எதார்த்த குணம் கொண்டு, மெய்யான தேடல் உடைய எதார்த்த மெய்யான சீடரை- மெய்யான வார்த்தையால் தன் வசப்படுத்தி தன்னைப் போல் ஒர் ஆண் மகவு உருவாக்கி, மெய்யான வார்த்தையே பொய்யானவற்றை மெய்யாக்கும் என்பதை நிரூபனையில் நிரூபித்து, எந்நேரமும் சாலை ஆண்டவர்களின் ஒலி நாடாவை கேட்டு, குறிப்பில் குறிப்பெடுத்து - குறியான சீடருக்கு குறிப்பின் குறிப்புணர்த்தி, கண் கண்ட தெய்வமாய் நமது குருபிரான் உள்ளத்தில் வாழ்ந்து வரும் ஐயா! கண்டிப்புடன் இருந்தாலும் கருணையின் குணத்தால் அருட்பெருஞ் ஜோதியாய் இருந்து மெய்ஞ்ஞானத்தை உலகறிய செய்ய ஒரு உண்மையான உத்தமரை நமக்காக தந்துள்ளார், யோகமும் ஞானமும் பிறவா நிலை அடைய முக்கியம் என்பதை உணர்ந்த ஐயா!



*மெய்வழி*
*திரு.குழந்தைசாமி கவுண்டர்*

முருகப் பெருமான் அருளிய யோக ஞானம்-500, என்ற நூலுக்கு தன் அழகிய தமிழால் முன்னுரையால் மேலும் அழகு படுத்தியுள்ளார், இந்த முன்னுரையில் முருகப் பெருமானும் சாலை ஆண்டவர்களும் வேறு வேறு அல்ல என்பதை தக்க சான்றுகளுடன் விளக்கி உள்ளார்கள், மேலும் அகத்திய மா முனிவர் அருளிய சௌமிய சாகரம் என்ற நூலுக்கு உயிர்த் தமிழால் அணிந்துரையை அணிகலனாக ஆக்கி உள்ளார்கள், குருவின் னாதத் துணையோடு மட்டுமே யோகஞானத்தை பெறமுடியும் என்பதையும், குருவின் தூலம் மாறலாம் ஆனால் அவர்களின் னாதமும், வாய்மையும் என்றும் மாறாது இருக்கும், என்பதைத் தெளிவுடனே இந்த உலகத்திற்கு அருளியுள்ளார்கள்,

உண்மையை உணர்ந்தவர்களுக்கு தனிகை வழியில் வந்ந சாலை ஆண்டவர்களும், அத் திருமேனியின் வழியைப் பின்பற்றி பரிபூரணமாய் இருக்கும் குழந்தைசாமி ஐயாவும், ஐயாவின் எதார்த்த குணத்தால், குணங்குடி ஏறி குணமற்ற நிலையில் நின்று தன் இதயாசனத்தில் சிம்மாசனம் போட்டு தன்குருவை அமர வைத்திருக்கும் நமது குருபிரான் அவர்களும் ஒரே மார்க்கமாகிய மெய் ஞானத்தைப் போதிக்க வந்தவர்கள்தான் என்பது தெரியவரும்,

ஆசானுக்கு சீடராய் இருந்தவரே,

சீடருக்கு ஆசானாய் இருப்பவரே,

ஆண்டவரின் தவப் புதல்வராய் பிறந்நவரே,

தவப்புதல்வருக்கு தந்தையாய் ஆனவரே, எங்களின்

அப்பாவுக்குள் அப்பாவாய் உள்ளவரே,



Copyright © AMNA Trust, Chennai

னாதத்துக்கு வித்தாய் முளைத்தவரே,

வித்துக்குள் னாதமாய் விளைந்நவரே,

பரமாத்மாவுடன் கலந்த நினைவாய் இருந்தவரே,

பரமாத்மாவினுள் நினைவாய் இருப்பவரே,

இறுக்கி வாய் மூடி முத்தை ஈன்றவரே, ஆண்டவர்களின் கண்ணாடியாக இருந்தவரே

எங்கள் கண்ணாடிக்கு கண்ணாடியாய் இருப்பவரே,

எதார்த்தத்தின் பிரதியாய் எதார்த்தமாய் இருந்தவரே,

எதார்த்தத்திற்குள் எதார்த்தமாய் இருப்பவரே,

வான்குல மைந்நராய் வந்துலாவும் வாய்மையாய் இருப்பவரே,

அழியா னிதியை அளித்த மார்க்க னன் னாதரிடம் இரண்டறக் கலந்து அழியாப் பதியாய் ஆனவரே,

அழியா னிதியை அளிப்பவரிடம்

அழியாப் பதியாய் இருப்பவரே,

அனுபவத்துடன் அனுபவம் சேர்ந்து,

சேர்ந்த அனுபவத்துடன் அனுபவமாய் கலந்து அனுபவமே குருவாய் வந்த குருவிற்கு குருவே,

இரண்டறக் கலந்த ஆண்டவர்களிடம் இரண்டறக் கலந்த சீடராய் இருந்து,

இரண்டறக் கலந்த சீடரிடம் இரண்டறக் கலந்த நினைவில் ஒத்தையாய் நின்ற பரம்பொருளாய்

ஆன மெய்வழி குழந்தை சாமி ஐயாவின் பொற்பாதம் போற்றி வணங்குகிறோம்.

என்றென்றும் குருவின் பாதையில் நாங்களும் தொடர வேண்டுகிறோம்.

நன்றி.



Copyright © AMNA Trust, Chennai

# அக்டோபர் மாத நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



திரு.சாலை ரவி அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, செப்டம்பர் மாத மின்னணு சஞ்சிகையின் தொகுப்புகளை ஆதி மார்க்க நீதி அவை மிகுந்த மகிழ்ச்சியுடன் உங்களுக்கு வழங்குகிறது. மூன்றாவது முறையாக மலரும் இச் சஞ்சிகை எங்கள் பெருமையைப் பறைசாற்றுவதற்கு அல்ல. இதில் உள்ள செய்திகளை உள்வாங்கி தனக்கும் இது வேண்டும் எனத் தேடுகின்ற தேட்டமுடைய மக்களாக, இப்பேர்ப்பெற்ற பெரும் பொருளை பெற்றவர்கள் நாம் எனும் எண்ணம் உடைய மக்களாக இதன் நிலைகளை உணர்ந்து வாழ்ந்து, இதனை மற்றவர்களுக்கும் சொல்லக்கூடிய நிலைக்கு அருகதை உடையவர்களாக ஆகி இருக்கின்றோம் என்பதே, இம் மின்னணுச் சஞ்சிகையின் வெற்றியும் பெருமையும் ஆகும். இதனை ஊன்றி நோக்கி உணரும் பொழுது தான் இது உலக பத்திரிகைகளைப் போன்ற ஒன்றல்ல என்பதை உணரமுடியும். அப்படி உணர்ந்து எங்களை நோக்கி நீங்கள் உங்கள் அறியாமை அகலுவதற்கான கேள்விகளுடன் வருவதற்கு வழி மேல் விழி வைத்து காத்திருக்கிறோம். இஸ்லாத்தில் உள்ள அருமையான வாசகம் "அஸ்ஸலாமுஅலைக்கும்" "வஅலைக்கும்ஸலாம்" அதாவது "உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக" என்பதாகும். வேதங்களும், அதன் தலையான மூல மந்திரங்களும், இவை யாவற்றையும் உள்ளடக்கிய மதங்களும், அதன் உட்பிரிவுகளாக ஜாதிகளும், குலம், கோத்திரங்களும், பரந்து விரிந்து இருந்தாலும் இவற்றின் அடிநாதமாகத் திகழ்வது சமத்துவமும் சமாதானமும் சமரசமும்தான். இவை யாவும் உடல் சார்ந்தது அல்ல, மாறாக உயிர் சார்ந்த ரகசியமாக உயிர்ப்புடைய அறிவாக உள்ளது. மெய்யான அறிவைப் பெற்றவனே நிஜமான சமத்துவத்தைப் பெற்றவன். சமத்துவமும் சமாதானமும் நிச்சயமாக உலகிற்கு வேண்டிய ஒன்று. பசி பஞ்சம் பட்டினி இவற்றிற்கு சமத்துவமற்ற நிலையே காரணம். செல்வந்தன் ஏழை என்னும் ஏற்றத்தாழ்வு கொண்ட எண்ணங்களே சமத்துவமற்ற நிலைக்குக் காரணமாகவும், இதனால் பல நாடுகளும், இனங்களும், குலங்களும், கோத்திரங்களும், ஜாதி, மதங்களும், உண்டாகி உள்ளன. இதனை எடுத்துச் சொல்லும் என்னுடைய மன நிலை என்னவென்றால், இப்படியான வேதங்களையும், அவதூறான விஷயங்களையும், மக்களிடையே பிளவு உண்டாக்குகின்ற மதம், குலம், ஜாதி, கோத்திரம், இவற்றை உள்ளடக்கிய மூலமந்திரம், வேதம், இவையாவும் தேவையில்லை என்று தான் சொல்வேன். மனிதனை பிரித்து ஆளுகின்ற சக்தியாக விளங்கும் மதங்கள் மதங்களாக இருக்காது. மாறாக யானைக்கு பிடித்திருப்பது போன்ற மதமாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை. மதங்கள் வந்தது ஒரு உன்னத காரியமான சமத்துவம், சமாதானம்



Copyright © AMNA Trust, Chennai

இவற்றை விளங்கிட விளக்கி அதில் நம்மைத் துலக்கி ஆக்குவதற்காகத் தானே அன்றி மனித குலத்தை நாசம் செய்வதற்கு அல்ல. அப்படி இருந்தால் அது மதமல்ல, அதனைப் பெரிதாக பேசுபவர்களும் மனிதர்களாக இருப்பதற்கு அருகதையற்றவர்களே. மனிதனின் பசி மற்றும் சுகத்தின் முன்பாக சமாதானம் சமரசம் யாவும் பஞ்ஞாகப் பறக்கும் தூசிதான். துக்க நிவர்த்தி சுக ப்ராப்தி என்பது சகல உயிர்களுக்கும் பொருத்தம் என்றாலும் இதை நிறைவேற்றும் தகுதி படைத்தவன் மனிதன் மாத்திரமே என்பதற்கு சாட்சி, இவன் வேற்று கிரகங்களிலும் அதை நாடுவதுதான். ஒட்டுமொத்த உலகமும் தேடி அடைய வேண்டிய ஒன்று சமத்துவம். இது வாயில் பேசுவதல்ல இதைக் காண வேண்டுமாயின் அவரவரின் ஆறாவது அறிவின் தெளிவை நோக்கிய ஒரு பயணமாக இருக்க வேண்டும் என்பதே ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கம். பல நிலைகளில் ஒரு மாதமாகப் பேசப் பெற்ற ஒன்றை நன்மக்கள் தொகுத்து ஆதி மார்க்க னீதி மொழியாக வழங்கியுள்ளார்கள். அப்படியான அறிவுக்கான சமத்துவம் சமாதானம் சமரசத்தை அத்தனை பேரும் அறிந்து அனுபவித்து அதுவாகவே வாழ வேண்டும் என்பதுவே இந்த ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கம். மேலும் மேலும் மேலான நிலைகளை மக்களுக்குப் பகிர்ந்தளிக்க இந்த அவையானது காத்துக் கொண்டிருக்கிறது. இதனைப் பார்த்துப் படித்து அனுபவித்து வரும் மக்களுக்கு நல் ஆசீர்பாதங்களைக் கூறி மேலும் உங்கள் அறிவுத் தெளிவிற்கான பல கேள்விகளையும் உங்களிடமிருந்து எதிர் பார்த்து காத்துக் கொண்டிருக்கிறேன்.

நமஸ்காரங்களுடன் சாலை ரவி.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2021 அக்டோபர் மாத சபை நிகழ்வுகளின் சாரம்சம்

**02-10-2021-சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. வடிவேலன்**

பிறப்பும் இறப்பும் கடந்ந ஓர் நிலையை அறிந்ந மக்களாக அறிவதற்கு ஆர்வமுடைய மக்களாக உள்ள ஆதி மார்க்க னீதி அவையின் அங்ஙத்தினர் அனைவருக்கும் அந்த நிலைப்பிடத்தையே அடி நாதமாக வைத்து போதிக்கப்படுகிறது.

**கோடாயிதக் கூர். வாக்கியம் எண் 72:-விஸ்வரூப தரிசனை**:
உபதேசம் பெறுவது, விஸ்வரூப தரிசனை என்பது புறக்கண் கொண்டு பார்ப்பது அல்ல. அறிவுக்கண் கொண்டு பார்ப்பது. ஒவ்வொரு மனிதனும் தன்னிடத்தில் ஜீவன் என்பது ஜீவாத்மா- பரமாத்மாவாக எப்படி விளங்ஙி இருக்கிறது என்பதை, "ஞானக்கண்-அறிவுக்கண்" திறக்கப்பட்டு அதன் மூலமாக கண்டு உள்வாங்ஙி, அனுபவித்து, உணர்ந்து, தினம் தினம் அதனோடு வாழ்ந்து பழகி, இப்படித்தான் செயலாக விளங்ஙி இருக்கிறது என்பதை அறிந்து வாழக்கூடிய ஓர் நிலையை ஒருவன் பெற்றிருக்கிறான் என்றால், அவனே பிறவாமை பெற்றான், இறப்பை ஒழித்தான், இறைவனோடு இரண்டறக் கலந்தவன் ஆவான். இதுவே உபதேசம், விஸ்வரூபம், ஜீவதேக தரிசனை, ஈசனுடைய தேகம் பெற்றான் என்பதாகும்.

**குருமணி மாலை:பாடல் எண்: 13**

***அண்டங்ங ளவனி யானவெப் பொருளு***
***மரியனின் சூலினி லமைத்துப்***
***பண்டைனாள் வழியாய் விடுத்தெங்ஙும் விரித்த***
***பரமசற் குருவெனுங் ஙடலே***
***விண்டவெவ் விடத்து மிருந்நவுன் சூட்சம்***
***விவரமிங் ஙெவரறி குவரே***
***எண்டிசை பரவி லாஞ்ஞனை யிலங்ஙும்***
***யாமுகம் மதுமதிக் கடலே***

அண்டத்தில் இருப்பது பிண்டத்திலும் இருக்கிறது என்றும் அண்டத்துக்கு ஒத்ததே பிண்டம் என்றும் வேதங்ஙளும், அதை அருளிய பெரியோர்களும் கூறியிருக்கிறார்கள். இதை நமது ஆண்டவர்களும் "அறிவு அறி பாடம்" என்ற பாடலில்,

***னால் வகை யோனி எழு வகைத்தோற்றம்***
***அனைத்தும் உன்னுள் அறிந்நு வாழ்வதற்காய்***
***னீ உடல் எடுத்த னன்னேர் வழியென***

என்று அருளியுள்ளார்கள்.


**படைப்பின் ரகசியம்:** அருகம் புல்லை ஒரு மாடு பார்த்ததும் உணவாகவும், அதையே நாம் மாலையாக்கி பிள்ளையார் சிலைக்கும் போடுகிறோம். ஆக உணவாகவும், மாலையாகி காய்ந்து போவதுமாக உள்ளதை இறைவன் என்ன நோக்கத்திற்காக படைத்தான் என சிந்திக்க வேண்டும். இதுவே அறிவுக்கும், அறியாமைக்கும் உள்ள வித்தியாசம் ஆகும். கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும் உணவளிப்பது போல ஒவ்வொரு படைப்புக்குள்ளும் இறைவன் சூட்சாதி சூட்சமாக வீற்றிருக்கிறான். அதை தெரிந்து கொள்ளும் மெய் உணர்வை நாம்



Copyright © AMNA Trust, Chennai

அவசியம் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். இதுவே எல்லா அருளாளர்களுடைய நோக்கம் ஆகும்.

கோழியானது முட்டையை அடைகாத்து அது குஞ்ஞாகப் பொறிக்கிறது. நமது தமிழ் மரபில் "குரு இட்ட முட்டை" என்ற வார்த்தையானது உள்ளது. இதன் அசலான பொருள் என்னவெனில், முட்டையில் இருந்து பொறிக்கும் கோழிக் குஞ்சு போல ஒரு மெய்குருபிரானின் தீர்த்தமாகிய ஓர் திருவார்த்தையில் இருந்து வரும் பரிசுத்த அனலின் மூலமாக ஒரு நரன் (சீடன்) மூன்றாவது கண் திறக்கப்பட்டு மனிதனாக மறு பிறப்பு அடைகிறான். இது தான் சூட்சாதி சூட்சம், சொல்லறிய சொல்லாகும். இதையே ***"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் தொடங்கினோர்க்கு ஓர் வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே"*** என்று தாயுமான சுவாமிகள் அருளியுள்ளார்கள். ஆகவே இறைவன் படைத்துள்ள அனைத்தும் மனிதனை குறி வைத்தே உண்டாக்கப்பட்டுள்ளது. இதையே ***"படைத்தான் படைப்பனைத்தும் மனுவுக்காக"*** என்று வேதம் கூறுகிறது.



*ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்*

**ஸ்ரீமாணிக்கவாசகர் அருளிய-குயில் பத்து: பாடல் எண்-02. *"ஏர் தரும் ஏழுல கேத்த"*...என தொடங்கும் பாடல்.**

ஏர் எனும் ஒரு கருவி, கலப்பை ஆகும். இதை கொண்டு ஒரு உழவன் நிலத்தை பண்படுத்தி, உழுது, விதைத்து பயிர் விளையச் செய்வது போல ஒரு மெய்குருபிரான் **"ஏர் என்ற சென்னெறிச்சீர் உழவு கோல்"** கொண்டு தரிசாக இருந்த தன் சீடனின் உள்ளத்தை பண்படுத்தி, உழுது, ஊணி விதைத்து, ஆறாவது அறிவை விளைவித்து, அந்த நிலத்தை என்றும் அ ழியாத **"ஏழு வகை அமானிதம்"** விளையும் பொன்னிலமாக, நீங்கா நன்னிலமாக, நம் சொந்த தேகமாக ஆக்கி வைக்கிறார்கள் என்பது சத்தியம். இச் செயலை திருவள்ளுவர் பிரான் அவர்கள்,

***சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்***
***உழன்றும் உழவே தலை*** (1031)
என்று அருளியுள்ளார்கள்.

**திருஞான சம்மந்நர் அருளிய தேவாரம்: "செய்யருகே புனல் பாய."..என தொடங்கும் பாடல்.**

மேலுலகம் என்பது புறத்தில் இருப்பது அல்ல. ஒவ்வொரு மனிதனுக்கு உள்ளும் இறைவன் இருக்கும் தலம் ஆகும். அதுவே அறிவிருக்கும் தலம். அந்த எல்லையை நாம் அறிந்து அடைய வேண்டுமானால் அன்னாடு சென்று வரும் ஆசானாகிய குருவின் துணை வேண்டும். அதையே இப்பாடலில் செய்யருகே, கையருகே, பையருகே, மெய்யருகே, என்று ஆசானின் அறிவை முன் வைத்து நம் மனதை பின்னே வைக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். இதையே

***அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்***
***பேணித் தமராக் கொளல்*** (443)
என்று திருக்குறளில் கூறப்பட்டுள்ளது.

**ஆதி மான்மியம். ஜீவ சிம்மாசனப் பருவம். பக்கம்:-277-284.**
புராதனத்தை எல்லாம் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் புராதனத்தை



Copyright © AMNA Trust, Chennai

சுமந்து வருபவர்களுக்கு புராதனர் என்று பெயர். ஏனெனில் அவர்கள் சுமந்து கொண்டு வரும் மெய்ப்பொருளானது இந்த உலகம் உண்டான காலத்திலிருந்து வந்நதல்ல, உலகம் உண்டாவதற்கு முன்னும் இருந்நது, இப்பொழுதும் இருப்பது, இந்ந உலகமே இல்லாமல் போனாலும் இருப்பது அது. அப்படிப்பட்ட அழியாத ஒன்றையே குருபிரான்கள் சுமந்து கொண்டு வருகிறார்கள். அவ்வாறு வந்நவர் தான் **"தாத்தெனும் கடல் முகம்மது வென் சாலிகு தனிகை வள்ளல்".** அவர் அறிவையே தன் ஆயுதமாக, ரூபமாக, சகல கலா னிலைகளையும் பெற்று, அனுபவமாக சுமந்து கொண்டு வந்நவர்.மதிப்பளு சுமை, மெய்ப்பொருள் சுமையை என் தலையில் ஏற்றி வைக்க வந்நவர் தனது ஞானபிதா என்று, மெய்வழி சாலை ஆண்டவர்கள் தன் குரு பிரான் தெய்வ விம்பமாகிய தனிகை மணியை போற்றுகிறார்கள் ஆண்டவர்களும் அதே மெய்ச்செயலை இந்ந உலகிற்கு அறிவித்து அனைவருக்கும் இம் மெய்ஞான னிலைகளை உள்ளத்திலே கொண்டு போய் சேர்க்கக்கூடிய ஒரு பாரப் பெரிய காரியத்தை தன் தலையில் சுமந்து வந்து இதற்கான மக்களை தேடி திருப்புத்தூர் வந்நார்கள். அங்ஙிருந்து தனது ஆரம்பப் பிராசாரத்தை துவக்கினார்கள்.

***மந்நிரச் சிந்நை வாக்கான்
மனுக்களை வாரிச் சேர்க்கச்
செந்நமிழ் வலை கைகொண்டு
திருப்புத்தூர் வந்ந ரம்ம...***

அங்ஙே தன் முன்னிலையில் வந்து கூடியவர்களின் சாதி மத ஆச்சார சம்பிரதாயங்ஙளுக்கு ஏற்றபடி, னற்கரும வழிபாடு முறைகளை எளிதில் விளங்ஙும் வகையில் வினா விடை மூலமாக அவர்களின் அறிவு சம்மதிக்க எடுத்துப் பேசி, மெய்ஞ்ஞானத்தை பெற்று கைக் கொள்வதானது மிக எளிமையானது தான் என்று கூறினார்கள். ஆனால் இதற்கு எதார்த்த வைராக்கியம் ஒன்று வேண்டும் என்றும், இதற்குப் படிப்பே இல்லாதவர்களும் தகுதி ஆனவர்கள் தான் என்று பேசி அருளினார்கள்.

கலியுகத்தை மாற்றி தர்மயுகத்தை பிறப்பிக்க தன் னீதியான னினைவை துணையாக கொண்டு, ஓய்வு ஒழிவின்றி சலியாது னின்று, கருணை விழியராய் இருளற்ற திருவாக்கின் அருள் வர்ஷிப்பை தொடர்ந்து வாரி வழஙிக் கொண்டே இருக்கிறார்கள். என்று அருளி குருபிரான் அவர்கள் சபையை னிறைவு செய்தார்கள்.

## 03-10-2021 சிவகாசி சபை:
## தொகுப்பு: ஶ்ரீ. தியாகராஜன்

**ஆதி மெய் உதய பூரண வேதாந்நம்: முரீதுச் சுருக்கம்**:

***கூரான குருவருளைக் கூர்ந்து போற்றிக்
குணமாமங் ஙரையாற்றிற் காலங் ஙாற்றி
மாறாக வோடுகின்ற மனத்தை மைந்நா
மரணபயச் சவுக்குகொண்டு மாறி மாறி
னேராக வைராக்ய மணிக் கம்பத்தில்
னீயிறுக்கிக் கட்டிப்பார் னிலைத்தே னிற்கும்
பேராதேபெரும்பெருவான் கடைனீ கொண்டால்
பேச்சற்று மூச்சற்றுப் போவென் றாணே***

என்ற பாடலின் புரிதலாக, குருவின் அருளே கூர் எனும் அறிவாக அறியாமையை அகற்றக் கூடியதாக உள்ளது. அதுவே னாவாஸ்திரம், கோடாயிதம், ஓரிதழ் தாமரை, என்ற திரு னாமங்களால் அழைக்கப் பெறுகிறது, கோடாயிதக் கூர் கொண்டு நம் அறியாமையெல்லாம் நீக்கப்படுகிறது. கூரான குருவின் அருளைக்



Copyright © AMNA Trust, Chennai

கூர்ந்து கவனிக்க வேண்டும், குணம் என்பது சீராக, அமானிதமாக, அறிவாக இருக்கிறது. காலம் என்பது வயது, வாழ்நாளாக உள்ளது. மனம் என்பது ஓர் ஆவிப் பொருள். அது தாவுகின்ற செயலுடையதாகவும் சார்ந்ததின் வண்ணமாகவும் உள்ளது. மனம் லயம் ஆகும் போது மூச்சு லயம் ஆகிறது, என்பது பெரியோர்கள் திருவாக்கு. மாறாக ஓடும் மனதை நேராக ஆக்குவதற்கு வைராக்கியம் தேவை. பேச்சு, மூச்சற்ற இடத்தில் மனதை நிலை பெற செய்து வணங்கும் வணக்கத்தை கூரான குருவின் அருளால் அறிந்து கொள்ள வேண்டும் எனப் பகிரப் பெற்றது. தொடர்ந்து

**குரு பிரம்மா குரு விஷ்ணு**
**குரு தேவோ மஹேஸ்வர:**
**குரு ஸக் ஷாத் பரப்பிரம்மா**
**தஸ்மை ஸ்ரீகுருவே நமஹ:**

என்பதின் விளக்கமாக குருவே பிரம்மா, விஷ்ணு, சிவன், என்று மூன்றுமாக இருக்கிறார். குரு என்பவர் 'கு'. என்ற இருளை போக்கி 'ரு'-என்ற வெளிச்சத்தை தரக் கூடியவராக இருக்கிறார்.குருவே பெரியோர், ஆன்றோர், செம்மல், குருபிரான், ஞானி, அனுக்கிரகன், என்ற பலவித நாமங்களால் அழைக்கப்படுகிறார். இறைவனோடு கலந்து சாயுச்சிய நிலையை அடைந்தவர்களே ஆண் (ஆண்குரு) என்று அழைக்கப்படுகிறார்கள். குருவே தெய்வமாகவும் விளங்குகிறார். என பகிரப் பெற்றது.


*திரு.சாலை ரவி அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க நீதி அவை*

**பயணம்** : வாழ்க்கைப் பயணமானது உடல் கொண்டு தொடங்குகிறது. பயணம் என்பது ஒரு இலக்கை நோக்கியே இருக்கிறது, இலக்கை அடைந்தால் பயணமும் நிறைவடைகிறது, நேர்மறைக்கு எதிரான எதிர்மறை போல் வாழ்வில் துன்பம் வரும் போதுதான் இன்பத்தின் அருமை தெரியும், இலக்கை சென்று அடையும் போதுதான் பயணம் நிறைவடைகிறது. பயணத்தின் நோக்கம் அறிந்து பயணித்தால்தான் பலன். போகிப் பண்டிகை என்பது நம் மனதில் உள்ள அழுக்கினை ஆசானின் நாத தொனி கொண்டு போக்குவதாகவும் மனமே அறிவாக மாறிப் பொங்கும் போது தைப் பொங்கல் திருவிழாவாகவும் கொண்டாடப் படுகிறது எனவும் ஆசானின் வாய்மைக்குள் ஆகும் போதுதான் வாழ்க்கைப் பயணத்தின் இலக்கை அடைய முடியும், என பயணத்தின் சிறப்பானது சிறப்பாக பகிரப்பெற்றது,

தொடர்ந்து ஓர் புள்ளி எனும் கூரில் இருந்து உண்டானதுதான் இந்த உலகம், அதே புள்ளியில் சென்று அடங்குவதுதான் அடக்கம் எனவும் மெய்ஞ்ஞானப் பயணத்திற்கு துணையாக கூரான குருவருள் வேண்டும் எனவும் மனதினால் ஏற்படும் பயமே மரண பயம் எனவும், இதனை வள்ளல்பிரானும் கரணம் எல்லாம் கலங்க வரும் மரணமும் சம்மதமோ என்றும் சாவருமுன் சாப் பழக்கம் பழகிக் கொண்டால் மரணம் என்பது அண்டாமல் இருக்கும் என்றும் பகிரப்பெற்றது. மேலும் ஆறு ஆதாரங்களின் அம்சமாக விளங்குகின்ற மனதில் தோன்றக் கூடிய எண்ணங்களுக்கு ஏற்ப அறுசுவை கலப்பானது மனிதனிடத்தில் உள்ளது எனவும் உணர்வு என்பது ஏழ்நிலைக் கம்பமாகவும், நடு நிலையாகவும் மனிதனிடத்தில் உள்ளதைப் பற்றி பேசப் பெற்றது.



Copyright © AMNA Trust, Chennai

ஆசான் அவர்களின் பெருங்கருணைகொண்டே மனு என்ற தோற்றம் உண்டாகிறது, அதன் பின்னரே கேட்காத 'காது' கேட்கும் 'காது' ஆகிறது. உணர்ச்சியாக இருக்கும் போது நரனாகவும், உணர்வு என்று வரும் போது மனிதனாகவும் இருக்கிறோம். பெரியோர்களின் வாய்மைக்குள் ஆகும் போதுதான் பேச்சு மூச்சற்ற இடத்திற்குப் போக முடியும். மனிதன் முக்குணங்கள் கொண்டவனாகவும் அதனைக் கொண்டே மனம் எல்லா வேலைகளையும் செய்வதாகவும் உள்ளது.

இறைவனைப் பற்றி பேசக்கூடிய ஒரு மெய்க் குருவின் தொனியே நாதம். அதுவே ஈஸ்வர தேகமாக விளங்குகிறது. அதுவே தீர்த்தமாகவும் அதனை உட்கொள்ளும் செயலே சேவிப்பதாகவும் உள்ளது. ஐம்புலத் தலைவனாகிய மனதின் செயலினால் நம் வாழ்நாள் வீணாகிறது. திருவுடன் மணம் முடிப்பதையே பெரியோர்கள் கால்கட்டு எனவும், அதுவே மனதை கட்டிப்போடும் செயலாகிய கால்கட்டு எனவும், மனம் அலையாமல் பாதுகாக்கின்ற செயலே அறம் எனவும் அருளுகிறார்கள். ஆசானின் னாதம் கஜா 'னா' வாக இருக்கிறது. பயணத்தின் நோக்கம் தெரியாத வரை நாம் சயனத்தில் இருக்கிறோம். படைத்தான் படைப்பனைத்தும் மனுவுக்காக, மனுவைப் படைத்தது-தன்னையறிய, ஓர்அறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள உயிரினங்கள் யாவும் மனிதன் தன் ஆறாவது அறிவைத் தான் அறிந்து கொள்ளவே இறைவனால் படைக்கப்பெற்றுள்ளன. ஆறாவது அறிவாகிய மனம் மனிதனுக்கு மட்டுமே உள்ளது. ஆறாவது அறிவை அறியாத மனிதனுடைய பயணம் அழிவை நோக்கி இருக்கிறது. ஒரு மெய்க் குரு பிரானின் னாத தொனியானதை செவி கேட்கும் போது அந்த பயணம் அறிவை நோக்கிய பயணமாக மாறுகிறது. அசுர தேகம் கொண்டு னரனாய் வந்த மனுவை - குருவானவர் தன் நினைவென்னும் அக்னியால், வாக்குத் தீயினால் தேவராக ஆக்குகிறார். நரகமும், சுவர்க்கமும் உள்ள நினைவென்னும் ஆகாயத்தில் மெய்யை அறிவதற்கு கவனமும் திடமான வைராக்கியமும் வேண்டும். மெய்யை அறிந்தவர்களின் தலையாய கடமையானது, மெய்யை உலக மக்களிடத்தில் கொண்டு போய் சேர்ப்பதேயாகும். கோபுர தரிசனம் பாப விமோசனம் என்பது- "கோ" எனும் இறைவன் இருக்கும் "புரம்" ஆகிய இல்லம், அங்கு தரிசனம் செய்தால் பாபம் விமோசனம் ஆகும். நாம் எங்கிருந்து வந்தோமோ மீண்டும் அவ்விடத்திற்கு ஆசானின் ஆசீர் பாத வார்த்தைகள் மூலமாகத்தான் செல்ல முடியும். என விஷயங்கள் பகிரப்பெற்றது.

குரு வாழ்க: குரு வா ஆழ்க. குருவின் வார்த்தைக்குள் ஆழ்ந்து இரண்டறக் கலப்பதையே குரு வாழ்க எனவும், குருவின் வார்த்தைக்குள் நலம் தரும் சொல் நான் கண்டு கொண்டேன் நாராய 'ணா' என்னும் னாமத்தில் சர்வகாலமும் இரண்டறக் கலந்து ஆழ்வதால் ஆழ்வார்கள் எனவும் குரு பிரான் தங்கள் அமுத 'னா' கொண்டு அருளி அவையை நிறைவு செய்தார்கள்.

## 06-10-2021 குரு பெருமானவர்களின் திரு அவதாரத் திருனாள் "வரவேற்பு மாலை"

**ஆதி** அந்தம் கடந்த அனாதிப் பொருளை அறிவித்த அருட்குருவே வருக! வருக!!

**மார்க்க**மே மெய்வழி என்ற மெய்யுணர்வை மேம்படுத்திய மாதவரே வருக! வருக!!

**னீதி**யெனும் பொருளை னித்தம் அனுபவிக்க வைத்த னித்தியரே வருக! வருக!!

**அவை** என்ற அகத்தில் அசையாதிருக்க வைத்த அன்புருவே வருக! வருக!!

**பிரம்ம**த்தை என் முகத்தில் படைத்த பிரணவோனே வருக! வருக!!

**பிரகாச** வடிவாகிய பேரறிவு வடிவை பதிப்பிக்க பிறைசூடி வந்தவரே வருக! வருக!!



Copyright © AMNA Trust, Chennai

**மெய்வழி** எனும் மேடு கண்ட மே மக்களாக மேதினியில் வாழ வைத்த மேருகிரியே வருக! வருக!!

**சாலை** என்ற மெய்மேனியில் சாகாக்கலை கற்பித்து சன்மார்க்கி ஆக்கி வைத்த சத்திய சுத்தரே
வருக! வருக!!

**ஆண்டவர்கள்** அமுதனா கொண்டு அருளியவற்றை அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்தரே வருக! வருக!!

**குழந்தை** வடிவாய் வந்து எங்ஙளை ஜீவ குழந்தையாய் பெற்றெடுத்த குரமாதே வருக! வருக!!

**சாமி**யாய், சர்வ சாட்சியாய் னின்று சகல உயிரையும் காக்கும் சம்பூர்ணரே வருக! வருக!!

**கவுண்டர்** குலத்தில் உதித்து எங்களை கன்மங்களிலிருந்து கடைத்தேற்ற வந்த கண்மணி னாயகரே வருக! வருக!

**ஐயா** என ஓங்கி உலகளந்த பெருமாளாய் உரு தாங்கி வந்து ஐயத்தை தெளிவித்த ஐங்கரனே
வருக! வருக!!

**சாலை** என்ற தன் பெருவெளியில் தவமிருக்க வைத்த தட்சணாமூர்த்தியே வருக! வருக!!

**ரவி** கோடி வீசும் பஞ்சாட்சரத்தை கை முதலாக்கி கொண்ட ஜகத்ரட்சகரே வருக! வருக!!

**அம்மா**வாய் அன்பெனும் கருவறையில் பெற்றெடுத்து,

**அப்பா**வாய் அரவணைத்து, அறிவுத் தெளிவளிக்க

**ஆசானாய்** உருவெடுத்து, அந்தகனிடத்திலிருந்து காக்க அவதரித்து

**ஆதி மார்க்க னீதி அவை** எனும் பேரியக்கத்தை ஸ்தாபித்த

அண்ணலே **அருட்பெருஞ்சோதியே வருக! வருக!! வருகவே!!!**

**06-10-2021 புதன்கிழமை குருபெருமான் அவர்களின் திருஅவதாரத் திருனாள்:**
**தொகுப்பு: ஸ்ரீபார்த்திபன்**

**கங்ஙுல் பகலற்ற நாள்:-**

"**கலிமாவெ *னும்பெரு முத்தொன்றி லங்ஙியே காணுதின் சானுக்குள்ளே***" எனும் முரீதுச் சுருக்கம் பாடலுடன் நிகழ்ச்சி தொடங்கப் பெற்றது. கலிமா எனும் பெரு முத்து, கோடி சூர்யப் பிரகாசமாகவும் எமனணுகா சாயுச்ச பதத்தை அளிக்கும் திருவடியாகவும், பரம்பொருளாகவும் ஜோதி சொரூபமாகவும் நின்றிலங்ஙுகிறது. பிண்ட உற்பத்தியின் சூட்சுமமே கங்குல் பகலற்ற அமாவாசை நாளாகும்.

**புதுமனை குடியேற்றம்:-** நாளின் இரகசியத்தை அறிந்து, நாளும் கோளும் இல்லாமல் ஆக்கி, கங்ஙுல் பகலற்ற இடத்தில் குடியேறி அமர்வதே புதுமனைக் குடியேற்றம்.

பேரின்ப வாழ்க்கை:- "*பண்டைனான் மறை பேசும்ப ரிசையன்*" என்ற "சேவடிச்சேகரம்" பாடலில் உள்ள தெய்வ வாக்கிற்கு இணங்க யோகிகளாக பேரின்ப பெரு



Copyright © AMNA Trust, Chennai

வாழ்க்கையை வாழ்வதற்கு ஆண்டவர்களின் அருட்பெருஞ் செயலே மூலமாகும்.

**அவதாரம்**:- (அ - அகரம்), அ - வைத் தாரமாக தாங்கி குருபெருமான் வருகிறார்கள் என்பதைக் குறிப்பதாகும்.

பெரியோர்கள் வருகையின் நோக்கம்:-

***"சாவாது பிறவாது***
***தனிமுதலா இருந்நனான்***
***ஆவாஇவ் வுலகுபடும்***
***அழிதுயர்தீர்ப் பதற்காக***
***மேவாது னின்றேஎன்***
***மாயையினான் மெய்யேபோல்***
***ஒவாதுவந்து பிறந்திடுவேன்***
***யுகந்தோறும் யுகந்தோறும் "***



எனும் கிருஷ்ண பரமாத்மாவின் திருவாக்கிற்கு இணங்க பரம்பொருள் தன்னுடைய புகழையும், திருச் செயலையும் அறிவிப்பதற்காகவே பெரியோர்களையும், ஞானிகளையும், தீர்க்க தரிசியர்களையும் இந்நிலவுலகிற்கு அனுப்பி வைக்கிறார்கள். இதனையே ஞான முறையீடு பாடலில் "தீர்க்க தெரிசிகள் பூமி புல்லுள்ள னாளெல்லாம் வருவதுண்டு" என அருளப் பெற்றுள்ளது.

பிறந்தநாள்:- தூலப் பிறப்பு என்பது பிறப்பல்ல. பரிசுத்த ஆவியில் பிறப்பதுவே பிறப்பு. அந்நாளே பிறந்தநாளாகும். அதற்காகவே பெரியோர்களின் வருகையும் பெரும்பாடும் உள்ளது. *"**ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்திலே பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்**".*
(யோவான்**3:5**)

***பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்***
***செம்பொருள் காண்பது அறிவு*** (**குறள்**: 358)

சிறப்பு எனும் செம்பொருள் தேடும் மக்களுக்கு மறுபிறப்பின் இரகசியமும், உபனயனம் என்ற பிரம்மோபதேசமும், உபனிடத நிலையும் பெரியோர்களால் அருளப் பெறுகிறது.

மெய், பொய்:- பொய் என்பது இந்த உடலாகிய சரீரம், சரிந்து கொண்டே இருக்கும். மெய் என்பது ஆன்மாவாகும் அதனை அறிந்து அதனுடன் வாழும் மக்களாக ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்கள் உள்ளார்கள்.

**உலகம்**:-

***கோலமாஞ் ஞீவ கோள***
***கோலத்துள் ளிருந்ந மெய்ம்மைக்***
***காலமும் இடமும் னேரம்***
***கணிதமுங் நூடிச் சேர்ந்து***
***சாலையென் றொருமெய் மேனி***
***ஜகந்நனில் பிறங்ங எல்லாம்***
***ஏலவல் லவரும் வந்து***
***இணைந்நனர் அக்கா லத்தே***



Copyright © AMNA Trust, Chennai

என ஆதி மான்மியத்தில் அருளப் பெற்றுள்ளது. உலகம் என்பது மாறிக்கொண்டே இருப்பதல்ல, நம்முள் என்றும் மாறாமல் அனைத்தையும் உணர வைப்பதுவே அது. அந்த உலகத்தை மனம் எனும் அழுக்கு மூடியுள்ளது, அதனை தன்னுலகை அறிந்த பெரியோர்கள் பரிசுத்த ஆவி கொண்டு அழுக்கை நீக்கி சுத்த அறிவாக மாற்றுகிறார்கள் என்பதற்கான வேத சாட்சி:

**ஏழுவகையான சுத்தம்**:-

1. **வடவையனலாகிய ஊழித்தீப்பற்றி எரிந்து னீறாகிறதும்**,

2. **சுத்தாவிக் கொதிவென்னீர் விழுங்பிக் கொதியுண்டு உரிபடுகிறதும்**,

3. **பூதாதிச்சுவை உப்புச்சலத்திற் றோய்ந்து உலரப்படுகிறதும்**

4. **ஜீவப்பிடி உவர்னீரிலே கழுவப்படுகிறதும்**

5. **ஜீவத் தண்ணீரென்னும் ஆலவாயூற்றில் படிந்து களைப்பாறுகிறதும்**

6. **அருணோதய அருட்பாற் கடலுள் வாய்மடுத்து வலிமை பெறுகிறதும்**

7. **மாறாத கசப்பென்னும் இருளை விட்டு மீண்டோமென்று வையாளி போடுகிறதும்மாக மெய்யாகினவங்னே**

**என ஆதி மான்மியத்தில் அருளப் பெற்றுள்ளது**.




**வானளாவிய அதிகாரம்:-** னினைவென்னும் பிரம்மத்துடன் கலந்து ஒடுங்கச் செய்யும் அதிகாரம் பெற்றவர் குருபெருமான்

***அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்***
***பேணித் தமராக் கொளல்.*** (**குறள்** 443)

ஆற்றல் மிகுந்த பெரியோர்களை பேணி மகிழ்வித்து அவரை தமக்கு உற்றவராக கொள்ளுதல் அரியவற்றுள் அரிதாகும் என திருவள்ளுவர் பெருமான் கூறியுள்ளார்கள்.

**வைத்திய நாதன்**:- தீண்டாமல் தீண்டி மன நோய்க்கு கங்குல் பகலற்ற வெட்ட வெளியில் பரிசுத்த ஆவிகொண்டு வைத்தியம் செய்பவர் - ஜீவ பண்டிதர்.

**ஞானம்:-**

***அறுக்குமட்டு மாய்கைதனை யறுத்தே விட்டு***
***அருமறையி னெறிவழியே ஆசான் பின்னே***
***உருக்கமுட னூசிமுனை வாசல் பாய்ந்து***
***ஓமுடிந்த பட்டணத்தூ டுருகிச் சென்று***
***வெறுக்காமல் மனம்வெறுத்து னின்றா யானால்***
***வேதாந்தத் திசைனாத வெளியும் தோணும்***
***விருப்பமுடன் மனமூணி யுறைந்நா யாகில்***
***வெல்லாமற் போவதில்லை மெய்ஞ்ஞா னத்தை.***



Copyright © AMNA Trust, Chennai

எனும் தெய்வ வாக்கிற்கு இணங்க மெய்ஞ்ஞான பேரின்ப பெருவாழ்வில் குடியேற்றி வைக்கும் திருச் செயலானது எம்பெருமான் சாலை ஆண்டவர்களின் திருவருளால் என்றென்றும் நடைபெற்றுக் கொண்டே உள்ளது என்று கூறி குருபிரானவர்கள் சபையை நிறைவு செய்தார்கள்.

**09-10-2021 சனிக்கிழமை சபை :**
**தொகுப்பு: ஸ்ரீமதி. விஜய சித்ரா**

**நவராத்திரி கொலுவின் சிறப்பு**

நவராத்திரி கொலுவின் நகல் வழிபாடு அசலை நினைவூட்டுவதற்காகவே கொண்டாடப்படுகிறது. கல்வி, செல்வம் வீரம் இந்த மூன்று நிலைகளுக்கும் முக்கலைவாணியாக விளங்கும் தாயை சிறப்பிக்கும் வண்ணமாக ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் ஒவ்வொருவருக்கும் சிறப்பு செய்வர் .லவண மணிமந்திர ஔஷதம் தான் னவனீதங்களாக னிற்பதை அறிய வேண்டும் .நம் தெய்வமும் சந்திர சூரிய பிரபை மயிலாசனம் உடைய ஜீவசிம்மாசனம் அமைத்து அதில் ஏழு படி தாண்டி எட்டாவது நிலையில், தண்டை, சதங்கை போன்ற திருவாபரணங்களை அணிந்து, திருவிழாக் காலங்களில் கொலுவாசனம் வீற்றிருப்பார்கள் .அவர்கள் முன்பாக ஏழு பூரிகள் இருக்கும். மனிதர்களை மகான்கள் ஆக்குகின்ற அருந்தவ மந்திர ஆராதனைகள் இன்னதென்று அறிந்த மக்களால் மட்டுமே அறியக்கூடிய ஒன்றாய் இருப்பது கொலு என்றும் குருபிரான் அவர்கள் எடுத்துரைத்தார்கள்

**கோடாயிதக்கூர் வாக்கியம் (73)பற்றிய விளக்கம் பேசப் பெற்றது.**

அமுத தாரையின் சிறப்பு பற்றி விளக்கப்பெற்றது. ஆகம விதிப்படி அமைக்கப் பெற்றுள்ள கோயில்களில் பீடத்தின் மேல் பானையை கட்டி, அதிலிருந்து தண்ணீர் சிவலிங்கத்தின் மேல் விழுவதுபோல் அமைக்கப்பட்டிருக்கும். சிவலிங்கம் தீ வடிவாக இருப்பதை ஆற்றுப்படுத்தக் கூடிய நீரானது மேலிருந்து விழுவது போல் அமைக்கப் பெற்றிருக்கும். இது குறிப்பது என்னவென்றால் ,குரு பெருமானுடைய திருச்சன்னிதியில் அவர்களிடமிருந்து வெளியாகும் அமுத தாரையாகிய அருள் வர்ஷிப் பானது பொழியப் பெறும்பொழுது ருத்ர ரூபமாக இருப்பது சாந்த சொரூபமாக மாற்றப்பெறும் அரும்பெரும் செயலைக் குறிப்பதாக இருக்கிறது என்று விளக்கம் தரப்பட்டது.

**குரு மணிமாலை"*அங்கமதிடத்தில்*"பாடலுக்கான விளக்கம்**:

***அங்கம திடத்தி லைம்புலக் கதவை***
***யடைக்கும்பே ரறிவெனக் கருளி***
***எங்குரு னாத ரெனக்குப தேச***
***மிருத்திய தனிமுதற் பெருமான்***
***மங்கிடா மார்க்க னாதரங் கிருந்து***
***வழுத்திய குருமணி மால்***
***எங்ஙனும் விளங்க லாஞ்ஞனை யிலங்கும்***
***யாமுகம் மதுமதிக் கடலே***

ஆறு ஆதாரத்திற்கு இருப்பிடமாக இருப்பது போகாப்புனல். அதற்குள் இருக்கும் வெளிச்சப் பொருளாகிய காரணதேகத்திற்குள் ஐம்புலன்களை அடக்கக் கூடியதுதான் பேரறிவு. மார்க்கத்தை அறிந்து வந்த பெரியோர் நமக்குள் உருவாகும் அறியாமையாகிய இருளை அடக்கி லயப்படுத்தி நமது நினைவை மேல்நோக்கமாக மாற்ற அனுக்கிரகம் செய்வார்கள். அவர்களே னம்மை அறிவுக் கடலில் ஏற்றி வைப்பவர்கள் என்ற விளக்கம் தரப்பெற்றது.



Copyright © AMNA Trust, Chennai

**திருவாசகம்(குயில் பத்து) "*நீல உருவின் குயிலே*" என தொடங்கும் பாடல்.**

குயில் =கு+இல் கு=இருள்; இல்=இல்லை. அறிவு இருக்கக்கூடிய தலம். அங்கு அறியாமைக்கு இடமில்லை. குயில் என்பது பத்து வயது கன்னியை மகம்மூதுவைக் குறிப்பதாகும். உள்ளுறைக் கோயிலில் காய காயத்திரியாக விளங்கும் மங்கையை ஒழுக்கத்துடன் ஆசானின் துணை கொண்டே அறிந்து பழகித் தெளிந்தால் உணர்வு உணர்வுகார ரகிதமாகும் என்று விளக்கம் பேசப்பெற்றது.

**தேவாரம் (திருக்காட்டுப்பள்ளி) "*திரைகளெல்லா மலருஞ்சுமந்து*" என தொடங்கும் பாடல்:**

காவிரியானது கசடுகளை ஒதுக்கி சுத்தமான நன்னீரை மக்களுக்கு வழங்குவது போல ஆசான் அவர்களிடமிருந்து வரும் வாய்மையானது பொய் மலக் குற்றங்களை ஒதுக்கி அறிவை மலரச் செய்கிறது. நம் மனதின் குற்றங்களை சீர்படுத்தும் வாய்மையைக் காட்டுவதே திருக்காட்டுப்பள்ளி என்று பேசப் பெற்றது.

**னிர்க்குணம்**

குணம் அற்றால்தான் னிர்க்குணம்.குணம் நானைக் கொண்டே செயல்படுகிறது. சாத்வீகம், ரஜோ, தாமஸ,என்ற முக்குணங்களுக்குக் காரணமாக இருக்கும் மனமும், குணமும் இரட்டைப் பிறவிகள். ஆண்டவர்கள் தௌஹீது மக்காமில் னபுசுகளை குணங்களின் படிகளாகவும் சிபத்துகளை அறிவின் படிகளாகவும் கூறியுள்ளார்கள். குணங்களினால் வினைகள் உண்டாகின்றன. மனிதன் மட்டுமே தன் குணத்தில் இருந்து மாறி எல்லா குணங்களிலும் செயலாற்றுகிறான். தூக்கத்தில் தான் குணம் அற்று இருக்கிறோம். விழிப்பு நிலையில் னிர்க்குணமாக இருக்கும் செயலைப் பழகுவதே பிரம்ம வித்தை. குணங்குடியனாக வாழும் குரு பெருமானின் சொற்குணத்தின் மீது பற்று வைப்பதே னிர்க் குணமாவதற்குரிய மேலானவழி என்ற கருத்துகள் பகிரப்பெற்றது.

**அவதாரத் திருநாள்**

சாலை இரவி அப்பாவின் தூலத் தந்தையார் பெருமாள். தாயார் ஜானகி அம்மாள். ஆறாவது அறிவை அறிந்து மெய்யறிவில் எட்டாத நிலை அடைவார்கள் என்று எட்டாவது மகனாக தங்கள் மகவை ஈன்று எடுத்தார்கள் போலும்! கவுண்டர் ஐயாவின் பாதம் பற்றி ஆறாவது அறிவை அறிந்து(6) அவர்கள் னாதத்தை பத்தி(10)யதால் தெய்வ யோனியில் பிறந்து னாளைக் கைக்கொண்டமையால் அவர்களின் பிறப்பையே 6.10.1962 அவதாரத் திருனாளாக கொண்டாடும் வண்ணம், தீர்க்கதரிசனமாக அமைந்துள்ளது என்று அவதார னாளின் சிறப்பானது பேசப் பெற்றது.

நாளின் ரகசியத்தை உணர்த்தும் சிறுகதை ஒன்று:-சுகமாக வாழும் ஒருவருக்கு அவருடைய மரண தேதி தெரிந்துவிட்டால் அதன்பின் வரும் நாள் எப்படி இருக்கும்? எல்லாமே மரண நாளாகத்தான் இருக்கும். இன்னும் பத்து நாளில் மரணம் என்றால் அவர் எப்படியான ஒரு மரண பயத்தில் இருப்பார். பிறந்த நாள் வந்தால் கூட கொண்டாட மாட்டார். அது சமயம் பெரியோர் ஒருவர் அவரைப் பார்த்து நம்பிக்கை வார்த்தை கூறி திருநீறைத் தினமும் பூசச் சொல்கிறார். திருநீறு தீரும்போது மரணம் சம்பவிக்கும் என்றும் கூறுகிறார். தினமும் பூசா விட்டாலும் மரணத்தை சந்திக்க வேண்டும் என்று கூற அதை பாதுகாப்பாக வைத்து தினமும் தவறாமல் பூசி வருகிறார்.திருநீறு தீரத் தீர பயத்தில் மறுபடியும் ஒரு பெரியோரைச் சந்திக்க அவர் பாதி போனது போகட்டும் மிச்சம் பாதியும் விரயமாகாமல் உன்னுடைய வாழ்நாளை பாதுகாக்கும் சூதானத்தைச் சொல்லித்தருகிறேன் என்றால் அந்த மனிதனுக்கு எப்படி இருக்கும்? அதைச் சொல்லிக் கொடுத்த பெரியோர் தெய்வமாகவே தெரிவார். இப்படித்தான் ஒவ்வொரு மனிதனிடத்தும் ஒரு பொக்கிஷம் வைக்கப்பட்டு இருக்கிறது. அதை அறியாமல் போகத்திலும் உறக்கத்திலும் அதனை விரயமாக்கிக் கொண்டே இருக்கிறோம். ஏன்? இந்த மரண தேதி தெரியாததால் தான். அது தெரிந்து



Copyright © AMNA Trust, Chennai

விட்டால் என்ன ஒரு பயம் வந்துவிடுகிறது. அப்படியான நம் விலைமதிப்பில்லா உயிரை பாதுகாப்பாக வைக்கும் சூதானத்தைத்தான் னாளின் உண்மையை அறிந்து வந்த குருவானவர் னமக்கு அதைக் கல்வியாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று னாளின் சிறப்பானது கதையாகக் கூறப் பெற்றது. இன்னும் அடுக்குமொழியாக "பை"என்ற சொல்லைக் கொண்டு சோல்னாப்பை, அஜபை, கிருபை, கருப்பை, இருப்பை, அன்பை, சபை, என்று அடுக்கு தொடராக பேசி மெய்ஞ்ஞானத்தின் படி நிலைகள் அழகாக விளக்கப் பெற்ற பின் சபை நிறைவுற்றது.

**10-10-2021 சத்துவாச்சாரி சபை:**
**தொகுப்பு: ஸ்ரீ.கிருஷ்ணமூர்த்தி**

**னான்:**

***தருக்கினம் புள்ளூர்காலி ஜலம்வாழ் ஜெந்தும்***
***தான்பிறந்த வதன்கடமை முடித்து னிற்க***
***அரியபிறப் பானமனு னானென் றோதும்***
***அவ்வுருவை னோக்கியுன்றன் கடமை யென்ன***

என்ற பாடலில் வரும் "னான்" என்று சொல்லும் பொருள் சர்வத்தையும் ஆட்சி செய்கின்ற பொருளாக இருக்கின்றது. அது மற்ற ஜீவ ராசிகளிடத்தில் வைத்து படைக்கப் பெற்றிருந்தாலும் மனிதனிடத்தில் தனி சீதனமாக உள்ளது. அது இறைவனால் அருளப் பெற்ற சுயம் பிரகாசமாக இருக்கிறது ."னான்" என்பது அவ்வாகவும், விடி வெள்ளியாகவும் பஞ்ஞ புலன் ஒடுங்நும் கஞ்ஞாவாகவும் இது எல்லாம் தெரிந்து கொள்கின்ற பத்தாக உள்ள இடமாகவும் இருக்கிறது. *"எட்டிரண்டும் பத்தான விடம் காணாதார்"* என மெய்வழினூல் பாடலிலும் கூறப் பெற்றுள்ளது. இதையே சத்திய வேதத்தில் *"னானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்."* என கூறப் பெற்றுள்ளது.

குரு பிரான் மீது வைக்கும் அன்பு சுவர்க்கத்தை தரும். அவர்களுடைய எண்ணத்திற்கு னேராக னான் இருக்க வேண்டும். அந்த சத்திய ஒட்டுதலோடு னடந்து கொள்ளும் போது அவர்களுடைய அன்பே னித்திய வசந்தத்தை அளிக்கும். இச்செயலானது ஆதி மார்க்க னீதி அவையில் னிரூபிக்கின்ற செயலாக உள்ளது.

ஆயுதம்: ஒர் இதழ் தாமரை, ஒரெழுத்து மாத்திரை கோல், சிவசெங்கோல், முக்கூர் கத்தி, வாள், சூல் ஆயுதம், னாவாஸ்திரம், சோல்னா பை, கோடாயிதம், கூரோங்கிய பட்டயம், முரசு, பூம்பாதம், சொல் ஏர் உழவர், சங்கப்பலகை என்பதின் விளக்கங்களை ஒரு மெய் ஆசானின் ஒரு மொழி கீதையின் மூலமாகவே பெற முடியும். இதையே "சீதக் களபச் செந்தாமரைப் பூம் பாதச் சிலம்பு பல இசை பாட " என வினாயகர் அகவலிலும் கூறப் பெற்றுள்ளது. ஆயுதம் என்பது னாதமாக இருக்கிறது. அறியாமை என்பது அழிந்து அறிவு கூரோங்கினால் னாதம் கைவரவாகும். இதற்கு ஆசானின் முழு இரக்கம் வேண்டும். கோடாயிதக் கூர் வாக்கியத்தில் அனித்திய தேகம் ஒரு கத்தியைக் கண்டால் பயப்படும். னெருப்பைக் கண்டு அஞ்சும். பசி, பிணி இவற்றால் துயருறும். ஆனால் கோடி சூரியப் பிரகாசமான ஒரு னித்தியதேகம், ஜெய வீரதேகம், ஆயுதம் னெருப்புத் தீண்டாத தேகம், பசி தாகம் னோய் எட்டித் தீண்டப்படாத தேகம். ஈசனாகிய அந்நத் தேகத்தைக் கை போட வந்தவர்களே நாம். எந்ந ஒரு அறிவும், ஆயுதமும் எட்டித் தீண்டப்படாத அந்ந மகா மகா அருந்தலத்தில் இருந்து வரும் ஆசானின் திரு வாக்கிற்கு செவி சாய்த்து அமுதத்தை அருந்தும் மனுக்களுக்கு னித்திய பேரின்பமானது அருளப் பெறுகிறது.

அமரர்: அறுசுவை கொண்டொளித்த இடத்தை அறிந்தவர் அமரர். அவர்கள் என்னாளும் கயிலாய மலையில் வாசம் செய்து ஜீவனை ஒளிரச் செய்கிறார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

பக்ஷிக்கின்ற-ரக்ஷிக்கின்ற அக்னி: பக்ஷிக்கின்ற அக்னி மனமாகவும், ரக்ஷிக்கின்ற அக்னி அறிவாகவும் இருக்கிறது.

அடக்கம்:"*மூச்சு லயமாகிய மனோலயம்*" மனமற்றுப் போனால் மூச்சு லயமாகி, சுவாசம் ஒடுங்கி அடக்கமாகிறது இதையே

"***அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை***
***ஆரிருள் உய்த்து விடும்***"
என திருவள்ளுவர் பெருமான் கூறியுள்ளார்கள்.

தொடர்ந்து குருபெருமானின் அவதார திருனாளின் சிறப்பானது பேசப் பெற்று அவை இனிதே னிறைவு பெற்றது.

**10-10-2021 சிவகாசி சபை:**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெயக்குமார்**

நம் குரு பெருமானவர்கள் அமுத னா கொண்டு அருளிய னீதி மொழியின் அம்சங்கள். **"பசித்திரு - தனித்திரு – விழித்திரு**" என்பது வள்ளல் பிரானின் திருவாக்கு.

**பசித்திரு**:-ஆசானின் அருளமுத உணவை அனுதினமும் நம் செவியில் வாங்கி உண்ண வேண்டுமென்ற நினைவோடு காத்திருப்பதே பசித்திருப்பது.

**விழித்திரு**:-விழிப்புலகு ஏற்றும் விமலனாகிய ஆசானின் அருளால் அறிவின் வழிக் கூடி நடந்து உறக்க உலகம் கடந்த விழிப்புலகில் வாழ்வதே விழித்திருப்பது.

**தனித்திரு**:-மனமற்ற பரிசுத்த நிலையில் இருப்பதே தனித்திருப்பது.

கிருஷ்ண புராணத்தில், காளிங்கன் என்னும் பாம்பை அதன் தலையில் அமர்ந்து கிருஷ்ணர் அடக்குவது போல அலைந்துக் கொண்டிருக்கும் தேவையற்ற நம் எண்ண ஓட்டத்தினை ஆசான் தன் நாதத்தால் அடக்குகிறார்கள். **உணர்ச்சி - உணர்வு - உணர்வுகார ரகிதம்**.

**உணர்ச்சி:**- உணர்ச்சி என்பது உடல் சம்மந்தப்பட்டது. உணர்வு என்பது உடலுக்கு அப்பாற்பட்டது. மான்மியத்தில் உணர்ச்சியை உடலானது பொதிந்து இருப்பது போன்றும் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மாயையின் மொத்த உருவமே நம் உடல். அப்படியான அழிவுடல் தான் நான் என்ற அறியாமையில் இருப்பதே உணர்ச்சி. "***பொய்யின்ப உணர்ச்சி மெய்யுணர்வு கொல்லி***" (அறிவு அறி பாடம் ப.எண்: 124) உணர்ச்சி ஐயறிவு நுகர்ச்சியில் ஊனக் கண் கொண்டு உணர்வது.

**உணர்வு:-** ஓம் எனும் பிரம்மம். இது உடலையும் ஆன்மாவையும் இணைப்பது. ஆசானின் உள்ளத் தெளிவிலிருந்து வரும் வார்த்தைகளே உணர்வு.

திருமூலர் பாடல்,

***யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்***
***வான் பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்***
***ஊன் பற்றி நின்ற உணர்வுறும் மந்திரம்***
***தான் பற்ற பற்ற தலைபடும் தானே.***



Copyright © AMNA Trust, Chennai

**உணர்வுகார ரகிதம்**:- மனமற்ற பரிசுத்த நிலை. பரிசுத்தம்: நம்முடைய பிறப்பென்னும் பேதமையை நீக்கி சிறப்பென்னும் செம்பொருளாகிய அறிவை அளிக்கவே பெரியோர்கள் அவதாரம் தாங்கி வருகிறார்கள். நம்முடைய மனதை பரிசுத்தப் படுத்துவதற்காக அவர்கள் பரிசுத்தம் என்ற எல்லையில் இருந்து தொடர்ந்து நமக்கு அருளுகின்றார்கள்.

***கற்க கசடறக் கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்குத் தக.*** – (திருக்குறள் 391)

மனக்கசடை மெய்க் கல்வியால் மட்டுமே நீக்க இயலும். மெய்க்கல்வியை போதிக்கும் ஆசானின் நாதத்தை நினைவினில் தொடர்ந்து நிறுத்தினால் மட்டுமே கசடு அறுபடும். பஞ்ச பூதங்களில் நெருப்பு மற்றும் ஆகாயம் என்பதில் அசுத்தம் இல்லை. புற ஆகாயமே எவ்வித அசுத்தமிலாது இருக்குமென்றால், பெரியோர்களின் சுத்தத் திருவடியாகிய ஞான ஆகாய பெருவெளியில் இருந்து பிறங்கும் னாதம் எப்பெரும் பரிசுத்த நிலையாக இருக்கும். அப்பரிசுத்தம் ஒரு போர்வையாக நம் மீது படிந்து அசுத்தங்கள் நம் மீது படியாமல் பாதுகாக்கின்றது. நாம் நம் அழியாத சொந்த தேகத்தில் குடியேறி வாழ உடல் ,எண்ணம், சொல், செயல், இவைகளில் சுத்தம் இருத்தல் அவசியம். இதுவே ஆதி மார்க்க நீதி அவையில் ஆசானின் இரக்கத்தால் போதிக்கப் பெற்று செயலாக நடைபெற்று வருகிறது. பரிசுத்தம் என்றதில், பரி என்பது குதிரை. "***அன்னமயில் வாசியென்ற குதிரை யேறி***" என்னும் ஆண்டவர்களின் பாடலின் படி வாசி என்பது குதிரை, எனவே இது சுத்தமான நினைவை குறிப்பதாகும்.

1."***ஆறு இல்லாத ஊர் பாழ்***": ஆறு என்பதற்கு வழி என்ற பொருள் உண்டு. ***"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்"*** வழி என்பது நான். ஊர் என்பது உணர்வை குறிப்பது. (நான்) மெய் உணர்வற்று இருப்பது பாழ் என்று பொருள்.

2. ***"நீர் இல்லாத நெற்றி பாழ்":*** சதாசிவமே நெற்றியாகும். மந்திரமாவது நீர் என்றுள்ளது. இது ஆசானின் நாதத்தை குறிப்பது. சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி, சிவமயத்தை அறிவிக்கக் கூடிய நீர். அந்த நீர் இல்லாத நெற்றி பாழாகும்.

3."**கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்**" : கோ = சத்தம்,."***னில்லென னின்றுபல் லாயிர மாண்டெனும் செல்லுமே வில்லோசை***" (சோடச னிலை : ப.எண்: 100) என்ற பாடலுக்கேற்ப ஆசானின் நாதம் அந்த சத்தமாகிய வில். அது இல்லாத ஊராகிய உணர்வில் குடியிருக்க வேண்டாம் என்று பொருள்.

பரமாத்மாவின் கையில் இருக்கும் சங்கிலிருந்து வெளிப்படக் கூடிய சத்தம். நினைவென்னும் ஆகாயத்தில் ,உயிர் உரசும் பொழுது சத்தம் உண்டாகின்றது. அது போல உயிர் எழுத்து , மெய் எழுத்துடன் சேரும் பொழுது உயிர் மெய் எழுத்து நம்மிடம் பிறக்கின்றது. ஜீவனை ரட்சிக்கக் கூடிய சத்தமே மெய்யான சத்தம். உலகின் மூன்று பகுதியும் சூழ்ந்துள்ள கடல் அலையின் ஓசைக்கு நிகரானது ஆசானின் நாதம். மனுவை ஈசனாக மாற்றும் வல்லபம் அவ் ஓசைக்கு உண்டு.

உணர்வோடு இறைவனிடம் கலந்திருக்கும் நிலையே தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது. இதுவே பேரின்பம் இதை தவிர்த்து புறத்தில் அனுபவிப்பது அனைத்தும் சிற்றின்பம். எனக் கூறி சபை இனிதே நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai

**14-10-2021 வியாழக்கிழமை சபை தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**ஆயுத மற்றும் சரஸ்வதி பூஜையின் சிறப்பு காணொளிக் காட்சி:** உலகத்தில் இன்றையதினம் அவரவர் தொழிலுக்கு உபயோகப்படும் பொருள்களை வைத்து வழிபட கூடிய நாளாக மக்கள் எண்ணி வழிபடுகின்றார்கள். மேலும் நவராத்திரியின் ஒன்பதாவது நாளை கொண்டாடும் விதமாகவும் அமைந்துள்ளது. முக்கலைவாணியின் செயல் கல்வி, செல்வம், வீரம் இதனை உணர்த்துவதாக உள்ளது. கல்வி என்பது மெய்க் கல்வியாகிய சாகாக் கல்வி, வீரம் என்பது புலன் ஐந்தும் வென்றார் தம் வீரமே வீரமாகும். செல்வம் என்பது அழியா செல்வம், கேடில்லா அறிவுச் செல்வத்தை செவியின் மூலம் ஆசானின் னாதத்தால் பெறுவது. வேதத்தை கோடாயுதமாகிய ஆயுதத்தின் மூலம் பெறக்கூடிய செயலைக் குறிப்பதே ஆயுத மற்றும் நவராத்திரியின் சிறப்பாகும்.தெய்வ மூர்த்தங்களின் கையில் வேல், சூலம், தண்டாயுதம், சங்கு, சக்கரம், போன்ற ஆயுதங்கள் வைத்திருப்பதை காண்கிறோம்.இவைகளை வைத்து பூஜை செய்வதில்லை. இந்த ஆயுதங்களையும் அவற்றின் செயல்களையும் குறித்து ஔவைப் பிராட்டியும் விநாயகர் அகவலில் ***"கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே"*** என்றும் சாலை ஆண்டவர்கள்

***அமலாம்பஞ் ஞாட்சரவா***
***ளாயுதமெய் ஆலயத்தில்***
***னமதெனவே மெய்ப்பொருளை***
***னாடிய டைந்நிடுவாய்***

***சாலை ஐயறன் சோலினாப் பைதன்னை***
***வேல்கொண் டீட்டிவி ரித்துள்ளே காட்டிட***
***மேலே சொர்க்கமும் மத்யபா தாளமும்***
***கால மூன்றுங்கண் டதுப தேசமே*** எனவும் அருளியுள்ளார்கள்.

அந்த சொல் னா பையினுள் இருந்து வேல் போல் கூர் ஆயுதமாக அவர்களின் னாதம் செயல்படுகிறது. இந்த னாதத்தைத் தான் பூஜிக்க வேண்டும். ஆசானின் வாய்மைக்குள் ஆனவர்களே பிறவா நிலையை அடைவார்கள் என்றும் அருளியுள்ளார்கள்.

**உப்பு** :-உப்பின் ரகசியம் நவபாஷாணங்களாக உள்ளது எனவும் அதை அமுதமாக நவனீதங்களாக மாற்றும் வித்தையே பிரம்மவித்தை என்றும் இதனை நமது தெய்வம் **"விடமதுவுண் டமுதமது ஊறிவர லெங்ஙே"** எனவும்,

***விடமதனைக் கைவாசி மூலிகைச்சார்***
***விட்டாட்டி ஜெயபதத்தி லெடுத்தருந்து***
***விடமதனை யறிந்நருந்நா விட்டிடிலோ***
***விடமதுவுன் னுடலதனி லேறிடுமே***

எனவும் அருளியுள்ளார்கள். ஆண்டவர்களின் எண்ணத்தில் இருந்து உதித்ததுதான் வேதம். வேதத்தைப் புரிந்து கொள்ள ஆறாவது அறிவு தெரிய வேண்டும். இதனையே ஆண்டவர்கள் ***"அறிவினை யறிந்நோர் அறிவரிவ் வாய்மை***" என்றும் ***"அறிவிருக்கும் தலமறியார் ஆவி வீணே போவார்".*** என்றும் கூறியுள்ளார்கள். திருமந்திரத்தில்

***அறிவு வடிவென் றறியாத என்னை***
***அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி***

என்ற பாடலில் நந்தியாகிய குரு பெருமான் மூலம் அறிவு வடிவம் இன்னதென தொட்டுக் காட்டப்படும் இடம் இருதயம். இதன்



Copyright © AMNA Trust, Chennai

நிலைகளை அறிந்தவர்களால் மட்டுமே அவர்களின் அறிவையும், வேதத்தையும் அறிய முடியும் என குரு பிரான் அருளினார்கள்.

**குருமணி மாலை: பாடல் எண்- 15. "வித்ததில் மரமாய்" ... என தொடங்கும் பாடல்**

***வித்ததில் மரமாய் மரமதில் வித்தாய்***
***விதமிதென் றறியொணாக் கடலாய்***
***வித்ததாய்ப் பரத்தில் முந்நியு மிகத்தில்***
***விளைந்நதி னேர்மையாம் படியில்***
***வித்திலா துவந்ந விளைகலி மரமாய்***
***வினைந்நவா னறியொணாக் கடலே***
***சுத்தனிர்க் குணமாய் லாஞ்ஞுனை யிலங்நும்***
***சூல்முகம் மதுமதிக் கடலே***

வித்திலிருந்து வந்தது மரமா அல்லது மரத்திலிருந்து வந்தது வித்தா என்பதற்கான விடையை இவற்றை படைத்த இறைவனின் சக்தியும் மனித உருவமும் தாங்கி வந்திருக்கும் சற்குருவால்தான் கூறமுடியும் எனவும், வித்தில்லா வித்தாக, இறை சூலாக, சுத்த நிர்க்குணனாக, சன்னதங்கள் தரித்து மதிக்கடலாக விளங்கும் ஆசானின் னாதமே நம் ஜீவதேகத்தில் குடியேறி வாழும் வாழ்க்கையை அருளுவது என்றும் பகிரப் பெற்றது.

**ஸ்ரீமாணிக்கவாசகர் அருளிய சென்னி பத்து:பாடல் எண்-9. "*வம்ப னாய்த்திரி வேனை வாவென்று*"... எனும் பாடல்**.

வம்பனாய் திரிந்த நம்மை வம்படியாய் அழைத்து வல்வினையில் அகப்பட்டு பிறவிச் சூழலில் கிடக்கிறோம் என உம்பராக வந்து புரியவைத்து அதிலிருந்து மாற்றி வைக்கிறார்கள். "***வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்***" என பட்டினத்தார் அவர்களும் கூறுகின்றார்கள். குரு பெருமானின் வாய்மையை உணர்ந்தவர்களே அன்பர்கள் என பகிரப்பெற்றது.

**தேவாரம் (திருக்காட்டுப்பள்ளி) "*தோலுடை யான்வண்ணப் போர்வையினான்*" என தொடங்கும் பாடல்**

உணர்ச்சி வசத்தில் இருந்த நமக்கு மெய்யுணர்வு அளித்து மரணக் குளிரிலிருந்து போக்கக் கூடிய அன்பாகிய போர்வை அளிக்கும் வாய்மையே மெய்மணம் கமழும் வெண்ணீராக உள்ளது. நுண்அறிவு பொதிந்து விளங்கும் நூலகம் ஆசான் அவர்களே. இமயத்தில் உள்ள இறைவனை வழிபடும் அசலான வழியைக் காட்டுகிறார்கள். இதனை ஆண்டவர்களும் உன்னை அறிவு வீட்டில் ஏற்றவே ஒவ்வொரு தீட்ஷையும் எடுத்து வைக்கப்பட்டுள்ளது எனக் கூறுகிறார்கள். நம் ஜீவனைத் தாங்கும் பாதமாக, வேகாக்காலாக, திருவடியாக விளங்கும் அதனை காட்டும் மேலவரின் வாக்கே மின்னல் கிரணமாகிய ஜீவதேகத்தை காட்டித் தரும் பொற்பாதமாக விளங்குகிறது என பகிரப் பெற்றது.

அங்கத்தினரின் நேர்காணலுடனும், சற்குருவின் ஆசியுடனும் சபை இனிதே நிறைவடைந்தது.

**16-10-2021 மான்மியம் சபை:**
**தொகுப்பு: ஸ்ரீ. வடிவேலன்**

**நவராத்திரி:**

உலக அன்னையாகிய ஒரே தாய் சக்தி வடிவாக மூன்று னிலைகளாக இருக்கும் ரகசியம். இடகலை, பின்கலை, சுழிமுனை. சூரியன், சந்நிரன், அக்னி கலையாக இருப்பவள். இறைசூலி, திரிசூலி, சூல்முகமாக விளங்குபவள். இருளில்



Copyright © AMNA Trust, Chennai

இருந்து பிரகாசமாக வந்து நம் உடலில் ஜீவனாக, வெளிச்சமாக, என்றும் இருப்பவள். இதுவே னிஜ செயலுடைய னவராத்திரி விழாவின் ரகசியமாகும். பொம்மைகளை அடுக்கி வைத்து இந்த ரகசியத்தை தெரிந்து கொள்ள முடியாது. தாயாய் எழுந்நருளும் ஒரு மெய்க்குருபிரான் மூலமாக தான் அறிய முடியும்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் - 74. தேவனுடைய வார்த்தை**:

***உரை கிளம்பவு முள்ளமும் தித்திக்கத்***
***திரையிருள் கிழிந்நே தெறிபட்டிட***
***அறை திறந்து வறிவங் நிலங்நிடத்***
***துறவு கண்டு தொழுதெழுந் நோதுவான்*** -

ஆதி மெய் உதய பூரண வேதாந்நம்


ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்

மனிதனுடைய னாவுக்குப் பெரியதாக உலகம் இல்லை, ஏனெனில் உலகம் இன்னதென்று அறிவிப்பதே அந்த னாவுதான்.மெய் ஞானப் பரம்பரையில் வரும் ஒரு மெய் குருபிரானின் திரு னாவில் இருந்து தான் அருளானது சுரந்து, மிகுந்து வார்த்தையாக, வசனமாக,உரையாக கிளம்பி வருகிறது. அந்த வார்த்தை யுகத்தையே மாற்றக்கூடிய வல்லபமுடையது. அதாவது கலியுகத்தில் னரனாக இருக்கும் ஒருவனை மனிதனாக மாற்றி "மூன்றாவது கண்ணை" திறக்கும் வலிமையுடைய திருவார்த்தை. ஐயறிவில் இருந்து மாற்றி நம் உள்ளம் தித்திக்க ஆறாவது அறிவில் ஏற்றி வாழவைக்கும் வார்த்தை. அறியாமை என்னும் இருளை னீக்கி அறிவாக வெளிச்சமாக, வழியாக இருக்கும் வார்த்தை. சிற்றின்பம் கடந்த பேரின்பத்தை அளிக்கும் வார்த்தை. மேலும் துவாபர யுகம், திரேதா யுகம், கிரேதா யுகம்,என்ற அதி மகோன்னத எல்லைக்கு அழைத்து செல்லும் யுகப் புரட்சியான வார்த்தை. கைலாயம், வைகுண்டம், மிகராஜ், பரமண்டலத்தில் என்றும் அழியாத னித்திய பேரின்ப வாழ்வில் நம்மை வாழ வைக்கும் அமுத னா வார்த்தை. இதுவே அருள் மிகுந்த தேவாதி தேவனின் இறை திரு வசனமாகும். இதையே திருவள்ளுவரும்

***நிறைமொழி மாந்நர் பெருமை நிலத்து***
***மறைமொழி காட்டி விடும்.*** (28).என்ற

திருக்குறளில் கூறியுள்ளார்கள்.

**குருமணி மாலை: பாடல் எண்- 16.** ***"பற்றிய பற்றாய்ப் பரந்து"***... என தொடங்கும் பாடல்.

***பற்றிய பற்றாய்ப் பரந்துல கெங்நும்***
***பற்றியும் பற்றிலா தோங்நிப்***
***பற்றியும் பற்றாப் பத்தியுற் றவர்க்குப்***
***பற்றிலா திடம்பற்றும் பற்றே***
***பற்றைவிட் டகன்று பற்றியே தேர்பின்***
***பற்றும்பே ரெழுதுங்நோல் பலனே***
***சுத்தனிர்க் குணமாய் லாஞ்ஞனை யிலங்நும்***
**சூல்முகம் மதுமதிக் கடலே**



Copyright © AMNA Trust, Chennai

இந்த உடலில் நாம் எதைப் பற்றியிருக்கிறோம். விழிப்பு னிலையில் புலன்களின் மூலமாக பொறிகளில் பற்று வைத்திருக்கிறோம். தூங்கும் போது இந்த உடலை விட்டு பற்றில்லாமல் எங்ஙேயோ போய்விடுகிறோம். அது எந்த இடம் என்று அறிந்து கொள்வதே ஞானம். இதுவே தூங்காமல் தூங்கி சுகம் பெறும் ரகசியம். இதை திருமந்திரத்தில்,

***தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம் உள்ளே***
***தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம் உள்ளே***
***தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம் உள்ளே***
***தூங்கிக் கண்டார் நிலை சொல்வ தெவ்வாறே.***

-என்று திருமூலர்பிரான் அருளியுள்ளார்.

நாம் வாழும் இந்த பூமி தன் அச்சில் இருந்து மாறாமல் இவ்வளவு பளுவுடன் னீள் வட்டப் பாதையில் எதைப் பற்றி சுற்றுகிறது? சூரியன், சந்திரன், னட்சத்திரங்ஙள் இவற்றை யார் விதைத்தது? மேலும் எண்ண முடியாத அளவு னிரம்பியுள்ள அண்டசரா சரங்ஙள் அனைத்தும் எதைப்பற்றி இருக்கிறது? இயற்கையின் இந்த சூட்சுமத்தை அறிய வேண்டுமென்றால், னம்மை இவ்வுடலில் "எது ஒன்று" பற்றியிருக்கிறதோ அதற்குப் பெயர் "தைவம்". அது இன்னதென்று இந்த உடல் உள்ளபோதே, ஒரு பெரியோரை அண்டி அறிந்து, உணர வேண்டும்.

அதன் பிறகே மேற்கூறிய அனைத்தையும் கவ்விப் பற்றியிருக்கும் "அது" என்ற பற்றற்றான் பற்று "தைவம்" என்பது தெரியும். இதுவே தூங்காமல் தூங்கி காணும் ஞானமாகும். இச்செயலை வள்ளலார் அவர்கள் ஆறாம் திருமுறையில்

***வித்தி லாமலே விளைந்த***
***வெண்ணிலா வே-நீ தான்***
***விளைந்த வண்ண மேது சொல்லாய்***
***வெண்ணிலா வே***
***அந்தரத்தி லாடுகின்றார்***
***வெண்ணிலா வே- அவர்***
***ஆடும்வகை யெப்படியோ***
***வெண்ணிலா வே.*** என்றும்,

திருவள்ளுவரும்,

***பற்றுக பற்றுஅற்றான் பற்றினை அப்பற்றைப்***
***பற்றுக பற்று விடற்கு*** (350) என்ற திருக்குறளில் அருளியுள்ளார்கள்.

**ஸ்ரீமாணிக்கவாசகர் அருளிய குயில் பத்து:பாடல் எண்-4. *"தேன்பழச்சோலை பயிலும்"...* எனும் பாடல்**.

மிருத்யுவான எமனிடமிருந்து னம்மை காக்கும் அமிருத்யுவாக விளங்ஙும் ஆசானின் திருவார்த்தையே தேன் போன்ற அமுதமாகும். அதுவே னம்மை இருளில் இருந்து பிரகாசத்திற்கு அழைத்துச் செல்லுகிறது. குருவின் திரு ஆலவாயில் இருந்து வரும் அருள் அமுதமானது னம்மேல் படிந்து ஊமையை பேச வைக்கிறது. வீண் மனுவை ஈசானாக்கும் பஞ்ஞாட்சரமே ஆசானின் னாதமாகும். இத்தேகம் னாம் அல்ல என்பதை அறிந்து உணரும் செயலே புலால் மறுத்தல் ஆகும். இதையே

***கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி***
***எல்லா உயிரும் தொழும்*** (260)

என்ற திருக்குறளிலும் கூறப்பட்டுள்ளது.



Copyright © AMNA Trust, Chennai

**திருஞான சம்மந்நர் அருளிய தேவாரம்: பாடல் எண்-5. "*சலசல சந்தகிலோடுமுந்தி*"...எனும் பாடல்.**

கோயில்களில் சிவலிங்கத்தின் மேலுள்ள அமுத தாரையான பான தீர்த்தமானது ஒவ்வொரு துளியாக விழுந்து லிங்கத்தை குளிர்ச்சியாக வைக்கிறது. அது போல அறியாமை எனும் பித்தத்தில் இருக்கும் நமக்கு ஆசானின் அருள் வாக்கானது குளிர்ச்சியை தந்நு னம் உள்ளத்தில் அறிவுத் தெளிவை அளிக்கிறது. ஆசானின் வாய்மைக்குள் தான் இறைவன் திருனடனம் செய்கிறார். இதையே ***"சொல்லக விளக்கது ஜோதி உள்ளது."*** என்று திருனாவுக்கரசர் அருளியுள்ளார்.

**ஆதி மான்மியம்.பக்கம்- 284. ஜீவ சிம்மாசனப் பருவம்.**

திருப்புத்தூர் கோட்டை சுவர் அருகில் னின்று பேசிய பிரசங்ஙம். இதில் பிண்ட உற்பத்தி ரகசியம், னாம் ஜீவதேகமாகிய ரோஸ்மிதாக்குடைய காலத்தில் இருந்நு வாங்ஙிய சொத்து. அந்ந சொத்து னம்மிடத்தில் எப்படி இருக்கிறது. அதை எப்படி மறந்நு இந்ந உலகத்தில் அற்ப பட்டங்களுக்கு அலைந்நு திரிகிறோம். னாம் எதற்காக வந்நோம் என்ற னிலைகள் குறித்து பேசப்பட்டுள்ளது. னாம் தாய் வயிற்றில் இருந்ந போது எதையும் வாங்ஙியதாக ஞாபகம் இல்லை. ஆனால் வாங்ஙினோம் என்று ஒரு சத்தியவான் னமது தெய்வம் கூறுகிறார்கள். இதை எப்படி னிஜம் என்று னம்புவது என்றால், மற்ற உயிரினங்ஙளிடத்தில் இல்லாத ஒன்று னம்மிடத்தில் இருக்கிறது. அது எதுவெனில் அறிவு. அதற்கு அடையாளம் அறியாமை இன்னதென்று அறிந்நு கொள்வதே அறிவு. ஒரு மாட்டிற்கு தன்னுடைய உணவு, இணை, இடம் இன்னதென்று தெரியும். ஆனால் தான் ஒரு மாடு என்பது அதற்கு தெரியாது. ஐந்நு அறிவு வரை அனைத்தும் அறியாமைக்கும் அழிவுக்கும் தான் னிற்கிறது. ஆனால் ஆறாவது அறிவு என்றும் தெளிவுடன் அழியாத னித்தியப் பொருளாக இருக்கிறது. ஐந்நு அறிவு இன்னதென்று எது அறிவிக்கிறதோ அதுவே ஆறாவது அறிவு ஆகும். இதையே திருமந்நிரத்தில்

***அறிவறி வென்றங் கரற்றும் உலகம்***
***அறிவறி யாமை யாரும் அறியார்***
***அறிவறி யாமை கடந்நறி வானால்***
***அறிவறி யாமை யழகிய வாறே***

என்று திருமூலர் அருளியுள்ளார்.

ஆகவே னமக்கு தனிச் சீதனமாக தரப்பட்ட பொருளை கட்டாயம் அறிய வேண்டுமென்று எல்லா அருளாளர்களும் அறிவிக்கிறார்கள். அதை ஒரு மெய் குருபிரான் மூலம் அறியும் போது தான் அது னற்றாள், திருவடி, ஆதம் பாதம், னெஞ்ஞகமாகிய னடுவீட்டில் வைத்திருக்கும் புதையல், புராதன சொத்து,அதுவே பிள்ளையார் சுழி என்று தெரியும். இதை ஒவ்வொரு மனிதனும் அறிந்நு அடைய வேண்டும் என்பதே அனைத்து மதங்ஙளின் அடித்தளமான அடி னாதமாகும்.

ஆசான் தன் சொல்லின் உள்ளே சத்தை வைத்து, அந்ந சத்தின் உள்ளே சித்தை வைத்து, சித்தத்தின் உள்ளே ஆனந்நத்தை வைத்து, சத்து சித்து ஆனந்நமாக, னம்மை சச்சிதானந்நமாக வாழவைக்கிறார்கள். எல்லோரையும் இந்ந வாழ்கையில் வாழ வைப்பதே ஆதி மார்க்க னீதி அவையின் னோக்கமாகும். இது எல்லாம் வல்ல அருட்பெரும் ஜோதி **"சாலை ஆண்டவர்களின்"** தனிப் பெரும் கருணையே என்று கூறி குருபிரான் அவர்கள் சபையை னிறைவு செய்தார்கள். னமஸ்காரம்.

**17-10-2021 சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஶ்ரீமதி.ஹேமலதா தியாகராஜன்**

**1.ஆறுபடைவீடு**:- ஒவ்வொரு படை வீடும் ஓர் அரும்பெறும் செயலுடையதாக உள்ளது**.** அது நம்முடைய ஆறு ஆதாரங்களின் ரகசியங்களை உள்ளடக்கியதாக உள்ளது**.**



Copyright © AMNA Trust, Chennai

**2.அறியாமை**:- நம்முடைய அறியாமை இன்னது என்று அறியாமல் இருப்பது தான் அறியாமையாக உள்ளது. இறைவனை அறியாமல் இருப்பது அறியாமை அல்ல, தான் யார் என்று அறியாமல் இந்த உடலில் நாம் குடிகொண்டிருக்கிறோமே அதுவே அறியாமை.

***என்னிலே இருந்தஒன்றை யான் அறிந்ததில்லையே***
***என்னிலே இருந்தஒன்றை யான் அறிந்து கொண்டபின்***
***என்னிலே இருந்தஒன்றை யாவர் காண வல்லரோ***
***என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே***

என சிவவாக்கியர் கூறுகின்றார். "நான்" எனும் உணர்வே நம்மை வழி நடத்துகிறது அதுவே குருவாக உள்ளது. இதனை அறியாமல் இருப்பதே மிகப் பெரிய அறியாமை.

3.**தட்சிணாமூர்த்தி:-** தென்முக கடவுள் தட்சணாமூர்த்தி; நமக்கு தென் முகம் தலையாக உள்ளது. இதனை வள்ளலாரும் தன்னுடைய பாடலில் கூறுகிறார்கள்.

4.**பலன்:-** நாம் பிறந்ததில் இருந்து ஓர் தேவகுருவை சந்திக்காதவரையில் நரனாகவே உள்ளோம் ஏர் கொண்டு கலப்பையுடன் உழவராக வரும் ஒரு மெய்க் குருபிரான் பண்படாத நிலமாகிய நம் மனதைப் பண்படுத்தி அதில் ஓர் வித்தினை அதாவது பரிசீலனைக்கு எட்டாத வித்தில்லா வித்தினை விதைத்ததும் அந்த வித்து நரனாக இருக்கும் நம்மை மனுவாக பின் தேவனாக மாற்றுகின்றது. அந்த வித்தானது துளிர்விட்டு மரமாகி அதன் பலனை அடைய வேண்டும் என்றால் அதற்கான பாட்டை நாம் மேற்கொள்ள வேண்டும்.



*திரு.சாலை ரவி அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

5.**வினை:-** வினையின் காரணமாக நாம் இத்தேகம் எடுக்கிறோம் வினைக்கான காரணத்தையும் அதனை விதைத்தது யார் என்பதையும் நமக்கு அறிய வைத்து அதனைத் தீர்க்கும் வழி வகைகளையும் பாரவான்களே கூறுகிறார்கள்.

***இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்***
***பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு***

என்று திருவள்ளுவரும் கூறுகிறார்கள். நினைவின் மூலமாகவே நாம் வாழுகின்றோம். அந்த நினைவு மனமுடன் கலந்தால் அது வினையாக மாறுகிறது; அத்தகைய நினைவே செம்மைப்பட்டு மனமற்று போகும் பொழுது சுத்த நினைவாக ஹயாத்தாக இருக்கும்.

6.**கவனம்:-**கவனம் காவியமாக இருப்பதை ஆண்டவர்கள் ஆதிமெய் உதய பூரண வேதாந்த முகப்புப் பாடலில் கூறியுள்ளார்கள். இயல்பு வாழ்க்கையில் உள்ள கவனத்தை விட ஞான வாழ்க்கையில் கவனம் மிகவும் முக்கியம். இந்த கவனம் மனதின் கையில் உள்ளது ஆனால் இந்த கவனம் உணர்வுடன் சேரவேண்டும். சர்வ புவனாதியங்களுக்கும்,
சர்வ சதுர்யுகாந்நங்களுக்கும், சர்வ சீரோங்நு செல்வங்களுக்கும், சர்வ



Copyright © AMNA Trust, Chennai

அமலாண்மிக அயிஸ்வரியங்களுக்கும், விளைவு உதய பொருளாக நான் எனும் உணர்வு உள்ளது.

7.**பொய்க்கலி:-** அவரவருடைய மனமே கலியாக உள்ளது; அதுவே கலியெனும் அழி அவாவினனாக உள்ளது அத்தகைய மனதை, ஆசான் அவர்களே நாதமெனும் அங்குசத்தை கொண்டு மதம்பிடித்த நம் மனதை பிரம்மமாக மாற்றுகிறார்கள் நம் ஜீவன் மனமாய், அறியாமையில் போகாதபடிக்கு ஆசானின் நாதமெனும் அக்கினி காத்து ரட்சிக்கிறது."*எண்ணம்பல கோடிய தாய்விரிந்நே மன்னும் பல உயிர்களெலாம் னமவாய்"* என்பது போல் நாம் மனமாய், அறியாமையாய் உள்ளவரை "னமவாய்"க்கு சென்று வின்னப் பட்டு துயரத்தில் விழுகிறோம். அத்தகைய நம்மை, ஆசான் அவர்கள் தங்களின் பொன்னம்பலத்தை கொண்டு பிரம்மமாக மாற்றி பேரின்ப வாழ்வில் ஏற்றுகிறார்கள்.

8.**தலை**:-

***தலையான தலையறிந்து தலையைக் கண்டு***
***தாக்கினின்று காப்பனுக்குக் காப்ப தாச்சு***

அதுதான் சாகாத் தலையாக உள்ளது. அதுதான் தாய் வயிற்றில் நம்மை கட்டி நம்முள் இறைவனாக இருந்து காக்கிறது. அத்தகைய இறைவனை "***தலைக்குமேல் கால்கண்ட தலையைக் கேளு***"என்பது போல் கால் கண்ட தலையினிடம் தஞ்சம் அடைந்தால் மட்டுமே அத்தகைய இறைவனை அறியமுடியும்."அறிவு வடிவுஎன்று அறியாத என்னை அறிவு வடிவுஎன்று அருள்செய்தான் நந்தி" என்பது போல் நந்தியான குரு பெருமானே நம்மை அறிவு வடிவாக மாற்றுகிறார்கள். அந்த அறிவு வடிவு, சாகாத் தலையாகவும், அதன் மேல் ஊன்றிய கால் வேகாக் காலாகவும் உள்ளது, அத்தகைய தலையையும், காலையும் அறிந்த தலையை கண்டு நாம் நம் தலையை அறிய வேண்டும். ஒரு விஷயத்தை தெரிந்து கொள்வதும், அறிவதும், வேறு வேறாக உள்ளது. ஒரு விஷயத்தை ஆராய்ந்து அனுபவித்த பிறகே அதனை பற்றி அறியமுடியும். "**ஆதி னாயக தேவ தேவனை அடிமை கண்டுக லந்நனாள்**" என்பதுபோல் முடிவற்ற வாழ்விற்காக வந்த நாம், கீழான நினைவுகளின் மூலம் மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்து கொண்டே இருக்கிறோம். ஆதிநாயக தேவனின் திருவடியைக் கண்டு இரண்டறக் கலந்தால்தான் மெய்யான வீடடைந்து பிறப்பறுக்க முடியும்.

தொடர்ந்து ஞானமுறையீடு என்னும் தலைப்பில் உள்ள "***திரண்டெழுசின் முத்திரையும் சரணகமல லாலயத்தின் சேதிகளெ லாம்விளக்கியே***" என்னும் வரிகளுக்கு நம் குரு பெருமான் அவர்கள் வேதம் என்பது வியாக்யனம் செய்வதில்லை, அந்த வேதத்தில் இருக்கும் உட்பொருள் ஆதார உயிர் பதிப்பாக நின்று விளங்குவது சின் முத்திரை எனவும், சரண கமலாலயத்தில் நிற்பதுவே தவம் எனவும், அருளினார்கள். இதனை அருணகிரி நாதரும் தம் பாடலில் *"சரணகம லால யத்தில் அரைநிமிஷ நேர மட்டில் தவமுறைதி யானம் வைக்க ......"* என்று கூறுகிறார்கள். அத்தகைய தவத்தில் நாம் முறையாக நிற்க ஆசானின் அருள் வேண்டும் அப்பொழுது தான் *"பாழைப் போக்கிப் பலன் கை குலுக்கிடும் திரு னாளாகி"* இல்லமாகிய இல்லறத்தில் குடியேறி கோள்களை அரியக்(விலக்கக்)கூடிய, கிரகஸ்தனாகி, சன்யாசியாகி, வானப் பிரஸ்தனாகி, துறவறம் பூண்டு, அறம் செய்து, சமத்துவத்தின் ரகசியத்தை அறிந்தவனாக ஆகமுடியும் என்றார்கள்.

9.**கூடு**:- ஒரு பறவை எப்படி கூட்டிற்குள் உள்ளதோ, அது போல் ஆத்மாவும் இந்த உடல் என்னும் கூட்டில் உள்ளது இந்த உடலையும், ஆத்மாவையும் இணைக்ககூடிய மிகப் பெரிய பாலம் அறிவு.

10.**அறம்:-** ஜீவன் அவாவுடன் தாவி மனமாக மாறி வெளியே போகாமல் பிரம்மாகவே இருப்பது அறம், அத்தகைய அறத்தில் நம்மை, ஆசான் அவர்களே ஆக்கி வைக்கிறார்கள், எனும் பகிர்தலுடன் சபை நிறைவேறியது.



Copyright © AMNA Trust, Chennai

**17-10-2021 சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. கௌதம்**

***வானெலாம் சிறப்போனாகி வருகுவேனென வாக்கீந்து ...***
என தொடங்கும் தெய்வத் தேடு கூடகம் பாடலுடன் குருபிரானவர்கள் அவையைத் தொடங்கினார்கள்.

மரணமிலாப் பெருவாழ்வு மரணமிலாப் பெருவாழ்வு என்பது ஒவ்வொரு மனிதனும் இந்த உடல் உள்ள போதே வாழக்கூடிய ஒரு வாழ்க்கை ஆகும். இந்த அழி உடலின் உள்ளே அகமுகமாக இருதயத்திற்குள் பயணித்து தன்னுடைய அழியாத, நித்திய தேகத்தில் குடியேறி வாழ்வதே மரணமிலாப் பெருவாழ்வு ஆகும்.

ஞான வாழ்க்கையின் ஆரம்பம் மரண பயமே, யாராலும் தடுக்க முடியாத மரணம் தினசரி நடந்து கொண்டேதான் இருக்கிறது. அதாவது நம் மூச்சானது தினமும் சரிந்து கொண்டே இருக்கிறது. அதுவே (தின சரி) என்பதாகும். மூச்சானது துண்டாடப்பட்டு நஷ்டமடையும் வாழ்வை புறக்கணித்து விட்டு இலாபகரமான பெருவாழ்வு வாழ இந்த மரணமெனும் இருட்பிடியில் இருந்து தப்பிக்க வேண்டும். அதற்கு பெரியோர்களின் நாத மருந்தானது வேண்டும். அம் மருந்தே மரண வாதனைக்கு சரியான தீர்வு.

நாதமாகிய அமுதத்தை உண்டவர்களுக்கு மரணமில்லை. இது வாயால் உண்பது அல்ல. அதை எப்படி வாங்கி பருக வேண்டும் என்பதை ஒரு மெய்குருபிரானை அடைந்து தெரிந்து கொள்ளவேண்டும். இதுவே சன்மார்க்கத்தின் முடிவு. சாகாதவனே சன்மார்க்கி என்பது வள்ளலார் அவர்களின் திருவாக்கு. இதுவே சத்திய மார்க்கம், பரிசுத்த மார்க்கம், ஆதி மார்க்கம் எனவும் பேசப்பெற்றது.

**சிந்தனை:**

ஆவிக்குரிய சிந்தனை என்பது, நாம் அனைவரும் இந்த பூத உடலில் இருந்தாலும் இந்த உடலில் உயிரானது ஆவி ரூபமாகவே உள்ளது, அந்த உயிரின் துணையோடு தான் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவை வெளிப்படுகின்றன. இவை அனைத்தும் ஆவிப்பொருட்கள் ஆகும். எனவே ஆவிக்குரிய சிந்தனை என்பது மனிதனுடைய உயிரான ஜீவனைப் பற்றிய ரகசியமாக உள்ளது. உலகில் உள்ள அனைத்து வேதங்களும் மனிதனின் அழியாத உயிரையும் ஆன்மாவையும் குறித்தே பேசப்பட்டுள்ளன. இதையே பரிசுத்த வேதமாகிய பைபிளில், "மாம்ச இச்சை மரணம். ஆவிக்குரிய சிந்தனையே நித்திய ஜீவனும் சமாதானமுமாய் இருக்கிறது." என்று அருளப் பெற்றுள்ளது.

**முகமே ஜோதி:**

சூரியனுக்கு 184 நாமங்கள் உள்ளது. அந்த சர்வ நாமங்களும் ஞான சூரியனாக வரும் பெரியோர்களுக்கே பொருந்தும். நமது தெய்மவர்களும் "***சண்முகனும் னான்முகனும் சராசரப் பொருளனைத்தும் என் முகத்தில் காட்டி வைத்த என்குருவை யான் மறவேன்***"... என்றும் "***முகமென்ற நடுக்கரு ஊடுருவிப் பார்க்க***". என்றும் அருளியுள்ளார்கள். இப்பெரும் நிலைகளை தன்னை அண்டி வந்த மக்களுக்கு நிஜமாக்கி உள்ளார்கள்.

**மு = ம்+உ**
**க = க்+அ**
**ம் = ம்**

ஆக அ உ ம். இந்த உச்சரிப்பு இல்லாத பாஷை இல்லை. இதை நமக்கு விளக்கி அருளும் குருவின் திருமுகமே ஜோதியாக உள்ளது. மேலும் "குருமணி மாலை" எனும் பாடலில் கதிமுகம், தீன்முகம், புகழ்முகம், பதிமுகம், முதல்முகம், மதுமுகம்,


Copyright © AMNA Trust, Chennai

பூமுகம், யாமுகம், சூல்முகம், அயின்முகம் என்று முகம் என்பது செயலாக எப்படி விளங்குகிறது என்பதை சிறப்பித்து கூறியுள்ளார்கள்.

குரு அருள்: அருள் என்பது யுகாந்த நாட்டு செல்வம். சூல்கொண்ட மேகம் மழையை பொழிந்த இடத்தில் ஓரறிவுள்ள தாவரங்கள் வளர்ந்து செழிப்பது போல் ஆசானின் கருணை எனும் கொண்டல் வாய்மை பொழியும் போது அந்த நேரத்தில் அங்கிருந்து கேட்பவர்களின் அறிவானது செழித்தோங்கும். ஆசானின் கருணை என்னும் பாலம் மூலமாகத்தான் நாம் எமன் என்னும் கரையை கடக்க முடியும். ஞானத்தில் நாம் வளர்ச்சி பெற ஆசானின் அன்பை நம் மேல் சாய வைத்துக் கொள்வது முக்கியமாகும்.

கலிமா என்பது நம் சொந்த தேகமாக உள்ளது. தன் என்பது தன்னெனும் ஜீவ குகையாக உள்ளது. ஜீவனே சைவப் பொருளாக சரண கமலாலயமாக உள்ளது. குருபிரானின் வாக்காகிய தீயின் மூலமாக நாம் அதில் குடியேறி வாழ வேண்டும். அதுவே திருமேனியாக அழியாத பொருளாக தீன் எனும் குண்டலித் தாயாக விளங்குகிறது. இதுவே ஆதிமார்க்கம், நீதிமார்க்கம், பிடரிமார்க்கம் என்பதாகும். இவை அனைத்தும் ஆசானின் நாத மார்க்கத்தால் தான் நமக்கு விடிவாகிறது.

**பஞ்ஞாட்சரம்:**

மனிதனிடத்தில் ஜீவனாக தனிச் சீதனமாக, ஹயாத்தாக, ஐம்மணிப் பொதிகையாக இருப்பதே பஞ்ஞாட்சரம். ஒன்றான ஐம்மணிப் பொதிகையே நீதியெனும் பொருளாகவும், மௌன மாமணியாகவும் உள்ளது. இதுவே ஆசானின் நாதமாகும். ராமேஸ்வரத்தில் அக்னி தீர்த்தம் என்ற கடல் பகுதி உள்ளது. அங்கு அலைகளே இருக்காது. ஸ்ரீராமபிரான் மிதக்கும் கற்களை அந்த கடல் நீரில் மிதக்க வைத்து பாலம் அமைத்து இலங்கை சென்றதாக இதிகாசங்கள் கூறுகின்றன. ஸ்ரீராம நாமத்தை கற்களின் மேல் எழுதியதால் அவை நீரில் மூழ்காமல் மிதந்நு கொண்டே இருந்ததாம். இதையே சைவ மதத்தில் ***"கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயமே"*** என்று அருளியுள்ளார்கள். அது போலவே இப் பிறவிப் பெருங்கடலில் இருந்து நம்மை கரை சேர்க்கும் பாலமாக இருப்பதே பஞ்ஞாட்சரம் ஆகும். அது ஒரு மெய் குருபிரானின் கை ஆயுதமாக சன்னதமாக இருக்கிறது. அதை அடைவதே நமது தலையான கடமையாகும். அதை நிஜமாக்கி வைப்பதே ஆதி மார்க்க நீதி அவையின் நோக்கமாகும். இதையே நமது தெய்வமவர்கள் "***அமலாம் பஞ்ஞாட்சர வாளாயுத மெய் ஆலயத்தில் னமதெனவே மெய்ப்பொருளை னாடி அடைந்நிடுவாய்*** " என ஆசீர்பதித்துள்ளார்கள் என்று கூறி குருபிரானவர்கள் சபையை நிறைவு செய்தார்கள்.

**21-10 2021-வியாழக் கிழமை சபை:**
**தொகுப்பு: ஸ்ரீ விஜயகுமார்**

"***அஞ்ஞானக் கிழங்குகளைந்தெடுத்து*** "என்ற னல்ல நாட் பிறப்பு காப்பு பாடலுடன் குருபிரான் அவர்கள் அவை நிகழ்வுகளை தொடங்கி அருளிய அருள் முத்துக்கள். பௌர்ணமி என்பது முழு மதி. நிலவு தேயும் வளரும். அது போல் நான்மறையும் பேசும் பிறவா னெறி பேறு பெற்ற மக்கள், மீண்டும் அதலபாதாளத்திற்கு போகக் கூடாது. ***"பெற்ற பேர் பெற்ற சாயுச் யபதம் பேட்டி காணவ ருமிந்தப் பேறுபெற்றவர் மாறு பட்டில ரென்று னான்மறை பேசுமே***" நினைவோட்டத்தையும், அதனால் வரும் மன ஒட்டமும் ,அதை செலுத்துவதில் கவனமும், வைராக்கியமும் கொண்டு ஆசானின் வாக்கிற்கு மாறுபடாமல் நாம் நிற்கும் போது இவ்வாக்கிற்கு உண்மைப் பொருளாக ஆகிக் கொள்ள முடியும்." னிலையா மனமது நிலைபட கடினமனம், வைராக்கியம், கதிசாதனை வேண்டும் எனவும், விஷத்தை அமிர்தமாக மாற்றும் பிரம்மவித்தையைப்பழகி, அமுதம் இருக்கும் அமுதகலசத்தை கைப்பற்றி பிறவா னெறியை பெறுவதற்காக


Copyright © AMNA Trust, Chennai

நாள்தோறும் அமுதுண்டு வரும் குரு குல மக்களை குரு வாரத்தில் சந்திப்பதில் மகிழ்ச்சி எனக் குருபிரான் அவர்கள் அருளினார்கள்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண்75-**: இங்கு வருமுன் சைவன், வைஷ்ணவன், கிறிஸ்துவன் என்றிருந்த பொய் வேஷத்தை அகற்றி ,நம்முடைய பாடு ஏதுமில்லாமல் நிஜமான சைவன், வைஷ்ணவன், கிறிஸ்துவன், பிராமணன் என ஆக்கி வைக்கின்றார்கள். வேதமும், அதற்கு சாட்சியாக மதம், குலம் ,கோத்திரம், ஜாதி எல்லாவற்றிற்கும் அடிப்படையான மூலமந்திரம் எக்காலத்திலும் மாறுவதில்லை. தோற்றமில்லாமையிலிருந்து தோற்றத்திற்கு வந்து ஆணவம், கன்மம், மாயையினால் மூடப்பட்டு இருளாக இருந்த இருதயத்தில் குருவானவர் சர்வ மூல மந்திரங்களும் நிரூபிக்கக் கூடிய இடமாகக் காட்டி அருளுகிறார்.தேகம் கடந்து "நான், நான் "என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொருளாக, மூன்றாவது கண்ணாக விளங்கும் அது திறப்பிக்கப் பெறும்போது, கண்ணில்லாமல் காணவும், காதில்லாமல் கேட்கவும், வாய் இல்லாமல் பேசவும் கூடிய தன்மையைப் பெற்றமக்களாக இந்த ஆதி மார்க்க நீதி அவையின் அங்கத்தினர்கள் உள்ளனர். சிவனுக்குரிய நாமமே "அனந்தன்" இக்கடத்தை நீக்கி அக்கடத்துள்ளாக்கி இப்படிக்கு மோட்சம் அருள்வாயே" செயலாக உள்ள இந்த வாக்கியத்தை நம்மை வைத்துப் பார்க்க வேண்டும்.

**குரு மணிமாலை..."*திருவளர் திருவே ஷெய்குகள் ஷெய்கே*" பாடலுக்கான விளக்கமாக**,

***திருவளர் திருவே ஷெய்குகள் ஷெய்கே***
***ஜீவபண் டிதருள்பண் டிதமே***
***திருவளர் தீன்தீன் தீன்முகம் மதுவே***
***செவ்வியுன் பதமலர்ப் பொருப்பே***
***திருவள ரிடத்தே யிதையுணர்ந் நோதும்***
***சிந்நனை யரும்பதங் னொடுக்க***
***அருள்வளர் வருக லாஞ்ஞனை யிலங்நும்***
***யாமுகம் மதுமதிக் கடலே***

திருவடி என்னும் அழியாத ஒன்றை கைக்கொண்டு வரும் ஞானபண்டிதர்கள், தன்னை அண்டியவர்களையும் அப்பதத்தில் ஆக்கும் மதுமதிக் கடலாக, தீன் தீன் என உரைக்கும் குண்டலித் தாயாக அருள்பாலிக்கின்றார்கள் என பகிரப் பெற்றது.

**ஸ்ரீமாணிக்கவாசகர் அருளிய சென்னிப் பத்து: "*முத்தனை முதல் ஜோதியை* "எனத் தொடங்கும் பாடல்.**

முத்தினிலையை அடைவதற்கான "முதல்", ஜோதியாகிய ஆசானின் நாதம் ஆகும். இப்பாடலில் சாகாத் தலையின் சிறப்பு பற்றியும், அத்தலைக்குள் நுழையும் வாசலையும், அதில் வித்தில்லாத வித்து விதைத்து, அது வேர் மேலும் தலைகீழ் விருட்சமாக வளரும் நிலைகளை எல்லாம் " சென்னி மன்னி திகழுமே". என அருளியுள்ளார்கள்.

**வெளிச்சம் பற்றிய புரிதல்** :- பூமிக்கு வெளிச்சம் தருவது சந்திரன், சூரியன். வெளிச்சம் திசையைக் காட்டுவதாக, பொழுதை தீர்மானிக்கும் உதயமாக உள்ளது. "அறியாமை" எனும் இருளை அகற்றி கலியை மாற்றி, மலம் அகற்றுவது ஆதியில் வார்த்தையாக, ஆசானின் நாதமாக ஜோதியாக உள்ள அது, நமக்குள் நான் ,மனம்,உணர்வு, கவனம் இவை வெளிச்சமாக உள்ளதை உணர்த்துகிறது.

**தர்மம்:**-அழியாத சொத்தாகிய மெய்க் கல்வியை நமக்குப் பின்வரும் தலைமுறைகளிடத்தில் கொண்டு சேர்ப்பதே ஆகும் .

**துறவறம்:**-நான் இத்தேகமல்ல, எனும் எண்ணமுடன் அழிவற்ற பற்றற்ற பரம் பொருளின் மீது வைக்கும் பற்று துறவறம் ஆகும்



Copyright © AMNA Trust, Chennai

**இல்லறம்**:-அறிவு இருக்கும் இடம் தெரிந்து அந்த அறிவைக் கைப்பற்றுவதே இல்லறம்.

**அறம்:**-இல்லறத்தில் துறவறத்தை காண்பதும் தர்மத்தை காண்பதும் அதன் மூலமாக பிரம்மானந்தத்தில் இருந்து வாழ்கின்ற செயலே அறம்.

**கிரகஸ்தன்:-**அறம் செய்து கிரகத்தை அஸ்தமிக்கச் செய்பவன் கிரகஸ்தன்.

**வானப்பிரஸ்தன்**:-சுத்த நினைவாகிய சூக்கும உடம்பு உன்னுள் இருப்பது கைவரப் பெறும் நிலை வானப்பிரஸ்தன்.

**சமத்துவம்**:-சமாதானம், சமரசம் இவையெல்லாம் உயிர் ஒட்டிய பிராணனின் ரகசியம்." ஜீவனுக்கு" என பெயர் எழுதப்பெற்ற நரனாக உள்ள ஒருவனை சம்ஹாரம் செய்து மனிதனாக மாற்றி தேவனாக ஆக்கும் பெரும் செயலை, பெரியோர்களின் திருவடியைப் போற்றி வணங்கி, அறியாமையைக் களைந்து, அகற்றி அறிவை அறிந்தால்தான் அறிய முடியும். ***"எந்த னேரத்திலும் சந்ரக லானிதி என்முன்னி லேயிருக்க"*** எனும் நிலைகளெல்லாம் இன்று ஆதி மார்க்க னீதி அவை மக்களிடம் செயலாக்கப்பெற்றுள்ளது.

ஊடகங்களில் 108 திவ்ய தேசங்களைப் பற்றி படத்தைக் காட்டி, எம் பெருமானின் சிலையைக் காட்டி அலங்காரமாகப் பேசினாலும் வைகுண்டத்திற்குப் போகக் கூடிய செயல் வாயில் பேசுவதல்ல. ஸ்ரீவைகுண்டத்திற்கு செல்வதற்கு எம்பெருமானாகிய உடையவரின் திருவடியில் போய்ச் சேர வேண்டும். ***"சுத்தத்தி ருவடிப் பற்றித்தொ ழுதிடச் சொந்தவீ டுகாணும் வாருங்நம்மா".*** இப்படியான ஒரு தெய்வீக செயலுக்காகவே ஆதி மார்க்க னீதி அவை செயலாற்றிக் கொண்டு இருக்கிறது. கைபேசி (mobile phone) பயன்படுத்துபவர்கள் மனம் சார்ந்த விஷயங்களைத் தங்கள் status-ல் பதிவிடாமல் அறிவு சார்ந்த விஷயங்களைப் பகிர வேண்டும் என குருபிரான் அருளிய பின்னர் தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவேறின.

**23-10-2021 சனிக்கிழமை சபை :**
**தொகுப்பு: ஸ்ரீமதி.ஜீவிதா வடிவேலன்**

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 75**:

ஒரு தேவ ஆசானைப் பெற்று தன்னுடைய இதயமேருகிரி பிரகாசம் ஆகி மெய்யான வழித்தடம் பிடித்து னடப்பதுவே மெய்ஞ்ஞானம் என்பது தெய்வத் திருவாக்கு.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிநிலைகளில் நான்காவது நிலையாக சொல்லப்பட்டதே ஞானம். சரியை முடித்து, கிரியை கடைபிடித்து, யோகத்தின் மூலம் அடைவதே ஞானம். ஆனால் பொய் குருமார்களின் ஏமாற்று வேலையை நம்பி பின்தொடரும் மக்கள் ஞானம் என்பதை கற்பனையாகவும், ஞானமடைய பக்தி மார்க்கம் ஒன்றே போதும் என்ற சிந்தனையிலும் மெய்யை உணராமலே இருக்கிறார்கள்.

இருதயத்தில் ஈசன் இருப்பிடம் என்று சைவத்திலும், இருதய கமலவாசன் என்று வைணவத்திலும், தூய இருதய ஆண்டவர் என்று கிருஸ்தவத்திலும், கல்பு வெளிச்சமாகுதல் என்று இஸ்லாத்திலும் கூறப்பட்டுள்ளது. வேதத்தில் அருளப்பட்டிருக்கும் வார்த்தைகள் நம் அன்றாட வாழ்வில் புழக்கத்தில் பேசும் வார்த்தைகள் அல்ல. அகமிய சொற்களாக, பரிபாஷையாக கூறப்பெற்றவையாகும். இருதயம் என்பதும் பரிபாஷையே. இருதயம் என்பது நம் உடலில் இடப்பாக மார்பு பகுதி என்று கூறுவோம். ஆனால் வேதங்களில் பிரகாசப் பொருளாகவும், இறைவன் இருக்கும் இடமாகவும் சொல்லப்படும் ஒளி மார்பு குறிப்பது கழுத்துக்கு கீழுள்ள மாமிசத்துண்டாகிய இருதயத்தை அல்ல. ஏனெனில் கழுத்திற்கு கீழ் ஞானம் இல்லை என்பது பெரியோர்கள் திருவாக்கு.



Copyright © AMNA Trust, Chennai

கழுத்திற்கு மேல் இருதயத்தை தொட்டுக் காட்டுபவரே மெய் குரு பிரான். அவர்கள் இருக்கும் இடமே குருஷேத்திரம்.

**தனித்திருப்பாடல்கள்:**

***பாரிலுள் ளோர்கூறும் இதயத்தை என் குரு***
***பாரென்று சொன்னவுடன்***
***பார்க்கப்பார்க் கஆயி ரத்தெட்டண் டமெலாம்***
***பகல்போலி லங்கக்கண்டேன்.***

என்று ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்

**குருமணிமாலை - பாடல் எண்:18 "*அரியருள் வருகும் அருமறை விதியோன்*"... பாடல்**

***அரியருள் வருகும் அருமறை விதியோன்***
***யாதாபூ செனும்கலா மயிலே***
***பெரியபே ரின்பம் பொதிந்நபெட் டகமே***
***புகழவுன் பெருமையைப் பெரியோர்***
***சிறியனான் புகழல் செல்லுமோ சொல்லாய்***
***திருவாய்கொண் மறுமொழி புகல***
***அருகனா னுனது தவிசின்முன் னணுக***
***அயின்முகம் மதுமதிக் கடலே***

அரியும் சிவனும் ஒன்று. சிவன் வேறு குரு வேறு இல்லை. குருபெருமானின் அருளே மாயை எனும் மயிலை (மனதை) அடக்கி, கலாமயிலாக (அறிவாக) மாற்றுகிறது. மெய்ன்னிலை போதம்: "***மயிலான உன்னுயிரின் னிலையிடமு மெங்ஙே***" உயிரின் நிலைப்பிடம் அறிந்த பெரியோர்கள் மதுமதி கடலாக வந்து நம்மையும் இப்பெருநிலை வைப்பில் ஏற்றி வைக்கிறார்கள்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய குயில்பத்து - பாடல் எண் : 5 "*சுந்தரத்து இன்பக் குயிலே*".... எனத் துவங்கும் பாடல்**.



*திரு.சாலை ரவி அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

சுந்தரம் என்றால் அழகு. அது இன்பம் தருவதாக இருக்கிறது. இன்பம், துன்பம் இரண்டும் கலந்தது தான் இந்த வாழ்க்கை. நாம் தூங்கும் போது எண்ணங்கள் அலை மோதாது கனவற்ற நிலைக்கு செல்வது இன்பாக இருக்கிறது. ஆனால் அது உணர்வற்ற நிலையில் இருப்பது. னித்திய இன்பம் என்பது உணர்வோடு தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது. சுந்தரத்து இன்பம் என்பது நம் எண்ணம் பல கோடியாக விரியாமல் ஆசானின் வாய்மைக்குள் ஆகி ஓர் எண்ணமாக ஓர் நினைவாக இருப்பதாகும். இதுவே புண்ணிய வாழ்க்கையாக, அழகானதாக இருக்கும்.

மெய்வழி னூல்:

***"தஞ்ஞுமென்று ஒருனினைவாய்க் கார்க்கும் போது***
***தவிடுபொடி யாம்பாவம் பார்க்க ஆதி".***



Copyright © AMNA Trust, Chennai

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் (திருக்காட்டுப்பள்ளி) பாடல் எண்: 7**
***“முடிகையி னாற்றொடு மோட்டுழவர்” .... எனத் துவங்கும் பாடல்.***

திருவைக் காட்டும் பள்ளி. திரு – திருவடி திருப்பஞ்ஞணை எழுச்சி ***“ஒரு திரு தரிசனை இருவினை போக்கிடும் உள்ளக் கவலை பயம் இல்லாம லேகிடும்”*** வினைக்கு காரணம் மனம். மனதோடு இருக்கும் வரை குழப்பமும், கவலையும், பயமும் இருக்கும். மனதற்ற பரிசுத்தமாகிய அறிவின் நிலையோடு இருக்கும்போது உள்ளத்தெளிவும், னித்திய மகிழ்ச்சியும் னிலைக்கும் என்பதை திருவள்ளுவபிரான்,

***தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்***
***மனக்கவலை மாற்றல் அரிது***

என்ற திருக்குறள் மூலம் அருளியுள்ளார்கள்.

**ஆதி மான்மியம் (ஜீவ சிம்மாசனப் பருவம்) பக்கம் எண் : 284**

**திருப்புத்தூர் கோட்டைச் சுவர் அருகில் னின்று செய்த பிரசங்கம்**.

கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்ற சதுர்யுகங்களும் மனுத்தலைக்குள் தான் இருக்கிறது என்பதை நம் தெய்வமவர்கள் மூல மந்திரத்தில், சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலுமுள்ள… என்று அருளியுள்ளார்கள்.

யுகங்கள் நான்கும் கைக்கொண்டு வரக்கூடிய குரு பெருமானவர்களே நம் கலியை மாற்றும் சக்தி படைத்தவர்.

***ஜகத சற்குணா லங்விர்த சன்னதர்***
***அகம் புறம்புங்ஙண் டாண்ட சலாசனர்***
***யுகங்கள் னான்னுங் னை கொண்ட கோடூழியர்***
***மகதி ஆண்டவர் வந்நவ தாரமே.***

கலி என்பது எண்ணத்தில் நிறைந்திருக்கும் இருள் எனும் அறியாமை. அறிவே ரூபமெடுத்து ஆசானாய் வந்து அகக்கண் திறக்கும் வரை கலியானது மாறாது.

னீதியென்ற பிடரிக்கண் திறந்து - ஜீவதேக வைப்பென்னும் ரோஸ் மீதாக்குடைய காலமாகிய அதாவது, தந்தையின் எண்ணத்திற்கு வருவதற்கு முன்னிருந்த காலத்தில் சீதனமாக பெற்று வந்த அமானிதம் இன்னதென்று அறிவித்து, மெய் இச்சை உண்டாக்கி, மனிதனாக்கிய பிறகே கலியின் அழிசெயல் வேரறுக்கப்படுகிறது. ஒரு மொழியாம் குருமொழியின் மூலம் மெய்ப்பாலறிந்து வயது தந்ததின் பிரயோஜனத்தை அறிந்த பிறகும் பழைய பாவக் குரங்கு மனம் நம்மை கீழ்நிலைக்கு இழுத்து செல்லவே நிற்கும். எனவே, ஆசானின் சொற்படி புரளாதவனாக இருந்து, ஜீவேசத்தகை வாழ்வை கைபோட வேண்டும் என்றும், எமன் பதி கடந்து சிரஞ்ஜீவித்தனம் பெற்று பேரின்ப பெருவாழ்வு வாழ வேண்டும் என்பதையும் வேத வாயிலாக நமக்கு பல நிலைகளில் ஆண்டவர்கள் ஆசிர்பதித்து அருளியுள்ளார்கள்.

**எமவாதையைத் தடுக்கும் என்திறம்**:

***எமபயத்தைத் தாண்டாத***
***எவ்வாழ்வும் வாழ்வுமல்ல***
***எமபயத்தைக் கடந்நிடிலோ***
***எவ்வாழ்வும் வாழ்வாகும்***
***அமலாம்பஞ் ஞாட்சரவா***
***ளாயுதமெய் ஆலயத்தில்***
***னமதெனவே மெய்ப்பொருளை***
***னாடிய டைந்திடுவாய்***



Copyright © AMNA Trust, Chennai

***னாசிவெளி யேமூச்சு***
***ஓடாத்த வத்தாலே***
***மறலிவெருண் டோடுகின்ற***
***வான்குலத்தி லேபிறந்து***
***வாழ்வாய்சி ரஞ்ஜீவியாய்***
***வரைந்தேன் பெருமகனே***
***அழியாத்தி ருனாட்டில்***
***ஆளும்தி ருவாக்கு***
***வலுவாக்கு ஈதறிந்து***
***வாழ்வீர்ம னுக்குலமே!***

என்று பாடல் பாடி குருபிரான் அவர்கள் சபையை னிறைவு செய்தார்கள்.

**24-10-2021 சத்துவாச்சாரி சபை:**
**தொகுப்பு: ஸ்ரீமதி.பானுமதி குமரேசன்**

"***வாசிக்கா லுச்சி கண்டத்தின் வழியாய்......***" என்ற "ஞான முறையீடு" பாடலுடன் சபை துவங்கப்பெற்றது.

**அறிவு**: அறிவு என்பது பாகுபாடின்றி எல்லா மனிதனுக்கும் சொந்தம். ஒரு ஊரையே ஒருவனுக்கு சொந்தமாக ஆக்கினாலும் அதனை கட்டிக்காக்க அறிவு அவசியம்.

**அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**
**அஃதறி கல்லா தவர்** என்றும்,

**அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனு மிலர்** என்றும் திருக்குறளில் கூறப்படுகிறது.

ஆனால் அந்த அறிவை வயிற்றுப்பாட்டுக்கே பயன்படக் கூடியதாக ஆக்கிவிட்டோம்.

**பகுத்தறிவு:** பகுத்துப் பார்க்கும் அறிவு உலகிலுள்ள சர்வ உயிரினங்களுக்கும் உண்டு. ஆகவே அது ஆறாவது அறிவல்ல.தேகம் என்பது நாம் அல்ல என்ற அறிவு மனிதனுக்கு எட்டும் போதுதான் சமத்துவமும், சமாதானமும் உண்டாகிறது. அதுவே மனமில்லாத பரிசுத்த நிலையாக ஆறாவது அறிவாக ஜொலிக்கிறது. அந்த அறிவை அறியாமை எனும் திரை மூடியுள்ளது. அத்திரையானது ஓர் ஆசானின் நாதம் மூலம் விலக்கப்பட்டு அறிவெனும் பிரகாசம் உண்டாவதுவே கோடி சூர்யப்பிரகாசம்.

ஆகம விதிப்படி கோயில்களில் குருக்கள் தீபத்தை ஏற்றி பாதத்திலிருந்து முகம் வரை அந்த வெளிச்சத்தில் இறைவனை பார்க்கும்படி செய்கிறார். அதுபோன்றே மெய்க் குருவானவர் அறிவெனும் தீபத்தின் மூலம் இறைவனை அறியச் செய்கிறார்.

**அறிவே வல்லமை**: ஆசான் மூலம் திறக்கப்பட்டு வாசனை, கேள்வி, இரு கண், வாய் என்கிற ஐந்திற்கும் வல்லமை அளிக்கக்கூடிய அக்கண் என்பதே அறிவுக்கண், மூன்றாவது கண், நெற்றிக்கண், பெலஞானக்கண் என்பதாகும். அதுவே ஈசனின் இருப்பிடம். மேலும் சேராத ஐந்து பொருள்களாகிய பஞ்சபூதங்கள் ஒன்றாக சேர்ந்திருக்கும் இடத்திற்கே கண்டம், சேரி, பஞ்சாட்சரம், எனப் பெயர். இது மனிதனுக்கு மட்டுமே பிரத்யேகமாக படைக்கப்பெற்றுள்ளது. மேலும், அமுத கலைக்ஞான போதத்தில் "***இருதயத்தி லைந்துவிதக் கலப்பதுவும் காட்டி இருபுருவ னடுலலாடக் கண்திறந்து காட்டி..***" என கூறப் பெற்றுள்ளது. ஒரு மெய்க் குரு கிடைக்க விலையாக தலையைக் கொடுப்பதே மலிவு என்பதே ஞானிகளின் கருத்து. அறயாமையில் மண்டிக்கிடக்கும் தலையை கிள்ளி எறிந்து அறிவுத் தலையாக அவர் ஒருவரே மாற்ற


Copyright © AMNA Trust, Chennai

வல்லவர். திருப்பஞ்ஞணையெழுச்சி பாடலில், "***ஒருதிரு தரிசனை இருவினை போக்கிடும் உள்ளக் கவலை பயம் இல்லாம லேகிடும்***" என ஆண்டவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அறிவுதான் ஆயுதம்: உலக வாழ்க்கையில் கவலைகளுக்கு முடிவு இல்லை. ஆனால் வள்ளுவர் பிரான் தனது குறளில்,

***தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தாற்கு அல்லால்***
***மனக்கவலை மாற்றல் அரிது*** என்று கூறுகிறார்.

தனக்கு நிகர் தானேதான். அந்த நிகரற்ற 'நான்' என்ற ஒன்றை அறிந்து தரிசனை செய்தாலொழிய மனக்கவலையை மாற்ற முடியாது. இதையே "*பிணை னிகரில்லா பெருவான்கடை*", என அறிவின் முக்கியத்துவத்தையும், "*வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க*" என்ற குருவின் உன்னதத்தையும் பெரியோர்கள் எடுத்துரைக்கிறார்கள். மேலும், அறுவகைக் கதி சீற்றத்தில் அதிக வேகமாக பாயக்கூடியது மனம். அந்த மனதின் வேகத்தை ஒரு மெய் ஆசான்தான் தடுத்தாட்கொண்டு அறிவின் பாதையில் இட்டுச் செல்ல முடியும். ஓர் மெய் ஆசானைப் பார்த்த பிறகுதான் அறிவு சொல்வதை மனம் கேட்க ஆரம்பிக்கிறது. கீழ்நோக்கிப் பாயும் மனதை மேல்நோக்கி அறிவாக அவர் ஒருவரே பாயவைக்கிறார் அதுவே பிரம்மவித்தைச் செயலாகும். இதனையே நம் ஆண்டவர்கள் ஞான முறையீட்டில் "*பாய்மன வீட்டில் பேய் குடியிருக்கும் பேரறிவு வடிமையங் காகும்*" என அருள்கிறார்கள். மனித ஆற்றலான விஞ்ஞானப் படைப்புகள் யாவும் உச்சபட்ச அறிவின் நிலையாக இருந்தாலும் அவையெல்லாம் அழிவுக்கே வித்திடுகிறது. ஆனால் அறிவாகிய ஆயுதம் கொண்டு அறியாமையை அறிந்து அழியாமை என்னும் செயலுக்குள் ஆகுவதே மனிதன் அறிவைப் பெற்றதற்கான பயன் என்ற பகிர்தலுடன் அவை நிறைவு பெற்றது.

**28-10-2021 வியாழக்கிழமை சபை:-**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

அறியாமை இன்னதென்று தெரிவதே அறிவை அறியும் உபாயம். இதனை ஆதி மெய் உதயபூரண வேதாந்த முகப்பு பாடலில் "இதனை" உணர்ந்த பின் என்பது, அறிவினை உணர்ந்தால் பண்டிதன், உணராதவன் பாமரன் என்றும் கூறுகிறார்கள். அறிவை அறிந்தவரே தெய்வத்தின் வாய்மையை அறிய முடியும் என்றும் அருளினார்கள்.

கணியன் பூங்குன்றனார் கூறிய "***தீதும் நன்றும் பிறர்தர வாரா***" என்பதற்கு இணங்க இந்த உலகத்தில் அவரவரின் அறிவைக் கொண்டு செய்யும் செயலால் மேலோராவதும் கீழானவராவதுமாக உள்ளது. "***செய்த வினை ஒன்றிருக்க தெய்வத்தை நொந்தக்கால்***" என இதற்கு எந்த சம்பந்தமும் இல்லாத இறைவனிடம் நாம் முறையிடுகிறோம். கடவுளை நினைத்து உருப்போட்டால் பொய்ப் பொருளே வராத போது மெய்ப்பொருள் எப்படி வரும் என்பதே மெய்வழி ஆண்டவர்களின் கேள்வி. நாம் வினையிலிருந்து தாண்டி வர வேண்டும் என்பதே பெரியோர்களின் எண்ணமாக உள்ளது.

**சற்குருவின் திருவாயுரை:-** ஆண்டவர்களின் திரு வாக்கில் ஆண்டவர்கள் தனது **116** வயது வரை தாம் **39** வருட உணவே உண்டதாகவும் அதனால் தனக்கு உடலில் அயர்வோ, அறிவில் தளர்ச்சியோ ஏற்படவில்லை" என்பதின் ரகசியத்தை மெய்வழி னூல் பாடலில் "*பாடுகின்ற வுன்பாட்ட னெனக்குச் சொல்லிப் பாடுபட்டேன் பலனெடுத்தே னுனக்கும் சொன்னேன்*" என்றும் "*பட்டமரம் பாலூறும்*" என்றும் கூறுகிறார்கள். அப்படியான தவ வாழ்வைப் பழக்கித் தரும் சற்குவைச் சந்தித்து அவர்களின் மனோ நோக்கிற்கு இணங்கி நடந்தால் நாமும் அப்படியான வாழ்வு வாழலாம் என அருள் செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**குருமணி மாலையில் வரும் "*அயினெனும் பொருப்பி னங்ஙனோர் கூற்றும்* "என்ற பாடலின் புரிதலாக**,

ஐந்தொழிலுக்கும் அரசராக விளங்கும் சற்குரு பிரான் தன்னை அண்டி வந்த மக்களிடம் அலிபாக விளங்கக் கூடிய முதற் பொருளைத் தொட்டுக் காட்டி மறு பிறப்பில் ஆக்கும் செயலே படைத்தல். இதனையே "***சண்முகனும் னான்முகனும் சராசரப்பொருளனைத்தும் என்முகத்தில் காட்டிவைத்த என்குருவை யான்மறவேன்*** " என்றும்

"***விரைபிரம்மம் அவர் முகத்தில்***
***வைத்துமே படைத்துப் பின்னும்***
***மறைபடாத் தேவ ராக்க***
***வந்நனர் உலகுக் கம்மே***" என அருளுகிறார்கள்.

சயிலனன்னிலம் என்பது குளிர்ச்சியான இடம். ஏழ்நிலை அடுக்கு என்பதை அமானிதம், சிபத்து, வித்தியா பாதம், ஏழ்நிலை கோபுரம், ஏழ்நிலை மாடம், ஏழுமலை, ஏழுகடல், ஏழு திரை, ஏழு பிறப்பு என்றெல்லாம் கூறுவர். ஆனால் இறைவனோ இதனையும் தாண்டிய எட்டாவது நிலையாகிய மெய்மணி ஞானபீட சிம்மாசனமாக விளங்கும் அகர பீடத்தில் வீற்றிருக்கிறான். இதைப்பற்றி நம் தெய்வம் அவர்கள் தௌஹீது மக்காமிலும் கூறியிருக்கிறார்கள். மயிலானது ஆயிரம் கண்ணுடைய தோகையை விரிக்கும் செயல் மனதிற்கு ஒப்பாக உள்ளது. அப்படி மனம் விரியாமல் சற்குருவின் சொற்படி கேட்டு ஒண்டியொரு மனமாக வுறைத்திட்டு ஓதும் முறையைக் கடைப் பிடித்தால் கலாபமயிலாக மாறுகிறது. அகரப்பொருளை நம்மில் உணர வைத்து ஐராவதம் என்ற வெள்ளை யானை மீது வஜ்ராயுதம் தாங்கி வலம் வரும் நமது குருபிரானைப் பணிந்து ஆசி பெறுவோம் என பேசப் பெற்றது.

மாணிக்க வாசகப்பெருமான் அருளிய செத்திலாபத்து சாவருமுன் சாகப் பழகக் கூடிய வழியைப் பத்தக்கூடிய செயலே செத்திலாபத்து. பாடல் **-01:** "*பொய்யனேன் அக நெகப் புகுந்த முதூறும்*" என்ற பாடலின் புரிதலாக,

அயன், மால் இவர்களாலும் காண முடியாத திருவடியைப் பற்றி ஆண்டவர்கள் மெய்ம்மண ஞானம் என்ற பாடலில்

"***அரக்கர் வானவர் மனுக்கள் யாவரு***
***மலைந்ந லைந்நின்னும் காணொணா***
***ஆதி னாயக தேவ தேவனை***
***அடிமை கண்டுக லந்நனாள்***"

என்றும் "***தோணு மாலயன் வெளியி லேறியே தொழுதி டும்பே ரின்பனாள்***" என்றும் அருள்கிறார்கள். ஆசானின் பேரிரக்கத்தால் "**அடி, முடி, னடு**" வின் ரகசியத்தை அறிந்து அதுவும் கடந்து நிற்கும் திருவடியில் யோக அப்பியாசம் செய்திட வைத்த மெய்த் திரு மேனியனாகிய தன் குருவையே திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவமாக எண்ணி வணங்குகிறார்கள்.

**திருஞான சம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம், கீழை திருக்காட்டுப்பள்ளி பாடல் எண் 08.**"***பிறையுடையான் பெரியோர்கள் பெம்மான்***" **என்ற பாடலின் புரிதலாக**,

"***பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய் கழல்கள் வெல்க***" கூரான மழு, வாள் போன்ற ஆயுதத்தை தன் கையில் கொண்டுள்ள குரு பிரான் அவர்கள் கீழ்நோக்கில் னபுசாக போகும் நஞ்ஞாகிய எண்ணத்தை மாற்றி அவர்களிடம் விளங்கும் நெற்றிக் கண்ணை சீடருக்கும் தந்து, மூவாசையிலிருந்து மாற்றி சிபத்தாகிய அறிவுப் பாதைக்கு மாற்றுகிறார்கள். நமது குறை மனத்து பிழை ஒதுக்கும்


Copyright © AMNA Trust, Chennai

குரையோன் (குரை=ஒலி) தொனி கொண்டவரின் திருப்பாதம் பணிந்து வாழ்வோமாக என பேசப் பெற்ற பின்

குருபிரான் அவர்கள், திருவாகிய குரு பிரான் தொட்டுக் காட்டுகின்ற அறிவிருக்கின்ற தலமே இறைவன் வீற்றிருக்கும் இடமாகிய திருக் காட்டுப்பள்ளி என்றும், மனதை மௌனத்தில் ஆக்குபவரே மௌன குரு என்றும், இதனையே மெய்வழி னூலில் "*மனந்நளிர மரபில்வந்த மௌனகுரு காப்பே*" என்று கூறுகிறார்கள் எனவும், திருவள்ளுவ பிரானும்

***"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து***
***மறைமொழி காட்டி விடும்."***

என மௌனம் மற்றும் வாய்மையின் உன்னதத்தை சற்குரு பிரான் அருளிச் சபையை நிறைவு செய்தார்கள். குரு வா ஆழ்க, குருவே துணை . குருவைப் போற்றி குடியோங்கி வா ஆழ்கவே.

## 30-10-2021 சனிக்கிழமை சபை:
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 76**:

சொல்வாக்கே செல்வாக்கு: கைலாயம் புண்ணியர்க்கு மட்டும் தான் தனக்கு இல்லை எனும் அறியாமையில் இருப்பவனை விழிப்புலகுக்கு ஏற்றி நித்திய வலிமையாகிய அமானிதத்தை வைத்து படைக்கப் பெற்றதை நிரூபித்து, சிரஞ்ஜீவி உலகுக்கு ஈசனாக, அரசனாக ஆக்கவே "***அழியாத்திருனாட்டில் ஆளும் திருவாக்கு***" என்று அருளியுள்ளார்கள். ஒவ்வொரு திருவாக்கியமும், பாடல்களும் மெய்வணக்கம் பற்றியும், மெய்ஞான செயல்பழக்கங்கள் மூலம் மெய் உணர்வும், மெய்யறிவும் பெற்றுவாழ்வதற்காக அக னினைவைத் தொட்டு எழுப்பவே ஆண்டவர்களால் அருளப் பெற்றுள்ளது.



***ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்***

**திருவாசகம்-குயில் பத்து. பாடல்-6. "*இன்பந்தருவன் குயிலே*"எனத் தொடங்கும் பாடல்:** கூவும் குயிலின் இனிமையான நாதம் போல குருபிரானின் நாதமே இன்பம் தருவதாக இருக்கிறது. "சப்த சப்தாதிய சாயல்களும்" இறைவனுடைய சாயல் தான் மனிதனுடைய சாயல். ஜீவனுடைய போக்குவரத்து தொனி. குயிலினுடைய ரகசியம், ஜீவனுடைய ரகசியம், நாதத்தின் ரகசியமாகும்.

**குரு மணிமாலை, "பூரணனான புதியவன்" எனத் தொடங்கும் பாடல்**. பூரணத்திற்கு உள்ளே சர்வமும் அடங்கி இருப்பதால் இப்பாடலில் கடல் என்னும் வார்த்தை தனியாக இல்லை. சர்வ வியாபியாய் னின்று இலங்கும் பூரணான புதியவனாகிய இறைவனை, குறைவின்றிய பூரணதேகம் பெற்றுள்ள நாம், பூரண மூலப் பழம் தாங்கி வந்துள்ள



Copyright © AMNA Trust, Chennai

பூரணனான குரு பெருமானின் பூரண அன்பின் மூலம் நம்முள் பூரண ஹபீப் எனும் பத்து வயது கன்னியாக, பூரணப் புதையலாக இருக்கும் கலிமாவெனும் பூரணத்தை, கடம் திடத்துடன் இருக்கும் போதே அறிந்து, பூரண இல்மு எனும் எழுதாத எழுத்தை அறிவிக்கும் சாகாக் கல்வியைப் பூரண மனமாய் குருவைப் பூரணச்சரணம் செய்து பூரண நிலையாகிய முழுமை பெற்று சிவமயம் ஆகவேண்டும்.

**தேவாரம், கீழை திருக்காட்டுப்பள்ளி, பாடல்-9. "*செற்றவர் தம் மரணம்மவற்றை*" எனத் தொடங்கும் பாடல்:** எமனுக்கு மிஞ்சிய பகைவன் யாரும் இல்லை. மனிதனுக்குள் அதிமிஞ்சிய பயங்கரம் மரணபயம். குருஷேத்திரத்தில் அர்ஜுனனின் மரண பயத்தை ஒரு மொழிக் கீதையாகிய செவ்வழல் எரித்து, கைநழுவ விட்ட காண்டீபத்தை மீண்டும் அவன் கையில் கொடுத்தது. ஆசானின் வாக்கே காதலிக்கப்படும் காட்டுப்பள்ளி ஆக விளங்குகிறது. காதால் ஆனவர்களே காதலன், காதலி என பகிரப் பெற்றது.

**ஆதிமான்மியம் :- ஜீவ சிம்மாசனப் பருவம்**.

பண்படாத நிலத்தை உழுது பண்படுத்தி, விதை விதைத்து, அது பலன் தருவதற்கு ஒரு காலகட்டம் உள்ளது போல் நாமெல்லோரும் வந்த வழி வரலாறு பற்றி "***அது காணுவிற் நுவினிற் கூடவே வந்துக ருக்கூட கத்துக்குள்ளே"*** என அருளப் பெற்றுள்ளது. மரத்தைப் போல மனிதனின் வளர்ச்சியைப் பற்றியும், ஆறறிவும் உடனே வருவதில்லை எனவும், அதற்கான பருவங்கள், பிராயங்கள் இருப்பதான உபதேச ரகசியங்கள் பரிபாஷையாக இங்கே வெளியாக்கப் பெற்றுள்ளது.

**குணம்**:- "***குணங்கண்ட பேர் கட் கெல்லாம் குறியெடுத்துரைப்பேன்***" எனத் தெய்வக் குரமாது கூறுகிறார்கள். முக்குணங்களில் ரஜோ, தாமஸ குணங்ளை விட்டு சாத்வீக குணத்தில் குடியேறி வாழப் பழக வேண்டும்.

**சொற்குணம்**:- சர்வ சக்தி மிகுந்த நாதமானது ஒரு மனிதனுடைய காதில் நுழைந்து வீண்மனுவை ஈசன் ஆக்கிவிடும் பஞ்சாட்சரமாக உள்ளது.

**நிர்க்குணம்**:- நினைவை இழுத்துக் கட்டி குணமற்று இருப்பதே நிர்க்குணமாக உள்ளது. சொற்குணா உற்பரனான வேதத்தாய்க்குத் தான் கைலாச வர்க்கத்துக்குரிய சந்ததி மக்கள் உண்டாகுவார்கள்.

**கிரகஸ்தன்**:- தனக்குள் ஜோதி இருக்கும் இடம் தெரிந்து, நாள் முளைக்கும் இடம் தெரிந்து, சந்திரன் சூரியன் இல்லாத இடத்தில் வாழக்கூடிய நிலையைப் பெற்று, நவக்கிரகங்களை அடக்கி ஆளக்கூடிய சக்தி பெற்றவனே கிரகம் அஸ்தமித்த கிரகஸ்தன்.

மரணம் என்பது அற்ப நேரத்து துன்பம் அல்ல. மரணமிலாப் பெரு வாழ்வுக்காக மனிதனுக்குள்ளே எல்லாச் சீரும் சிறப்புகளும், சர்வவலதும் ஆண்மையும், எல்லாக் கல்வி கலை கண்காட்சி, சர்வமதிப்பு குதிப்பு மகிழ்ச்சி, எல்லா இன்ப இச்சைகளும் தர இரவு பகல் ஓயாது ஊழியம் செய்து கொண்டிருக்கும் இலஞ்ஞிய லக்ஷிய உயிரான பிராணன் நமக்குள் ஒரு தலைமுறை காலம் இருந்து எப்படி சேவை செய்கிறது என்பதைப் பெரியோர்கள் பலவகையாக அருளுகின்றார்கள். உயிரைப் பற்றிய உன்னதத்தை அறிந்து கொள்ளக் கூடிய அறிவு வராமல் வேதம் படித்தால் மட்டும் போதும் என்பவர்கள், அமுதமாகிய மூத்தோர் சொல் மறந்தவர்களே. படிப்பவர்களாக மட்டுமில்லாமல் பயன் பெறுபவர்களாக இருக்க வேண்டும்.

தீபாவளி:- தீப ஒளி. சாயுங்காலமாச்சு என விளக்கைத் தேடுபவன், தான் சாகுங் காலமாகிய பயங்கரத்தில் மாட்டிக்கொள்ளாமல் இருக்க, தன் இதய மாளிகையில் ஓர் உதயமாகிய பிரகாச வெளிச்சம் எனும் ஓர் அரும் துணையைத் தேடிக் கொள்ளும் திருநாளே நிஜமான தீபாவளி. சுயம்பிரகாச நித்தியானந்த பிரம்மப்பிரகாசமான தீப ஒளியானது வழித் துணையாக விழித் துணையாக பிரகாசப் பொருளாக ஆறாவது அறிவாக
நம்மை வழிநடத்தி, சொர்க்கபதியாகிய கைலாயம், வைகுண்டம்,



Copyright © AMNA Trust, Chennai

பரமண்டலம், மெகராஜ், சத்ய லோகத்திற்கு உடல் உள்ளபோதே போக்குவரத்துக்கு உரியவர்களாக ஆக்கி வைக்கிறது. அதற்கான ஆசீர் பாதங்களைப் பெற்ற மக்களை ஆக்கியும் ஆக்கிக் கொண்டும் இன்னும் வருங்கால சந்ததிகளையும் இதில் ஆக்கி வைக்க வேண்டும் என்ற மேலான எண்ணத்தை செயலாக ஆக்கி வைப்பதே ஆதி மார்க்க நீதி அவை என குருபெருமான் அருளி அவையை நிறைவு செய்தார்கள்.

**31.10.2021 சிவகாசி சபை:**
**தொகுப்பு: ஸ்ரீமதி. விஜய சித்ரா**

**சிவானந்த போதம்:-** மெய்யறிந்த மக்கள், இதில் உணர்ந்து, உணர வேண்டியது இன்றளவும் செயலோடு உள்ளது. வினையினால் வந்த தேகத்தினால் வினையை விதைத்துக் கொண்டே இருக்கிறோம். பூவின் வாசத்தில் மயங்கிய தேனெடுக்கும் வண்டினைப் பின் பூவானது மூடிவிடுவது போல் நம் மனமும் அழி உலக இன்பத்தில் ஆழ்ந்து, மயங்கி வாழ்நாள் முடிந்து விடுகிறது. உடலில் உயிர் உள்ள போதே பெறுவதுதான் முத்தி என்று சிவானந்த போதம் உரைக்கிறது. பூரணத்துவம் பெற்ற ஆசானாகிய ஆண்குருவின் எண்ணம் சொல் செயலுக்கு பெண்களாகிய நாம் ஒத்துப் பழகி அடிமை போல பற்றித் தொடர்ந்தால் நமக்குள் இருக்கும் இறை பொருளோடு ஐக்கியமாக முடியும். சேறும், சகதியுமாக உள்ள மனதில், கல், மண் போட்டு இறுக்கி ஆசான் அவர்களே அஸ்திவாரம் போடுகிறார்கள். அவரவருடைய அகமிய இதய கமலத்தில் விளங்கும் ஜீவனாகிய உயிர் மீது நேசம் வைக்க ஆசானின் வலுத்த ஓசையே உபாயமாக உள்ளது. உபதேசப் பொருளாக விளங்கும் நினைவு கொண்டு ஆசானுடன் இரண்டறக் கலந்து இறுதி பரியந்தம் எனும் பரியாகிய மனக்குதிரை ஒடுங்கும் வரை அதில் நிலைத்து நிற்க வேண்டும். நினைவே முக்திக்கான எல்லையாக இருளை வெட்டும் வெளியாக வெட்டவெளி தியானமாக விளங்குவது என சிவானந்த போதத்தின் சிறப்பு அம்சம் பேசப் பெற்றது.

**திருவருட்பா பாடலாகிய "*அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே..அன்புருவாம் பரசிவமே*" என்ற பாடலுக்கான விளக்கமாக,**

நம் அன்புப் பிடிக்குள் அகப்படும் பேரொளிப் பிழம்பாக, அன்பாக, ஜீவனாக, சிவனாக, நினைவென்னும் ஆவிக்குள் விளங்கும் பரசிவப்பொருளை அறிவதே தன்னை அறிவது. பஞ்சாட்சரமாக, ஏகாட்சரமாக, னீதி எனும் பொருளாக உள்ள ஒன்று, நம்மிடத்தில் வஞ்சப் புலன்களாக மாறி நிற்கிறது. மனம் செம்மையானால், ஏகாட்சரப் பொருளின் உறைவிடமாக விளங்கும் சிரசில் குடியேறி வாழலாம். பரிசுத்த ஆவிப் பிறப்பெடுத்து, மனிதனாக மாறி ஆசானின் மனோ நோக்கிற்கு இணங்கி பூரணச் சரணாகதி அடைந்தே அமரத்துவம் பெற முடியும் எனும் பகிர்தலைத் தொடர்ந்து,

**பரிசுத்த தோமா(St.Thomas)அவர்கள் அருளிச்செய்த தீர்க்கதெரிசனம்**:

இயேசு பிரானோடு அதிக நாள் கூடவே இருந்தவர் செயிண்ட்தாமஸ். 1945ல் எகிப்து தேசத்தில் நாக்ஹம்மாதி என்ற இடத்தில் உள்ள புராதன நூலகத்தில் தோண்டி எடுக்கப்பட்ட ஞானியின் சடலத்தோடு சிதையாமல் கண்டெடுக்கப் பெற்ற ஒரு சுருள் தான் பரிசுத்த தோமாவின் தீர்க்கதெரிசனம். சென்னையில் உள்ள செயிண்ட் தாமஸ் சர்ச்சில் தோமாவின் அடக்கஸ்தலம் உள்ளது. எகிப்து மொழியில் இருந்து 1956ல் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யப் பெற்ற அச் சுருளில் இயேசு தன் உண்மை சீடர்களுக்கு அருளிய 114 வாசகங்கள் உள்ளன. அதில் சில ஆண்டவர்கள் அருளிய வேதங்களுடன் ஒப்பு நோக்கப் பெற்றன.

(1) "**இந்த திருவாய்மொழிகளுக்கு எவனொருவன் அர்த்தம் காண்கிறானோ அவன் மரணத்தை ருசிக்கிறது இல்லை**".




Copyright © AMNA Trust, Chennai

இதனை ஆண்டவர்கள், "***மாதவன் தவ மருந்தொன்றிருக்கு வாங்க வாருமே மரண வறுமை தீருமே***" எனவும், "***பிறவா இறவா இனி மறவாததும் பேறுபெற்ற பணக்காரரடி***" எனவும், "***மரணபயம் மாற்றி வைக்கும் வாணி நாடு***" எனவும் அருள்கிறார்கள்.

(3) "**உங்களை வழிநடத்திச் செல்பவர், அதோ (தேவனின்) ராஜ்ஜியம் அந்த வானத்தில் தெரிகிறது பாருங்கள் என்று சொன்னால் பிறகு வானத்தின் பறவைகள் உங்களை முந்திக் கொண்டு செல்லும். அது சமுத்திரத்தில் இருக்கிறது என்று அவர்கள் சொன்னால் மச்சங்கள் உங்களை முந்திக் கொண்டு செல்லும். இதையும் விட தேவனின் ராஜ்ஜியம் உங்களுக்குள்ளே இருக்கிறதே உங்களுக்கு வெளியேயும் இருக்கிறதே. நீங்கள் உங்களை அறியும்போது நீங்கள் அறிந்துகொள்ளப் படுவீர்கள். நீங்களே ஜீவனுள்ள பிதாவின் குமாரர்கள் என உணர்வீர்கள். ஆனால் நீங்கள் உங்களை அறிந்து கொள்ளாத பட்சத்தில் நீங்கள் தரித்திரத்தில் உழலுவீர்கள். ஆனால் நீங்களேதான் அந்த தரித்திரம்**."

இதனை ஆண்டவர்கள் காலந்நாட்டிய காரணப்பாவில் "சாலை ஐயறன்"எனத் தொடங்கும் பாடலிலும், அறிவுஅறி பாடத்தில் "பார்மண்ணுலகும் பெரிய வானுலகும் பாதாள உலகும் பகிர்ந்தறி உடலில் எனவும் "*இது மூன்றுலகும் எண்ணியறி உன்னுள்*" என அருளி உள்ளார்கள். அறியாதவர்களே, தேவனுடைய ராஜ்ஜியம் வானத்திலோ, சமுத்திரத்திலோ இருக்கும் என நம்பி ஏமாறுகிறார்கள்.

15) "**ஒரு ஸ்தீரியின் மூலமாய் பிறக்காதவன் ஒருவனை நீங்கள் கண்டால், அவன் முன்பாக முகம் குப்புற தரையில் விழுந்து சாஷ்டாங்கமாய் அவனை சேவித்து நமஸ்கரியுங்கள். அவனே, உங்களுடைய பிதாவானவன்**". ஆண்டவர்கள் அருளிய கோடாயிதக் கூர் வாக்கியம்(14)&(205) இதற்கான சான்றுகளாக விளக்கப்பட்டன.



ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்

(13) **அவரது சீஷர்கள் அவரிடத்தே சொன்னார்கள், "தேவனின் ராஜ்ஜியம் எப்போது வரும்? என்று. இயேசு சொன்னார், "அதற்காக காத்திருப்பதால் அது வராது. இதோ இங்கே இருக்கிறது அல்லது அதோ அங்கே இருக்கிறது என்று சொல்லப்படுவது போல அது இருக்கும். எல்லாவற்றையும் விட பிதாவின் ராஜ்ஜியம் பூமியின் மேலே பரந்து கிடக்கிறது. ஆனால் மனுஷர் அதை காண்பதில்லை**" பிதாவின் ராஜ்ஜியத்தைப் பார்ப்பதற்கான கண்ணும் அறிவும் நம்மிடத்தில் இல்லை என்பதே உண்மை. மெய்வழி னூலில், "***இடமதுவும் னிசமென்றால் பொறிகளோடா திருந்துவிடு கோடி யொளிகாந்தி வீசும்***". இதுவே இயேசுவின் ராஜ்ஜியமாக குரு பெருமானின் இரக்கத்தால் அறியக் கூடியதாக உள்ளது.

(108) "**எவன் ஒருவன் என்னுடைய வாயிலிருந்து பானம் பண்ணுகிறானோ, அவன் என்னைப் போலவே ஆவான் .நான்**



Copyright © AMNA Trust, Chennai

**அவனைப் போலவே ஆவேன். அப்போது மறைவான காரியங்கள் அவனுக்கு வெளிப்படுத்தப்படும்**." கோடாயிதக் கூர் வாக்கியம்(267) "*ஆண்டவர்கள் zவாய்மைக்குள் ஆகி விடுவது ஒன்றுதான் உன் வேலை*" என்ற திருவாக்கியமும் மெய்ம்மணஞானத்தின், "***கொண்டல் வாய்மையை கேட்க கேட்க என் கோதெலாங் நுடி யேகுனாள்***" என்ற பாடல் வரிகளும் இதற்கு சான்றாக கூறப்பட்டன.

(34) "ஒரு குருடன் இன்னொரு குருடனை வழிநடத்தினால் இருவருமே குழிக்குள் விழுந்து விடுவார்கள்". "**குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்**".....என்ற திருமந்திரப் பாடலும், "***எழு கோடி சூரியன் தான் எதிர் நின்றாலும் இருளன்றிக் குருடருக்கு துலக்கமாமோ***" என ஆண்டவர்கள் அருளிய பாடலும் இதற்கு சான்றாகக் கூறப் பெற்றன.

(77) "**அவர்கள் எல்லாருக்கும் மேலான வெளிச்சம் நானே .சர்வமும் நானே. என்னிடத்தில் இருந்தே எல்லாம் புறப்பட்டது. அவை எல்லாம் என்னை நோக்கி நீண்டன. ஒரு விறகைத் துண்டாக்கினால் அதற்குள் நான் இருக்கிறேன். ஒரு பாறாங்கல்லைத் தூக்கினால் அதன் கீழே நீ என்னைக் காண்பாய்**". ஆண்டவர்கள் அருளிய, அறிவு அறி பாடத்தில், "***ஆறு ஆதாரம் அறுசுவை யுடனே, அறிவது உன்னுள் ஆசான் தன்னிடத்தே, மதிகதிர் உடுக்கள் வகையுன்னிலறிதல்***", எனவும், மெய்ப்பொருள் அடைக்கலப்பாவில் "***உள்ளும் புறம்பெலா முன்னதையா, ஓதலும் ஓதாதும் உன்னதையா***" எனவும், பகவத் கீதையிலுள்ள விபூதி யோகத்தின் வரிகளும், தோமாவின் நற்செய்திகளுக்குச் சான்றாக எடுத்துக் கூறப் பெற்றன.

**கோடு:** கோடு என்பது ஆயுதமாக, கூரோங்கிய வாளாக, கொடிய எமனை வெல்லக் கூடியதாக உள்ளது. காட்டானை வாலைப் பற்றி அழியாப்பதி வாழ்வில் குடியேறும் செயலையே, "***கோடாயுதத்தால் கொடு வினை களைந்தே***" என்று ஔவைப் பிராட்டியும், "***அரிக்கு முந்தின- அவ்வெழுத்துக்கு அப்பாலாய- அகர அச்சர பீடத்துக் கோடாலங்கிர் தம்***" என்று ஆண்டவர்களும் கூறுகிறார்கள். நரனை மனுவாக்கி, மனுவை தேவனாக ஆக்குவதும், நிலைநிற்கா மனதை நேர்கோட்டில் நிறுத்துவதும் வேல் கொண்டு மூவுலகங்களையும் விரித்து உள்ளே காட்டுவதும் வினையை வெல்வதற்குத் துணைபுரிவதும் பத்தாவது வாசல் நுழைவதற்கான மயில் வாகனச்சீட்டைத் தருவதும் கோடு. ஆசானின் னாதமாகிய கோட்டை சத்திய வரம்போடு பின்பற்ற நல்வழி கிட்டும் என்று 'கோடு' பற்றிய சிறப்புகள் எடுத்துரைக்கப்பட்டன.

**னிபுண மணி விளக்கு**: ஆண்டவர்கள் தங்கள் குரு பெருமானை "*னிபுண மணி விளக்காம் என் ஆசான்*" என்றும் "*வரதென் குரு தனிகை வள்ளல் உன் பாட்டன்*" என்றும், "அறம் கொழுத்த மதியேறி விதி கடந்தென்னாசான்" என நிகரற்ற வாசகங்களால் பலவிதமாகப் போற்றிப் பாடுகிறார்கள். தான் எஜமான் ஸ்தானத்தில் இருந்தபோதும் அடிமைத்தனம், முழுமானித்தனம், இவற்றின் மொத்த உருவாக நின்று போற்றுகிறார்கள்

ஈரேழு மலைகடந்து பனிமலையில் வீற்றிருக்கும் பெருமானிடம் ஒரே எத்தில் போய் விழுந்து அமானிதத்தை அறிந்து சொந்தமாக்கிக் கொண்டவர்களே துவாரகாள் என குரு பெருமான் அருள் புரிந்தார்கள்.

வான னாட்டிலிருந்து வந்த சிவ செம்மல்களின் அன்புதான் நம்மை சிவமாக்கும் குயவன் கையில் உள்ள மண் போல குருவின் கையில் நாம் இருந்தால் ஞானமாகிய அறிவுப் பாதையில் அறிவு வடிவாக நம்மை மாற்றி வழி நடத்துவார்கள் என பேசப் பெற்றது.

**சர்வ ரோக நிவாரணி**: அறியாமை எனும் அஞ்ஞானத்தை அகற்றி, வினை தீர்க்கும் ஞான மருந்து குருபிரான் அவர்களிடம் னாத மருந்தாக இருக்கிறது. பாற்கடல் அமுதமாக வரும் ஆசானின் அருளமுதான னாத மருந்தை செவிவழியாக உண்டால் நம் விதி எழுத்து மதி எழுத்தாக மாற்றப் பெற்று பிறவிப்பிணி நீங்கும் ."நல்ல மருந்து இம்மருந்து" என்ற வள்ளலார் பாடலும், வாதகற்பத்தின் பாடலும் சான்றாகக் கூறப் பெற்றதைத் தொடர்ந்து குரு பெருமானின் அருளாசியுடன் அவை நிறைவு பெற்றது.



Copyright © AMNA Trust, Chennai

**31.10.2021 ஞாயிற்றுக் கிழமை சபை,**
**தொகுப்பு: ஸ்ரீ. நாகலிங்கம்**

**ஆதிமெய் உதய பூரண வேதாந்தத்தின் ஆடலங்ஙன்னி பாடலில் வரும் "*தேங்ஙி வந்நிங் நேங்ஙியம தங்ஙளுக்கு ஓங்ஙியேவி ழிப்பளித்த ஓகுபேரா*" என்ற பாடலின் புரிதலாக,**

எல்லாக் காலங்களிலும் மெய் ஞானிகளால் உண்டாக்கப்பட்ட மதங்கள் உயிர்ப்போடும், விழிப்போடும்தான் உள்ளன. ஆனால் மெய்ஞான மகத்துக்களின் காலத்திற்குப் பின் அதைப் பற்றிய சரியான புரிதல் இல்லாமலும் அம்மதத்தின் நோக்கம் இன்னதுதான் என உணராமலும் விழி குருடராய் அறியாமையில் மூழ்கி அம்மதத்தினை வெறும் சாங்கிய சடங்காக அதனைப் பின்பற்றி வருபவர்கள் இருக்கிறார்கள். அந்த அறியாமையை மக்களிடத்தில் இருந்து விலக்கி அம்மதத்தின் உயிர்ப்பு நிலையையும் அதன் மந்திரப் பலன்களையும், அறிவு வெளிச்சத்தையும் ஒவ்வொரு மனுத்தலைக்கும் தன் நாத வெளிச்சத்தின் மூலம் ஏற்றிவைக்கும் அரிய செயலை கைக்கொண்ட குபேரராக மெய்மகத்துக்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு மதத்திலும் ஏதாவது ஒரு வகையில் விளக்கேற்றும் பழக்கத்தினை பெரியோர்கள் எடுத்து வைத்தது, இருளைப் போக்க ஒரு விளக்கு தேவைப்படுவது போல நாம் அறிவு வெளிச்சம்பெற ஒரு பெரியோர்கள் துணை வேண்டும் என உணர்த்துவதற்காகத்தான்.

தீபாவளி பண்டிகைக்கு காரணமான சூரசம்ஹாரம் நிகழ்வின் உண்மை என்னவெனில் "சுரன்" என்றால் உன்னத அறிவைப் பெற்று அதன்மூலம் இறைவனை அடைந்த தேவர்கள் என்பதாகும். அவர்களை முருகப்பெருமான் வதம் செய்வதில்லை. மாறாக அறியாமையில் மூழ்கி தனக்கும் பிறருக்கும் கேடு விளைவிக்கும் "அசுரன்" என்ற தன்மை பெற்றவனை சங்காரம் செய்யும் செயலையே தீபாவளி பண்டிகை குறிக்கிறது. "வதம்" என்பது அழிப்பது அல்ல. அவதார புருஷர்களாகிய பெரியோர்கள் மக்களிடத்தில் உள்ள அறியாமை என்னும் இருளை தன் ஓர் எழுத்து ஆயுதமாகிய "செவ்வேல்" கொண்டு வதம் செய்து அறிவு விளக்கை ஏற்றும் செயலாகும். ஏனெனில் அறியாமையே அத்தனை கொடுஞ்செயலுக்கும் காரணம். இதை போதிக்கும் பண்டிகையே தீபாவளி. இவ்வுண்மை நிஜமான பெரியோர்களை சந்திக்கும் போதே நமக்கு புரிகிறது. இதனையே இறைவனின் ஐந்தொழிலான ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பது உணர்த்துகிறது. இதில் அழித்தலாகிய சம்ஹாரமே முதலிலும் பின்னர் படைத்து, காத்து, மறைத்து, அருளும் செயலும் நடைபெறுகிறது. நரனாக உள்ள நம்மை அழித்து தேவ நிலைக்கு ஏற்றும் செயலுக்கு சான்றாக தெய்வத் தேடு கூடகத்தில்

***தரைதனில் நரராய்த் தோன்றித்***
***தாம்கெதி அடையா தோரை***
***முறைசங்ஙா ரனுக்கி ரகம்***
***முடித்துமே மனுவாய் மாற்றி***
***விரைபிரம்மம் அவர்மு கத்தில்***
***வைத்துமே படைத்துப் பின்னும்***
***மறைபடாத் தேவ ராக்க***
***வந்நனர் உலகுக் கம்மே*** என அருளப் பெற்றுள்ளது.

நம்மைப் பீடித்துள்ள கிரகங்களை முறையாக சங்காரம் செய்து, மனதை செம்மையாக்கி, "பிரம்மத்தை" முகம் என்ற நடுக்கருவில் பதித்து நம்மை தேவராக ஆக்குகிறார்கள் என பகிரப் பெற்றது.



Copyright © AMNA Trust, Chennai

புற இருளைப் போக்குகின்ற ஒரு விளக்கினுக்கு திரி, நெய், நெருப்பு, மற்றும் ஏற்றிவைக்க ஒரு நபர் தேவைப்படுவதுபோல் மனிதனிடத்தில் அறிவு வைத்து படைக்கப் பெற்றிருந்தாலும் அதை தொட்டுக்காட்டி பிரகாசிக்கச் செய்ய ஒரு ஆசான் கண்டிப்பாக வேண்டும், தானாகவே அவ்வறிவை அறிந்துகொள்ள முடியாது என்றும் பகிரப் பெற்றது. மேலும் மெய்ன்னிலைப் போதம் "***வீடான வடமேரு கிரியினிட பாதம்***" பாடலில் வரும் இட பாதம் என்ற சின்முத்திரைக்கு குரு பிரான் அவர்களே விளக்கி அருள் புரிந்தார்கள். இடமென்றால் அறிவு இருக்கும் தலம் என்றும், அதை அறிய வெட்டவெளி, இருளை வெட்டும் ஒரு வெளி அதாவது சுத்தவெளி ஒன்று தேவை என்றும், இவ்வெளியை வள்ளல் பெருமானார் ஐந்தாக கூறியுள்ளார் என்றும், அது பூதவெளி, அந்தகாரவெளி, துரிய வெளி, துரியாதீத வெளி, ஞானஆகாயப் பெருவெளி என்றும், இதையே உபநிஷத்தில் ஆகாச, பராகாச, சூரியாகாச, மகாகாச, பரமாகாசம் என 5 ஆகாசங்களாக கூறப்பட்டுள்ளது என்றும், இதில் "ஆகாசம்" உள்ளும் புறம்பும் இருளாய் இருப்பது, "பராகாசம்" புறத்தில் வெளிச்சமாகவும் அகத்தில் இருளாகவும் இருப்பது, "சூரியாகாசம்" வெளியேயும் உள்ளேயும் வெளிச்சமாக இருப்பது, "மகாகாசம்" எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது, "பரமாகாசம்" என்பது இருளற்ற ஒரு நிலையில் எப்பொழுதும் பிரகாசமாக, சுயமாக, தன் மயமாக விளங்கக் கூடியது என்றும், மேலும் இதனையே 5 கோசங்களாக, 5 உடலாக கூறப் பெற்றுள்ளது என்றும் அருளினார்கள். நாம் அனைவரும் நினைவென்னும் ஆகாய வெளியில்தான் இருக்கிறோம், அதுவே நமது சொந்த வீடாக உள்ளது என்றும், இப்பெருவெளியாக உள்ள இறைவனை அறிவதே நமது முதற்கடமை என்றும், அதனை மறைகடந்த ஓர் ஆசான் மூலமே பெற முடியும் என்ற பகிர்தலுடன் அவை இனிதே நிறைவு பெற்றது

**இசை வகுப்பின் தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**10-10-2021 ஞாயிற்றுக் கிழமை**

முதலில் ஞானமுறையீட்டில் 23-வது பாடலான "***முடியாகிய மூமீனென வுளனாள் வீண்போக்கி இடியாகிய எமன்கைப்பட எரிபொறியே பறக்க***" என்ற தோத்திரப் பாடலும் தொடர்ந்து 31-வது பாடலான "***அரண்டிடும டத்தாருபதேச மதழிம்பெனக்கண் டக்கினியி லிட்டெடுத்தபின்***" என்ற பாடலும் தொடர்ந்து 36-வது பாடலான "***வீணது வாகிடாமல் மேலவரிடத்திற் சார்ந்நாலூண் சுவை யிருதயத்துள் ஞறைந்நனன் னிலமும் காட்டி***" என்ற பாடலும் தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்றது.

**17-10-2021 ஞாயிற்றுக் கிழமை**

முதலில் தோத்திர பாடலான "***உய்யவே எனக்குமுலகுய்வே***" என்ற பாடலும் தொடர்ந்து ஞானமுறையீட்டில் 37-வது பாடலான "***பாய்மன வீட்டில் பேய் குடியிருக்கும் பேரறிவடிமையங்நாகும்***"என்ற பாடலும் "***என்குலம் பெரிது உன் குலஞ்ஞிறிதென்றே இடுப்புக் கட்டுகின்ற ஏழை மக்களே***"எனும் 32-வது ஞான முறையீடு பாடலும் தாளத்துடன் பயிற்சியளிக்கப்பட்டது.

**24-10-2021 ஞாயிற்றுக் கிழமை:**

"***தாகந் நீர்த்ததனிப் பெருங்நடலே யென் மோக மோட்டி முடித்த தவசியே***" என்ற தோத்திரப் பாடலும், தொடர்ந்து ஞான முறையீட்டில் 33-வது பாடலான "***என்னவேபஞ் ஞாயுதமி தாகவேக லந்நுருவெ டுத்துவெளி வந்நதிதிலே***" என்ற பாடலும் அதனைத் தொடர்ந்து "**வாசிகா லுச்சி கண்டத்தின் வழியாய் ஊசியின் தமர்வழியோடிப் பேசரு மூளை மண்டலக் குகைமேல்** "என்ற 38வது ஞான முறையீடு பாடலும் தாளத்துடன் பாடப்பெற்றது.



Copyright © AMNA Trust, Chennai

**31-10-2021 ஞாயிற்றுக் கிழமை:**

குரு ஸ்தோத்திரமாக "***அண்ட ராலும றியவொண் ணாத்திரு அண்ட ரண்டப கிரண்டம் பாய்ந்நுமே***" என்ற பாடலும் தொடர்ந்து ஞானமுறையீடு நிறைவு பாடலான "***மறுப்படாச் சிப்பி தானும் மழைத்துளி திறந்நு வாங்ஙி***" என்ற பாடலை விருத்தமாகப் படித்த பின்னர் மெய்வழினூலில் 1வது மற்றும் 2வது காப்பு செய்யுளான "*விண்ணுமண்ணும் கதிர்மதியு மின்பனிதா ரகையும்*" என்ற பாடலும் "*வீசும்விழி காந்நுமதி மண்டலமும் கடந்நு*" என்ற பாடலும் இரண்டு வகையான ராகத்தில் தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்றது.

## தீபாவளி

தீபாவளிப் பண்டிகை நம் முன்னோர்களால் பல காலங்களாக ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. நம் இந்திய நாட்டில் உள்ள பெரும்பாலான மக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் தீபாவளி பண்டிகை மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இறைவனை வழிபடுவதற்காக பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட அனைத்து பண்டிகைகளும் அதற்கான காலம், மாதம், நாள், நேரம், இதை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதே போல தீபாவளியும் தட்சணாயன காலம், ஐப்பசி மாதம், அமாவாசை நாளன்று ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு பண்டிகைக்கும் தனித்துவமான வழிபாட்டு முறைகள் உள்ளது. தீபாவளி பண்டிகையின் வழிபாட்டு முறைகள், நரகாசூரன் வதம், கங்கா ஸ்நானம், புத்தாடை அணிதல், நோன்பு, பட்டாசு, அதிரசம், லேகியம் மருந்து இதுவே இப் பண்டிகையின் சாஸ்த்திர சடங்குகள் ஆகும்.

இப் பூமியில் பிறந்துள்ள ஒவ்வொரு மனிதனும் ஆறாவது அறிவு இன்னது என்று அறிந்து மெய் உணர்வை பெற்று இறைவனை கண்டு பேரின்பத்தை அடையவேண்டும் என்ற ஒரே நோக்கத்தை அடிப்படையாக கொண்டே எல்லா பண்டிகைகளும் புற வழிபாடாக நகல் அடையாளங்களாக எடுத்து வைக்கப்பட்டுள்ளது. இவை நமக்கு அசலாக, நிஜமாக வேண்டுமெனில் அக வழிபாடு தெரியவேண்டும். இதுவே இறைவனை அடையும் மெய்யான வழிபாடாகும். நாம் கொண்டாடும் அனைத்து பண்டிகைகளும் நம்மை உண்டாக்கிய அசலான இறைவனை அறிந்து அடையக்கூடிய மெய்ஞான தத்துவ ரகசிய குறியீடுகளாகவே இருக்கிறது என்பது சத்தியம். தீபாவளி பண்டிகையும் ஒரு பரமரகசியத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுதான். இனி அவற்றை ஒவ்வொன்றாக பார்ப்போம்.

**நரகாசூரன் வதம்:** சத்தியபாமாவின் மகனான நரகாசூரன் தன் தாயை தவிர வேறு எந்த வகையிலும் தனக்கு மரணம் நிகழக்கூடாது என்ற வரத்தை பெற்றவன். அதனால் அவன் தேவர்களையும், மனிதர்களையும் துன்புறுத்தி அழிக்க நினைத்தான். இதை அறிந்த பரமாத்மா கிருஷ்ண அவதாரம் எடுத்து சத்தியபாமாவின் மூலம் அவனை வதம் செய்து அழித்தார். நரகாசூரன் இறந்த தினமே தீபாவளி ஆகும். இது புராணத்தில் கூறப்பட்டுள்ள ஆதாரமாகும்.

இதன் உண்மை என்னவெனில், கலியுகத்தில் கால் வழியில் பிறந்த அனைவருமே நரர்கள் தான். நரஜென்மமாக இப் பூமியில் பிறந்து இவ் உடலில் இருக்கும் போதே நரன் என்னும் நிலை மாறி மனிதானாக மறு பிறப்பு அடைந்து தேவனாக வாழவேண்டும் என்பதே இறைவனின் நியதி. இது வேதத்தின் தீர்ப்பு. இதுவே தேவரகசியம் என்பதாகும். அவதார மூர்த்திகள் மூலமாகத்தான் இச் செயலானது தொடர்ந்து வாழையடி வாழையாக **ஆதி பரம குரு முருகப்பெருமான்** காலம் முதல் பரம்பரையாக நடந்து வருகிறது. அவர்களே இறை தூதர்கள், வழிகாட்டியர்கள், தீர்க்கத்தெரிசிகள், குருமார்கள் ஆவார்கள். இதையே நமது தெய்வமவர்கள்



Copyright © AMNA Trust, Chennai

**தரைதனில் நரராய்த் தோன்றித்**
**தாம்கெதி அடையா தோரை**
**முறைசங்நா ரனுக்கி ரகம்**
**முடித்துமே மனுவாய் மாற்றி**
**விரைபிரம்மம் அவர்மு கத்தில்**
**வைத்துமே படைத்துப் பின்னும்**
**மறைபடாத் தேவ ராக்க**
**வந்நனர் உலகுக் கம்மே** என்று அருளியுள்ளார்கள்.

இறைவன் அருளால் அவ்வழியில் வந்துள்ள ஒரு மெய்க்குருபிரான் நமக்கு வாய்க்க வேண்டும். அவர் இரக்கம் கொண்டு நரக யோனியில் பிறந்த நம்மை தாயாக நின்று ஆவிடை என்னும் தேவ யோனியில் பரிசுத்த ஆவியினால் மனிதனாக மாற்றி பிறக்க வைப்பார்கள். இதுவே நரகாசூரனை அழித்து வதம் செய்தல் என்பதாகும். இதையே *விநாயகர் அகவலில்*

**தாயா யெனக்குத் தானெழுந் தருளி**
**மாயாப் பிறவி மயக்கம் அறுத்து .....**

**குருவடி வாகிக் குவலயந் தன்னில்**
**திருவடி வைத்துத் திறமிது பொருளென**

என்று ஔவையார் அருளியுள்ளார்கள்.

மேலும் *சத்திய வேதத்திலும்* **ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தை காணமுடியாது** என்றும் கூறப்பட்டுள்ளது.

இதையே நமது தெய்வமவர்கள், ***எமபடரடிபடு கோடாயிதக்கூர். வாக்கியம் எண். 325*** *எல்லாவற்றுக்கும் - வித்து இருக்கிறது. அப்படியானால், தேவனாக ஆவதற்குரிய வித்து எது? தேவனாவதற்கு வித்து னரன். வேறு ஏதாவது வித்து இருக்கிறதா என்றால் இல்லை. இந்த னரன் தான் மனிதன் ஆகித் தேவன் ஆவது. னித்திய முத்திக்கு னரனே இணக்கமான வித்து. ஒரு வான னாட்டுச் செம்மலின் கையிலேபோய் இவன் மாட்டிக் கொண்டால், இந்த னரனைத் தேவனாக மாற்றுவது அவர்களுக்கு அவ்வளவு இணக்கமாயிருக்கும்!* என்று அருளியுள்ளார்கள்.

**கங்கா ஸ்நானம்:** கங்கை என்பது இமயமலையிலிருந்து பாய்ந்து வரும் புனித நதியாகும். இது மழையினால் உண்டாவது அல்ல. உறைந்த பனிமலையில் இருந்து வரும் வற்றாத ஜீவநதியாகும். இதில் தலை மூழ்கி குளிப்பதை புனித நீராடல் என்றும் அதனால் நமது பாவம் நீங்கும் என்றும் கூறுவார்கள். மேலும் சிவபெருமான் கங்கையை மனைவியாக அவர் தலையில் சூடி இருப்பதால் இதை தீர்த்தம் என்றும் கூறுவர். தீபாவளி அன்று இந்த நதியில் குளிக்க வேண்டும் என்பது ஐதீகம். ஆனால் அனைவரும் அங்கு சென்று குளிப்பது என்பது இயலாத காரியமாகும்.

இதன் உண்மையான தாத்பரியம் என்பது, நாம் நரன் என்பதை அறியாமல் ஐயறிவு பிறப்பிலே இருளில் வாழ்ந்து வந்தோம். அதை ஒரு மெய்க்குருபிரான் மூலம் அறிந்து அவரின் நாதமாகிய தீர்த்தத்தில் நாம் மூழ்கி நீராடினால் தான் நம் பாவமானது நீங்கும். அதாவது ஆறாவது அறிவைப் பெற்று மனிதனாக பிறப்பதே புண்ணியமான செயலாகும். ஆசானின் நாதமே பொங்கி வரும் கங்கை ஆறு என்பதாகும். நரகாசூரனை அழித்து மனிதனாக மாற்றிப் பிறக்கும் அகமிய செயலே கங்கையில் ஸ்நானம் செய்தல் என்பதாகும். இதையே, **நீரின்றி அமையாது உலகு** என்றும் **தீர்த்தமாவது தேசிகர் வாசகம்** என்றும் பெரியோர்கள் கூறிவைத்துள்ளார்கள்.

இதையே நமதுதெய்வமவர்கள் –

**ஆடையோ னனைந்த தில்லை**
**அங்கமும் னனைந்து மூழ்கி**



Copyright © AMNA Trust, Chennai

**வாடையு மணமு மீறி**
**மனத்துள்ளே கமழ்ந்து வீச**
**பாடவும் சுவைனாக் கேறப்**
**பெரியபே ரின்பம் பூக்க**
**ஆடிஆ காய கெங்கை**
**அரும்புனல் னீந்றி னாரே** என்று ஆதி மான்மியத்தில் அருளியுள்ளார்கள்.

**பட்டாசு:** தீபாவளியின் முக்கிய அம்சம் பட்டாசு ஆகும். பட்டாசு என்பது ஒலி ஒளி இரண்டையும் தன்னுள் பொதிந்துள்ள ஒரு வெடி பொருளாகும். இது பலவகையான சத்தங்களை அதிர்வலைகளை எழுப்பும். இருளில் ஆகாய வெளியில் வெளிச்சத்தையும் பல வண்ணங்களையும், வான வேடிக்கைகளையும் காட்டக்கூடியது.

இதன் தாத்பரியம் என்பது, ஈசனாகிய இறைவனின் அடையாளம் சத்தம் ஆகும். **ஓசையும் ஒலியுமாக**, **நாத வடிவாக** இருப்பவன். இதுவே ஒரு மெய்க்குருபிரானின் அடையாளம் ஆகும். ஆசான் அவர்களின் **வாக்கு ஒரு தீயாகும்**. அது பிரம்மப் பிரகாசத் தீ. நம்மை சுட்டுக்கொளுத்தி ஹிம்சியாது பூப்போல் நின்று நம் பாவங்களை எல்லாம் சுத்திகரிக்கும். பிறவிச்சுழலில் சிக்கியுள்ள நரனை மீட்டு மனிதனாக மாற்றும் வல்லபம் உடையதே குருவின் வாக்காகிய சத்தம்.

இதையே விநாயகர் அகவலில்

**அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்**
**சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்**
**சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி...** என்று ஔவையாரும்,

**வண்டக்கலி துண்டாடிட வந்த அம்மா**
**வாக்கிருந்து குறிபொழிய வாருந்நாயே**

**னந்நியுட மந்நிரத்தை னருள்களுக்கு**
**னாட்டமுறக் கலிக்கடையில் னடத்திவந்நு...**

என்று நமது தெய்வமர்களும் அருளியுள்ளார்கள். ஆசான் தன் சீடனின் அறியாமை என்னும் கருங்கற் பாறையாகிய மும்மலத்தை சிதைக்க கையாளும் தேவ கோடாயுதங்களின் அகமிய செயலை குறிக்கும் புற அடையாள பெயர்களே **மத்தாப்பூ**, **சங்கு சக்கரம்**, **சரம்**, **கயிறு**, **ஏவுகணை** (ராக்கெட்) ... என்னும் நாம் வெடிக்கும் பட்டாசு வகைகள் ஆகும். இதையே ஆதிமான்மியத்தில் "***ஆகாயத்தை யளாவிய புரையில்லாத கருங்நற் பாறையான மூன்று னெடிய பருவதங்னள்-வந்நு எதிரே எழும்பித் தோன்றின- அதனை வேதாந்நச் சஞ்ஜீவிச் செஞ்ஞடாமுடி மகுடராகிய பிரானவர்கள் தங்னளின் பிரம்மோதய வயிரவளைக்கண் பீரங்னி கொண்டு முழக்கி உடைத்துப் பொடிபடத் துகள்படுத்திக் கொண்டு*** ... என்று சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

பட்டாசு என்பது ஆசானின் வாய்மையாகும். இதையே **சொல்லக விளக்கது சோதி உள்ளது** என்றும் **அருட்பெருஞ்ஜோதி** என்றும் பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

**நோன்பு** எடுத்தல் என்பது விரதம், பத்தியம் இருந்து செய்யக்கூடிய மேன்மையான யோக நிலையை குறிக்கும் அடையாளமாகும். **புத்தாடை** அணிதல் என்பது இக்கடத்தை நீக்கி அக்கடத்துள் ஆகும் செயலாகும். அழி உடலை கடந்து அழியாத புகழுடம்பை பெறக்கூடிய அடையாளமாகும். **அதிரசம்**, **லேகியம்மருந்து** என்பது குருபிரான் அவர்கள் மக்களின் பிறவிப் பிணியாகிய வெண்ணோயை போக்குவதற்காக திருப்பாற்கடலை கடைந்து அதிலிருந்து வரும் அமுதத்தை பாகுபடத்திரட்டி வட்டாக்கி தரும் **மாதவன்**



Copyright © AMNA Trust, Chennai

**தவ மருந்து-அரு மருந்து- இம் மருந்து**. அதை வாங்கி உண்டவர்களுக்குப் பிறவிப் பிணி தீரும். நிச்சயம் தீரும். இது சாலை ஆண்டவர்களின் திருவாக்கு.

***தீபா வளி*** பண்டிகையின் அடி நாதமாக இருப்பது ***சாகாத்தலை- வேகாக்கால்- போகாப்புனல்*** ரகசியமாகும். எமன் எல்லையில் வெற்றி காணச் செய்யும் தீயாகிய விபூதியின் சிறப்பையும் உள்ளடக்கிய மகத்தான பண்டிகை ஆகும்.

**பூமியின் பாரந் நீர்க்கப்**
**புதுப்புது னாமம் பூண்டு**
**னேமியர் மேனா னெல்லாம்**
**னிலத்தினி லுற்றதே போன்**
**தாமிந்நக் கலியை மாற்றித்**
**தனியுகம் படைக்க வென்று**
**சாமியும் வந்நா ரென்று**
**சாற்றுவே னுங்ஙள்க் கம்மே**

என்னும் சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களாகிய நாம் அனைவரும் **கங்காளனாகிய** குருவின் கருணையினால் தீபாவளியாகிய விபூதியை நித்தமும் பூசி மகிழ்வோம்.



Copyright © AMNA Trust, Chennai

# நவம்பர் மாத நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



திரு.சாலை ரவி அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே! கார்த்திகை மாதத்தின் சிறப்பை விளக்கக் கூடிய வகையில் நவம்பர் மாத ஆதி மார்க்க னீதி அவையின் சஞ்சிகை தொகுக்கப் பெற்றுள்ளது. கார்க்கும் தீ என்ற ஒன்றை வைத்து பேசப் பெற்றதே ஞானம். இது அழிவிலிருந்து அழியாமைக்குள் ஆக்கும் அரும்பெரும் கார்க்கும் செயலை வைத்து உண்டாக்கப் பெற்றுள்ளது. வந்த வேதம் வந்ததும் காப்பதற்குத்தான்.

ஆண்டவர்கள் அருளிய மெய்வழி நூலில் "***காப்பதற்குக் காட்டானை முன்னால் வேண்டும் காணாது முடுக்குவழி னெருக்கம் மெத்த***" எனவும் "***ஆர்ப்பரித்த காமிகட்கும் லோபி கட்கும் அறைந்துமதி யுதைத்துப்பின் அப்பாற் றள்ளும்***" எனவும் அருளப் பெற்றுள்ளது. வீணர்களை அவரவரின் அறிவே எட்டித் தள்ளும்.

இம்மாதத்தின் சிறப்பாக தீபாவளியும் கார்த்திகையும் உள்ளது. தீபாவளி, தீபஒளி, இதில் தீபாவளி என்பதே சரி. ஏனெனில் தீபம் பிரகாசிப்பதற்கு காற்றாகிய வளி அவசியம் வேண்டும். இதேபோன்று மனிதனிடத்தில் பிராணனாகிய வளியைக் கொண்டே அறிவாகிய சுடர் பிரகாசிக்கிறது. பிராணன் அற்றுப் போகும்போது சுடரும் அற்றுப்போகிறது. இதனை உணர்த்த எடுத்து வைத்துள்ள திருவிழா தான் நமது இந்தியத் தாய் நாட்டில் கொண்டாடுகின்ற தீபாவளியாகும். இறைவன் அசுரனைச் சங்காரம் செய்து அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டிய செயலாக கொண்டாடப்படுவதுதான் தீபாவளி என்றாலும், இதனுள் உள்ள முக்கியமான விஷயம் அன்றைய தினம் கங்காஸ்னானம் செய்வதுதான். கங்காஸ்னானம் என்பது வருடம் ஒருமுறை செய்வதல்ல. கங்கையில் ஸ்னானம் செய்தால் தீபாவளியின் ரகசியம் தெரியும் என்பதுதான் இதன் தாத்பர்யம். இதையும் ஆண்டவர்கள் "***அங்ஙெயடா கெங்ஙைதனில் ஸ்னானம் செய்ய அகலாது அழியாது காயம் காயம்***" எனவும் "***ஆடிஆ காய கெங்ஙை அரும்புனல் னீந்றி னாரே***" என பல நிலைகளில் அருளியுள்ளவற்றை, எமது அங்கத்தினர்களும் நாமும் எடுத்துப் பேசிய விஷயங்களே இங்கு தொகுத்து வழங்கப் பெற்றுள்ளன. தீபாவளியின் சிறப்பு வெகு சிறப்பாக முதல் பக்கத்தில் அலங்கரிக்கப் பெற்றுள்ளது. அதே போல் கார்த்திகை மாதத்தின் சிறப்பாக தீபம் ஏற்றும் இடமாகிய திருவண்ணாமலை என்பது வண்ணாமலையா அல்லது அண்ணாமலையா என்ற கேள்விக்கு, அண்ணாமலையின் மூலமாக வண்ணாமலையைத் தெரிந்துகொள்ளலாம் என்பதே பதிலாக உள்ளது. வண்ணானின் செயல் வெளுப்பது. வெளுப்பதற்கான பொருளாக வண்ணாமலையும் அதற்கான சவர்க்காரமாக அண்ணாமலையும் உள்ளது. ஆசானின் ஒரெழுத்து மாத்திரைக்கோலாகிய திருஅண்ணாமலையின் மூலமாக உண்ணாமுலை இன்னதெனக் காட்டி அதன் மூலமாக அவ்வமுதத்தைத் தந்து பாவத்தைப் போக்கி எமனணுகா சத்திய சாயுச்ய பதத்தில் ஏற்றி வைக்கும் அரும்பெரும் செயல்தான் வண்ணாமலையும், அண்ணாமலையும். இறைவன் அழல் உருவாக நின்றதும், அடி முடி நடுவின் ரகசியம் வெளியாக்கப் பெற்றதும், அருணகிரிநாதர்



Copyright © AMNA Trust, Chennai

முக்திபெற்றதும், இடைக்காடர் முக்தி பெற்று சமாதியான இடமுமாக விளங்குவதே திருவண்ணாமலை, ஆனால் இன்றோ அங்கு,

**புறத்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்**

என்பதற்கான நிஜ செயலையும், பிறவிப் பிணியை நீக்குவதற்கான பெருஞ்செயலை உணராதவர்களாயும், அறியாமை எனும் பாவமாகிய குற்றத்தை விதைக்கிறோம் என்பதைக் கூட அறியாமல் விதைத்துக் கொண்டிருக்கும் போலி சாமியார்கள் பலர் உள்ள இடமாக உள்ளது. மனிதனின் மிகப்பெரிய குற்றம் தன் அறியாமையை அறியாமல் இருப்பதுதான். அறியாமையை உணர்த்தி அறிவைப் புகட்டி அறிவு வடிவாக ஆகக் கூடிய செயலை அடிநாதமாக கொண்டு இயங்கிக் கொண்டிருப்பதுவே ஆதி மார்க்க னீதி அவை. தீபாவளி,கார்த்திகை, இவற்றின் சிறப்பை அடுத்து, சத்துவாச்சாரி சபையில், ***ஹம்மாரா, லவ்வாமா, முல்கிமா, முத்மயின்ன, மறலியா, றாலியா, காமீலா*** எனும் அரபு வார்த்தைகளில் கூறப்பெற்றுள்ள நபுசுகளின் ரகசியத்தைப் பற்றி மக்கள் பேசி இருப்பதும் மிக்க மகிழ்ச்சிக்குரிய சிறப்பாக உள்ளது. இத்தனை செய்திகளும் மக்கள் பார்த்து பலனும் பயனும் அடைய வேண்டும் என்பதே ஆதி மார்க்க னீதி அவையின் ஒரே நோக்கம். மனிதனை உய்விக்கும் படியான ஒரு அரும்பெரும் செயலை, பிறவா நெறியை, மரணமிலாப் பெருவாழ்வை, எல்லோரும் உயிரும் உடலும் உள்ள போதே அடைய வேண்டும், எனும் ஒரே நோக்கத்தை கொண்டே, இதனை மக்கள் தொகுத்து வழங்கி உள்ளார்கள். இச் செயலானது மேலும் சிறக்கவும் இதனைக் கேட்டும் படித்தும் கொண்டிருக்கும் மக்கள் யாவரும் பயன் பெறவும், பலன் பெறவும் வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2021 நவம்பர் மாத சபை நிகழ்வுகளின் சாரம்சம்

**06-11-2021 சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ வடிவேலன்**

**அறுக்குமட்டு மாய்கைதனை யறுத்தே விட்டு**
**அருமறையி னெறிவழியே ஆசான் பின்னே...**

என்ற மெய்ம்மண ஞானம் பாடலுடன் குருபிரானவர்கள் அவையை தொடங்கினார்கள். ஒரு குடும்பத்தில் உள்ள பலரும் உடலளவில் வேறு வேறாக இருந்தாலும், அவர்கள் உண்ணும் உணவின் சுவை அவர்களுக்கு ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது. ஏனெனில் அனைவருக்கும் உயிர், ஜீவன், ஆத்மா, மெய்யறிவு ஒன்றாகத்தான் இருக்கிறது. கர்த்தா ஒன்று தேகம் பலது. அந்த கர்த்தாவை நோக்கிய பயணம் தான் மெய்ஞானம்.

**சுவைஒளி ஊறுஓசை நாற்றம் என்று ஐந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு. (27)**
என்பது வள்ளுவர் வாக்கு. மெய்ஞானம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலத்தை வெல்லக்கூடிய பிரம்ம வித்தை செயலாக இருக்கிறது. மெய்ஞானம் என்பது நம் வாழ்க்கையின் மிக மிக அவசியமான பொருளாகும். அதை கைக்கொள்ளக்கூடிய சாதனப்பொருள் அறிவும் பத்தியமும் ஆகும். பத்தியத்தின் பாரம் தாங்குதல் என்பது வாயில் சொல்வது அல்ல. அனுபவித்துப் பார்ப்பது. ஆசான் சொல்லக்கூடிய நேர் வழியாகிய ஞானப்பாதையில் இணங்கி நடப்பதே பத்தியம் ஆகும். அதை நம் வாழ்க்கையாக வாழ்ந்தால் தான் மெய்ஞானத்தை வெல்லமுடியும். இதையே நமது தெய்வமவர்கள் மெய்வழி னூலில், **"வெல்லடா மும்மலத்தை வெல்லு வெல்லு வெல்லாத மூடருக்கு விள்ளா தெட்டே..."** எனவும்

பூரணப்புதையல் பாடலில், **பொருளாவி யுடல் கொடுத்து - மும்மலம் விட்டுப் பெற்றபத முற்றதிங்ங ணுரைப்பதெங்ஙே** எனவும் அருளியுள்ளார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர். வாக்கியம் எண்: 77. தேவனாக வாழும் வாழ்க்கை:** தேவ வாழ்க்கையாகிய பேரின்பத்தை அனுபவிக்க அதற்கான அறிவு உடல் வேண்டும். அதை அறியாமல் நாம் மனதோடு சேர்ந்து வாழ்வதால் துக்கம், கவலை, பயம், சஞ்சலம், நிறைந்த வாழ்க்கையாகவே இருக்கிறது. மனதற்ற ஓர் வாழ்வே னித்திய பேரின்ப வாழ்வாகும். மனம் அறிவாக மாறும் செயலே தேவ புருஷ வாழ்க்கை. அத் தேவ வாழ்க்கை இறந்த பிறகு வாழ்வது அல்ல. ஓர் தேவ ஆசானை அடைந்து அவர்களின் ஞான வார்த்தைகளை கேட்டு, தன்னுடைய அழி தேகத்தின் சேஷ்டைகளை நீக்கி பஞ்சுமாபாதகங்ஙளைத் தவிர்த்து அறிவு மயமாய் இருக்கும் ஜோதியில் கலந்து வாழ்வதே தேவ வாழ்க்கை. இத் தெய்வீக நிலையை,தன் ஜீவனை அறிந்து அதன் மேல் பற்று வைத்து அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும். இது வாயால் பேசுவதோ படிப்பதோ அல்ல. என்றென்றும் செயலுடைய வாக்கியம்.

***குருமணி மாலை: பாடல் எண்- 21:***

**செல்வச்சீர் னபியை அந்நர்மா முகமாய்த் தெரிசனை காண்பதும் திடனே...** எனத் தொடங்கும் பாடல்.

**செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை. (411)** என்பது வள்ளுவர் வாக்கு.



Copyright © AMNA Trust, Chennai

அவர் கூறியுள்ள தலையான செவிச் செல்வத்தை கொண்டு ஞானமெனும். அழியாத, செல்வத்தை.எவ்வாறு அடையலாம். என்பதையும், குரு என்பவர் நம்மை ஆவிடை என்னும் தேவ யோனியில் மனிதனாக பிறக்க வைத்த அன்னையாகவும், நல்வழி படுத்தும் தந்நையாகவும், நிஜமான வழி காட்டியாகவும் நமக்கு நிழலாகவும் இருந்து இறைவனிடம் சேர்க்கும் இறை தூதராகவும் இருக்கிறார். அவரின் **"இம் மொழியை"** கேட்டால் பெருனோய் என்ற பிறவிப் பெருங்நடலில் இருந்து மீண்டு நம்முள் அந்நர் மாமுகமாய் சிரம் பெருந்துறையில் வீற்றிருக்கும் அசலான இறைவனை தரிசனை செய்யலாம். இதையே நமது தெய்வமவர்கள் தௌஹீது மக்காம் என்ற பாடலில் **"காது கொடு கேள் மகனே இம்மென்றே தான்"** என அருளியுள்ளார்கள். ஒவ்வொரு மனிதனின் கடத்துக்குள் இருக்கும் அசலான (கட+உள்) கடவுளை காணவைக்கும் வல்லபமுடையதே இம் மொழி ஆகும்.



**ஸ்ரீமாணிக்கவாசகர் அருளிய குயில் பத்து: பாடல் எண்- 07:** ***உன்னை உகப்பன் குயிலே...*** எனத் தொடங்கும் பாடல். பரம்பொருளாகிய சிவன் அருளைப் பெறுவதற்கு நான்கு நெறிமுறைகள் உள்ளது. அதை ஒரு மெய்குருபிரானை அடைந்து அவரிடம் தொடர்ந்து இருந்து பழகி நான்கு படி நிலைகளையும் அனுபவித்து உணரவேண்டும். அவை தாசமார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சன்மார்க்கம். இவைகளே சிவன் அருளைப் பெறக்கூடிய நான்கு படிநிலைகள் ஆகும்.

**திருஞான சம்பந்தர் அருளிய தேவாரம்: பாடல் எண் 10:** ***ஒண்டு வரார் துகிலாடை...*** எனத் தொடங்கும் பாடல். நிஜமான சமத்துவம் சமாதானம் என்பது உயிர் ஒட்டிய ரகசிய அறையில் இருக்கிறது. அதுவே சர்வ உலக சமரசமாகும்.அதை அடைவதற்கு ஓர் அறிவாக விளங்கும் குருபிரான் மூலமாகத் தான் அறிந்து அடையமுடியும். நிர்க்குணமான அவர்களின் திரு வார்த்தைகளே நம்மையும் குணங்களற்ற நிர்க்குணமாக, நடுவாக, சிவமாக, உயிராக, உலகாக, இருக்கும் சமரச சுத்த சன்மார்கத்தில் நித்தியனாக வாழவைக்கும்.

தொடர்ந்து குருபிரான் அவர்கள், அசுரனை சூரனாக, நரனை மனிதனாக, தேவனாக மாற்றுவதுதான் வதம் செய்தல் என்பதாகும் எனவும், ஒரு குருபிரான் தயவால் மெய்வணக்கம் என்பதை தெரிந்து வணங்கும் போது நகலாக இருந்த தெய்வத்தை அசலாக தன் இருதயத்தில் பார்க்க முடியும் எனவும்தெய்வம் என்பது பல காலங்களாக துவைதமாக இருந்தது. இப்பொழுது அத்வைதமாக மாறி இருக்கிறது. இப் பாரப் பெரிய ரகசியம் ஒவ்வொரு மனிதனுக்குள் இருக்கிறது. அதை கொண்டு வந்து



Copyright © AMNA Trust, Chennai

வெளிக்காட்டி அதன் மீது உன் அன்பு சாய்ந்து முத்தி நிலையை எல்லோரும் அடையவேண்டும் என்ற ஒரே எண்ணம் தான் எங்களுக்கு உள்ளது. வேறு எந்த எண்ணமும் இல்லை எனவும், சாலை ஆண்டவர்கள் என்ற நாமம் உலகம் உள்ளவரை இருக்கும். அதற்குப் பிறகும் இருக்கும். அறிவை அறிந்த மக்கள் வரும்போது அந்த நாமம் மீண்டும் துளிர்த்து எழுந்து வரும் எனவும் மூலமந்நிரத்தை அவரவர் விருப்பப்படி எதை எதையோ பார்த்து நினைத்து சொல்லக்கூடாது. அதனால் எந்த பலனும் கிடைக்காது. நிச்சயப் பொருளைப் பார்த்துதான் சொல்லவேண்டும். அதுவே மெய்யான பலனை அளிக்கும் எனவும் முதலில் நம் மனதை சகிக்க பழகவேண்டும். அவனே பேயாட்டம் ஆடி நம்முள்ளே அனைத்தையும் கொண்டு வந்து சேர்க்கிறான். ஆனாலும் நாம் அவனை வெறுக்காமல் சகித்துக்கொள்கிறோம். அதே போல நம் குற்றத்தை முதலில் தெரிந்து கொண்டு மற்றவர் குற்றத்தையும் சகித்துப் பழக வேண்டும். இதையே,

***ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. (190)*** என வள்ளுவரும்,

**குறை மனத்துப் பிழை ஒதுக்கப் பழகித் தேர்ந்த குருகுலாதிபர் மரபின் குணக்குன்றேற்றம்** என்று ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள். எல்லா மதங்களிலும் பண்டிகைகள் தொடர்ந்து வந்து கொண்டேதான் இருக்கிறது.பண்டிகையின் காரணம் அதற்கான பொருள் தெரிந்தால் தான் அதை அனுபவிக்கும் உத்தம புருஷனாக நீ இருப்பாய். அதை அடையக்கூடிய வழியாகிய யுகாந்த நாட்டுச் செல்வத்தையே ஆதி மார்க்க னீதி அவை வழங்கிக் கொண்டிருக்கிறது எனவும் அருள் செய்து அவையை நிறைவு செய்தார்கள்.

**07-11-2021 ஞாயிற்றுக்கிழமை சபை**
**தொகுப்பு: ஶ்ரீ தியாகராஜன்**

**துலங்ங இங்ங எவர்க்குமெட்டா னிலைக ளெல்லாம் துலங்ஙளட்டிப் பேசிவரும் துளப வேந்நே...** என்ற பாடலுடன் குருபிரானவர்கள் அவையைத் தொடங்கி வைத்தார்கள்.

**கோடாயிதக் கூர் வாக்கியம் எண் 92 :** *குரு என்பவர்கள் உன் தலை ஓட்டில் உள்ள விதி எழுத்தை மாற்றி, மதி எழுத்தை அங்ஙுப் பதிப்பிப்பார்கள். உன் பாவ இருட்டை உலர்த்தி, உன்னுடைய இதயாசனத்தில் சிவன் என்னும் வாடாத தீபத்தை ஏற்றி வைப்பார்கள். சிரஞ்ஜீவிப் பட்டத்தை உன் தலையிற் சூட்டிவைப்பவர்கள் அவர்களே* என்ற தெய்வத் திருவாக்கின் படி,



திரு.சாலை ரவி அவர்கள்
நிறுவனர் : ஆதி மார்க்க னீதி அவை

குரு என்பவர் அறியாமை என்ற இருளை நீக்கி அறிவு என்ற ஒளியை தரக் கூடியவர்கள்.குருவின் வார்த்தையே வாடாத தீபமாக உள்ளது. குருவின் இரக்கத்தாலும், அருளாலும் நம் சுயசொரூபத்தை விளங்க வைக்கிறார்கள். சீடனானவன் ஆசானின் சுத்தநினைவில் நீங்காமல் நிலைத்திருப்பதன் மூலம் எண்ணம் வண்ணமாய் மாறுகிறது. குருபிரான் தன் வாய்மையால் பல



Copyright © AMNA Trust, Chennai

கோடியாய் விரிந்த நம் எண்ணத்தை ஒரு முகமாக்கி சும்மா இருக்க சுகம் என்ற பிரம்மவித்தை செயலில் பழக்கி வைக்கிறார்கள் இப்பிரம்மவித்தை செயலின் மூலம் விஞ்ஞானத்துடன் கூடிய மெய்ஞ்ஞானத்தை நம்மால் வெல்ல முடியும்.

**பிறவாமை:** பிறவாமை என்னும் பெருநிலையை அடையவே இம்மனித தேகம் எடுத்தோம் வேறு எதற்கும் இல்லை என்பதை வந்த வந்த ஞானிகள் அனைவரும் கூறி வைத்துள்ளார்கள்.

தன் அறிவில் சாயும் மனிதன் பிறவிச் சுழலில் சிக்கித் தவிக்கிறான்,அதே மனிதன் ஒரு ஆசரியரின் திரு நோக்கிற்கு இணங்கி நடக்கும் போது பிறவா னெறியாகிய தேவ நிலையை அடைகிறான்.

காரைக்கால் அம்மையார் அவர்கள் இறப்பு என்பது இன்பம் தரக் கூடிய செயலாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். அந்த இன்பத்தையே சாகாமல் சாகப் பழகுவது என்றும், தூங்காமல் தூங்கி சுகம் காணுதல் என்றும் கூறுகிறார்கள். பேரின்பம் தரக்கூடிய செயலை ஆசான் வந்து பழக்கி வைக்காத வரை தெரியாது. ஆசானின் திருனாவிலிருந்து வரும் அமிர்த வர்ஷிப்புக்கு நாம் செவி மடுத்தால் பிறவாமையின் ரகசியத்தை அறியலாம் என்று பெரியோர்கள் அருளியுள்ளார்கள்.

வடலூர் வள்ளல்பிரான் அவர்களும் வினைகளே பிறப்புக்கு காரணமாக இருக்கிறது என்றும் வினைகள் அற்றுப் போகும் போது பிறப்பற்று, மரணமிலாப் பெருவாழ்வானது கிடைக்கப் பெறுகிறது என்றும் அருளியுள்ளார்கள். இப்பெருவாழ்வு ஆசானின் திருமொழியின் மூலம் நமக்கு கிட்டுகிறது என்பதை, ஆதி மான்மியத்தில்

**தினமொரு னேரம் என்றன்**
**திருமொழி யதனைக கேட்டால்**
**பனிவெள்ளம் போலே பாவம்**
**பறந்நிடும் னிஜமே சொன்னோம்**
**கனிமொழி சோதி வாக்கும்**
**கையெழுத் தாதி னோக்கும்**
**துணிவுடன் கேட்டோர் உற்றார்**
**தொலைந்நனர் பிறவி தானே** என்று மாகாளி யம்மன் தீர்க்க தரிசன பாடலில் அருளப்பட்டுள்ளது.

**வாத கற்பம்:**

**மாத வன்றவ மருந்நொன் றிருக்கு**
**வாங்ங வாருமே**
**மரண வறுமை தீருமே**

ஆசானின் திருவாக்கே பிறவியை அறுத்து பிறவாமையை தரும் அரும் பெரும் மருந்தாக உள்ளது. ஞானம் என்பது மாயை அல்ல. ஞானம் என்பது சுத்த அறிவு. ஆசானின் போதனையே நம்மை அறிவு சார்ந்த நிலையில் ஏற்றி வைக்கும். அறிவுக்கண் கொண்டு பார்க்க முடியாத பொருளோ, அறிய முடியாத பொருளோ இந்த உலகத்தில் இருக்கவே இருக்காது. இந்த அழிஉடல் நான் அல்ல என்ற தெளிவே அவ்வறிவு சார்ந்த வாழ்க்கையில் நம்மை வாழ வைக்கும்.

**முட்டாத பூசை:**

**வஞ்ஞுமில்புலி யுடைதரித் தேவன**
**வாச மேவரும் தேசி கர்பெரு**
**மாசில் இளனிலாப் பூரணவண்ணம்**
**மார்க்க னாதரின் வாக்கிது முற்றா -மீனாமீன்** என்ற தெய்வத் திரு பாடலுக்கிணங்க,


Copyright © AMNA Trust, Chennai

முட்டாத பூசை என்பது ஓயாத் தொழுகையின் இரகசியமாக மனிதனின் மகா மகசூக்கான இருதயத்துள் னித்தமும் னிகழும் சூட்சும செயலாகும். இச்செயலை என்றும் முற்றாத வாக்காகிய ஆசானின் அருளால் மட்டுமே பெறமுடியும் என்ற ஆசீர்பாதத்துடன் குருபிரானவர்கள் அவையை னிறைவு செய்தார்கள்.

**7-11-2021 ஞாயிற்றுக்கிழமை சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. நாக லிங்கம்**

வேதம் என்பது அச்சடிக்கப்பட்ட ஒரு நூலாக இருந்தாலும் *நிஜ வேதம் என்பது ஆசான் அவர்களே. அவர்களே வந்த வேதமாகும்.* அவர்கள் வந்து அறிவித்த பின்னரே வேதப் பொருள் இன்னதுதான் என்றும், மனிதனுக்கு தனிச் சீதனமாக தரப்பட்ட அமானிதம், வித்தியா தத்துவம் இன்னதுதான் என்றும் அதை அடையும்போது நாமே "வேதம்" என்பதும் விளங்குகிறது. அதுவரை அவ்வேதம் நம்முள் திரைபோட்டு மூடப்பட்டுள்ளது. அத்திரையை விலக்கி அந்த வேதப் பதியை தரிசிக்க செய்து, கை, கால்கள் கொண்டு வணங்காத வணக்கத்தில் நம்மை பழக்கியும் வைக்கிறார்கள். காமில் பதமாகிய "இறை நிலையை" அடையும் வழியானது, அதாவது ஏறுதல் வழுக்கும் வழியாக உள்ளதால் வழி அறிந்த ஒரு தூல குருவின் வழிகாட்டுதலின்மூலமே அதைப் பெற வேண்டும் ஏனெனில் தாண்டுகின்ற இடந்தனிலே தவறுதலும் உண்டு என்பதால் ஒரு காமில் துணை கொண்டே பழக வேண்டும் என்றும், ***ஹம்மாறா, லவ்வாமா, முல்கிமா, முத்மயின்னா, மருலியா,ராலியா,காமீலா*** என்ற காமில் நிலையை அடைய நபுசாக நம்மிடம் உள்ள மனதை பொய்யினிடத்திலிருந்து விலக்கி தன் வாசக தீர்த்தத்தால் மனதை தெளியவைத்து மேல்நிலைக்கு நம்மை ஏற்றுகிறார்கள் என்றும், இது நம்முடைய வெறும் வாய்ப் பேச்சால் ஆவது அல்ல என்றும், இதையே ஞான அகவல் பாடலான

***மெய்யென் றெவர்களும் வாய்புலம் புவதலா லறியார்***
***மெய்யெனும் பொருப்பீ தெனமனம் தெளிந்நவ ருலகில்***
***மெய்யை மெய்யென மேவிடார் மெய்யரா குவரேல்***
***பொய்யை மெய்யெனும் புலையரேன் புண்ணிய ராகார்***

என்ற பாடலில் சொல்லியுள்ளார்கள் என்றும் பகிரப்பட்டது.

மேலும் பாதபூஜையில் வரும் ***"குருடாய் இருந்த எங்களுடைய கண்களை திறந்த தேசிகேந்திரரே"*** என்பதில் ஒரு நிஜ ஆசானை அடையாத வரை நமது மெய், வாய், கண், மூக்கு, செவிக்கு வல்லமை அளிப்பவையாகவும்,ஈசன் இருப்பிடமாகவும் உள்ள அந்த அகக்கண், நெற்றிக்கண் திறக்கப்படாமல் குருடாகவே உள்ளது என்றும் அந்த அகக்கண், ஞானக்கண் என்பது நமது "மனக்கண்ணே" என்பதை ஒரு ஆசான் அவர்கள் அறிவித்த பின்னரே நமக்கு தெரியவருகிறது என்றும்,அந்த அகக் கண்ணுக்கு சான்றாக

***வாசிகா லுச்சி கண்டத்தின் வழியாய்***
***ஊசியின் தமர்வழி யோடிப்***
***பேசரு மூளை மண்டலக் குகைமேல்***
***பெலஞானக் கண்ணொன்றங் கிருந்து***
***வாசனை கேள்வி யிருகண்வா யெவைக்கும்***
***வல்லமை யளிக்குமக் கண்ணே***
***ஈசன்றன் னிருப்பும் ரவிகோடி வீசும்***
***இருதய மலர்விரிந் நெழும்பும்***

என்ற பாடல் பாடப்பெற்றது. மேலும் மனம் அவாவுடன் தாவி அனுபவிப்பதே சிற்றின்பம் எனவும், நிலையா மனதை நிலை



Copyright © AMNA Trust, Chennai

நிறுத்துவதும், மும்மலத்தில் உழன்றுகொண்டு இருக்கும் மனதை அதிலிருந்து கழட்டியும், வைராக்கிய சித்தத்தில் அந்தர் முகமாக ஒடுக்கி ஓர்நிலையை அடைவதே பேரின்பம் ஆக உள்ளது என்றும் பகிரப்பட்டது.

மேலும் சிவனுக்கு கோவில்களில் உருவச்சிலை வைப்பதில்லை மாறாக சிவ குறியீடாக,தத்துவப் பொருளாக அருஉரு நிலையை உணர்த்தும் லிங்கம் மட்டுமே உள்ளது. ஏனெனில் ***"தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்"*** என்ற திருமூலர் பிரானின் கூற்றுப்படி ஜீவன் என்பது ஆவிப் பொருளாக,அரூப பொருளாக எல்லா ஜீவனிடத்திலும் உள்ளதால் தனித்த உருவம் வைக்கப்படுவதில்லை என்றும், கிறிஸ்துவ மதத்திலும் இதனை பவுல் அவர்கள் ***"மாமிச இச்சை மரணம்"*** என்றும் ***"ஆவிக்குரிய சிந்தனையே நித்திய ஜீவனும் சமாதானமுமாக உள்ளது"*** எனக் கூறியுள்ளதாக பகிரப்பட்டது. மேலும், பள்ளத்தை நோக்கிப் பாயும் நீர் போல் நமது மனமும் எப்போதும் கீழ்நிலையாகிய அழி உலக தேட்டிலேயே சதா சர்வ காலமும் ஓடிக்கொண்டிருக்கும் என்பதால் அவ்வாறு பாதாளத்தில் பாய்கின்ற மனதை ஒரு தேவ ஆசான் தங்களின் அருட் கருணையால் மேல்நிலைக்கு எத்தி வைக்கிறார்கள் என்றும், இதையே தெய்வம் அவர்கள் ஐம்மணிப் பொதிகையில் ***"எதிர் ஜலத்தில் ஏடதுவும் ஏறும் பஞ்ஞாட்சரமே"*** என அருளியுள்ளார்கள் என்ற பகிர்வுடன் சபை இனிதே நிறைவு பெற்றது.




***திரு.சாலை ரவி அவர்கள்***
***நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை***

**13-11-2021 சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி கல்பனா விஜயகுமார்**

**சன்னதங்கள் :** உலோகத்தால் செய்யப்பட்ட வேல், வாள், பராங்குசம் முதலிய ஆயுதங்கள் ஆண்டவர்கள் திரு அவதாரத்திற்கு முன்பே பல காலங்களாக இருந்தது என்பது, உலக மக்கள் அறிந்த ஒன்றாகும்.

ஆனால் காமாதி அசுரர்களைக் கருவறுக்கும் கோடி சூர்யப் பிரகாசமான தேவாயுதங்கள், குருதேவராக வரக்கூடிய செம்மல்களின் திருக்கரத்தில் இருக்கும் சன்னதங்கள் என்பதை ஆண்டவர்கள், ஆதிமான்மியம் சன்னதம் பெறு பருவத்தில் ***"குருதேவரன்றி கருமார்களின் உலைக்கூட மறியாத சூலம்,வேல், பராங்குசமும்"*** என்று அருளியுள்ளார்கள்.

**வான்மதிக்கொரல் திருவாக்கியம் எண் : 45** பெரியோர்கள் மூலம் ஆகம விதிப்படி பிரம்மாண்டமாக உண்டாக்கப் பெற்றுள்ள ஆலயங்கள், மனிதனுக்கு அசலான இறைவனை நினைவூட்ட ஏற்படுத்தப் பெற்ற நகல் அடையாளங்கள் ஆகும். நகலுக்கே


Copyright © AMNA Trust, Chennai

பெரும்பாடும், செலவும், முயற்சி, உழைப்பு வேண்டும் என்றால், அசலான இறைவனை, மனிதனின் தலையில் நாட்டுவதற்காக பெருங்கருணையோடு வரும் பெரியோர்களின் பெரும்பாடு வார்த்தைகளால் விவரிக்க முடியாத அரும்பெரும் செயலாகும்.

ஞானம்,பழம் புராதனம் வாய்ந்தது என்பதற்கு உதாரணமாக தஞ்ஞாவூர் கோவிலில் தீர்க்கதெரிசன வரிசைப்பாடு பிற்காலத்தில் ஞானம், எவ்விதமாக இருக்கும் என்பதை கல்லில் எழுதி வைத்துள்ளதைக் காணலாம்.

**காலந்நாட்டிய காரணப்பா பாடல் எண் 01 "வேத வேதிய னாத புராதன .... "**எனத் தொடங்கும் பாடல் பாடப்பெற்றது. எமனாகிய காலனிடம் சிக்காமல் தப்பித்து, தன்னெடுங்கடலாகிய பிறவிப் பெருங்கடலை தாட்டி வீடடைய வைக்கும் காரண காரியத்தை இப்பாடல்கள் உணர்த்துகின்றன. வேத வேதிய நாத புராதனராகிய குருபெருமான் அருளால் சிவனடி பாதத்தால், கண்ணும் காதும் னேர் பெற்ற மக்களுக்கு கலியனை வென்று , காலனிடம் சிக்காமல் காலமற்ற இடமாகிய கங்குல்பகலற்ற இடத்தில், வாழக்கூடிய வாழ்க்கை அமையும். இதையே நமது தெய்வமவர்கள் பூங்கிளிக் கண்ணி என்ற பாடலில்

***காலம் கடந்த பொருள் சாலை வளனாட்டு***
***னீள்தடம் வாசலிலே ளின்றிலங்கும் பூங்கிளியே***

என்று அருளியுள்ளார்கள்

**திருவாசகம் : செத்திலாப் பத்து - பாடல் எண் 02 "புற்றுமாய் மரமாய் ..."** எனத் தொடங்கும் பாடல் பாடப்பெற்றது. கரையான் (செல்) கட்டிய புற்றில் பாம்பு வாழ்வதால் பாம்புப் புற்று என நினைப்பது போல், புற்றாகிய உடலை "தான்" என நினைத்து வாழ்கிறோம். எதற்கும் முதற் பொருளாகிய ***"ஜீவனே திருச்சிற்றம்பலப் பொருள்"*** எனும் யாரும் காண முடியாத திருவடியைக் குருபெருமான் காட்டி வைத்தாலும், அதை உணராமல் "செற்றிலேன்" என்னும் செத்துப் பழகுகிற செயல் தெரிந்து கொள்ளாமல், திருவடி நிழல் தெரியாமல், புல்லாய் ,மரமாய், பறவையாய், மிருகமாய் அலைபாயும் மனநிலை பற்றி இப்பாடலில் கூறுகிறார்கள்.

**தேவாரம் திருக்காட்டுப்பள்ளி பாடல் எண் : 11 . " பொன்னியல் தாமரை** ..." எனத் தொடங்கும் பாடல் பாடப்பெற்றது. பொன்னியாகிய காவிரி விரிந்து பொய்கையில் பாய்ந்து தாமரை, ஆம்பல் மலர்களை மலரச் செய்வது போல், நடந்தறியாப் பெருங்காடாகிய வேத ஆரண்யமாகிய மறைக்காட்டைக் காட்டுதற்கு காட்டானையாக, மறைக்காடனாக வரும் குரு பெருமானின் திருவடியில் இருந்து விரிந்து வரும் நாதம், நம் அறிவைப் பூத்து ஒளிரச் செய்கிறது.

ஆஞ்சநேயர்- சுயம்பிரகாச நித்தியானந்த பிரம்ம சொரூபத்தை, குருபெருமானின் ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறக்கப்பெற்று அறிந்து, அஞ்ஞனமாகிய பத்து வயது கன்னித்தாய் மேல் நேசத்துடன் இருக்கும் செயலையே ஆஞ்சநேயர் என்ற திருனாமம் குறிக்கிறது.

**குரு ஸ்தோத்திரம் பாடல் எண் -10** ***"மாயக்கூத்தின் வகையறியாமல் யான்..."*** என தொடங்கும் பாடல் பாடப்பெற்றது. மாயக்கூத்தின் தலைவனாகிய மனம் மூலம் வினை ஏற்பட்டு, வினையால் காயத்தில் நுழைந்து நுழைந்து பிறவி ஓயாமல் களைத்த நாளையில், குருவின் திருப்பாதத்தால் இதயமாமாளிகையில் தூய ஞானச்சுடர் விளக்கு ஏற்றப்பெற்றவுடன், வினை எனும் கொடிய மிடிமை இருள் அறுக்கப்பட்டு, பிறப்பு ஒழிந்து பிறவானிலை கிட்டுகிறது.

திருமணம்- "துணையோடு அல்லது நெடுவழி போகேல்" திருமணத்தால்
கணவன் மனைவி என்ற ஒரு பந்தம் உண்டாகி இல்லற வாழ்வு சரியான



Copyright © AMNA Trust, Chennai

துணையுடன்சிறப்புற அமையப் பெற்றது போல், மெய்ஞ்ஞான வாழ்வும் குருவின் துணையுடன் ஞானசம்பந்தம் உண்டாகி, சிவபோகம் நடந்து, சிவயோகம் பழகி, அதன்மூலம் சிவானுபவம் பெற்று சிவானந்தமாக சிறப்புற வாழ்வதாகும்.

**அறிவு** - ***"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு"*** என்பது அழியும் செல்வத்தை தேடுவதல்ல. அழியாத செல்வம் ஞான செல்வம் அறிவுச் செல்வத்தைத் தேட வேண்டும். ஆண்டவர்களும் "அறிவைத் தேடு" என்கிறார்கள். அறிவு ஈசனுடைய சொத்து. அறிவு என்ற மாணிக்கம் மனிதனுக்கு தனிச் சீதனமாக தரப்பெற்றுள்ளது. அறிவுக்கு அறிவாகிய ஆசான் பாதம் மூலம் அழியாத ஞான செல்வத்தைப் பெற்று அனைவரும் வாழ வேண்டும் என்ற ஆசீர்பாதத்துடன் குரு பெருமான் சபையை நிறைவு செய்தார்கள்.

**14.11.2021 ஞாயிற்றுக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ ஜெய்குமார்**

***"அளவி லாவெகு காலமிப் பூமியிற்"*** எனத் தொடங்கும், குரு ஸ்தோத்திரப் பாடலுடன் சபை தொடங்கப் பெற்றது. பெரியோர்களை தரிசித்து , அவர்களின் திருவாய் மொழிகளை கேட்கும் பொழுது வேடிக்கை கண்களோடு பார்வையாளராக மட்டுமே இருக்காமல், அவர்களின் வாய்மையில் இரண்டறக் கலந்து மெய்யுணர்வை பெறக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும்.

உலகில் கஞ்ஞா என்பது அறிவை மழுங்கடிக்கும் போதைப் பொருளாக இருக்கிறது. ஆனால் மெய்ஞானத்தில், கஞ்ஞா என்பது, பஞ்ஞுபுலன்களை ஒடுங்க செய்யும் ஆசானின் னாதமாக, அறிவுத் தெளிவளிக்கும் அமுதமாக இருக்கிறது. அவ்வமுதத்தை பருகியவர்க்கு சிற்றின்பம் கசந்து போகும். இதனையே,

**போதையா லிங்குள்ள தெல்லாம றந்துவுன்**
**பின்னாலே யேதொடர்ந்நேன்**
**பொற்கிண்ணத் தின்பாற் கஞ்ஞாவுங் ஙலந்நந்தப்**
**போதையென் றேதெரிந்நேன்**

என ஆண்டவர்கள் ஞான முறையீடு பாடலில் அருளியுள்ளார்கள்.

ரஜோ, தாமச, சாத்வீகம் என்னும் முக்குணங்களின் மூலம் விளையும் செயல்களால் துன்பத்தை அனுபவிக்கும் மனிதனை மீட்டு னிர்க்குணமாகிய இறை நிலைக்கு மாற்றி வைப்பவரே குணங்குடியேறிய குருமார்கள். அவர்கள் குற்றமற்ற வயதுடையவர்கள். (குற்றம் என்பது மூச்சு துண்டாடப்பட்டு நஷ்மடைவது). ஆசான் நம் குற்றத்தை னீக்கி உற்ற பொருளை ஓதும் செயலை பழக்கி வைத்த பிறகே குறிஞ்ஞி னன்னிலத்தில் குடியேறி வாழ முடியும் என்பதை நமது தெய்வமவர்கள் மெய்ம்மண ஞானம் என்ற பாடலில்,

**குற்ற மேதுமில் குறிஞ்ஞி னன்னிலம்**
**குணங்குடி கொண்டங் ஙேறவே** என அருளியுள்ளார்கள்.

**ஞான முறையீடு:**

**"உள்ளது னூறே யாண்டி லிளமையி லீராறு போகும்"...** என்ற பாடலின் புரிதலாக மனிதனின் வாழ் நாளானது நூறு ஆண்டுகள் எனக் கணக்கிட்டு, அதில் இளமையில் 12 வருடங்கள் , முதுமையில் 36 வருடங்கள், உறக்கத்தில் 26 வருடங்கள் போக மீதமுள்ள 26 வருடங்களில், வறுமை , கல்வி , நோய் , இன்ப துன்பம் என இவைகளில் கழிகின்றது.
இறைவன் மனுக்களுக்கு வயது தந்ததின் பிரயோசனமாகியது - மெய்ப்பாலறியவே! என்ற ஆண்டவர்களின் திருவாக்கியத்தின் படி மெய்ப்பாலறிவதற்கான காலம் மீதமெங்கே? என்பதே இப்பாடல் உணர்த்தும் பொருளாகும்.



Copyright © AMNA Trust, Chennai

பரிசுத்த ஆவியாகிய குரு பெருமான் அனந்தானந்நம் நாமங்கள் புனைந்து கொண்டு அந்தந்த காலங்ஙளெல்லாம் வந்து மக்களின் துயர் கடத்தி பேரின்பம் அளிக்க பேரிரக்கம் கொண்டு அவதரிப்பார்கள் என்பதை, ஆதிமான்மியம் : பக்கம் -**03** ஆதியோதயத் தலைப் பருவத்தில்,

***எல்லாண்டு எல்லாண்டு எண்ணாய்கி றத்தாண்டு***
***-எவ்வேத ஆசானுமாய்ப்***
***பல்லாண்ட பழமைப் பரிசே அவதாரா***
***இங் - ஙோவடி கொள்ளுங் ஙுடிகாப்பே*** என்று அருளப் பெற்றுள்ளது.

பிறவாமை என்பது மனதற்ற பரிசுத்த நிலையை அடைவதாகும். பிறவிப் பெருங்கடலில் பிறப்பொழியாப் பாவியர்களை கரையேற்றி பிறவா னெறியில் வாழவைப்பது ஆசானின் னாதமாகிய பஞ்ஞாட்சரம்.

***தொட்டவுடன் சுட்டுவிடும் எங்கள் பஞ்ஞாட்சரமே*** என்பதிற்கேற்ப, நம்மிடம் உள்ள அறிவானது அறியாமை என்னும் இருளால் சூழப்பட்டுள்ளது. நன்மை பயக்கும் தீயாகிய ஆசானின் நாதமானது நம்முடைய அறியாமையை சுட்டிக்காட்டி, ஆணவம், கன்மம் ,மாயை என்னும் மும்மலத்தை சுட்டெரித்து நம் உள்ளத்தை தூய்மைப்படுத்தி இறைவனை தன்னுள் உணரச்செய்கிறது என்று அருளி குருபிரானவர்கள் அவையை னிறைவு செய்தார்கள்.

**14-11-2021 ஞாயிற்றுக்கிழமை சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி**

திருக்குரானில் அல்லாஹ் அவர்களிடம், அடியவர்கள், "சைத்தானை அழிக்காமல் வைத்து இருப்பதின் காரணத்தை வினவ, அதை அழித்து விட்டால் நான் இருப்பது உலகத்திற்கு தெரியாது என்று கூறினார்களாம். அத்தகைய ஞானச் செம்மல்களின் பெருங்கருணையும் பேரன்புமே, மனுவின் அறியாமையைக் கருவறுத்துப் பேரின்ப அறிவு வாசலைத் திறந்து வைக்கிறது.

**பகைவர்**: வந்த வேதமாகிய ஆசானை மாற்றமாகப் பேசுகின்றவர்களே பகைவர்கள், அவர்களுக்கு எக்கோடி காலத்திற்கும் மீளவே முடியாத னரகமே கதி. எண்ணம் போல் தான் வாழ்வு. இதையே

***"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்***
***உள்ளத் தனையது உயர்வு"*** என்கிறது திருக்குறள் (595).

**அழியாதது**: ***"பிறந்நநினி யிறவாதும் பேசும்பஞ்ஞாட் சரமே".*** ஞான செம்மல்களின் னாத அமுதம் ஒன்றே சதுர் யுகங்கோடி காலத்திற்கும் அழியாமல் இருந்து மனுக்களின் தலையான தலையைச் செழிக்கச் செய்து கொண்டு இருக்கின்றது. அதுவே அழியாதது.

**அனித்தியம்- னித்தியம்:** நாம் காணும் உலகத்தில் உள்ள ஆயிரத்தெட்டு அண்டங்கள் அத்தனையும் அனித்தியமே. உலக சிற்றின்பங்களை அனுபவிக்க உடலும், அவயங்களும் தேவைப்படுகின்றது. துர்நாற்றமே நிரம்பிய இந்த அனித்திய உடலினுள் உள்ள வல்லப வஜ்ஜிர னித்திய உடலைக் கொண்டுதான் குன்றாத பெருவாழ்வாகிய பேரின்பத்தை அனுபவிக்க முடியும். இதனைப் பெற குருபிரான் அவர்களின் திருவடிகளையே தஞ்சம் புகவேண்டும்.

**ஞான முறையீடு:**

***அழியாப்பதி குடியேறிய***
***னாயக மென்குருவின்***
***மொழியாம்படி குடியேறியு***



Copyright © AMNA Trust, Chennai

*பாயம துட்புகவே*
*தெளியும்மதி யமுதம்மது*
*வாதக சாந்நமதில்*
*பழியாகிய எமனே பயந்*
*நோடிவி ரண்டனனே* என்ற பாடலின் புரிதலாக,

காலன் வந்து எட்டி ஏற முடியாத எல்லையே அழியாப்பதி. அது ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற நிலைகள் கடந்த ஞான ஆகாயப் பெருவெளியாக இருக்கிறது. காலம் கடந்த பொருளாகிய காலாதீதனே அந்நாட்டிற்குரிய அரசன். அழியாப் பதியாகிய கைலாயம், வைகுண்டம், தெய்வலோகம், மெகராஜ், பரமண்டலம் என்ற அதிமகோன்னத நிலையாகிய அவ்விடமே, நமது குரு கொண்டல் குடியேறி வாழும் போக்குவரத்து நாடாக இருக்கிறது.

தன்னை அண்டிய ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களையும் அப்படி குடியேற்றி வைக்கின்றார்கள். அவர்கள் தங்களின் ஒரெழுத்து மாத்திரைக் கோல் எனும் சாதனமாகிய தெய்வ னீத சாவிகொண்டு மந்திரப்பூட்டைத் திறந்து அவரவரின் சொந்த வீடாகிய மூல மந்திரத்தில் குடியேற்றி வாழ வைக்கிறார்கள். குரு கொண்டலின் ஆல வாய் அருளமுதத்தைப் பருகப் பருக எமனுடைய ஆக்ஞைக்கு உட்பட்டு இருந்த அனீதங்கள் தெய்வீக னீதமாக மாறி அங்கு எமன் பயந்து ஓடி விடுகின்ற பரிசுத்தமான இடத்தில் நம் ஜீவனானது குடியேறுகிறது.

**கேள்வி** : நமக்குத் தெரியாத அறியாமை எல்லாம் கேள்விகளே. அறியாமையை அறியும் பொழுது அறிவு வடிவாக விளங்கும் இறைவனே கேள்வியின் னாயகனாக இருப்பதை உணர்ந்து கொள்ளலாம். பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற னிறைந்து இருக்கும் இறைவன் படைத்த படைப்புகளில் தான் இருக்கிறார் என்ற பகிர்தலுடன் அவை நிறைவு பெற்றது.

**19-11-2021 திருக்கார்த்திகை தீபம் சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீ விஜயகுமார்**

அங்கத்தினர்கள் அனைவரின் இல்லங்களிலும் மாலையில் விளக்குகள் ஏற்றி மெய்ப்பொருள் அடைக்கலப்பா பாடலுடன் சபையின் நிகழ்வுகள் தொடங்கியது. 1940 ஆம் வருடம் முதல் மெய்வழி ஆண்டவர்களின் முன்னிலையில் திருக்கார்த்திகை தினம் கொண்டாடப் பெற்று வருகிறது.

*" இல்லக விளக்கது இருள் கெடுப்பது*
*பல்லக விளக்கது பலரும் காண்பது*
*சொல்லக விளக்கது சோதி உள்ளது"*

இந்த சொல்லக விளக்கைக் குறித்து ஏற்றப் பெறுவது ஜோதி. ஆண் பெண் பேதமின்றி அறிவு விளக்கமானது ஏற்றப்பட வேண்டியது கடமையாக உள்ளது. அக்னி வடிவான ஆன்மாவின் அஞ்ஞான இருள் மெய்ஞான அருளால் விலக்கப் பெறுவதே அருட்பெருஞ்ஜோதியாகும். வள்ளலார் அறிவித்த அருட் பெருஞ்சோதியும் இதுவேயாகும். இதன் நகலே புற வழிபாடாக உள்ளது. அருட்பெரும் ஜோதியாக ஆதியில் இருந்த வார்த்தையானது ஜீவன், இருள், உணர்வு, ஜோதி, அறிவு, வாசி, மனம், கவனம், நாதம், தன் எனும் ஜீவ குகை, என்பவை பொதிந்த "நான்" எனும் பிரகாசப் பொருளாக, உலக வாழ்வில் மனம் என்ற பெயரில் செயல்படுவதாக உள்ளது. இதை அறிவதே "தன்னையறிதல் "நான்" என்பது தத்துவங்களுக்கெல்லாம் மேலான "ஆன்மாவை" குறிப்பதே ஆகும். தூய ஞானச் சுடர் விளக்கானது தேசிகரின் திரு வாசகத்தினால் ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்களுக்கு ஏற்றப் பெற்றுள்ளது.

ஐம்புல நுகர்வால் விலகாமல் உள்ள பிறவிப் பிணியானது ஞானச் சுடரேற்றும் ஆசானின் வாக்காகிய "தீ" யினால் நரனை மனிதனாக,



Copyright © AMNA Trust, Chennai

தேவனாக, மாற்றும் வல்லபம் கொண்டது. நீதி நிறைந்த பரம்பொருள், அறம், பொருள், இன்பம் கொண்ட சுயம்பிரகாச, நித்தியானந்த பிரம்மப் பிரகாசமாக உள்ளது. ஆதி மார்க்க நீதி அவையின் நோக்கமாக அடிநாதமாக உயிர்மூச்சாக இருப்பது, மூலமந்திரம், பாத பூஜை, மகாசங்கல்ப மந்திரம், இவற்றை செயலாக ஆக்கி வைப்பது. நம் சித்தத்தில் பெரியோர்கள் ஏற்றி வைக்கும் விளக்கானது சிவமாகவும், அதன் ஒளியே ஆடும்போது நடனமாக உள்ளதாகவும் அருளப் பெற்றுள்ளது. ஆலடி தோன்றி வளர்ந்த அரசு பீடத்தில் தெட்சிண முகமாக அரசாட்சி செய்கின்ற தென்முகக் கடவுளான முருகப் பெருமானே கார்த்திகேயன், ஆதி பரமகுரு தட்சிணாமூர்த்தி. அவர் வீற்றிருப்பது திருவண்ணாமலை. சிவபுராணத்தில் "புறத்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி" என்பது அறியாமை எனும் அழுக்காகும். அதைப் போக்குவது திருவண்ணாமலை. அடி ,முடி ,நடுவின் ரகசியமாக விளங்குவது அண்ணாமலை தீபம்.அடியும் முடியும் நடுவும் கண்டு "அவ்"வானவர்க்கு ஜோதியாக விளங்குவது அண்+நா+மலை. ஆசானின் ஓரெழுத்து மாத்திரைக்கோலே பல்லக விளக்காக உள்ளது.

**கார்த்திகை:** கார் என்பது மேகமாகவும், கொண்டல் வாய்மையாகவும் தீ என்பது திருவாக்காகவும், கை என்பது மகா மகசூக்கான இருதயமாகவும் விளங்குகிறது. "தீபத் திருநாள்" என்பது தீபத்தில் இருக்கும் நாளாக உள்ளது.

**அன்பெனும் தகளி:** அன்பே சிவமாக, ஜீவனாக ,அறிவாக உள்ளது. குருவே சிவமாக, அறிவாக உள்ளதால், குருவே அன்பெனும் தகளி.

**ஆர்வம்:** மெய்ஞான விருப்பமெனும் நெய்யாகவும் இன்புருகு சிந்தை திரியாகவும் உள்ளது

**ஞானத்தமிழ்** எனும் அழியாப்பதி குடியேறும் வாழ்வானது குரு பிரானால் அருளப் பெறுகிறது. அகத்தில் உள்ள அல் எனும் அறியாமையாகிய இருள் அகல ஏற்றும் விளக்கே அகல் விளக்கு. நீதி நிறைந்த பரம்பொருளாக நித்தம் என் சித்தத்து உறைந்தவராக ஓசை ஒலியெல்லாம் ஆனவராக ஒத்தையாய் என்னாளும் உள்ளவராக இருப்பது, பஞ்ஞாட்சரமாக, "நான்" எனும் ஜோதியாக, ஆசானின் நாதமாக, ஓசையாக, ஒளியாக உள்ளது. பெரியோர்களின் திருமேனி காண்பதும், திருவார்த்தை கேட்பதும், திருநாமம் செப்புவதும் திரு உரு சிந்திப்பதும் புண்ணியமாகும். காக்கும் தீயைக் கைக்கொள்வதே பிரம்ம வித்தை. இக்கடத்தை நீக்கி அக்கடத்துள் ஆக்கும் செயலே ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவாக உள்ளது. சிவன் எனும் வாடாத தீபமாக, ஜோதியாக இருப்பது குருபிரானின் திரு மொழியே. அதுவே நம் உயிர் வீணாகாமல் காக்கும் ஜோதியாக உள்ளது. இருள் நாசமாகும் இடத்திற்கு பெயர் நாசியாகும், அதுவே ஜோதி ஆகும்.

வாத கற்ப நிலையை உணர்ந்தவர்களே ஓயாத் தொழுகையின் ரகசியத்தை அறிவர். உடலினுள் இருக்கும் அழியாத தேகத்தில் குரு பிரானின் அருளால் குடியேறி இரவு பகல் ஓயாது ஒழியாது ஊழியம் செய்யும் உயிரைத் தரிசிக்கும் நாளெல்லாம் கார்த்திகை தீபத் திருநாளாக உள்ளது.

**மெய்வழி நூல்:** முன் உரைத்த முதல் நூல் என்பது, ஆண்டவர்கள் தன் ஆசான் தனிகைமணிப் பிரான் முன் உரைத்த முதல்நூல். சர்வ விளக்கங்களுக்கும் காரணப் பொருளாக நின்று விளங்கும் விளக்குடையான் கழல் அவர்களே, அந்த அருள் விளக்கை இனாமாக, அன்பளிப்பாக அருளுகிறார்கள். ஒருவருக்கு ஏற்றப்பட்ட விளக்கானது இன்று பல மக்களுக்கும் ஏற்றப் பெற்றுள்ளது, இது இன்னும் இதற்கான மக்களிடத்தில் ஏற்றப் பெற்று அவர்களது அறியாமை என்னும் இருள் அகன்று, பிரம்மப் பிரகாச ,சுயம் பிரகாச ஒளியை அனுபவிக்கும் மக்களாக இருப்பார்கள் என்பது சத்தியம் என குருபிரான் அவர்கள் அருளி அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**25-11-2021 வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ குமரேசன்**

**வான்மதிக் கொரல் - திருவாக்கியம் எண் : 46** உலகில் நாம் செய்த தவறுக்கு தண்டனையாக எறும்பு, தேள், பாம்பு, இதில் எதை கொண்டு தண்டிக்க வேண்டும் என்று கேட்டால் எறும்பை கடிக்க விடுங்கள் என்று தான் கேட்போம். ஆனால் தான் செய்த தவறை திருத்திக் கொள்வதற்கான உளவை தேடி அறிவதே இல்லை என்பதை, தவறுகளையும் அதைத் திருத்திக் கொண்டு பேரின்ப வாழ்வு வாழ்வதற்கான உளவுகளையும் ஆண்டவர்கள்,

***னன்னிதிப் பொழுதினை னடத்தித்தன் னறிவினில்***
***னெடுந்நுயர்ச் சாவேணுமா - அல்லது***
***னாதன்பொற் றுணைதேடி வேதாந்ந வழிபற்றி***
***னெடுஞ்ஞாவா வரம்வேண்டுமா –***

***எது வேணும் கேளும் சிங்கா "*** என மெய்ஞான பகுப்பு என்ற பாடலில் அருளியுள்ளார்கள். னாதனாகிய குருபிரானை அடைந்து, னித்திய பேரின்ப வாழ்வை பெறாமல் அனித்திய வாழ்வின் இன்ப துன்பங்களையே பெரிதென எண்ணி தன்னறிவில் சார்ந்து னன்னிதியாகிய பொழுதை வீணாக்குகிறோம் என சுட்டிக் காட்டுகிறார்கள். குரு கொண்டலின் அருஞ்செல்வ சிவராஜ அமலாண்மை வாய்மையின் மூலம் எமனை மிதித்து ஏறும் அதிஜெய ஆட்சியான சுயராஜ்ஜியத்தை அடைந்து னித்திய வீட்டில் குடியேறி வாழ வேண்டும் என்று இந்த வாக்கியத்தின் புரிதலாக கூறினார்கள்.



**காலந் நாட்டிய காரணப் பா - பாடல் எண்: 02 ஆவன வான காலம னைத்துமே** பாடல்" ஆவனமாகிய நினைவில் நாம் சேர்க்கும் எண்ணமே நம் வாழ்க்கையாக அமைகிறது.

**"எண்ணம் போல் வாழ்வு"** எண்ணம், சொல், செயல்- சரியாக இருப்பவர்க்கு நல்வாழ்க்கை அமைகிறது. அது போலவே ஆசானின் சொற்படிக் கேட்டு ஐவகை விளைவுக்கு காரணமான மனதை செம்மையாக்கி சோபனச் சாலை என்ற மெய்ன்னிலையில் குடியோங்கி வாழ்பவர்கள் அனந்தர்கள் ஆவர்.

***"அரக்கி அரக்கர் விலக்கித் துலக்கி ஆக்கும் அனந்நர்கள்***
***குறைக்க முடியாச் சேம னிதியின் குடிவீ டேறவே "*** *என்றும்,*

***"அடியும் முடியும் னடுவென் றுரைக்கும் அறியா ருலகிலே***
***அடியும் முடியும் னடுவும் கண்டவ் வான அனந்நர்க்கே"***

என்றும் சாலை னடன விழாவில் அருளப் பெற்றுள்ளது.



Copyright © AMNA Trust, Chennai

**திருவாசகம், செத்தில்லாப் பத்து, பாடல் எண் : 03** "புலைய னேனையும் பொருளென நினைந்துன்... " பாடல். புலையன் யார்? என்பதை நமது வேதாந்தத்தில்

**"பொய்யை மெய்யெனும் புலையரேன் புண்ணிய ராகார்"** **என்றும்**
**"பொய்ம்மையிச் சாலமென்னும் புலையர்மெய் யறிவதெங்ஙே**
**மெய்ம்மைய றிவதற்கு விட்டகுறை வேண்டும்விதி"** என்றும் அருளப் பெற்றுள்ளது.

புலையர்களாகிய நம்மை ஒரு ஜீவனாக மதித்து ஆட்கொண்டு வைரத்தலையனாக மாற்றி கால்மேலும்-தலைகீழும் என்ற பிரம்ம வித்தை செயலில் ஆக்கிவைத்த ஆசானை சங்கரா என்றும் இறைவா என்றும் பணிவோம்.

**தேவாரத் திருப்பதிகம்- திருமருகலும் திருச் செங்காட்டங்குடியும் தல வரலாறு:**

**திருமருகல்** : இறைவன்- மாணிக்க வண்ணர், இறைவி: வண்டுவார் குழலி.

**தலவிருட்சம்**: மருகல் (ஒரு வகை வாழைமரம்) தலவிருட்சத்தை வைத்தே இக்கோயிலின் பெயர் அமைந்துள்ளது. வாழை வித்தில்லா வித்தாகும். வித்தில்லா வித்தின் ரகசியத்தை மான்மியத்தில் - (ஜீவ சிம்மாசனப் பருவம்)



ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்

*"கோடி சூரியப் பிரகாச அதியரசு கிரணமாலியாயும் பிரம்ம சொரூப இதய மேருகிரி யரசு தவசு மாலாயும் சுத்தாவிச் சித்து வித்தான முத்து ஒத்தை யுருவாயும் அணுவினுக்கு அணுவாகவும் அகண்டம் அனைத்தினுக்கும் அதனை விழுங்கிவிடும் அகண்டமாயும் னிலையுற னின்று விளங்கும் அம் மகா மகான்மிய மகத்துவ வித்தினை இங்ஙேயாம் எழுதாத எழுத்தென் றுரைக்கின்றோம் - ஓதாமலோதும் வேதமதென்றும் கூறுவோம்- மற்றும் அதனையே வித்தில்லா வித்தென்றுரைப்போம் பிறவியரே"* எனக் கூறியுள்ளார்கள்.

ஆசானவர்களின் நாதமாகிய வித்தில்லா வித்தின் மூலம் சாவருமுன் சாகப் பழகும் செயலில் பழகி நம்முள் இருக்கும் இறைவனுடன் இரண்டறக் கலக்கும் செயலைக் குறிப்பதாகும்.

**திருசெங்காட்டங்குடி**- இத்தலம் சிறுத்தொண்ட நாயனாரின் வாழ்க்கை வரலாற்றை கூறுவதாகும். **தலவிருட்சம்** - காட்டத்தி.

கோவில்களின் ஒட்டுமொத்த ரகசியத்தை உள்ளடக்கியது தான் தலவிருட்சம்.

நாட்டின் பல்வேறு கோயில்களில் சிவபத்ரி, சக்திபத்ரி, ஆலமரம், அரசமரம், அத்திமரம், இலந்தைமரம், புளியமரம், குருந்தமரம்,



Copyright © AMNA Trust, Chennai

கொப்பேர்மரம், கற்பகத்தரு, கல்லாலமரம் போன்ற மரங்கள் உள்ளன. மனிதனுக்குள் இருக்கும் மிகப்பெரிய உண்மைகளை உணர்த்தும் தத்துவங்களை இம்மரங்கள் சுமந்து கொண்டு உள்ளன.

1. அத்தி மரம் -ரிஷி பிண்டம் ரா தங்காது.

2. புளியமரம் - புளியம்பழத்து ஓடுபோல

3 .வில்வமரம் -முச்சுடரின் ரகசியம்.

இது போல் அனைத்து மரங்களுக்குள்ளும் உண்மைகள் பொதிந்துள்ளன. அதே போல் மனிதனும் ஒரு மரத்துக்கு ஒப்பாகவும், அந்த மரம் தலை கீழ் மரம் என்று பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது. இப்பெரு நிலைகளை உயிருள்ள போதே சற்குரு பிரான் இரக்கத்தால் சீடன் பெற்று பெருவாழ்வை கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்ற ஆசிர் பாதத்துடன் ஆசானவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

**28-11-2021 ஞாயிற்றுக்கிழமை சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி அருணா சுதர்சன்**

***கர்த்தரால் ஆசிர்பதிக்கப் பெற்றவர்களே உள்ளே வாருங்கள்*** என்ற சத்தியவேத வாசகத்தின் படி சாலை ஆண்டவர்கள் தொடங்கி வைத்த செயலானது அன்றும் இன்றும் என்றும் தொடர்கிறது. அதன் உன்னதம் இன்று ஆதி மார்க்க னீதி அவையிலும் செயலளவில் நிறைவேறிக் கொண்டு இருப்பதை அவரவர்களும் அனுபவத்தினால் அறியலாம்.



***திரு.சாலை ரவி அவர்கள்***
***நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை***

நாம் அறிவில் பிறக்கின்ற நேரம் எல்லாம் பாவ இருள் பிறப்பு அழிக்கப் பட்டு புதிய பிறப்பு உண்டாவதாக வேதம் சொல்கிறது. நாம் பிறந்ததின் பலன் அனைத்தும் ஒரு நிஜமான பெரியோரை அண்டி வாழும் பொழுது தான் தெரிகின்றது. நல்வினையின் பயன் இருந்தால் தான் நாம் இந்த மெய்யில் ஆகிக் கொள்ள முடியும்.

***அந்த நாளில் அணைத்தெனை ஆட்கொண்டு*** எனும் குரு ஸ்தோத்திரப் பாடலின் புரிதலாக, அன்பே சிவம் என்றும், நம் உயிரின் மீது நாம் அன்பு வைப்பதற்கு னித்தியத்தை அளிக்கின்ற குரு நம் மீது வைக்கும் அன்பின் மூலமே பிராணனின் செயலறிந்து உயிரின் இரகசியத்தை அறிய முடியும் எனப் பகிரப் பெற்றது.

ஞான சூரியனாக வரும் பெரியோர்கள் அறிவு என்னும் மாணிக்கத்தை நம் தலையில் ஏற்றி, நாம் இந்த உடல் அல்ல என அறிய வைத்து , அறியாமையை விலக்கி அமானிதம் எனும் அறிவை அறிய வைக்கிறார்கள். நம் உயிர் நட்டம் அடையாமல் நாம் அறிவு வடிவாய் ஆக ஒரு மெய்க் குருவை அடைய வேண்டும்.

**மாயக்கூத்தின் வகை அறியாமல்** என்ற பாடலுக்கான புரிதலாக மாயை என்றால் யாது ஒன்றும் இல்லாதது எனவும், வட்டமிடும் மாய்கை என்னும் முள்ளுக்காட்டை மிதித்து ஏற ஆசானின் அருள் பெற்றே மாயையை வெல்ல முடியும் எனவும் பகிரப் பெற்றது.

மேலும் ***"காவலான புராதன வேதியர்"*** என்ற பாடலின் புரிதலாக, பொறியைப் புலன் வசத்தில் போக்குவதால் ஆபத்து நம் உள்ளே எப்போதும் உள்ளது. பெரியோரின் சொல்லே நம்மைப் பாதுகாக்கும் வேலாக



Copyright © AMNA Trust, Chennai

உள்ளது..வேதத்தைப் பழகினால்தான் னாதம் விளையுமே அன்றி படிப்பதால் எந்த பயனும் இல்லை. பெரியோர்கள் எடுத்து வைத்துள்ள ஒவ்வொரு பழக்கமும் மனதை வெறுத்து அறிவை மேம்படுத்தவே என வேதத்தில் கூறப் பெற்றுள்ளது.

ஒரு வித்தின் உள்ளே அதன் நிறம் குணம் இலை கிளை வைத்து இறைவன் படைப்பு உண்டாக்கிய தன்மை போல் குருவின் சொல் வித்தாக நம் காது வழியாக நினைவில் தைத்து அறிவு விருட்சம் ஆக வளர்வதை உணரலாம்.

தொடர்ந்து, தன்னை அறிவதே மனிதனின் முதல் கடமை என்றும், இவ்வுடம்பு எடுத்தல் எதற்கு என அறிந்து பிறந்ததின் பயனை அடையவேண்டும் எனவும் இந்த மெய்யை அறிந்தவர்களுக்கு, அதனை மற்றவர்களிடம் கொண்டு போய் சேர்க்கவேண்டிய கட்டாய கடமை உள்ளது.

அதற்கான தகுதியை நாம் மேம்படுத்துவதற்கான வழியை நமது குருபிரான் அருள்கிறார்கள்.அவர்களுடையதிரு மொழியானது நம் உள் ஒலித்துக் கொண்டே இருந்தால் நம் மெய் உணர்வு ஓங்கி சித்தத்தை உய்யச் செய்து பிரகாசமான எல்லையை அடையலாம் எனும் பகிர்வுகளுடன் அவை நிறைவு பெற்றது.

**28-11-2021 ஞாயிற்றுக்கிழமை சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி ஹேமலதா தியாகராஜன்**

**நாள்:** ஆதி மார்க்க னீதி அவையின் அடி நாதமாக விளங்கும் மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் அய்யா அவர்கள் அவதரித்த திருநாள் இன்னாள். இயல்பு வாழ்க்கையில் நாள் என்பது மிகவும் முக்கியமானது. ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து ஒவ்வொரு முக்கியமான செயலுக்கும் நாள் பார்த்து செய்வது வழக்கம். அப்படியெனில் ஞான வாழ்க்கையில் நாள் என்பது எத்தகைய சிறப்பு வாய்ந்ததாக இருக்கும். அறிவு என்ற மாணிக்கத்தை பெற்ற மனுவிற்கு எல்லா நாளும் நல்ல நாளாகவே அமையும். இதனை மெய்வழி சாலை ஆண்டவர்கள்

***குரு சொன்ன வாசனம்போட் டிருந்து கொண்டு***
***னாணாமற் றாரகமந் நிரத்தை யோத***
***னாட்கள்வரும் னாளெல்லாம் னலனா ளாமே*** என்று கூறியுள்ளார்கள்.

**திரு :** திரு என்பது

***திருவெனுமிமை யானாடு டையவர்***
***திரும றைக்குரு தீன்திரு மேனியர்***

கரத்தால் தீண்டமுடியாத ஓர் தேகத்திற்கு பெயர் "திரு" அத்தகைய "திரு"வை ஓர் மெய் குருபிரானின் மூலமே அறிந்து அடையமுடியும்.

**வித்தில்லா வித்து:** பாரவான்கள் எல்லோருமே மூலப் பழம் பண்ணாரமணி உண்டைப் பெட்டகத்தைத் தாங்கிச் சுமந்து வழி வழியாக அதனுடைய தன்மை மாறாமல் வித்தில்லாவித்தாகிய, அவர்களின் நாதத்தின் மூலம் அதனை நம்மிடம் விதைக்கிறார்கள்

**அங்கம்:** அங்கம் என்பது நாம் நினைக்கும் நம் தேகம் அல்ல. **அங்கம திடத்தி லைம்புலக் கதவையடைக்கும்பே ரறிவெனக் கருளி** என்று கூறுகிறார்கள். அதாவது ஆசான் அவர்களின் ஒரு மொழி கீதையாகிய நாதம் கொண்டு, அங்கம் "அது" இடத்தில் ஐம்புல கதவையும் அடைக்கிறார்கள்.

**தனி முதல்:** அறிவுதான் மெய்பொருளாக, மனிதன் அடைய வேண்டிய இலக்காக உள்ளது. மற்ற ஜீவ ராசிகளிடத்தில் இல்லாத தனிச் சீதனமாகிய அறிவு மனிதனுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்திற்கும் மறை பொருளாக அறிவு விளங்குகிறது. நம்மிடத்தில் அறிவு இருந்தும் அதை அறியாமையென்னும்



Copyright © AMNA Trust, Chennai

திரை மறைத்து இருப்பதால் அவித்தியா பாதமாக மனமாகவே கீழ்நிலையில் உள்ளோம். அறிவுரூபமாக உள்ள ஆசான் அவர்களிடத்தில் தஞ்சும் அடைந்தால்தான் நம் அறியாமை நீங்கி அறிவு பிரகாசமாகி வேதம் அனைத்தும் விளங்கும்.

**குன்று: குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம்** என்கிறார்கள். **குன்று மல வெம்மாயை கடந்து வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருக்க சுகம்** என்கிறார்கள். அப்படியென்றால் குன்று என்பது மண் கட்டி குவியலோ மலையோ அல்ல.



ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்

***சென்னிமலை வாசலுக்கு ளுட்புகுத வைத்து***
***ஜீவனெனும் சிரஞ்ஜீவிக்குச் செப்புமுபதேசம்***
என்கிறார்கள்.

சென்னிமலை என்பது ஒவ்வொரு மனிதனுடைய தலையாக உள்ளது. அத் தலையே குன்றாக, குமரன் இருக்கும் இடமாக இருப்பது. இதனை நம் தெய்வம் அவர்கள் **ஜீவ குகைதோறும் வீற்றிருக்கும் மருவிலாகுகன்** என்கிறார்கள். "கு" என்னும் அறியாமையாகிய இருள் மறித்து என்றும் மாறாத வயதினை உடையவர்களுக்கே குமரன் எனப் பெயர்.

நாம் என்றென்றும் நிலைத்திருப்போம் எனும் எண்ணம் மனிதனுக்கு மட்டும் வருவதற்கான காரணம் யாதெனில் மற்ற ஜீவராசிகளை விட மனிதன் மட்டும் தனிச் சீதனமான ஓர் னித்தியப் பொருளைப் பெற்றுள்ளதால் தான். ஆனாலும் அதை அறியாமல் வெம்மாயை எனும் பிறவி நோயில் சிக்கி, மும்மலமெனும் அறியாமை இருளில் உள்ளோம். அத்தகைய நம் மனதை ஆசான் அவர்களே குமரனாக வந்து அறிவு என்னும் ஜோதியை ஏற்றி நமக்குள் உள்ள வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருக்கும் செயலில் சுகம் காண வைக்கிறார்கள்.

**தூலமுக்தி-ஜீவமுக்தி:** முக்தி என்றால் விடுதலை. அடிமைபட்டிருப்பவருக்கே விடுதலையாகிய முக்தி வேண்டும். வினைக்கு காரணமான மனதிடம் நாம் அடிமைப்பட்டு, மீண்டும் மீண்டும் இந்த பிறவிச் சுழலில் மாட்டி சுழன்று கொண்டே இருக்கிறோம். மனம் அற்று உணர்வு தாண்டி உணர்வுகாரரகி தமாகி ஓம் உருவாக மாறும் பொழுதுதான் நமக்கு ஜீவ முக்தி. பிறவிக்குக் காரணமாகிய நான்முகன் நம்முள் பிரகாசப் பொருளாக நான் எனும் பெயரில் உள்ளது. இப்பிறவி தொலைந்தால்தான் ஆன்மாவிற்கு முக்தி எனக் கூறுவது செத்த பிறகு நடக்கும் விஷயம் அல்ல. இருக்கும்பொழுதே ஆசானின் பேரிரக்கத்தால் சாவரும் முன் சாகப்பழகும் நிலையைப் பழகுவதே முக்திக்கான ஒரே வழி. பிண்டம் புகுந்து இனி பிறவாததே தூல முக்தி.

**ஆறாம் அறிவு:** ஐயறிவு விலங்குகள் யாவும் அதன் தேவைகளை நிறைவேற்றி இவ்வுலகில் செவ்வனே வாழ்கிறது. ஆனால் ஆறறிவுள்ள நம் செயலோ இறைவனிடம் முறையிடுவதும், அழிபொருள் தேடுவதில் முடிவில்லாமலும் மாறிக்கொண்டே உள்ளது. அதன் காரணம் நமக்குள் உள்ள னித்திய பொருள்தான். அதனை அறிந்து அடைவதற்கே ஆறாம் அறிவு நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது எனும் பகிர்தலுடன் அவை இனிதே நிறைவுற்றது

**28-11-2021 ஞாயிற்றுக்கிழமை மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயாவின் 101-ம் ஆண்டு திரு அவதார திருநாள் சிறப்பு சபை**

**தொகுப்பு: ஸ்ரீமதி ஜீவிதா வடிவேலன்**



Copyright © AMNA Trust, Chennai

மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயாவிடம் மெய்க்கல்வி கற்கும் போது, தான் பெற்ற சிவா அனுபவங்களை குருபிரானவர்கள் அருளிச் செய்து அவையை துவக்கினார்கள்.

சுப்பிரமணியர் யோக ஞானம் , காகபுசுண்டர் பெருநூல் காவியம், சௌமிய சாகரம் என்ற வேதநூல்களுக்கு ஐயா எழுதியருளிய முன்னுரையில் பொதியப் பெற்றிருக்கும் வேத முத்துக்களை ஆசான் அருளிச் செய்தார்கள். முருகப்பெருமான் அகத்திய மகா முனிவருக்கு உபதேசித்து அருளிய நூல் சுப்பிரமணியர் யோக ஞானம் 500 முருகப்பெருமானின் பிறப்பு, சொந்த ஊர், தாய் தந்தையரின் தொழில், முருகன், கார்த்திகேயன், சுப்பிரமணியர், ஆறுமுகன், சக்கரமன்றாடியார் என்ற திருனாமங்கள் உணர்த்தும் மெய்ச்செயல்கள், தந்தைக்கு உபதேசம் செய்த இரகசியம், சூரசங்காரத்தின் உண்மை, வடமொழி -தமிழ் மொழியின் சிறப்புகள், பரிபாஷைச் சொற்கள், என பல உண்மைகளை போகர் முதலான பல சித்தர் மரபினர்களின் பாடல்களை சாட்சியாக வைத்து 156 பக்கங்களின் மூலம் இன்னூலின் முன்னுரையில் ஐயா அவர்கள் அருளிச் செய்த பொக்கிஷங்களில் சில துளிகள் -


*மெய்வழி*
*திரு.குழந்தைசாமி கவுண்டர்*

முருகப்பெருமான் ஆவணி மாதம் பூச நட்சத்திரத்தில் பிறந்தார் என்றும், நம்மை போலவே தாய் தந்தையர்க்கு குழந்தையாக பிறந்து வளர்ந்து பருவம் அடைந்து சிறந்த மனிதனாக ஞான தண்டாயுத பாணியாக வாழ்ந்து அகத்தியருக்கும், சிவனாருக்கும் உபதேசம் அருளினார் என்றும், முருகப்பெருமானின் தாய் தந்தையர்கள் கொங்குநாட்டு வெள்ளாளர்கள் என்பதையும் சாட்சி நிரூபணைகளோடு அருளியுள்ளார்கள்.

**முருகன்-** மும்மூலம் கடந்ததாலே முருகன் என்று எனக்கு பேருமாச்சு

**கார்த்திகேயன்**- கருவிக் கரணங்களாகிய தத்துவங்களை நிக்கிரகஞ் (செயலற்று) செய்ததால் கார்த்திகை ஈஸ்வரன் என்ற திருனாமம் உண்டாயிற்று.

**சுப்பிரமணியர்**- சுத்த பிரம்ம பிரகாச மணி என்பதாகும்.

**ஆறுமுகம்**- அறுநரகத்தை அறுத்ததினாலே ஆறுமுகம் என்ற னாமம் உண்டாயிற்று.

**சக்கர மன்றாடியார்**- சிதம்பர சக்கர மன்றில் ஆடியதால் இத்திருநாமம் உண்டாயிற்று.

**சூரசங்காரம்**- அசுரர் கிளையை அறுக்கும் செயலே சூரசங்காரம் என்பதை மெய்வழி னூலில்,

**காமாதி யசுரர்கிளைக் கரு வறுக்கக் கையில் வேலேந்நினது பொய்யாகாதே** என்று மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய னிலைகளை ஆசான் எடுத்துரைத்தார்கள்.

காகபுசுண்டர்பிரான் வசிஷ்டருக்கு உபதேசித்தருளிய நூல் காகபுசுண்டர் பெருநூல் காவியம் 1000. யோகத்தின் மூலமாகத் தான் ஞானத்தை அடைய முடியும். யோகம் இல்லாத ஞானம் முத்தி அளிக்காது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிநிலைகளை ஆசான் அனுக்கிரகத்தால் சுழிமுனைப் பூட்டைத் திறந்து கொண்டதன் பிறகே அடைய கூடிய மெய்ஞ்ஞான னிலைகள் என்பதை பரிபாஷைகளின் மூலமாக இன்னூலில் அருளியுள்ளார்கள்.

சற்குருவின் இரக்கத்தைப் பெற்று, சற்பாத்திரனாக இருப்பவர்களுக்கு இப்பரிபாஷைகளின் மெய்ச் செயல் விளங்கும். மற்றவர்கள் அறிவதற்கு வாய்ப்பே இல்லை என்பதை, சாலை ஆண்டவர்கள் ஞானனூற் பொருளறிதல் என்ற பாடலில்,



Copyright © AMNA Trust, Chennai

***அருணிலைகால் தலையும்பரி பாஷை கல்லார்***
***ஆயுளெலாம் படித்தும்பொரு ளறியப் போகார்***
***ஒருமொழியாம் குருமொழிமெய்ப் பால றிந்நால்***
***உறுகோடி னூற்கும்பொரு ளாகு மன்றோ***

என திருவாய் மலர்ந்து அருளியுள்ளார்கள்.

அகத்திய பெருமான் புலத்தியருக்கு உபதேசித்தருளிய னூல் வாத சௌமியம் எனும் சௌமிய சாகரம். சௌமியம் என்பது தங்கத்தையும், சாகரம் என்பது கடலையும் குறிப்பதாகும். தங்க உடலைக் காட்டத் தான் வந்த திக்குடில் என்பதை உணர்த்தவே கனகக் கடலாக, ஞானக் கடலாக குரு பெருமான் திருவுரு தாங்கி வருகிறார்கள். அவர்களின் அருள் மூலம் அடைவதே முத்தியாகும்.

யோகமும் ஞானமும் இல்லாமல் முத்தி கிட்டாது. முத்தியை நாடுபவன் யோகத்தையும் ஞானத்தையும் அப்பியாசம் (பழகுதல்) செய்ய வேண்டும். மனிதனுக்கு மட்டுமே பிராணனை வசப்படுத்தும் வல்லபம் இருக்கிறது. தன்னுள் பொதிந்திருக்கும் இத்தகைய வல்லபத்தை கைக்கொண்ட குருபிரானவர்களின் வழியை பின்பற்றி செல்பவர்களுக்கு பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரமாக அளிக்கப்படுகிறது என்பதை உணர்த்தும் மெய்வழி னூல் பாடல்.

***வழிசரிகை முடிந்தமுடி விடமும் காட்டி***
***வட்டமா சித்தியுமெய்ப் பாலும் காட்டி***
***வழியோகம் கலைனாலங் நுலமுட் பாய***
***வழி சென்றோ ரென்றாற்றான் வகையாய்ச் சொல்வார்"***
என்று அருளியுள்ளார்கள்

சர்வத்திற்கும் முடிந்த முடிவாக, ஆதிசைவ பீடம் -கடம்பவன காளையாகிய சிவசுப்பிரமணிய குகன் தமிழ் கடவுள் முருகப்பெருமானே சாலை ஆண்டவர்களாக அவதரித்து வந்துள்ளார்கள் என்ற பேருண்மையை உணர்ந்த பெரியாராகிய மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயாவின் பொற்பாதங்களைப் போற்றியும், கயிலாயப் பரம்பரையாய் , வாழையடி வாழையாக, மெய்வழியாய் வந்திருக்கும் னமது குருபிரானின் பெருங்கருணை பேரிரக்கத்திற்குரிய பாக்கியவான்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்ற சிறப்பம்சங்களுடன் அவையானது இனிதே நிறைவேறியது.

## இசை வகுப்பின் தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 07-11-2021 ஞாயிற்றுகிழமை: இசை வகுப்பின் தொகுப்பு

முதலில் குரு ஸ்தோத்திரம் ***அந்த னாளில் அணைத்தெனை யாட்கொண்டு*** என்ற பாடல் பாடப்பெற்றது. தொடர்ந்து ஞானமுறையீடு பாடல் ***மறுப்படாச் சிப்பி தானும் மழைத்துளி திறந்து வாங்கி... (39)*** என்ற பாடல் பாடப்பெற்றது. தொடர்ந்து மெய்வழி னூல் பாடல் ***விண்ணுமண்ணும் கதிர்மதியு மின்பனிதா ரகையும்... (01)*** என்ற பாடலும் ***வீசும்விழி காந்துமதி மண்டலமும் கடந்து... (02)*** என்ற பாடலும் இரண்டு விதமான ராகங்களில் பாடுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

### 14-11-2021 ஞாயிற்றுகிழமை: இசை வகுப்பின் தொகுப்பு

முதலில் குரு ஸ்தோத்திரம் ***மாயக் கூத்தின்வ கையறி யாமல்யான்... (10)*** என்ற பாடல் பாடப்பெற்றது. தொடர்ந்து தெய்வத் தேடு கூடகம் வஸ்த்து



Copyright © AMNA Trust, Chennai

துதி ***அகமியம காமியம கூறின்...*** பாடலும் ***கொடுமை கெடு னெடுபகைமை...*** என்ற பாடலும் தாளத்துடன் பாடுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**21-11-2021 ஞாயிற்றுகிழமை: இசை வகுப்பின் தொகுப்பு**

தெய்வத் தேடு கூடகம் புராதனம் கூறுவது ***பூமியடங்ஙலுக்கும் ஓதும்பு ராதனங் ஙூறுவது...*** என்ற பாடல் தாளத்துடன் பாடுவதற்கும், தொடர்ந்து பாதபூஜை ***ஆமன் வித்தாதியோதய-இங்ஙுலாவுகு திகாந்ந.... தலை னாளில் அங்ஙே அருகில்...*** என்பதை முறையாக படிப்பதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

குருவாழ்க ! குருவேதுணை !!



Copyright © AMNA Trust, Chennai

# டிசம்பர் மாத நிகழ்வுகள்



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



திரு.சாலை ரவி அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க நீதி அவை

ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, ஆதி மார்க்க நீதி மொழியின் டிசம்பர் மாத மின்னணு சஞ்சிகையின் சிறப்புகள் பற்றி கூற விழைகிறேன். கார்த்திகையும் மார்கழியும் கலந்து வரும் இந்த மாதத்தில் கிறிஸ்மஸ், ஆங்கிலப்புத்தாண்டு, பரமபத வாசல் திறப்பு, ராப்பத்து, பகல் பத்து, வைகுண்ட ஏகாதசி, மற்றும் பெரும்பாலான கோவில்களில் அதிகாலை பூஜை, இவை யாவும் புற உலகில் நடைபெறும் மார்கழி மாத சிறப்பாக உள்ளது. அக உலகில் ஆதி மார்க்க நீதி அவையில் ஆகிக்கொண்ட உண்மையை உணர்ந்த மக்களுக்கு, எந்த மாதமும், காலமும், நாளும், பொழுதும், சர்வ வலதும் ஆகக்கூடிய சிறப்பை பரிசுத்த ஆவித்தெய்வம் அருள் பாலித்துள்ளார்கள். இதனை ஆண்டவர்கள் "கோணாமல் முக்கோணம் போட்டதின் மேற் குரு சொன்ன வாசனம் போட்டிருந்து கொண்டு நாணாமற் றாரகமந் நிரத்தை யோத நாட்கள் வரும் நாளெல்லாம் னலனா ளாமே" என அருளியுள்ளார்கள்."தூய ஞானச்சுடர் விளக்கென்னுள்ளே பாய வைத்த பதத்தை மறப்பனோ" என்பதின் விளக்கமாக அறிவுச் சுடரே ஞானச்சுடர். அறிவுச்சுடர் ஏற்றப் பெற்றிருப்பவர்கள் முதலில் கடக்க வேண்டிய பொருள் காலம் எனவும், நான், ஆன்மா, பசு, சிற்றணு வடிவினன், என்பதின் சிறப்பையும், நற்றாளின் சிறப்பே கல்வியாக, எழுதாமறையாக, சாகாக் கல்வியாக, இவை அனைத்தையும் உள்ளடக்கி வைத்திருக்கும் ஏழ் நிலைக்கம்பம் ஆக உள்ளதையும், நிகழ்ச்சிகளில் மக்கள் பகிர்ந்துள்ளனர். மேலும் புலால் மறுத்தலைப் பற்றிய தெளிவையும், கபீர்தாசர் அருளிய "அன்பில்லாத உள்ளத்தை மயானம் என்றறி" என்பது பற்றியும், யோகத்தின் மூலமாக இறை பொருளைப் பெற்றோமா, என்பது பற்றியும் பேசப் பெற்றுள்ளது. "அங்கமதிடத்தில் ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவு", “அந்தமுள்ள பிரணவம்”, "சாவாது பிறவாது தனி முதலாயிருந்த நான்", "பள்ளியையும் மெய்ப்பால் தந்த வள்ளல்" போன்றவற்றின் அருஞ்சிறப்புகள் அத்தனையும் பேசப் பெற்றுள்ளது. ஔவைப் பிராட்டி அருளிய "பெரியது கேட்கின் வேலோய்" என்ற தொண்டரின் பெருமையை விளக்கும் பாடலுக்கான சிறப்பும் பேசப் பெற்றுள்ளது. "அணுவுக்கணுவாய் அண்ட பிரமாண்டமாய்" எனும் தேவ ரகசியச் செயல், பிரம்மாண்டமான உலகைப் படைத்த பிரம்மா, ஸ்ரீமன் நாராயணனின் உந்திக் கமலத்தில் போய் ஒடுங்குகின்ற செயலைக் குறிப்பதையும், அமானிதத்தின் சிறப்பு பற்றியும் தொகுத்து வழங்கப் பெற்றுள்ளது.

மக்களின் விருப்பமே மகேசனின் விருப்பம் என்பதற்கிணங்க தொகுப்பாளர்களின் பெயர்களுடன், தொகுப்புக்கான விஷயங்களைப் பேசிய மக்களின் பெயர்களும், இனிவரும் சஞ்சிகைகளில் சேர்க்கப்பெறும். திருமதி லாவண்யா வாசுதேவனின் இசை வகுப்பு பற்றிய தொகுப்பும், இசையைக் கற்பிக்கும் விதமும், திருவாசக நாயகி பூர்ணிமா, தேவார நாயகி உமாராணி, இவர்கள் அவற்றிற்கான பாடலுக்கு வழங்கும் விளக்கங்களும் மிகவும் போற்றத்தக்கதாக உள்ளது.

"இனித்த முக்கனிச்சாறு பிழிந்து தேனமுதும்" "பாற்கடலை குறுகக் காய்ச்சி வடித்து தெளித்திட்ட வேதாந்தம்" "வேதாந்தத் தெளிவிறுத்துப் பாகு படத் திரட்டி வைத்தன போன் மதியமுத கலைக்ஞான போதம்" "விண்ணான வமுதகலை விருட்சம் வித்தில் விளங்கி னின்ற விதம் போலெலாஞ்ஞு ருக்கிக் கண்ணான



Copyright © AMNA Trust, Chennai

னூலாகும் குரு முறாதி" என ஆண்டவர்கள் அருளிய வண்ணம், ஒரு மாதத்தில் பேசப் பெற்ற அத்தனை நிகழ்வுகளும் இந்த சஞ்சிகையில் தொகுத்து வழங்கப் பெற்றுள்ளது. "வழியிதலால் மற்றினியோர் வழியுமிலை, வழி புகுவான் வழியறிவான் அவனின்சான், அருமறையி னுளவறிந்தேன் இரண்டிலையே", ஏகாட்சரப் பொருளாகிய இரண்டெனும் வாசியாகிய ஒன்றில் போய் ஒடுங்கி அறிவு பல திசைகளில் சிதறாமல் ஒரே நிலையில் நின்று பிறவாமை பெற வேண்டும் எனும் ஒரே நோக்கத்திற்காக ஒவ்வொரு மாதமும் வரும் இந்த மின்னணு சஞ்சிகையைப் பார்த்து, படித்து, மக்கள் பயனடைய வேண்டும் என்ற வேண்டுகோளுடன் எமது உரையை நிறைவு செய்கிறோம்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2022 டிசம்பர் மாத சபை நிகழ்வுகளின் சாரம்சம்

**03.12.2021 வெள்ளி கிழமை சிவகாசி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீ.விஜயகுமார்**

***"வஞ்சமில் பரமார்த்த தவத்தினர்"*** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் தொடங்கப் பெற்றது. பஞ்சமா பாதகமாகிய கொலை, களவு, கள் ,காமம் பொய். இவை நமது கண் காது மூக்கு வாய் வழியாக நடைபெறுகிறது. இவற்றிற்கு காரணம் மனம்.

***"ஒயாதுபடிக்க ஓங்கும் உணர்வு,***
***பொய்யின்ப உணர்ச்சி மெய்யுணர்வு கொல்லி "***

அறிவு அறி பாடம்

மனம் தேவையற்ற முரண் பாடுகளையே விரும்புகிறது. வாழ்வாங்கு வாழ வந்த நம்மை இறைவன் சாகப் படைக்கவில்லை சாகும் முன் சாகப் பழகுவதை உணர்ந்தால் இறவாமைக்குள் ஆகலாம். இதையே செத்தால் சிவலோகம் என்று கூறுவது.

ஐந்து பூத கணங்களை நமக்கு நேசம் ஆக்குவதே முரீதின் ரகசியம். கிருஷ்ண பரமாத்மா கையில் உள்ளது பாஞ்சசன்யம். அதுதான் நாதம் ,அது ஆசான் மூலமாக நம்முள் பாய்ந்த பின்னர் தான் அறியாமை விலகி, அறிவு பிரகாசம் உண்டாகிறது. இப்படியான சுடர் தேகத்தில் ஏற்றிவைக்கின்ற செயலையே, ***"தூய ஞானச்சுடர் விளக் கென்னுள்ளே பாயவைத்த பதத்தை மறப்பனோ"*** எனப் பாடுகிறார்கள். நமக்கு மெய்யறிவு ரகசியத்தை எடுத்து ஊட்டுவதே வேதம். அதுவே வந்த வேதமாகிய ஆசான். ஐம்புல நுகர்வின் மூலம் நாம் சம்பாதிப்பது யாவும் நஷ்டமே. நம்மை நஷ்டப் படுத்துவது நம் மூச்சு தான்.

நான், ஆன்மா, பசு, சிற்றணு வடிவினன் என வள்ளலார் கூறுகிறார். மனிதனின் அடையாளம் வாக்கு, சப்தம், வாய்மை. மனிதனின் நாமம் "ஆன்மாவிற்கே" கல்வி கற்பதின் பலன் "நற்றாளைக் காண்பதுவே" நற்றாள் வேறு, இறைவன் வேறு அல்ல, திருவடி வடிவம்தான் "சிவமயம்" இதுவே பிள்ளையார் சுழி ,எழுதாதஎழுத்து, ஊமைஎழுத்து என பலவாறாக அழைக்கப் பெறுகிறது. இறைவன் திருவடி வடிவாக, சர்வத்தையும் தாங்கி நிற்கும் ஒன்றாக உள்ளான். அந்த திருவடி ரகசியம் ஆகாயத்தில் உள்ளதாக பெரியோர்கள் அருளுகிறார்கள். பஞ்சபூதத்தில் எல்லையற்ற ஒன்றான ஆகாயம் மனிதனிடத்தில் நினைவாக உள்ளது. ஆனால் மனிதனின் நினைவு பார்த்ததை மட்டும் நினைக்கும் ஒரு வரையறை உண்டு .நாம் பார்த்தது யாவும் அழியக் கூடிய ஒன்றாக உள்ளது. அழியாமல் இருக்கும் நித்தியப் பொருளாகிய "நற்றாளை", ஒருமுறையாவது தரிசித்து இருந்தால்தான் அதைப்பற்றி சிந்திக்க முடியும். எடை ,நிறம், உயரம் ,மற்றும் தோற்றமும் முடிவும் அற்றதாக உள்ள நான் எனும் ஆன்மாவிற்கே. "மெய்ப்பொருள்" எனப் பெயர். "நானை" அறிவதே தன்னை அறிதல் ஆகும். இதற்கு உலகிலுள்ள யோகப் பயிற்சிகள் உதவாது. இதனை புலத்திய மகாமுனிவரும் "காணும் மூச்சடக்கி.." என்ற பாடலில் அருளியுள்ளார். "வாசி என்றால் மூச்சு அல்ல என மெய்வழி சாலை ஆண்டவர்களும் கூறுகிறார்கள். மூச்சடங்கும் ரகசியம் ஓர் மூலத்தில் உள்ளது. அதைத் தெரிந்து ஆத்ம வீடடையும் ரகசியத்தை அறிந்த பெரியோர்கள் தன்னை சார்ந்தவர்களுக்கும் அதனைப் பழக்கி வைக்கிறார்கள்.

ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள் சாகாக்கல்வி கற்றவர்களாக, மரணமிலாப் பெருவாழ்வு இன்னதென்று தெரிந்து வாழும் மக்களாக உள்ளார்கள் .ஆதி வேறு ,ஜோதி வேறல்ல .அது நீதி வழியாக, அறிவு வழியாக, இறைவனாக உள்ளது. யதார்த்த உள்ளத்தோடு தேடுகிறவனுக்கே ஞானம் கிட்டும். வேதத்திலுள்ள கேள்விகளுக்கெல்லாம் பதில் தன்னிடம் உள்ளது என்பதை அறியாமல்


Copyright © AMNA Trust, Chennai

இருப்பதே அறியாமை. தனக்குவமை இல்லாதான் "தாள்" சேர்ந்து மனக்கவலை மாற்றப் பெறும் ரகசியமே இந்த "மெய்ஞானம்" மனதின் மூலமாக உண்டாகும் நல்வினை, தீவினைக்கான எதிர்வினையை, அவரவரும் அனுபவித்தே ஆக வேண்டும். கஷ்டம், துன்பத்திற்கு காரணம் வினையேயன்றி கடவுள் அல்ல வினை அறுக்கும் ஆயுதம் கோடாயுதம். "எண்சாண் உடம்பிற்கு பிரதானமான சிரசே ஞானத்திற்கான இடம். இதனை நிரூபித்து, நிஜமாக்கி வைப்பதே ஆதி மார்க்க னீதி அவை. இந்த உடலில் நமது இருப்பிடமாகிய விலாசம் நமக்குத் தெரியவில்லை. இதனை வள்ளல் பெருமான் அருட்பாவில் 4 விண்ணப்பங்களாக அருளுகிறார்கள்.

கிருஷ்ண பரமாத்மா தர்மத்தை காக்க மனித உயிர்களை கொல்லச் சொல்வது, வள்ளலாரின் ஜீவகாருண்யத்திற்கு மாற்றமாக உள்ளது .இதன் உண்மை நிலையை,

***கொல்லான் புலால் மறுத்தானை எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழும்"***

எனும் குறள் வாயிலாக அறிந்து கொள்ளலாம் கோழி, ஆடு, மாடுகளுக்கு தொழுவதற்கு கையோ, அறிவோ இல்லை உயிர் என்பது அவரவரின் "நாமமாக" உள்ளது. அது பஞ்சபூத நிலைகள் கடந்த ஓர் இடத்தில் உள்ளது. அதுவே நமது இருப்பிடம் என்பதை நிஜமாக்க வந்துள்ளது இந்த ஆதி மார்க்க னீதி அவை. நமது அசுர குணம் மாறி சுர குணம் ஆகி கல்லாதவன் கற்றோன் ஆகி, அறிவின் உண்மை நிலையை நாம் உணர வேண்டும். நித்திய நன்மையாகிய பரம்பொருளின் அருளாசியை நாம் பெற வேண்டும். ***"சென்றநாட் சென்றிட்டாலும் செல்லுநாட் சென்றிடாது நன்றுள நாளே யின்னாள் "*** எனும் தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகளை குருபிரான் இனிதே நிறைவு செய்தார்கள்.



*ஸ்ரீலஸ்ரீ மெய்வழி சாலை ஆண்டவர்கள்*

**04-12-2021 சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

மனிதனானவன் ஏதாவது ஒரு வேதத்தை சத்தியமாக நம்பித்தான் ஆக வேண்டும். திருக்குறள், பகவத் கீதை, தேவாரம், திருவாசகம், சித்தர் பாடல்கள், திருக்குரான், சத்திய வேதம் போன்ற எந்த வேதமாக இருந்தாலும் அதனுள் பொதியப்பெற்றிருப்பது மனுத் தலையின் இரகசியமே. அந்த இரகசியத்தை அறிந்து அடைவதே ஞானம். பெரியோர்கள் பேரிரக்கம் கொண்டு அருளும் ஞானத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்பதற்கான சாட்சியும் வேதங்களில் தான் இருக்கிறது.

குரு பிரானின் வாய்மைக்குள் ஆகி ஆன்ம விளக்கத்தை பெறும்போது தான் நம்முள் இருக்கும் அறியாமை எனும் இருள் நீங்கி அறிவானது பிரகாசிக்கும். அறிவே தெய்வம் என்பதையும் உணர முடியும். தெய்வம், கடவுள், பகவான், கர்த்தர்,



Copyright © AMNA Trust, Chennai

அல்லா... என்று கோடான கோடி னாமங்களில் அழைத்தாலும், சர்வ னாமத்திற்கும் இருப்பிடமாய்,

தனக்கென்று எந்த னாமமும் இலாததாய், உருவமற்றதாய், னிறமற்றதாய், பளுவற்ற தாய், சுவையற்றதாய். விளங்கும் அது - கடத்துக்குள் ஒரு தலைமுறை காலம் குடியிருக்கிறது என்றும், உயிருள்ள போதே அதை அறிய வேண்டியது மனுவின் கடமை என்றும் வேதத்தில் அருளப்பட்டுள்ளது. நமக்கு இறை னாமம் சூட்டப்பட்டதற்கான பொருளும், செயலும் தன்னுள் அறிவது மகா அவசியமானதாகும். சன்மார்க்க மரபும் ஞானத்தின் அடிப்படையுமான சாகாத் தலை - வேகாக்கால் - போகாப்புனல் இன்னது இன்னதென்று, அறிவே உரு தாங்கி ஆசானாக வந்து அறிவித்து, அவரவரின் னாமத்திற்குரிய பொருளை அனுபவமாக்கி வைப்பார்கள்.

***பொய்யுடம்பி னுள்ளே மெய்ப் பொறியிருந்த தெங்ஙே***<br>***புயனெழுது மெழுத்துமெ மனெழுத்தியல்பு மெங்ஙே***

மெய்ன்னிலை

போதம்

இறைவன் எழுதும் எழுத்து - மதி எழுத்து. எமன் எழுதும் எழுத்து- விதி எழுத்து.விண்ணுலகிலிருந்து இறங்கிவந்த னாதாக்களின் திருவருளால் விதி எழுத்தானது துடைக்கப்பட்டு மதி எழுத்தாக பதிப்பிக்கப்படுகிறது என்பதை சாலை ஆண்டவர்கள் முரீது சுருக்கத்தில், "***தலைவிதி யெழுத்தைத் துடைத்தெழு துமதே தன்பயன் முரீதென்பர் விண்ணோர்***" என அருளியுள்ளர்கள் தற்கலை பீர்முகம்மது அப்பா அவர்கள் விதி எழுத்து, மதி எழுத்து என்பதை மூச்சு னஷ்டமடைவது - எழுதிய எழுத்து (விதி எழுத்து) என்றும், மூச்சு னஷ்டமடையாமல் இருப்பது - எழுதாத எழுத்து (மதி எழுத்து) என்றும் கூறியுள்ளார்கள்.



***திரு.சாலை ரவி அவர்கள்***<br>***நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை***

பிரம்ம பிரகாச சாலை ஆண்டவர்கள், மூச்சு ஓடாமலே இருப்பதற்கு பழக வேண்டும் என்றும், அப்படி பழகித் தேர்ந்தவர்களே அடக்கம் மடக்கி பிடிக்க தெரிந்த அனந்தர்கள் என்று வேதங்களில் அருளிச் செய்துள்ளார்கள். சாவரும் முன் சாப்பழக்கத்தை பழகி, இத்தூல தேகத்தை விட்டு ஜீவதேகத்திற்கு சவாரியராகி மூல வளனாட்டிற்கு சென்று வருவதே க்ஷேத்திராட பயணமாகிய ஜீவபிரயாணம். இப்பெரும் பேறு செத்த பிறகு அடைவது அல்ல. ஒரு பெரியோரை அண்டி, சற்பாத்திரனாக வாழ்ந்து உயிருள்ள போதே பெறக்கூடிய மரணமிலாப் பெருவாழ்வாகும். மார்க்கண்டேயர், ஆஞ்சனேயர், நாரதர், வியாசர், வசிஷ்டர் ஆகியோரும் மரணமிலாப் பெருவாழ்வை பெற்று வாழ்ந்ததாகத் தான் சாஸ்திரங்கள் கூறுகிறது. இப்படியான னிஜசெயல் அந்தக் காலத்தில் மட்டுமல்ல, இன்றும் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களுக்கு வேதசாட்சிகளை முன்வைத்து, குரு பிரானின் திரு பாலிப்பு திருவருளுடன் பேரின்ப பெருவாழ்வு வரமானது ஒவ்வொருவரின் இதய மா மாளிகையில் செயலாக்கப் பெறுகிறது என்ற சிறப்புரைகளுடன் சபையானது இனிதே னிறைவேறியது.



Copyright © AMNA Trust, Chennai

## 05/12/2021 ஞாயிற்றுக்கிழமை சிவகாசி சிறப்பு சபை
## தொகுப்பு :ஸ்ரீ தியாகராஜன்

**பதி எட்டு:**

பதி எட்டாகிய அறிவின் இரகசியத்தை உணர்த்துவதே, பதினெட்டு படியாகவும், போராகவும், புராணமாகவும், இதிகாசமாகவும் இருக்கிறது. பதி எட்டை அறிந்தவர்களே பதினெண் சித்தர்கள்.

**அன்பே சிவம் :**

அன்பும் சிவமும் ஒன்று. ஆசானின் அன்பை நாம் பெற்றுக் கொண்டால் அந்த அன்பே நம்மை சிவமாக்கும். அன்பின் பெயர்கள் விதவிதமாக இருந்தாலும் அதற்கு ஓம் என்றும் உணர்வு என்றும் பெயர்கள் உண்டு. குருவின் னாத தொனியால் மட்டுமே நம் கடத்துள் உள்ள கடவுளை அறிந்து கொள்ள முடியும் என்பதை சாலை ஆண்டவர்கள் வேத வாயிலாக பல நிலைகளில் அருளியுள்ளார்கள். இறைவனை அறிய வைக்கும் குருபிரானின் அன்பே நமக்கு மரணமில்லாப் பெருவாழ்வை வழங்கும். அன்பு என்பது உணர்வாக, ஊற்றாக, பஞ்ஞாட்சரமாக, ஆவிப் பொருளாக இருக்கிறது. ஜீவன் மேல் அன்பு வைக்கும் உபாயத்தை அருள்பவரே மெய்க்குருபிரான். ***"அன்பில்லா உள்ளத்தை மயானம்"*** என்று புத்த பகவான் அருளியுள்ளார்கள்.

சைவ மதத்தின் அடி னாதமும் "அன்பே சிவம்".ஆகும். மனிதன் சவத்தில் இருந்து சிவமாகுவதற்கே வந்தவன். மும்மலங்களை அறுத்தால்தான் சிவமாக முடியும். தத்துவங்களை மனிதனுக்குள் வைத்து பார்க்காதவரை எல்லாம் கற்பனைகளாகவே இருக்கிறது. படைப்பு இருக்கும் வரை இறப்பு நிகழ்ந்து கொண்டே இருக்கும். படைப்புக்குக் காரணம் வினைகளின் தலைவனாகிய மனம். மனம் செம்மையானால் மட்டுமே வினைகளை அறுத்து இறைவன் திருவடி சேர முடியும். மனம் செம்மையாக, னாத மருந்தை உட்கொள்ள வேண்டும். இறைவனின் ஏழு வகை தோற்றமும் மனிதன் தன்னை அறிவதற்கே. நாம் இத்தோற்றத்தின் இரகசியத்தை தன்னுள் அறியும் போதுதான் "அன்பே சிவம்" என்பதை உணர முடியும்.

**சன்மார்க்கத்தின் செயல்:-**

மரண வாசலில் பிறந்த நரனை ஜனன வாசலாகிய தேவப் பிறப்பில் மனுவாக பிறக்க வைத்து, சாமுன் சாகப்பழகும் பிரம்மவித்தையை கற்பிப்பதே சன்மார்க்கத்தின் செயலாக இருக்கிறது. அதன் மூலமே னித்தியத்தைப் பெறமுடியும். னித்தியத்தில் இருவகை உண்டு, ஒன்று சொர்க்கம், மற்றொன்று நரகம் கோயிலின் அமைப்பும் அதில் உள்ள குறியீடுகளும் மனுவானவன் தன்னையறிய வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக பெரியோர்களால் உண்டாக்கப்பெற்றது. இதன் ரகசியங்களை **"கோவிலும் ஆகம விதிகளும்**" என்ற தலைப்பில் மின்னணு ஊடகங்களில் ஆதி மார்க்க னீதி அவையில் வெளியிடப்பட்டுள்ளது.

கடவுள் செயல் அறிந்தவர்கள் பிறவா நிலையையும், அறியாதவர்கள் கருவாசலில் புகுந்து மறுபிறப்பும் எடுக்கின்றனர். கடவுள் செயல் அறியவே குருவின் திருஆலவாய் என்பதை, திருமூலர் பிரானும் **"வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்**" என அருளியுள்ளார்கள்.

**தமிழ்** :

சூரியன், சந்திரன்,**12-ராசி-, 27-நட்சத்திரம், 9-கிரகம்**, என எல்லாவற்றையும் உள்ளடக்கியது **தமிழ்**.

***"சீவனென்ன சிவனென்ன வேறில்லை***
***சீவனார் சிவனாரை அறிகிலர்***
***சீவனார் சிவனாரை அறிந்த பின்***
***சீவனார் சிவன் ஆயிட்டிருப்பரே.***

என்பது திருமந்திரப் பாடல்.



Copyright © AMNA Trust, Chennai

ஒவ்வொரு மனிதனும் சீவனை அறிந்தால் சிவனாக ஆகலாம் என்பதை உணர வேண்டும். சீவனை அறிவதற்கு சீவ பண்டிதரை அறிய வேண்டும், சீவபண்டிதரின் இரக்கத்தால் சீவனாகிய சிவனை அறியலாம்.

**ஞானம்** :

ஞானம் ஆசானின் அன்பாக உள்ளது. அசைவற்று இருப்பது சைவம், அசைந்து கொண்டு இருப்பது அசைவம்."கடவுள்" என்பது, என்றும் மாறாத நிலைத்த தன்மையுடையது. அதை அறிய ஒவ்வொரு மனிதனும் அத்வைத நிலையை அடைய வேண்டும். யாரும் கட்ட முடியாத திருமாளிகையாகிய இக்கடத்தினுள் இருந்து ஒருதலை முறைக் காலம் குடியேறி வாழ்ந்து கொண்டிருக்கும் வஸ்து வித்தே கடவுள்.

**முக்தி** :

முக்தி என்பது மும்மலத்தில் இருந்து விடுதலை அடைவது எனவும், மனதற்று இருக்கும் நிலையே பரிசுத்தம் என்ற குருபிரான் அவர்களின் போதனையுடன் அவை இனிதே நிறைவேறியது,

**09-12-2021 வியாழக்கிழமை சபை**

**தொகுப்பு: ஸ்ரீகுமரேசன் :**

அங்கத்தினர்களின் நேர்காணலைத் தொடர்ந்து, சற்குருவின் ஆசியுடன் அவை இனிதே துவங்கியது:-

ஜோதிடம், வேதம், வேதாந்தம், கோயில்கள், வானசாஸ்திரம் இவற்றில் கூறப்பட்டுள்ள அறிவு கொண்டு ஞானத்தை நம்மில் உணர வேண்டும். உலகக் கல்வியோ பலவிதம். ஆனால் மெய்ஞ்ஞானத்திற்கோ சாகாக்கல்வி எனும் ஒன்றே ஒன்றுதான் உண்டு.

திரிலோக சஞ்ஞாரி எனும் நா+ரதர் என்பது சற்குருவையே குறிக்கும்.

**சத்திய வான்மதிக் கொரல் வாக்கியம் எண். 47**

அறிவில் வைத்து எல்லா ஜீவராசிகளைக் காட்டிலும் மனிதன் உயர்ந்தவன். அறிவாக, ஜீவனாக, உயிராக விளங்கும் அதனை கண்டு நேருக்குநேர் சந்திக்க வைப்பவரே சற்குரு மற்ற உயிரினங்கள் அதன் குணங்களை விட்டு மாறாமலும், ஆனால் மனிதன் மட்டும் மாறுபட்ட குணம் கொண்டவனாக இருக்கிறான். இதனை சிவானந்த போதத்தில்

***மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு***
***கல்லுண்டு மரமுமுண்டு***
***மனிதரிலும் னீர்வாழும் சாதியுண்டு***
***அனேககுல மனித ருண்டு***
***மனிதரிலு மனிதருண்டு வானவரு***
***மனிதர்போல் வருவ துண்டு***
***மனிதரிலே பிறப்பறுக்க வந்நதுவே***
***அருமையென வகுத்தார் முன்னோர்."***

என்ற பாடலில் கூறியுள்ளார்கள்.

வேதாந்தத்தில் மனிதன் வாழும் வாழ்க்கையை வைத்து, மேலான எண்ணத்துடன் வாழும்போது தேவனாகவும், அதனை விட்டு சற்றே தாழும் போது மனிதனாகவும், கீழ் நிலையில் வாழும் போது நரனாகவும் இருக்கிறோம் என்று கூறுகிறது. ஒரு சற்குரு பெருமானின் துணையுடன் அறுபத்து நான்கு கலைகளுக்கும் மேம்பட்ட சாகாக்கலையை சாகாக்கல்வியின் மூலம் அறிந்து பழகியவர்களுக்கே



Copyright © AMNA Trust, Chennai

கைவரவாகக் கூடியது அடக்கம், முக்தி, மோட்சம், பிறப்பிலிருந்து விடுதலை, கைலாய பிராப்தி என்பதெல்லாம், உயிருடன் இருக்கையில் நடக்கின்ற செயலாகும்.

**ஸ்ரீமாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், செத்தில்லாப் பத்து தலைப்பில் பாடல் எண் 04- *"அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்"* பாடலுக்கான புரிதல்:-**

அன்பின் ரகசியத்தை அறிந்தவர்களே அருந்தவம் செய்ய முயலும் அன்பர் என்றும், திருமால் “வராக” அவதாரமாக சிவனின் அடியையும், “அன்னமாக” பிரம்மா முடியையும் காண முயன்று முடியாத அழலுருவாய் சிவபெருமானின் திருவடியை பற்றியவரே என்பர். முருடொக்கும் என்பது பரையை குறிக்கும். இறைவனை அடையும் துறையாகிய வழியை வாழையடி வாழையாகத் தொன்று தொட்டு பரைசாற்றக் கூடிய உயரியச் செயலை செய்வதால் சற்குரு பிரானையே பரையர், அன்பர், உம்பர், அடியார் என வேதங்களில் கூறப்பட்டுள்ளது. அதுவே அடையாளமாக சிவபெருமான் கையிலும் விளங்குகிறது. யோக்கியர் மற்றும் அன்பர் என்பவரை பற்றி நமது தெய்வம் பிள்ளைத்தமிழில் ***"யோகிக ளாகுவ தேயிது வேனீயு சாருட னேதேற".என்றும்***

**பூங்கிளிக் கண்ணி** என்ற பாடலில்

***யோக்கியபூ ரணனன்பு தேக்கியசெள பாக்கியர்க்கு***
***ஆக்கை மரணபய மழிந்நொழிந்நு போனதடி***
***அனைத்தும் கை விடத் துணியு மன்பர் எனவும்***

என அருளியுள்ளார்கள்.

**'உ'** என்ற பிள்ளையார் சுழியின் ரகசியத்தை அறிந்து அதில் சேர்ந்து வாழும் வாழ்க்கையை வாழ்பவர்களுக்கே யோக்கியர்கள், அன்பர் எனப் பெயர். வேதகர்த்தர்கள் அவர்களின் அமுதனாவு கொண்டு வெளியாக்கிய வேதங்கள் எல்லாம் புகழக்கூடிய பொருள் அவரவர் னாமமே. இதனையே

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 96-ல்**

"னமது சொந்த தேகம் அழியாதது, அனாதியானது. அதைப் பெறவே னாம் பிறந்நோம். உன் ஊணக் கண்ணுக்கு அறிய முடியாத பொருளாக உன்பால் அது வைக்கப்பெற்றிருக்கிறது. அதையே மூல மந்நிரம், பஞ்ஞாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், கலிமா என்பர். அதைப் புனற்றுறைக் கோயிலாக இதயாசனத்தில் போய்ச் சந்நிப்பதையே வேதம், பிரம்ம வித்தை என்று கூறுகிறது" என அருளப் பெற்றுள்ளது.

**திருஞான சம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் முதல் திருமுறை, திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்- பாடல் எண்-01**.

***“அங்கமும் வேதமும் ஓதும்நாவர் அந்தணர் யாவரெனில்”*** ஐம்புலக் கதவு அடைபடும் அங்கமாகிய இடத்தை அறிந்து, பொய்யையும் மெய்யையும் பிரித்து காட்டும் வேதத்தை தன்னுள் அறிந்து பழகுபவர்களே அந்தணர்களாவர்.

இதனை குருமணி மாலையில் ***"அங்நம திடத்தி லைம்புலக் கதவையடைக்கும்பே ரறிவெனக் கருளி"*** என்றும் அமுத கலைக்ஞான போதத்தில் ***"மெய்பொய்யும் பிரித்துக் காட்டும் வேதமே தூலமாகும்"*** என அருளியுள்ளார்கள்.அந்தணராகிய அடியார்கள் தினமும் மாடவீதியாகிய திருமருகலில் விளங்கும் இறைவனின் செங்கழலாகிய திருவடியைப் பற்றி தொழுபவர்களாக விளங்குகிறார்கள்.இதனை பொன்னரங்குக் கொம்மியில் ***"பார்வையில் பாண்டியன் றன்னைனீ வைத்திடப் பார்க்கும்தொ ழில்வேறு இல்லையம்மா"*** என அருளப் பெற்றுள்ளது. சீராகிய அமானித்தை சுமந்து சீடனுக்கு தரும் கடமை பூண்டு வந்த ஆசானின் வாய்மையே கோடி சூர்ய வேள்வித் தீயாகவும், கார்த்திகை தீபமாகவும் உள்ளது. அறியாமையை போக்கி அறிவுச்சுடரை ஏற்றி



Copyright © AMNA Trust, Chennai

கணங்களுக்கு அதிபதியாகிய கணபதியை நம்முள் முச்சந்தியில் சந்தித்து வணங்கும் செயலை ஆசான் போதித்து அருளுகிறார்கள்.

**வைகுண்ட ஏகாதசி மார்கழி மாதச்சிறப்பு:-**

சூரியனின் பயணத்தை வைத்துதான் மாதங்களின் சுழற்சி இருக்கிறது. தேவர்களுக்கு ஆறு மாதம் இரவாக இருந்து மார்கழியில் விடியலாக தொடங்குகிறது. இதனை குறிப்பதே வைகுண்ட ஏகாதசி என்னும் சொர்க்க வாசல் திறக்கும் சம்பிரதாய நிகழ்வாக புறத்திலே வைக்கப் பட்டுள்ளது.

வைகுண்டம் என்னும் மெய் குண்டம், மகா மகசூக்கான இருதயமாகவும், உள்ளமாகிய கையாகவும் சாலை என்ற மெய் மேனியுமாக உள்ளது. இங்கே வீற்றிருக்கும் இறைவனை சந்திக்க ஒன்பது வாசல் மூடி பத்தாவது வாசலாகிய அறுகு நுனி வாசல், சபாத் துவாரம், சொர்க்கவாசல், என்று சொல்லப் பெறும் வடக்கு வாசலை திறக்க செய்யும் செயலே பத்தாம் நாள் ராஞானஸ்னானம், லைலத்துள் கதிர், ஏகாதசி ஆகும். இவை யாவும் மனுவை ஓர் இரவில் தேவனாக பிறப்பித்து மாற்றும் செயலையே குறிக்கிறது. திருஞானத்தாழிசை பாடலில் ***"அல்லற்படும் ஓரொன்பது வாசல் பெரு வாசல் ஆரும் அறிவார்கள் அறியார்கள் ஒரு வாசல்"*** என கூறப் பெற்றுள்ளது.

குண்டம் என்பது நெருப்பு இருக்கும் இடம். ஆசானின் திரு வாக்காகிய தீ இம்சியாது நம் பாவங்களை சுட்டு தன்மயமாக மாற்றக் கூடியதாக உள்ளது எனும் பகிர்வுகளுடன் அவை இனிதே நிறைவேறியது.

**11-12-2021 சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி கல்பனா விஜயகுமார்**

"***வானெலாம் சிறப்போனாகி வருகுவே னெனவாக் கீந்து....***" என்ற பாடலுடன் பரிசுத்த ஆவி தெய்வம் மார்க்க நாதப் பெருமானின் பொற்பாதங்களை வணங்கி குருபிரானவர்கள் அவை நிகழ்ச்சிகளைத் துவங்கிய பின்னர்,

**கோடாயிதக் கூர்-திருவாக்கியம் - 78**: பெரியோர்களை தூஷித்து பல இடர்களை இழைத்தவர்கள், அவர்கள் மறைந்தபின் மதிப்பிற்காக ஆறு கால பூஜைகள் செய்து வழிபாடு செய்வது இயேசுபிரான், நபிகள் நாயகம், ஆதி பரமகுரு சுப்ரமணியர் வாழ்ந்த காலத்திலும் இருந்தது. இதனால் அத்தீயவர்கள் எந்த ஒரு புண்ணியமும் பெற முடியாது. சுப்ரமணியர் **"*கையில் வேலேந்தி வந்தது*"** பெரியோர்களைத் தூஷிக்கும் அசுர குணம் கொண்டவர்களைச் சங்காரம் செய்து, அரக்கி அரக்கர்களாகிய அவர்களின் அசுர குணங்களை விலக்கித் துலக்கி தேவனாக மறுபிறப்பில் ஆக்குவதேயாகும். அப்படி மறுபிறப்பில் ஆனவர்கள், வந்த வேதமாகிய பெரியோர்களின் திருவாய்மொழியின் உட்பொருள் ஆதார உயிர்ப் பதிப்பை அறியக்கூடிய அறிவைப் பெறுகிறார்கள்.

**காலந் நாட்டிய காரணப்பா -பாடல் -4.:** "***கலிபு ருஷன்வ லி கடந் நேறியே"*** என்ற பாடலின் புரிதலாக, கலியுகத்தில் கலியுக வரதனாக வந்து, கலிகாலமாகிய காலத்தின் ரகசியத்தை அருளக் கூடிய வரதகுருவின் அருளைப் பெற்று, கலியனைச் சங்காரம் செய்யும் தவ நிலையை அடைந்தவர்கள் அனந்தர்கள். பாற்கடலில் பாம்பின் மேல் பள்ளி கொண்டிருக்கும் பெருமாள், அனந்த சயனன். அவர் கொடிய விஷத்தைக் கொண்ட பாம்பின் குணங்களையும் செயல்களையும் ரசவாதமெனும் சங்காரத்தால் அறிவுருவாக மாற்றி அனந்தர்களாக்கி தனக்கு ஆன சனமாக ஆசனமாக ஆக்கி அதில் வீற்றிருக்கும் குருவாக உள்ளார். அப்படியான குரு தாள் வாழி வாழியே".

**திருவாசகம்- குயில் பத்து- பாடல் -8: "*வாயிங்கே நீ குயிற் பிள்ளாய்*"....எனத் தொடங்கும் பாடல்:** மாணிக்கவாசகப்பிரான் நாதத்தை விளைவிக்கும் குயிலாக, நம்மையும் மயிலெனும் மாயையை விட்டு விலகி, திருமாலும் பிரம்மாவும்



Copyright © AMNA Trust, Chennai

காணமுடியாத திருவடியைக் காணக் கூவி அழைக்கிறார்கள் நடராஜப் பெருமானின் விரிசடையில் அண்டங்ஙள் அவனி, சந்திரன் சூரியன் மற்றும் எண்ணிலடங்கா நட்சத்திரங்கள் அத்தனையும் இருப்பதைக் கண்டு தேவர்கள் அதிசயிக்கிறார்கள். பரமசற்குருவின் ஆடிய பாதத்தை அறிந்த பெரியோர்களால்தான்,

***"அண்டபகிரண்டமெலாம் தொண்டரிதயத்தின் மனக் கண்ணாடிக்குள்ளிருந்த காரணத்தை யான் மறவேன்"*** என்று அதிசயித்துக் கூற முடியும்.

**தேவாரம் முதல் திருமுறை - பாடல் 2: "*நெய் தவழ் மூவெரி காவலோம்பும்*".....எனத் தொடங்கும் பாடல்:** தேவ அறம் வைத்து பாடப்பெற்றது தேவாரம். மனம் அலைபாயாமல் பாதுகாக்கும் அறத்தினுடைய உபதேசத்தை செயலாக்கி வைக்கின்றவர்களால் பாடப் பெற்றதாகும். பெரியோர்களை அண்டி ஆர்வமுடன் அந்தச் செயலின் உண்மைப் பொருளைப் பெற்ற மக்களுக்கு இந்தப் பாடல்கள் தங்கள் அனுபவமாக வாழ்க்கையாக உள்ளதை உணர முடியும். குரு பெருமான் நம்மிடம் அறிவுப் பிரகாசமாகிய ஞானச்சுடரை ஏற்றியதும், அது நம் மும்மலத்தை எரித்து முச்சுடரை தோன்றச் செய்கிறது. மெய்ஞான ஆர்வமான நெய் ஊற ஊற அறிவு பிரகாசிக்கும்

**"திருக்குறளின் மெய்ப்பொருள்" பற்றி மெய்வழி குழந்தைச்சாமி கவுண்டர் ஐயாவின் அணிந்துரை:-** "***அகரம் அறிந்தோன் அனைத்தும் அறிந்தோன்***". எதற்கும் முதற் பொருளாகிப் பின் அழிவிலா அப்பொருளே, அகரப்பொருள் ,மெய்ப்பொருள், சிவ பரம்பொருள், பூரணப் பொருள், அமானித பொருள்,என்பதாகும்.ஒரு சற்குரு பிரானின் பெருங்கருணையால் பேசரும் பெரும் பொருளாகிய, தன் ஜீவனாகிய சிற்றம்பலப் பொருளை அவர்களின் நாதமாகிய திருக்கொரல் மூலம் அறிந்து உணர்ந்தவர்கள் தன் அகரப் பொருள் கைகொண்ட தேவர்கள். மெய்வழி ஆண்டவர்கள் அருளிய வேத நூல்களின் பாடல்கள் யாவற்றிலும் ஜீவன் மற்றும் அமானிதத்தின் ரகசியத்தை முதற் பொருளாக வைத்தே பாடப்பெற்றுள்ளன.

**ஆதி மான்மியம்: ஜீவசிம்மாசனப் பருவம்:-** முக்குணம் கடந்து நிர்க்குணமான சொற்குணா உற்பரனின் வாய்மைக்குள் ஆகும் போது குணங்களற்ற எல்லையாகிய அவ்வுகை வசமாய் அகலாது ஒழுகி, மூன்றாவது கண் திறக்க பெற்று அஃகனைக் கண்டு அகரத்தில் ஆகலாம். ***"னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான் னமசிவ இருப்பறியான்"*** னமசிவ இருப்பறியாதவர்கள் அனைவரும் தற்கொலைதான் செய்கிறார்கள். ரணம் மாறாமல் மாரணமாக தங்கித்தரித்து, மரணமாகிய துக்கத்தில் நரகத்தில் ஆக்குவதை மாற்றி, சுவர்க்கபதி பரமபத முத்திச் செயலினில் ஆக்கும் செயலைத்தான் வேதத்தில் அருளி இருக்கிறார்கள்.

**மார்கழி மாதம்:-** "***மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள்***" நிறைமதி என்பது அறிவின் பிரகாசம். "***இல்லக விளக்கது இருள் கெடுப்பது சொல்லக விளக்கது ஜோதி உள்ளது***". ஜோதியாகிய அறிவுப் பிரகாசம் ஏற்றப்பெற்ற மக்கள் அதன் அடையாளமாக அதிகாலையில் விளக்கு ஏற்றி "**மெய்ப்பொருள் அடைக்கலப்பா**", "**திருப்பஞ்ஞணை எழுச்சி**"ப்பாடல் பாடி, "***எண்டிசையுங் ஙண்டறியா எந்நாய்பரை***" என மெய்யமுது ஈந்த தாயாகிய பரிசுத்த ஆவி தெய்வத்தின் அருளாசியையும் ஆசீர் பாதத்தையும் வேண்டிப் போற்றி வணங்குவோம் எனக் கூறி குருபிரானவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

### 12-12-2021 ஞாயிற்றுக்கிழமை சத்துவாச்சாரி சபை
### தொகுப்பு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி

**னான்**:-

"***னானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் " (யோவான் -14)*** அறியாமையை தெரிந்து கொள்ளுவதே அறிவுப் பிரகாசம்.இந்த பிரம்ம ரகசிய செயலை ஒரு மெய்க்குருபிரான் இருக்கின்ற காலத்தில் பெறுவது மிகவும் எளிது.
இதையே பூரணப் புதையலில்

***அந்நமுள்ள பிரணவத்தை யறிய வென்றா***
***லன்னாடு சென்றுவரு மாசான் வேண்டும்***
***இந்நவித மல்லாமற் கோடி னூல்க***
***ளெப்படினீ யோதிடினும் விளங்கி டாதே"***

என்று ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்


திரு.சாலை ரவி அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

. ***"எண்ணம்பல கோடிய தாய்விரிந்நேமன்னும்பல உயிர்களெ லாம்னமவாய்" (முகப்பு)*** நாம் எண்ணங்களில் வெவ்வேறாக இருக்கின்றதை மாற்றி உலகம் முழுவதும் ஒரே எண்ணமாக, அன்பை னிறையச் செய்வதே அவதார செம்மல்களின் ஒரே நோக்கமாக உள்ளது.இதனை கீதையில் "***உலகத்தில் பவக்கோள் தலையெடுத்து வருங்காலத்தில் னான் வருவேன்***"என்றும்,

***சாவாது பிறவாது தனிமுதலா யிருந்நனான்***
***ஆவாயிவ் வுலகுபடும் அழிதுயர்தீர்ப் பதற்காக***
***மேவாது னின்றேயென் மாயையினால் மெய்யேபோல்***
***ஒவாதுவந்து பிறந்நிடுவேன் யுகந்நோறும் யுகந்நோறும்***

என்று பகவான் கூறுகிறார்.

அர்ஜுனனுக்கு போர் களத்தில் நடந்த அதே உபதேசச் செயல் தான் இன்று நம் குரு கொண்டலின் மூலமாக ஆதி மார்க்க னீதி அவையில் நிகழ்கிறது.

**ஞான முறையீடு:-**

***சுருளிமுப் பத்திமுக் கோடிதே வர்மனு***
***ஜின்கள் வான் பூமியெலாம்***
***சூலில்வைத் தேவெளி யாக்கியின் னுமாக்கும்***
***தூலாதி சூட்சவித்தே***

என்ற பாடலில் "சுருளி" என்ற ஒரு புள்ளியிலிருந்து தொடங்கி அழியாத தேகமானது உண்டாவது போல, என்னாளும் னினைவுக்குள் னினைவாக இருந்து அனுபவத்தை அளிக்கின்ற முப்பத்து முக்கோடி தேவர்களும், பஞ்ஞ பூதத்தலை அரசர்களும், சேர்ந்து வெளியாக்கிய ஒரே வித்து, அது "வித்தில்லாவித்து". அதனை மெய் ஞான செம்மல்கள் தங்களின் சோலினாப்பை மூலமாக விதைக்கிறார்கள். மெய்ப்பொருளை அறிந்தவர்கள் தேவர்கள், அவர்களுடைய பாதமானது பூமியில் படாது. இப்படியான


Copyright © AMNA Trust, Chennai

செயலை பழக்கித் தரும் மெய்க்குருபிரானின் பொற்பாதத்தை சரணடைந்தால் நாமும் தேவர்களாகலாம்.

**குரு ஸ்தோத்திரம்:-**

***பள்ளி யையுமெய்ப் பால்தந்த வள்ளலைக்***
***கள்ள மின்றிக்க லந்நந்த னாளிலே***
***அள்ளி யேயவர் தாளென்றன் சென்னியில்***
***எள்ள ளவுமி டையும்வி டாதம்ம***

என்ற பாடலில், எல்லோருடைய பள்ளி அறையில் உள்ள இறைவனை அறிய வாழையடி வாழையாக வரும் அவதார புருஷர்கள் எனும் கருணாமூர்த்தி, தங்களிடத்தில் பிரகாச ரூபமாக உள்ள வேத மந்திரத்தை செவிச் செல்வத்தின் மூலம் வழங்கி, மனுக்களுக்கு வயது தந்ததின் பிரயோசனமாகிய மெய்ப்பாலை அறியச் செய்கிறார்கள். இதையே திருவள்ளுவர் பெருமான் செவிச் செல்வத்தின் சிறப்பாக

***செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச் செல்வம்***
***செல்வத்துள் எல்லாம் தலை.*** (411) என்று கூறுகிறார்.

தலையான தலையை காக்கும் குருபிரான் அவர்கள் எப்பொழுதும் சீடரின் கூடவே நின்று, பேரின்ப எல்லையில் இரண்டற கலந்து சென்னி மலை வாசலுக்குள் நம்மை புகுத்தாட்டி வைக்கிறார்கள்.

**சோமன்:-**

சோமன் என்றாலே அறிவு, ஆனந்த நிலையாக விளங்கும் குருகொண்டலே சோமனாக விளங்குகிறார். அவர்கள் பெறுவதற்கரிய தேவலோக அருளமுதத்தை வழங்கும் அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரமாக விளங்குவதுடன் மனுக்களுக்கு அதனை பொற் கிண்ணத்தின் மூலமாக ஊட்டுகிறார்கள்.

**தொண்டு:-**

மரண அவஸ்தையில் ஜீவன் சிக்கி கொள்ளாமல் காப்பதுவே தொண்டு எனவும், முக்காலத்தையும் அறிந்து செய்யும் சேவையே "திருத்தொண்டு" எனவும் அருளுகிறார்கள் தொண்டர்களின் பெருமையை

***பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்***
***பெரிது பெரிது புவனம் பெரிது***
***புவனமோ நான்முகன் படைப்பு***
***நான்முகன் கரியமால் உதிரத்தில் உதித்தோன்***
***கரிய மாலோ அலைகடல் துயின்றோன்***
***அலைகடல் குறுமுனி கலசத்தில் அடக்கம்***
***கலசமோ புவியிற் சிறுமண்***
***புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்***
***அரவோ உமையவள் ஒருசிறு மோதிரம்***
***உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்***
***இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்***
***தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே "***

என்று ஔவையார் கூறியுள்ளார்கள் பரிபூரண நிலையில் உள்ள குரு கொண்டலின் முதன்மையான தொண்டின் மூலமாக னாம் அன்பைப் பெறுவதுடன் அந்த அன்பே நம்மை சிவமாக்கும் எனும் பகிர்வுகளுடனும் குருபிரான் ஆசீர்பாதத்துடனும் அவை இனிதே னிறைவேறியது.



Copyright © AMNA Trust, Chennai

**12-12-2021 ஞாயிற்றுக்கிழமை சிவகாசி சபை:-**
**தொகுப்பு :ஸ்ரீ ஜெய்குமார்**

***"ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வமாகி.***" எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் சபை தொடங்கியது

மெய் வணக்கமுறை மற்றும் மூல மந்திரத்தை உச்சரிக்கும் விதமும், அதனுடைய மேன்மைகளையும் குருபிரான் அருளிச் செய்தார்கள்.

**ஆண்டவர்கள் திருவாக்கியம்**-
மனம் பூரிக்கப் பாவமும், அறிவு பூரிக்க சாவாவரமாகிய ஞானமும் வந்து கிட்டும். அறிவு என்பது மனிதனிடத்திலுள்ள பிரணவக் கலையின் கிரண வீச்சாகும். ஆசானின் நாதமாகிய சப்தத்தின் மூலமே இறைவனை அறிய இயலும். இதையே சத்தத்தின் மூலமாக சதாசிவத்தையும், சித்தத்தின் உள்ளே சிவலிங்கத்தைக் காட்டுவதையும் பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

**நரன்- மனிதன்- தேவன்**

ஐயறிவு நுகர்ச்சியில் வாழ்பவன் **நரன்**.

ஆறாவது அறிவில் வாழ்பவன் **மனிதன்**.

நமசிவாய என்னும் 51 அட்சரத்தை உள்ளடக்கிய, ஐந்தெழுத்து மந்திரத்தை அகமியத்தில் அறிபவன் **தேவன்**.

இறைவனுடைய திருவடியை அறியும் முறையினை உணர்த்தும் பாடல்:- ***"ஆதி னாயக தேவ தேவனை அடிமை கண்டு கலந்நனாள்"*** அடிமை என்பது, "***சொல்லக்கேள் ஞானவழி சுருக்கமின்னூல்***" எனவும் "***சுத்தசை தன்ய னாதர் சொல்லொரு பொருளி னாலே செத்துனீ தினம் பழகத் தெரிந்நிடும்***" உளவாகவும் உள்ளது.

பிரம்மா- படைப்புக்கு காரணமான பிரம்மாவே நான் முகனாகும். "***சண்முகனும் நான்முகனும் சராசரப் பொருள் அனைத்தும் என் முகத்தில் காட்டி வைத்த என் குருவை யான் மறவேன்***" கண், காது, மூக்கு, வாய் என்கிற நான்முகன் மூலமாக படைப்பு உண்டாகின்றது. அறிவின் மூலமாகத் தான் படைப்பின் இரகசியத்தை அறியமுடியும்.

***"அறிவு அறிவென்று அரற்றும் உலகம்***
***அறிவு அறியாமை என்றும் அறிகிலர்***
***அறிவு அறியாமை கடந்து அறிவானால்***
***அறிவு அறியாமை அழகிய வாரே" "***
என அறிவிருக்கும் தலத்தை திருமூலர் அருளுகின்றார்.

***"சிவனே நீயாகும் அறிவும் நீயாம்"*** சிவனையும் குருவையும் வேறாக கூறுபவர்கள் சண்டாளர்கள் என குருகீதையில் உள்ளது. நரனிலிருந்து தேவன் என்ற உன்னத நிலைக்கு ஏற, அறிவு அறி பாடத்தில், ***"தேவராய்ப் பிறக்கத் தேரைந்து மந்நிரம்"*** என உள்ளது.

ஐந்தெழுத்து மந்திரம் ***"நமசிவய"***

**ந** = பிரம்மா

**ம** = விஷ்ணு

**சி** = ருத்திரன்

**வ** = மகேஸ்வரன்

**ய** = சதாசிவம்


Copyright © AMNA Trust, Chennai

இதைத் தன்னுள் அறிபவர்களே **தேவர்கள்**.

சவமாக இருக்கும் சிசு **"நான்"** (பிரம்மம்) வந்தபின் விழிக்கின்றது. அறுத்தடைத்த வாசல் திறப்பிக்கப் பெற்றவர்களே மறுபிறப்பு பெற்றவர்கள்.

ஜீவன் அவாவோடு தாவும் போது மனமாகவும், அது தன்னில் லயமாகும் பொழுது சிவமாகவும் ஆகிறது.

**உருவம் என்பது தேகம், அருவம் என்பது ஆன்மா அருவுருவம் என்பது சத்தம்**.

**நற்றாள்**:- சர்வத்திலும் நின்று ஆடும் குஞ்சித பாதத்தை, ஏழ்னிலைக்கம்பமாய் மூன்று உலகத்திலும் ஊடுருவி நிற்கும் அந்த திருப்பாதத்தை தான் "நற்றாள்" என்றார்கள். ஊமையெழுத்து என்னும் அத்திருப்பாதம் நம் ஜீவாதார ஆட்டமாக இருக்கிறது. இதனை குருமுகமாக மட்டுமே அறிய இயலும். அந்த திருப்பாதத்தினை தரிசித்தவன் கல்வியின் பயனைப் பெற்றவன் ஆவான்.

***"வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம்".***எனும் பட்டினத்தார் பாடலின் மெய்விளக்கம்: வெட்டாத சக்கரம் நம்முள் ஆறு ஆதாரமாகவும் பேசாத மந்திரம் ஓதாமல் ஓதும் பிரம்மவித்தை செயலாகவும் உள்ளது. எட்டாத புஷ்பம் குறிஞ்சி பூப்போல, ஆசானின் நிழலில் 12 ஆண்டுகள் குருகுலவாசம் மூலம் இதயாசனத்தில் பூப்பது. இது சாமானியர்களுக்கு எட்டாத புஷ்பம். "இறையாத தீர்த்தம்": தீர்த்தமாவது தேசிகர் திருவாசகம் கட்டாத லிங்கம் "கார்த்திகை" எனப்படும் நம்மை காக்கும் தீயே கட்டாத லிங்கமாகும். இப்பெருநிலை வேதவசனங்களோடு சபையானது இனிதே நிறைவேறியது.



திரு.சாலை ரவி அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

**16-12-2021 வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ விஜயகுமார்**

**மார்கழி:-** மார்கழி என்பது மதி நிறைந்த நன்னாள். இம்மாதத்தில் செய்யும் மெய்வணக்க வழிபாட்டின் பலன் வருடம் முழுவதும் நமக்கு பலன் தருவதாக அமையும். மாதங்களில் "நான்" மார்கழி என்பது கிருஷ்ண பரமாத்மாவின் திருவாக்கு. மார்கழி மாதத்தில்தான் குருஷேத்திரப் போர் தொடங்கியது. பகவானின் உபதேசமான பகவத்கீதையும் அருளப்பட்டது. மார்கழி மாதமானது வைகறை ஜீவன் வாழ்வினில் ஏற உகந்த மாதமாகவும், தேவர்களுக்கு பகல் பொழுதாகவும் உள்ளது.

***சாவாது பிறவாது தனிமுதலா யிருந்நனான்***
***ஆவாயிவ் வுலகுபடும் அழிதுயர்தீர்ப் பதற்காக***
***மேவாது னின்றேயென் மாயையினால் மெய்யேபோல்***
***ஓவாதுவந்து பிறந்நிடுவேன் யுகந்நோறும் யுகந்நோறும்***

என்று பகர்ந்த ஆதிமொழி நாவானது வந்திருப்பதன் அடையாளம் குருவின் ஒரு சொல்-னா-பையில் உள்ளது. ஏதும் அறியாமல் இருக்கும் நாம் குருபிரானின் கையகத்தில் ஆகும் போது பிரணவ கலையானது பதிப்பிக்கப் பெற்று மெய் உணர்வு ஊட்டப்பெறுகிறது.



Copyright © AMNA Trust, Chennai

**ஆண்டவர்கள் திருவாக்கியம் வான்மதிக்கொரல் எண் 48:** "வைகுண்ட ஏகாதேசி" என்பது கோள்களின் நிலையை வைத்து உயிரின் ரகசியமாகிய காலக்கணக்கை கூறுவதாகும்.மார்கழியில் வைத்துதான், சூரியனின் பயணம் மாறுகிறது. சூரியனின் தென்திசையில் இருந்து வடதிசை நோக்கிய பயணமானது தை முதல் ஆனி வரை "உத்ராயணம்" என்றும், சூரியன் வட திசையில் இருந்து தெற்கு நோக்கி ஆடி முதல் மார்கழி வரை உள்ள பயணம் "தட்சிணாயனம்" என்றும் உள்ளது. இதன் நிலைகள், இடகலை பிங்கலை சுழிமுனை ஆக நம்முள் சுழன்று ஓடுகிறது. மூச்சுலயமாகிய மனோலயமே கிரகம் அஸ்தமிக்கும் விஷயம். "***காலக் கிரகங்கள் சூழ்ந்த வங்கே கோளரி வாளாகி நின்றவரே***" கோளரிவாளாக நிற்பது ஆசானின் திருனாவு. காலம் கடந்த பொருளை கைப்பற்றி பிறவாமை எனும் பெரும் பேற்றை அடைய இறைவன் நமக்கு ஆறாவது அறிவு தந்துள்ளான்.

**காலந் நாட்டிய காரணப் பா பாடல் எண் 5:"காளையர் வடலூர் வள்ளல் கட்டிய…":-** சித்தர்கள் வாழும் மெய்ஞான அறிவு ஒளிரும் இடமே குகை. பேழையாம் அருட்பாவெனும் பெட்டியும்,அதற்கான சாவியும் தன்னை அறிந்த பெரியோர்களிடம் இருக்கும். ***"போதகமின் நூலின் பூட்டை திறப்பதற்கு பூதலத்தில் கோடியில் ஒருவன் இருப்பான்".*** மேற்சொன்ன பாடலில் ஞானசித்தர் காலம் "வந்ததே" என்று முக்காலத்திற்கும் ஆன சொல்லாக ஆண்டவர்கள் அருளுகின்றார். சித்தாகிய சத்தை நமக்கு கொடுத்து அதன் மூலம் சித்தை நாம் அறிந்து ஆவதற்கு தான் "ஞான சித்து "என்று பெயர். மக்களை இதில் ஆக்கி வைப்பதே குருகுலவாச பழக்கம்.

**மாணிக்கவாசகர் அருளிய "செத்திலாப் பத்து" பாடல் எண் 5 : *"ஆட்டுத் தேவர் தம் விதி ஒழித்து."*:** "ஆட்டுத் தேவர்" என்பவர் நம்மை வழிநடத்தும் குருபிரான். வினையால் வந்த விதியை, ஆசான் தன் அன்பினால் மாற்றி வைப்பதையே "அன்பே சிவம் "என அருளுகின்றார்கள். "சேட்டை தேவர் என்பது, பெருவிரல் பதியாக, வாமன ரூபமாக உள்ளது. அம்பலத்தே ஆடுகின்ற அவர்களுக்கு ஆட்டுவித்தான், ஆட்டுத் தேவர் என பெயர்.

**தேவாரத் திருப்பதிகம்: "தோளொடு மார்பு…." பாடல் எண் 3:-** பிரம்மத்தை அறிந்து சவாரி செய்பவன் பிராமணன், இவை காலத்தின் ரகசியமாக உள்ளதை குரு பிரான் மூலமாக நாம் அறியலாம். அறியாத மக்களுக்கு துக்கம் துயரமுடைய நாளாகவும், அறிந்த மக்களுக்கு நன்நாளாகவும் உள்ளது. உலக உற்பனமே வெளிச்சம் - இருள் என்ற நிலையில் உண்டாவதாக ஆதியாகமம் சொல்கிறது வெளிச்சமும் இருளும் சேர்ந்து ஒரு நாளாக ஆகிற்று. இது மனுவின் உற்பன ரகசியம். அசைவற்ற ஒன்றிலிருந்து நாத மின்னுடலானது அசைந்து வந்து தான், மனதின் மூலமாக எண்ணத்தில் பாய்ந்து, முதுகுத்தண்டு வழியாக ரசமாக வழிந்து உற்பனம் உண்டாகிறது.

சூரியனின் பயணத்தில் அயனமானது முடிந்து "மகா சங்கராந்தி" என்ற மகர ராசியில் நுழைவதை "தைத்திருநாள்" ஆக உழவர் திருநாளாக வைத்துள்ளார்கள். சொல்லேர் உழவர்க்கு அது திருநாளே. வடபத்ரசாயியாக "விஷ்ணு" தத்துவ நிலையாக மாறாத இளமையுடன் தொப்புள் கொடியின் மேல் "பிரம்மா" உள்ளார். இவ்வாறாக என்றும் மாறாத இளமையாக பத்துவயது கன்னித்தாயாக இருப்பவரின் தொப்புள் கொடியில் வந்தவர்களே குருமார்கள் ஆவர்.

**தமிழ் :-**தமிழின் ரகசியம் காலக் கணக்கின் ரகசியமாக மனிதனிடம், வாதம், பித்தம் சிலேத்துமம் எனும் நாடித் துடிப்பாக உள்ளது, 12 ராசி, 27 நட்சத்திரம் கிரகத்தின் தன்மையாக உள்ளது. ஒவ்வொன்றும் நான்கு பாதங்களாக உள்ளது .12x9=108. கிரக நாயகனாக விளங்குபவன் "மனம்". குருவின் அனுக்கிரகம் மூலமாக நம் மனமானது அஸ்தமிக்க பெற்று "கிரகஸ்தன்" என்ற பெருநிலைக்கு உரியவனாக்குகிறது.

"அடக்கம் அமரருள் உய்க்கும்". அமரன் என்பவன் கிரகங்களை எல்லாம் கடந்த நிலையில் உள்ளவன்.இது செத்த பின்பு நடப்பதல்ல, இருக்கும்போதே



Copyright © AMNA Trust, Chennai

பழகி வைகுண்ட பிராப்தி, சிவலோக பதவி அடையும் வழியாகும். சுவாச நிலைகளானது, ஒரு நாளுக்குள்- நாழிகைக்குள் 16' 12' 8' என கலைகளாக மனிதனுடைய புத்தியில் உள்ளது என்பதை தன்னுள் அறியும் வல்லபமுடையவன் மூக்கிற்கு வெளியே மூச்சு ஓடாத ,தவமுடைய வாழ்க்கையை பெறுவான்.

"மார்க்க மொழி கீதங்கள்" என்ற நூல் வெளிவர இருக்கிறது .இந்த மார்க்க மொழி கீதங்கள் மூலம், அசலான அழியாத சன்மார்க்கத்தை மக்கள் பெற்று அடைவார்கள், அடைந்து கொண்டே இருக்கிறார்கள், இன்னும் அடையக்கூடிய மக்களும் அதற்கான விழியிமைச் சேர்க்கையினராய் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிகழ்வுகளுடன் சபை இனிதே நிறைவு பெற்றது.

**18-12-2021 சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி ஜீவிதா வடிவேலன்**

மார்கழி மாதம் பௌர்ணமி சிறப்பு னாளில் ஆசானவர்கள் அருளிய அமுதமொழியின் அம்சங்கள்:

**திருவிழாக்களின் சிறப்பு:**

திருவிழாக்களின் அடிப்படையானது ஒரு அசுரனை சங்காரம் செய்து தேவப்பிறப்பில் மாற்றி வைக்கும் அரும்பெரும் செயலாகும். பிறக்கும் போது யாரும் மனிதனாகவோ, தேவனாகவோ பிறப்பதல்ல. நரனாகவே பிறக்கிறான். கால்வழியில் பிறந்தவர்கள் அனைவரும் சூத்திரர்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது. கால் வழியில் பிறந்த பிறப்பை மாற்றி ஆவிடை என்னும் யோனியின் வழியாக தேவ லிங்கத்தின் மூலமாக பிறந்து சிவபோகத்தை அனுபவிக்கும் இரகசியமே, சிவன்ராத்திரி, வைகுண்ட ஏகாதசி எட்டா னாள் ராஞானஸ்னானம் லைலத்துள் கதிர் ராவாக இருக்கிறது என்று வேதங்கள் பறை சாற்றுகின்றன.


*திரு.சாலை ரவி அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**தத்துவ னிலை:**

தத்துவத்தில் உயர்ந்த தத்துவம்- மானிட தேகம். அருமையிலும் அருமையாகிய இத் தத்துவ நிலையை உணரவே, ரோஸ் மீதாக்குடைய காலத்தில் அமானிதமாகிய சீதனத்தை மனிதன் பெற்றுவந்தான். தத்துவ நிலையை மனிதன் தன் முகத்தில் உணரவேண்டும் என்பதற்கே வேதங்களும், ஆகமங்களும், இதிகாசங்களும் இன்னிலவுலகிற்கு வந்திருக்கிறது.

**இடப்பாக ஆசாரக் கண்ணி:**

***சண்முகனும் னான்முகனும் சராசரப் பொருளனைத்தும்***
***என் முகத்தில் காட்டி வைத்த என் குருவை யான் மறவேன்.***



Copyright © AMNA Trust, Chennai

முப்பொருளுக்குள் சர்வ சாட்சிகளும் னின்று விளங்குகிறது என்பதை, அரிக்கு முந்நின அவ்வெழுத்துக்கு அப்பாலாய அகரம் என்றும், உடல்- உயிர்- ஆன்மா, அலிபு- லாம்- மீம், ஆலம்- ரூகு- ரூகானி என்றும், இன்னும் பலனாமங்களில் முப்பொருள்க் கோல மெய்மை விளக்கத்தில் அருளப் பெற்றுள்ளது. தத்துவ னிலையை உணர்த்தக்கூடிய பொருளாக இருப்பது பிராணன். தத்துவ பொருளை உணர்த்துவதற்கே ஒரு தலைமுறை காலம் நம்முள் ஆன்மா குடியேறி இருக்கிறது. காலமும், வயதும் உள்ள போதே ஆத்மாவை அறிய வேண்டியது மனுவின் தலையாய கடமையாகும்.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர்-வாக்கியம் எண்: 79**

கைலாசவாசரின் திருச்சன்னிதி அடைந்து, அவரது கொலுவாசனத்தில் அமரவே, இத்தேகத்தின் அதிபதியாகிய ஸ்ரீமன் னாராயண மூர்த்தியின் திருச்சன்னிதி னிழல் போய்ச் சேரவே, னாம் இந்த மானிடச் சட்டை எடுத்தோம். இதனை விட்டு ஒரு அட்வகேட் ஆக, பணக்காரர் ஆக, னாடாளும் மந்திரியாக ஆவதற்கு இத்தேகம் எடுக்கவில்லை என்று ஆண்டவர்கள் அருளிய இத்திருவாக்கியத்தை அனைவரும் மனதில் ஊணி பதிய வைத்துக் கொள்ள வேண்டும் என்று குரு பிரான் அருளிச் செய்தார்கள்.

**காலந்நாட்டிய காரணப்பா: பாடல் எண்: 06:** ***"வருவர் சாலை கலி வடு மாற்றுவோர்"*** என தொடங்கும் பாடல்

இருள் மனத்தாருக்கே கலியன் எனப் பெயர். கலியனுடைய வடு னாவில் உள்ளது. அத்தகைய வடுவை மாற்றக் கூடிய பொருளாக இருப்பது ஆசானின் னாதம் என்பதை உணர்த்தும் ஆதி மான்மியம் **பாசுபதத் தவக்கோலப்பா** பாடல்:

***முச்சந்தி தனிலே வைத்தார்***
***முழூச்சுமார் வந்து கூடும்***
***னிச்சயச் சபைக்கூட்டத்தில்***
***னடுவினில்க் கிடத்தி னெஞ்ஞில்***
***பிச்சுவாக் கொண்டு கீறிப்***
***பிளந்து பித்தெடுத்து வாயைத்***
***தைத்துமே வடுவுங் நாணாச்***
***சாதகம் செய்திட்டாரே***

**திருவாசகம் குயில் பத்து பாடல் எண்- 09** ***"காருடையப் பொன்திகழ் மேனி"*** என தொடங்கும் பாடல்

அமானிதத்தின் உருவாக விளங்கும் குருபிரானின் செங்கமலமாகிய சீதக்களப செந்தாமரை பூம்பாத னடனத்தால் உவட்டா அமுதமாகிய தில்லை அமுதத்தை ஊட்டி நம்மை அறிவு பிறப்பில் ஏற்றி வைக்கிறார்கள்.

**தேவாரம் முதல் திருமுறை பாடல் எண்- 04** ***"நாமரு கேள்வியர் வேள்வியோவா"*** என தொடங்கும் பாடல்

கலைமகள் வாசம் செய்யும் திருனாவை உடைய தன்னை அறிந்த பெரியோர்களிடத்தில் பத்தினித்தனமாக இருப்பதே வேள்வி (யாகம்) ஆகும். முத்தி மலையாகிய தவ அக்கினியில் அங்கக் குலங்களை அர்ப்பணித்து பாவ உயிருடலை கருக்கி புது னித்திய உயிருடலை பெறுவதே யாகம்.

**ஆதி மான்மியம் - ஜீவ சிம்மாசனப் பருவம்**:

திருப்புத்தூர் அறுபத்து மூவர் மடத்திலே தங்கியிருந்தவர்களிடம் ஓர் இரவில் பேசிய பிரசங்கம்



Copyright © AMNA Trust, Chennai

**அசலைக் காணீர் - விட்டு விட்டீர்.**

மனிதனுக்குள் அசல் தேகம் இருக்கிறது என்பதை அறியாமல், னகல் தேகத்தை னம்பி னகல் கல்வி, னகல் பட்டம், னகல் பொருள், னகல் தொழில், னகல் தெய்வம், னகல் தவம், னகல் இன்பம் என அனைத்தையும் தேடி தேடி, அசல் வேலை செய்வதற்காக இறைவன் அளித்த தேகத்தையும் வயதையும் வீணாக்குபவர்க்கு அசல் னரகம் தண்டனையாக வந்துவிடும் என்ற உஜார் ஜாக்கிரதையும், அசலை அடைவதற்கான உளவையும் பெருங்கருணை கொண்டு அருளிய மெய்வழி னாதனின் திருவாய்மொழியின் உன்னத நிலைகளை நம் குருகொண்டல் அருளிச் செய்து அவையை னிறைவு செய்தார்கள்.

**19.12.2021 ஞாயிற்றுக்கிழமை சத்துவாசாரி சபை,**
**தொகுப்பு-ஸ்ரீமதி ஹேமலதா தியாகராஜன்**

**நாள்**:-

ஒரு நாளில் ராகுகாலம், எமகண்டம் பார்த்துதான் வேலை செய்கிறோம், ஆனால் நாம் பிறக்கும் தருணத்தில் அந்த அவசரகாலத்தில் இராகு காலம், எமகண்டம் எல்லாம் பார்ப்பதில்லை. ஒரு நாளில் பிறக்கும் நாம், நம் கடமையை முடிக்கவில்லையெனில் பிறவிச்சுழலில் சிக்கி மீண்டும் மற்றொரு நாளில் பிறப்போம். ஆனால் அப்பொழுது மனிதனாக பிறப்போமா என்று தெரியாது. ஓர் அறிவில் இருந்து ஐயறிவில் உள்ள ஏதோ ஒன்றில் பிறப்போம் ஆனால் அவைகள் பார்க்கும் பார்வையும், மனிதன் பார்க்கும் பார்வையும் வேறு. ஏனெனில் மனிதனுக்கு மட்டுமே தனிச் சீதனமான ஆறாம் அறிவு கொடுக்கப்பட்டுள்ளது அதுவே பேரின்பத்தை அடைய செய்யும்.

**பேரின்பம்:**-

பேரின்பத்திற்கு என்று கொடுக்கப்பட்ட பொருளை வைத்து நாம் சிற்றின்பத்தை அனுபவிக்கின்றோம். ஆனால் பேரின்பமோ

***எண்ணாயி ரம்கற்ப காலம் யோக***
***மிருந்நாலும் சலிக்காத இன்ப னாடு***
***மண்ணாடும் வகுத்தலிங்க வட்ட னாடு***
***மரணபயம் மாற்றிவைக்கும் வாணி னாடு*** ஆக உள்ளது.

**அறியாமை:**-

தனக்கு தன்னை யார் என்று தெரியாமல் இருப்பதுவே மிகப்பெரிய அறியாமை.

**பொழுதுபடாத சாம்ராஜ்ஜியம்**:-

பொழுது எங்கு இல்லையோ அங்கு அறிவு உள்ளது. பொழுதுபடாத சுனை என்று ஒன்று உள்ளது அதன் நகல் தூக்கம், அதன் அசல், தூங்காமல் தூங்கி சுகம் காணும் இடம். இதனை ஆண்டவர்கள்

***விடியாமல் விடிந்திருந்த பொன்னிலனா டெங்கே***
***விடமதுவுண் டமுதமது ஊறிவர லெங்கே***
***னடுவறிந்து உரைப்பவர்க ளவர்களேசன் மார்க்க***
***னாதரென அடிதொழுக னற்கதிகை வசமே***

என்று **மெய்ன்னிலைப் போதத்தில்** அருளியுள்ளார்கள் அந்த பொழுதுபடாத சாம்ராஜ்யத்தில் நம்மை ஆக்கி வைத்துக் கொண்டிருப்பதுவே இந்த ஆதி மார்க்க னீதி அவை.

**ஆறாம் அறிவு**:-

ஆறாம் அறிவு என்றால் உலகில் பகுத்தறிவு என்பர். ஆனால், ஓர் அறிவு முதல் ஐயறிவு உள்ளவைகள் அனைத்திற்க்கும் பகுத்துப் பார்க்கும்



Copyright © AMNA Trust, Chennai

அறிவு உள்ளது. மனிதனுக்கு மட்டுமே தனிச் சீதனமாக கொடுக்கப்பட்டுள்ள அத்தகைய ஆறாவது அறிவை நாம் அறிந்து கொள்ள ஓர் மெய்குருபிரானின் இரக்கமும், அருளும் நமக்கு கட்டாயம் வேண்டும்.

**ஏசுகிறிஸ்து பிறப்பு**:-

ஒரு மாட்டு தொழுவத்தில் நட்சத்திரங்கள் சூழ்ந்திருக்க அந்த பெருமான் பிறந்து ஞான இச்சையுடன் இருந்து ஒரு குருபிரானை அடைந்து, ஞானம் பெற்று இந்த உலகத்தில் உள்ளவர்களுக்கு ஞானம் கூறி பல அதிசயங்களை நிகழ்த்தியுள்ளார். ஏசுபிரான் அவர்கள் பைபிளில் *"**உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை உன் சந்திரன் மறைவதுமில்லை கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்***" என்று கூறுகிறார். இதில் னித்தியம் எனப்பெற்றது ஜீவனாக உள்ளது. அதுவே சாகாத் தலையாக உள்ளது. இதனை ஆண்டவர்கள்

***சாகாத்த லைதன தாச்சுத தன்மேலே***
***வேகாத காலூன்றிக் கொண்டேனடி***
***போகாப்பு னலந்நாக் கொம்மிய டீங்நடி***
***பொய்யுல கவீணர் காணுவாரோ***

என்று **பொன்னரங்க கொம்மியில்** அருளியுள்ளார்கள் சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல், இவைகளே அனைத்து சன்மார்கத்தின் மரபு இதுவே ஞானம் இத்தகைய ஞானம் ஏசுபிரான் காலம் மட்டும் அல்ல அது வாழையடி வாழையாக தொனி மாறாமல் நம் ஆதிமார்க்க னீதி அவையின் மூலம் நமக்கும் இத்தகைய ஞானம் வழங்கப்பெற்று நாமும் அதில் ஆகிக் கொண்டிருக்கிறோம்.என்ற பகிர்வுகளுடன் அவை இனிதே நிறைவுற்றது.

### 19.12.2021 ஞாயிற்றுக்கிழமை சிவகாசி சபை
### தொகுப்பு: ஸ்ரீமதி பானுமதி குமரேசன்

***"இன்ன ணம்பல காரிய காரணம்"*** எனத் துவங்கும் **காலந் நாட்டிய காரணப்பா** பாடலுடன் அவை தொடங்கியது.

**குருவின் வல்லமை:**

வேதத்தாயாக வரும் குரு பெருமானின் அமுதனா மூலம் அருளப்படும் வேத மொழியானது நம்முடைய அறியாமையை நீக்கி அறிவுப் பிரகாசத்தில் ஏற்றி, புண் னாவாக இருந்ததை, கலைவாணி குடியிருக்கும் வேத னாவாக மாற்றி வைக்கும் என்பதை உணர்த்தும் தெய்வத் திருவாக்கியம்:

"னாவுக்கு பெரியதாக உலகமில்லை. கலைவாணி குடியிருப்பு னாவில் என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே அந்நக் கலைவாணி உன்னாவில் இருக்கும்படி உன்னாவை னீட்டி அகட்டி, வேத னாவாக வளர்க்க வேண்டும் என்பதுவே எம் எண்ணம்"

**உபதேசம்**:

***அங்நம திடத்தி லைம்புலக் கதவை***
***யடைக்கும்பே றறிவெனக் கருளி***
***எங்நுரு னாத ரெனக்குப தேச***
***மிருத்திய தனிமுதற் பெருமான்.***

என்ற குருமணி மாலையில் வரும் பாடல் ஓர் உபதேசச்செயல் ஆகும். மெய், வாய், கண், செவி, மூக்கு, என்ற ஐம்புலன்களின் வழியாக உணர்தல்



Copyright © AMNA Trust, Chennai

சுவைத்தல், பார்த்தல், கேட்டல், நுகர்தல் என்று வெளிமுகமாக ஓடிக்கொண்டிருந்த நம்மை அகமுகமாக மாற்றி, மெய்ஞான வாழ்க்கைக்குத் தேவையான உளவுகளைக் கூறி அழைத்துச் செல்வதே உபதேசமாகும். இச்செயலுக்கான மற்றொரு சான்றாக தனித்திருப் பாடல்களில் உள்ள, ***புலன்வழி பற்றி யோடிப்போக்கி யென் வயதை யெல்லாம்*** என்ற பாடல் அருளப் பெற்றுள்ளது.

**குருவின் அவசியம்**:

இறைவன் மனிதனுக்கு அவசியம் வேண்டும் என்பதை உணர்த்தவே கோயில் வழிபாடுகளும், ஆச்சார அனுஷ்டானங்களும் நகலாக எடுத்து வைக்கப்பட்டுள்ளன. "மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் தொடங்கினோர்க்கு ஓர் வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே "என்றும், மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதற்கேற்ப, இறைத்தேடல் உடையவர்க்கு ஓர் மெய்குருவின் சந்திப்பானது பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவுளத்தின்படியே நிகழும் என்பதை நம் ஆண்டவர்கள் **"தேடி வரும் பொருளே யாவர்க்கும் தெய்வத்திருவுளமே"** என தெய்வத் தேடு கூடகத்தில் அருளியுள்ளார்கள். குரு தரிசனை கிடைக்கும் நாளானது நேரம், காலம், கோள், யோகம் இவையெல்லாம் ஒன்று சேரக்கூடிய அதிர்ஷ்ட நாளாகும். குருவின் திருஆல வாயாகிய நாவாஸ்திரமானது நம்மை பிடித்திருக்கும் கிரகம், மாயை, மும்மலம் ஆகியவற்றை தூள் தூளாக்கி, மெய்யின்மீது மாறாஇச்சை ஏற்படுத்தி முகூர்த்தக்கால் ஊன்றி வைத்து ,தோன்றா துணையாக நின்று இரட்சிக்கிறது.

**அருணகிரிநாதர்** பாடல்

***"ஏறுமயிலேறி விளையாடு முகம் ஒன்று***
***ஆறுமுகமானப்பொருள் நீ அருள வேண்டும்"***

ஆறுமுகமான பொருள் என்பது குருவின் ஒரு முகமாகிய- னாதமுகமாகும். அன் னாத முகத்தின் மூலமாக நம் பாவங்களானது சங்ஙரிப்பட்டு புண்ணிய வாழ்வானது வழங்கப்படுகிறது என்ற பகிர்தலுடன் அவை இனிதே நிறைவேறியது.

**23.12.2021 வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு- ஸ்ரீகுமரேசன்**

இலஞ்னுழி சுழித்து ஏகமாய் விம்மி என்ற ஞானச் சங்நு காப்பு பாடலுடன் அவையானது தொடங்கியது நமது சற்குரு பிரான் இப்பாடலின் ரகசியமாகிய சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல், விந்து, னாதம் என்ற ஐந்து நிலைகளை உள்ளடக்கியது **ஓம்** என அருளினார்கள்.

**காலச்சக்கரம்:**

காலச் சக்கரத்திற்குள் ஜோதிடம், பஞ்ஞாங்கம், நவக்கிரக கோள்கள், நட்சத்திரங்களின் சுழற்சி, என்ற காலத்தின் சிறப்புகள் அனைத்தும் உள்ளடங்கி இருக்கிறது. கிரேதாயுகம், முதல் கலியுகம் வரை உள்ள நான்கு யுகங்களையும் நமது ஆதி மான்மியத்தில்,

***யுகங்ஙள் னான்ஙுங்ஙை கொண்டகோ டூழியர்***
***மகதி ஆண்டவர் வந்நவ தாரமே.***

என்று அருளப்பெற்றுள்ளது.

காலச் சக்கரத்தின் இரகசியமானது குரு பிரான் மூலம் தன்னில் அறிய வேண்டிய பெருநிலையாக உள்ளது.நம்முள் ஒருதலை முறை காலம் இயற்கை உண்மை கடவுளாக விளங்கும் தெய்வத்தை **ஆதி மான்மியத்தில்**,



Copyright © AMNA Trust, Chennai

***"மனிதனுடைய எண்ணத்தின் பிற்புறப் பிடரியில் னிறை னீதி யாசன பீடமிட்டிருந்துவரும் வஸ்து வித்தாகிய அது, கோடி சூரியப் பிரகாச அதியரசு கிரணமாலி, பிரம்ம சொரூப இதய மேருகிரியரசு தவசு மால், சுத்தாவிச் சித்து, வித்தான முத்து,ஒத்தை யுரு, அணுவினுக்கு அணு, அகண்டம் அனைத்தினுக்கும் அதனை விழுங்கிவிடும் அகண்டம், எழுதாத எழுத்து, ஓதாமலோதும் வேதம், மற்றும் அதனையே வித்தில்லா வித்து",*** என ஒவ்வொரு மனிதனுக்குள் விளங்கும் தெய்வத்தை ஆண்டவர்கள் அருளியுள்ளதை ஆசான் அகந்துலங்க அருளினார்கள்.

**கோடாயிதக் கூர் 100-வது திருவாக்கியத்தில்**

**உத்தியோவனம்**,

பொன் அறம் பிறந்த பீடபூமி திருஸ்த்தலம், மதி வளரும் பூவனம், உத்தியோவனம், தண்டகாரண்யம், ஒலிவாமலை; அதுவே உன் சொந்த பூமி, என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். இன் னிலவுலகிற்கு.பல்வேறு மொழிகளில் வந்த பல்வேறு வேதங்களும், அதனதன் கர்த்தர், னடமாடும் திருமேனியுடன் இருந்த வரை னிஜ னிதி லாபகரப் பலனை மக்கள் தலைக்கு அளந்தது.அந்த வேதத்தை அருளிச்செய்த கர்த்தரின் னாவாகிய மூலமந்திரமும், அவர் அருளிய வேதமும், அவர் மறைந்ததும் உயிரில்லாததாய்ப் போய்விடுகிறது. வந்த வேதமாகிய ஆசான் உருதாங்கி வந்து, சர்வ வேதங்களின் உட்பொருள் ஆதார உயிர்ப்புகளை எல்லாம் மனிதனின் தலையில் ஏற்றி வைக்கின்றார்கள் எனவே உடலுள்ள போதே தன்னைப்போல் உடலொத்த, பரமாத்ம அறிவில் விளங்கும் ஒருவரை தேடிப்பெறுவதே மனிதனின் முதல் கடமை என்று வேதம் கூறுகிறது.

**காலந் நாட்டிய காரணப் பா - பாடல் எண்-07. "*கரும சித்தர் காலத்து*".** எனும் பாடலின் புரிதலாக

ஜீவனை அறியாமல் புற சடங்குகளில் அதிக ஆர்வமுடையவர்களை அறியாதவர்கள் என்றும் இருண் மதத்தவர்கள் என வேதத்தில் கூறப்பட்டுள்ளது ஆண்டவர்கள், முகப்புப் பாடலில் "**தன் தன் மதத்தில் தவறா திருத்தி**" என அருளியுள்ளார்கள். அத்தகைய சுத்த சன்மார்க்கத்தில் சார்ந்திருந்து "**சாவரும் முன் சாப்பழக்கம் பழகும்**," மெய்வழிப் பாதையில் நம்மை கூட்டிச் செல்லும் கரும சித்தராகிய நம் குருபிரானின் சொல்படி நடந்து ஞானத்தை அடைவோம் என பகிரப்பெற்றது.

**ஸ்ரீமாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், செத்திலாப் பத்து- பாடல் எண்-06 "*அறுக்கி லேன்.வகை யறியேன்..* "**என தொடங்கும் பாடல்

மன உடல் என்னும் மாயைதனை அறுக்கும் செயலை ஆண்டவர்கள் ***"அறுக்குமட்டு மாய்கைதனை யறுத்தே விட்டு அருமறையி னெறிவழியே ஆசான் பின்னே"*** என கூறியுள்ளார்கள். ஆசான் திருவாக்கு ஒரு தீ கார் மேக மழை போன்ற ஆசானின் திருவருளை அறியாமலும் அவர்கள் காட்டும் நல்வழியில் செல்லாமலும் இந்த உடலும், மனமும் தடுக்கிறது என்பதை அறியாமல் மனம் போன போக்கில் போகிறோம். விடைப் பாகன் என்பது விடையேறும் பெருமாளாக விளங்கும் குரு பெருமானையே குறிக்கிறது. இதன் சிறப்பு பல வேதங்களிலும் அருளப்பெற்றுள்ளது. இறைவனோடு சேராமல் துவைதமாக இருக்கும் என்னை, அத்வைதமாகிய திருப்பெருந்துறை மேவிய சிவனாகிய சற்குருவே, நின்போல் என்னையும் மாற்றி அருள் புரிய வேண்டுகிறேன, என்பதை "***திரையறுத்தென் குறை முடிக்க வேணுமம்மா தேவ விடை ஏறி னின்ற ஓம சத்தி"*** என தெய்வத் தேடு கூடகத்திலும், "***விடை பெற னல்வீடடைய வைக்கும் பஞ்ஞாட்சரமே*** "என ஐம்மணிப் பொதிகையிலும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**திருஞான சம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் முதல் திருமுறை, திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்-பாடல் எண்-05** ***“பாடன் முழவும் விழவுமோவாப்.தாம்பரவ”*** எனும் பாடலின் புரிதலாக,

திருபஞ்ஞணை எழுச்சி பாடலில், ***பளிங்ஙன உளமெழில் பக்தர்கள் குழுமியே பரமனின் கோயில்முன் பாடல்கள் பாடினர்*** என்றும் விழவு எனும் திருவிழாவை பற்றி மெய்ஞ்ஞான மகத்துக்களின் அகமிய உலகில் பௌர்ணமி சமயத்தில் ஒரு புதிய திருப்பம் உண்டாகி அது ஒரு சன்னதம் போல அவர்களுக்கு இறங்குகிறது. அத் திருச்செயலைப் போற்றி அவர்களுடைய மக்கள் அந்நத் தெய்வ வாடையைப் பெறவேண்டுமென்ற கருணை னோக்கத்துடன் தான் மாதா மாதம் பௌர்ணமி சமயத்தில் இந்நத் திருவிழாக்கள் எடுத்து வைக்கப் பெற்றுள்ளன என கோடாயிதக் கூர் வாக்கியம் 301 ல் அருளப் பெற்றுள்ளது.

சேடக மா மலராகிய கேடயமே ஆசானின் னாதம். அது சீடனுக்கு சீராகிய அமானித்தை கொடுக்கும் திருச்செங்காட்டங்குடியாக விளங்குகிறது. காடகம் என்ற அழியாத ஆடை அதாவது நித்திய திருமேனியுடன் வாழும் ஆசானின் வாக்கே திருமருகலாக இருந்து திருக்காட்டுப்பள்ளியில் நம்மையும் குடியோங்ஙி வாழவைக்கும் பெருநிலை வைப்பாக உள்ளது, எனும் பகிர்தலுடன் அவை இனிதே நிறைவேறியது.

**25-12-2021 கிறிஸ்துமஸ் தின சபை**
**தொகுப்பு-ஸ்ரீமதி கல்பனா விஜயகுமார்**

***“எங்ஙும் மெய்வழி ஏறித்து லங்ஙிட”*** எனும் பாடலுடன் குருபிரான் அவையைத் தொடங்கினார்கள். ஒவ்வொரு காலத்திலும் மெய்வழியானது ஏறித்துலங்ஙிட இயேசுநாதராக மார்க்கநாதராக அவதாரமானது நிகழ்கிறது.பரிசுத்த ஆவித்தெய்வம் இயேசுபிரான் கன்னி மரியம் சூலிலிருந்து வெளியான இரவு அடையாளமாக சுடரான வால் நட்சத்திரம் மின்னி வழிகாட்டிட தீர்க்கதரிசிகள் தேடிவந்து வணங்கியது அவரின் அவதார சிறப்பை உணர்த்துகிறது. தன்னையறியும் செயலில் ஆகும்போது தான் இயேசுநாதரின் பிறப்பின் சிறப்பை உணர முடியும். “**ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான்”** என்பதே அவருடைய தீர்க்கமான திருவாக்காகும். “**தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை”** தேவனை புறக்கண் கொண்டு காண்பதல்ல சுடரான அறிவுக்கண் கொண்டுதான் காணமுடியும். தேகாலயத்துக்குள் பரிசுத்த ஆவியானது பேசுதல், மூச்சுவிடுதல், கேட்டல், பார்த்தல் என ஆவிப்பொருளான உணர்வுகளால் கட்டப்பட்டிருக்கிறது. ஆண்டவர்கள் திருவாக்கியத்தில் “**நான்”** வந்து அமர்ந்த பிறகுதான் நீ பார்க்கிறாய், கேட்கிறாய் என்கிறார்கள். கர்த்தராகிய “**நான்”** இந்த உடலாகிய பூமிக்கு ஜீவனாக, ஒளியாக இருக்கிறது.அந்த அறிவின் ஒளி இவ்வுடலில் இருக்கும்போது பெறுவதுவே மறுபிறப்பு. அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் தந்தருளின பரிசுத்த ஆவியாகிய நாதத்தின் வழியாகவே அறியமுடியும். அந்த பரிசுத்த ஆவியைப் பின்பற்றிக் கொள்பவன் செயல் உடைய தேவரகசியச் செயலை அன்பெனும் பிடியால் பற்றி ஏறி, மனம் திரும்பி அறிவாக மாறி தேவனுடைய ராஜ்யத்தில் குடியேறி வாழ்வான்

**எட்டாம் நாள் ரா ஞானஸ்னானம்**.

ஒருவர் முன் செய்த பாவங்களிலிருந்து மீட்படைய கர்த்தரின் பெயரால், தண்ணீரால் ஞானஸ்னானம் கொடுப்பதானது, ஆசானின் அமிர்தவர்ஷிப்பாகிய ஜீவ தண்ணீர் மூலம் பாவம் நீங்கி தேவப்பிறப்பாகிய மறுபிறப்பில் பிறத்தல், உயிர்த்தெழுதல் இவற்றைக் குறிப்பதாகவும், எட்டு என்பது அகரப் பொருளாகிய ஜீவனைக் குறிப்பதாகவும் இருக்கிறது. **இரவு=இருள்**; அறியாமை எனும் இருள் மறைந்து, ***நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்*** எனும் மெய்ப்பொருள் விடிந்த நாள் **எட்டாம் நாள் ரா ஞானஸ்னானம்** ஆகும்.



Copyright © AMNA Trust, Chennai

**இயேசுவின் ரத்தம்:-**

***"என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது".*** இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது. ஆத்மாவிற்காகப் பாவ நிவர்த்தி செய்கிறது இரத்தமே. ஆசானின் இரத்தமாகிய சத்தத்தை நித்தம் செவிவாயிலாக உட்கொண்டு, அவர் அன்பிற்குப் பாத்திரமாகும் போது நம் சித்தத்தில் உள்ள பித்தத்தை நீக்கி பாவங்கள் மன்னிக்கப்பட்டு பரிசுத்தம் ஆக்கப்பெறுகிறோம் "***காதுள்ளவன் கேட்கக்கடவன், என் சப்தத்திற்கு செவிகொடுங்கள்.***"தேவனுடைய வசனம் வித்தில்லாவித்தாகவும், நாதமே தேவனுடைய சாயலாகவும் இருக்கிறது ஆறறிவு பெற்று வந்தும் ஐயறிவு நுகர்ச்சியிலேயே இருப்பவனின் மனதை ஆயனின் குரலாகிய நீதி மொழியே அறிவின் வழியில் நடத்தி நரனை மனுவாக்கிப் பின் தேவன் ஆக்குகிறது



திரு.சாலை ரவி அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க நீதி அவை

**சணல் வஸ்திரம் தரித்தவர்:-**

சணல் என்பது கயிறு. இந்த உடல்சூட்சக் கயிற்றால் கட்டப்பட்டிருக்கிறது. பருவுடல், மனவுடல், வளிவுடல், அறிவுடல், ஆனந்தவுடல் என இவை ஐந்து உடல்களும் ஆவிப் பொருளாக, சூட்சக்கயிற்றால் கட்டப்பட்டுள்ளது. ஆவிக்குரிய சிந்தனையே நித்திய ஜீவனும் சமாதானமுமாய் இருக்கிறது. சமாதானம், சமத்துவம் உயிர் ஒட்டிய ரகசியமாக இருக்கிறது. எம் மதத்தவர்க்கும் அறுசுவை ஒரே மாதிரி தான் இருக்கிறது. அறுசுவை கொண்டொளித்த இடம் அறிந்தவர்களே அமரர்கள். ஆண்டவர்கள் அறிவின் மூலமாக தம் மக்களுக்கு இத்தேவ ரகசியச் செயலை ஆக்கி வைத்தார்கள். தம் மக்களாகிய எதார்த்த நன்மனமக்கள் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவ பிறப்பில் பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர் பாதம் என மகா சங்கல்ப மந்திரத்திலும் கூறி வைத்துள்ளார்கள். ஆண்டவர்களின் திருநாமத்தை அறிவின் மூலமாக ஓங்கி உரத்த குரலில் சொல்லக்கூடிய காலமாக வரும் புதிய ஆண்டு முழுவதும் இருக்க, ஆண்டவர்களின் பொற்பாதங்களை வணங்கி அவையை நிறைவு செய்தார்கள்.

**26-12-2021 ஞாயிற்றுக்கிழமை சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி அருணா சுதர்சனம்**

***"பரமனே உருவெடுத்து பாரிடைக் குருவாய் வந்த "*** தோத்திரப் பாடலுடன் அவை தொடங்கியது ***."வாசி காலுச்சி கண்டத்தின் வழியாய்"*** "பாடலைத் தொடர்ந்து, மனுத்தலை என்றும் அழியாதது .சன்னதப் பாரவான்களின் கையகத்தில் ஆகாவிட்டால் நரகம் நிச்சயம் எனப் பகிரப்பெற்றது. பாரவான்களின் வருகை தெய்வத் தேடு கூடகம் பாடலில் ***"வந்தது னிஜந்தான் அய்யா"*** என்றும், ***"ஓசை வலுத்தது நேசம் மிகுத்தது, ஓர்மை பழுத்தது"*** என்றும், அதன் விளைவாக அகம் அகமியம் எனக் கூறுவதும் னாசிக்கு வெளியே மூச்சு ஓடாத அந்த நிலையே. தன் தன் ஜீவ குகையில் குடியேற்றுகின்ற ஆசானின் னோக்கிற்கு இணங்கி நடப்பதே தவம், அறம் செய்தல் ஆகும்.



Copyright © AMNA Trust, Chennai

***"உடம்பைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காண்பதற்கே." "உள்ளம் உருகார்க்கு கள்ளம் கருகாது ஞான வெள்ளம் பெருகாது".***

**ஆண்டவர்கள் திருவாக்கியம்:** ஒரு பூ இளகி மலரும் போது வாசனை வருவது போல், எமது தவ ஏற்றத்தால் அகக்கருவிகள் மாறியதால் தான் தேவ மணம் வீச நிற்கிறது : சிவனின் னாமத்திற்கு இலக்கு ஆனவர்கள் அனந்தர்கள்.துரியம், துரியாதீதம் எனும் சங்கல்பம், மனோனிச்சயம் ஆகிய உள்ளமையை கண்ணேர் தரிசிப்பவர்கள் அனந்தாதி தேவர்கள். தன்னை அறிந்து தவமுறையில் ஏறுவதற்கு ஜீவ வித்திலிருக்கும் பரமவித்துவே உதவுகிறது. இது காரண,மகா காரண செயலாக விளங்குகிறது. அதனை சந்தித்து பலன் பெற்றவர்களே சன்னதப் பாரவான்கள். சும்மா இருக்க சுகம். மனம் சும்மா இருக்க பழக வேண்டும்.

**திருவெம்பாவை பாடல் *"போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்"*:** சத்திய வேதம், ஒருவன் குருடனாய் பிறந்தது அவன் தாய் தந்தையர் செய்த பாவம் இல்லை என்றும் இறைவனின் கிருபை மனிதனிடம் வெளிப்படும் பொருட்டே என்றும் உள்ளது. இயேசு பெருமானை சிலுவையில் வைத்து அறைந்ததும், பின்பு உயிர்த்தெழுந்ததும் பாவ புண்ணியத்தை விளக்கும் அகமிய செயல்களாக உள்ளது. பாபம் சேதிக்கப்பட்டு அறிவு பிரகாசம் பெறுவதே அறம். முன்செய்த பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் கர்த்தரால் நாம் அடைவது னித்தியஜீவன் என்றும் கூறப்படுகிறது. "தாயின் மிக்காங் கருணை" என்ற பாடல் : ஓயாது வந்த "தேயாத நிலம் " என்பது அழியாத சொல்லை உருவாக்குகின்ற ஆசானிடத்தில் உள்ளது. நாவிற்கு பெரிதாக உலகம் இல்லை என்பது பெரியோர்களின் திருவாக்கு.

**"அத்திமாபுரம்" பாடல்:-** அத்தி என்பது மரம், எலும்பு, யானை எனப் பொருள்படும். எலும்பால் ஆன தேகத்தின் உள் இருக்கும் அம் மாபுரமே அத்திமாபுரம் ***"பளுவெலாம் விழுங்கிப் பளுவெலாம் கடந்து பழுவற்றிருந்த பாரப் பருவத பராபரத்தை"*** இதனை அந்த பரம்பொருளே வந்து அறிவிப்பது னயனக்கலையின் மூலமாகத்தான். அதாவது மூன்றாவது கண் திறப்பிக்கப்பெற்று மெய் உணர்வு தூண்டப்பெற்ற மக்கள் ஓதுவது மான்மியம். 30 வயதினுள் ஒருவன் மெய்யை அறிய வேண்டும் என்பது வேதத் தீர்ப்பு. முக்குணங்களால் மனிதன் செயல்படுகின்றான். ஆனால் பிரம்மமோ அசைவற்ற குணக்குன்றெனக் கூறுகிறார்கள். குணம் குணா னயன்மி எனும் செயலாக முக்குணம் மாறி நிர்குணமாகும் செயல் பழக வேண்டும். ஆத்மா நிர்குணமாக உள்ளதாகும்.

**கானகம் குடிபுகுதல் என்பதின் விளக்கமாக**: மூன்றாவது கண் ஒரு சப்தத்தின் மூலமாக திறப்பிக்கப்பெறும் செயலைக் கூறுவதாகும். இதையே "***சப்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி***" எனக் கூறுகிறார்கள்.

காகபுசுண்டர் என்பது "காகா" எனும் அகரவடிவினன் ஆகும். அகரம் தான் அறிவு, அறிவு தான் கலை என்றும், கலை தான் ஆவி, ஆவியே சத்தம், உணர்வு, கவனம் என உள்ளது. இதுவே நம் ஊண் உடம்பு ஆலயத்தின் அகத்தில் உள்ளது எனப் பகிரப்பெற்று தோத்திரப்பாடலுடன் அவை நிறைவுபெற்றது.

**26-12-2021: ஞாயிற்றுக்கிழமை சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு :ஸ்ரீ வடிவேலன்**

**எமபடரடி படு கோடாயிதக்கூர். வாக்கியம் எண்: 60**

வேதம் இருக்கிறது. ஆறாவது அறிவு இருக்கிறது. சூக்குமதேகம் இருக்கிறது. ஆகவே, உனக்கு அவற்றை விளக்கித்தரப் பாரவான்களும் வருவார்கள் என்பது னிச்சயம்.
தரைதனில் நரராய்த் தோன்றியவர்களை சங்காரம் செய்த பிறகே



Copyright © AMNA Trust, Chennai

மனுவாய் மாற்ற முடியும். ஒரு குழந்தை தாய் வயிற்றில் இருந்து பிறக்கையில் அழுது கொண்டு தொப்புள்க் கொடி அறுக்கப்பட்டு, தீட்டுத் துடக்கு வேதனையுடன் பிறக்கிறது. ஆனால் ஒரு ஆசான் நரனை மனுவாய் மாற்றி பிறக்க வைக்கும் போது தீட்டுத்துடக்கு இல்லாமலும் மகா பரிசுத்த தெய்வ அலங்கார வாசத்துடன், என்றும் தொடர்புடைய தொப்புள்க் கொடி அறுக்காமலும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிறைந்த அறிவுப் பிறப்பில் பிறக்க வைக்கிறார்கள். இதுவே நல்ல கதிநிலை விளங்கும் குருவின் மதி வல்லபச் செயலாகும் என்பதை **திருமந்திரத்தில்,**



திரு.சாலை ரவி அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

***சிவசிவ என்கிலர் தீவினை யாளர்***
***சிவசிவ என்றிட தீவினை மாளும்***
***சிவசிவ என்றிட தேவரு மாவர்***
***சிவசிவ என்னச் சிவகதி தானே***

என்று திருமூலர் அருளியுள்ளார்.

**ஒருமொழி**:

நம்மிடம் உள்ள அழிந்து போகிற செல்வத்தை கொண்டு நம் அறியாமையாகிய மன இருளை போக்க முடியாது. ஒரு அரசனே ஆனாலும் அதே நிலைதான். ஏனென்றால் புற இருளே போ என்று சொன்னால் போகாது. அப்படி இருக்க அக இருளும் நிச்சயம் போகாது. ஒரு இறை குருவால் தான் அந்த இருளைப் போக்க முடியும் என்பது ஆண்டவர்கள் திருவாக்கு. இதையே அறிவு அறி பாடத்தில்,

***"இருளறு மொழியோர் இறைகுரு வாகும்***
***பொதுமொழி பேசுவோர் போலியாம் குரவர்"***

என்றும் அருளியுள்ளார்கள்.

மன இருளை போக்கக் கூடிய வல்லபமான பொருள், சுத்த சைதன்ய நாதரின் சொல்லாகிய ஒரே பொருள்தான். அதுவே மெய்ப்பொருள், என்றும் அழியாத செல்வம். இந்த செல்வம் தான் அக இருளாகிய மன இருளைப் போக்கும் வல்லபமான கருவியாகும். இது தான் உரியம் மொழி, இம் மொழி, ஒரு மொழியாம் குரு மொழி, தலையான மொழியாகும். இதையே **ஞான முறையீடு** பாடலில்,

***"உரியம்மொழி யிதுவோ தினேன்***
***உற்றவு ஜாரிதுவே".*** என்று சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

எனவே ஆசான் சொல்லின் மீது கவனம் வைத்து நடப்பதே உற்ற உஜாரான உபாயமாகும். இதுவே தேவனின் முடிவு தீர்மானமாகும். இதையே **திருவள்ளுவர் பிரான்** அவர்களும்

***செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச் செல்வம்***
***செல்வத்துள் எல்லாம் தலை.*** (411)

என்று அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**ஆலயம்:**

பறவைகளின் பாதுகாப்பிற்கு கூடுகளும், மாடுகளை கட்டி வைக்க தொழுவ மும், குதிரைகளுக்கு லாயமும் இருப்பது போல ஆன்மா லயமாக, பாதுகாப்பாக இருப்பதற்கான இடமே ஆலயம். அதுவே உள்ளமாகிய கைலாயம்.

**இறை வழிபாடு:**

ஒரு மனிதனின் அடையாளம் என்பது உடலில் உள்ள அங்க அடையாளம் அல்ல. அது குணமாக, சப்தமாக உள்ளது. ஒருவர் பேசினால்தான், அவரைப்பற்றி தெரிந்து கொள்ள முடியும். அதே போல ஒருவருடைய பெயரும் உடலை குறிப்பிடுவதல்ல. உயிராகிய ஜீவனுக்கு தான் நாமம் சூட்டப்படுகிறது. அது போலவே இறை நம்பிக்கை, இறை வழிபாடு என்பதும் புறத்தில் உள்ள உருவ அடையாளத்தை மட்டும் பார்த்து வணங்குவதல்ல. உருவம் கடந்த பரிசுத்த ஆவித் தெய்வமாக விளங்கும் அசலான இறைவனை பார்த்து, பழகி, உணர்ந்து வணங்குவதே நிஜமான இறை வழிபாடு ஆகும். அதுவே ஞானமாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படி நிலைகளின் மூலம் தான் இறைவனை வணங்க முடியும். யோகம் என்பது கை கால்களை மடக்கி பயிற்சி செய்வதல்ல, மூச்சை இழுத்து விடுவதல்ல. இதை பிறந்த குழந்தையும் செய்து கொண்டுதான் இருக்கிறது. இந்த நான்கு படி நிலைகளையும் பிரம்ம வித்தையின் மூலம் கற்று பழகி கைவரவடைந்த ஒரு மெய்குருபிரான் தான் பழக்கி வைப்பார். இதையே நமது தெய்வமவர்கள் **மெய்வழி னூல்** பாடலில்,

***வழிசரிகை முடிந்நமுடி விடமும் காட்டி***
***வட்டமா சித்தியுமெய்ப் பாலும் காட்டி***
***வழியோகம் கலைனாலங் ஙுலமுட் பாய***
***வழிசென்றோ ரென்றாற்றான் வகையாய்ச் சொல்வார்***
***அழியாது படிப்படியாய் னின்ற பேச்சை***

***அனைத்தையுமே தெரிந்நவன்போற் பொது வாய்ப் பேசும்***
***களிம்பான மனத்தவனைப் புடைத்துத் தள்ளிக்***
***காதவழிக் கப்புறத்தே யொதுங்ஙி னில்லே (32)***

என்று அருளியுள்ளார்கள்.

***"பட்டமும் கயிறு போல பறக்க நின்ற ஜீவனை***
***பார்வையாலே பார்த்து நீ படு முடிச்சி போடடா"***

என்று **சிவவாக்கியர்** அவர்களும் யோகநிலை குறித்து அருளி உள்ளார்கள். தோற்றத்தில் உள்ள பொருளை கையால் பிடித்து கட்டி வைக்கலாம். ஆனால் பார்வையால் பார்த்து முடிச்சி போடுவதென்பது பார ரகசியச் செயலாகும். இதை குருமுகத்தில் அறிய வேண்டும் என்ற பகிர்வுகளுடன் ஆசானின் ஆசீர்பாதத்தால் அவை இனிதே நிறைவுற்றது!



Copyright © AMNA Trust, Chennai

## இசை வகுப்புகளின் தொகுப்பு-ஸ்ரீமதி லாவண்யா வாசுதேவன்

### 12.12.2021 மற்றும் 19.12.2021 இசை வகுப்பு

தெய்வத் தேடுகூடகத்திலிருந்து

***எங்ஙுமே மக்கள் யார்க்கும்***
***இடர்களைந் நோங்ங வேண்டித்***
***திங்ஙள்வந் நிறைஞ்ஞும் தெய்வத்***
***தேடுகூ டகத்தைப் பாட***
***அங்ஙமோ பங்ஙம் தீண்டா***
***அரும்பொரு ளுயரும் செல்வம்***
***தங்ஙியே குலமேம் பாடாம்***
***தான்சிரஞ் ஞீவி யோரே***

என்ற பாடல் **நாதநாமக்ரியை ராகத்தில்** பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்றது. அதை தொடர்ந்து **மெய்ப் பொருள் அடைக்கலப் பா** பாடலும் **தாளத்துடன்** பாடுவதற்கு பயிற்சி அளிக்கப்பெற்றது.

### 26.12.2021. இசை வகுப்பு

**மெய்ப்பொருள் அடைக்கலப் பா பாடல்**

***னீதினி றைந்நப ரம்பொருளே***
***னித்தமென் சித்தத்து றைந்நவரே***
***ஓசையொ லியெல்லாம் ஆனவரே***
***ஒத்தையா யென்னாளு முள்ளவரே***

என்ற பாடல் தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்றது.



Copyright © AMNA Trust, Chennai

## ஆதி மார்க்க னீதி அவையின் அவை னிகழ்வுகள்:

| 2021 ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர் னிகழ்வுகள் |
|---|
| **20th ஆகஸ்ட் 2021** அன்று **திருமணம்** கண்ட காஞ்சிபுரத்தைச் சேர்ந்த நமது அங்கத்தினர் **ஸ்ரீ.S.ஸ்ரீனிவாசன்-ஸ்ரீமதி.S.பரமேஸ்வரி** தம்பதியினர்களின் புதல்வன் திருவளர்ச்செல்வன் **S.விக்னேஷ்** மற்றும் திருவளர்ச்செல்வி **I.கௌசல்யா** ஆகியோருக்கு ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம் |
| **20th ஆகஸ்ட் 2021** அன்று **திருமணம்** காணும் சென்னையைச் சேர்ந்த நமது அங்கத்தினர் **ஸ்ரீ.S.வஜ்ரவேல்-ஸ்ரீமதி.V.லட்சுமி** தம்பதியினர்களின் புதல்வி திருவளர்ச்செல்வி **V.ஷாலினி** மற்றும் திருவளர்ச்செல்வன். **E.உதயகுமார்** ஆகியோருக்கு ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம் |
| **9th செப்டம்பர் 2021** அன்று **திருமணம்** காணும் இராஜபாளையத்தைச் சேர்ந்த நமது அங்கத்தினர் **ஸ்ரீ.D.ராஜ்குமார்-ஸ்ரீமதி.R.சபிதா** தம்பதியினர்களின் புதல்வன் திருவளர்ச்செல்வன் **D.R.ஷியாம்** மற்றும் திருநிறைச்செல்வி. **V.தெய்வ ஸ்ரீநிதி** ஆகியோருக்கு ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம் |
| **16th செப்டம்பர் 2021** அன்று **திருமணம்** கண்ட திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், பிரம்மதேசத்தை சேர்ந்த நமது அங்கத்தினர் **சாலை வெங்கடேசன் - சாலை சிவசங்கரி** தம்பதியினர்களின் புதல்வி திருநிறைச்செல்வி. **சாலை யோகலட்சுமி** மற்றும் திருவளர்ச்செல்வன் **K.மணிக்கொடி** ஆகியோருக்கு ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம் |
| **16th செப்டம்பர் 2021** அன்று **திருமணம்** கண்ட நமது குருபிரான் சாலை ரவி - விஜயகுமாரி அவர்களின் ஏககுமாரத்தி திருநிறைச்செல்வி **சாலை R.சினேகா** மற்றும் திருவளர்ச்செல்வன் **P.V.K மிதுன் சங்கர்** ஆகியோருக்கு ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம் |



Copyright © AMNA Trust, Chennai

| **தேதி** | **2021 ஆதி மார்க்க னீதி அவையின் னிகழ்வுகள்** |
|---|---|
| **14th – 16th August 2021** | சிவகாசி சிறப்பு சபை, |
| **06th October 2021** | திரு சாலை ரவி அப்பா அவர்களின் அவதார திருனாள் னிகழ்ச்சி |
| **29th நவம்பர் 2021** | மெய்வழி திரு. குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் அவதார திருனாள் னிகழ்ச்சி – Online சபை |
| **3, 4, 5 டிசம்பர் 2021** | ஆதி மார்க்க னீதி அவையின் சிறப்பு சபை, சிவகாசி |



Copyright © AMNA Trust, Chennai

## 2021ம் ஆண்டு AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்

அகல்யா (சிவகாசி)
அசோக் (சென்னை)
அஞ்சனா (சிவகாசி)
அண்ணபூரணி (சென்னை)
அய்யனார் (சிவகாசி)
அருணா S (சிவகாசி)
அருண் K (சென்னை)
அனுஷா (சிவகாசி)
அன்பழகன் (சிவகாசி)
அன்னலட்சுமி (சிவகாசி)
அஜய் (சிவகாசி)
ஆதர்ஸன் (சிவகாசி)
ஆதிஷ் (சிவகாசி)
ஆர்த்தி (சிவகாசி)
ஆறுமுகசாமி (சிவகாசி)
ஆனமலையான் (சிவகாசி)
இன்பலதா (சிவகாசி)
உமா ராணி (சென்னை)
உஷா (சிவகாசி)
ஏகாம்பரம் (தென்னம்பட்டு)
கணேசன்
கணேசன் (சிவகாசி)
கணேஸ்வரன் (சிவகாசி)
கணேஷ்கிருஷ்ணன்
கண்ணம்மா (சிவகாசி)
கண்ணன் (சிவகாசி)
கருணைசோமு (சிவகாசி)
கருப்பசாமி (சிவகாசி)
கல்பனா (சிவகாசி)
கல்யாணி (மதுரை)
கவனமணி (மதுரை)
கற்பகவள்ளி (சிவகாசி)
கார்த்திகேயன் (சென்னை)
கார்த்திகேயன் (சிவகாசி)
காளிதாஸ் (சிவகாசி)
காளிராஜன் (சிவகாசி)
கிரஹதுரை (சிவகாசி)
கிரிதரன் (ஆவடி)
கிருஷ்ணமூர்த்தி (ஆவடி)
கீர்த்தி வளவன் (சென்னை)
குமரேசன் (ஆவடி)
கௌதம் (காஞ்சிபுரம்)
கோபிநாத் (சென்னை)
சசி (பேர்ணாம்பட்டு)
சசிகுமார் (வேலூர்)
சந்திரபிரகாஷ் (சிவகாசி)
சபரிஷ் (சென்னை)
சபிதா
சரவணகுமாரன் (சென்னை)
சருப்பா (சிவகாசி)
சஹானா (சிவகாசி)
சாந்தினி (சிவகாசி)
சாலைசுந்தரி(சென்னை)
சித்ரா (சிவகாசி)
சிரஞ்ஞீவி (சென்னை)
சீனிவாசன் (காஞ்சிபுரம்)
சீனிவாசன் (சென்னை)
சுதா (சிவகாசி)
சுந்தரவடிவேலன் (சிவகாசி)
சுந்தர் (காவேரிப்பாக்கம்)
சுப்ரமணியன் (சிவகாசி)
சுமதி (சிவகாசி)
செந்தில் (சிவகாசி)
செல்லம்மா (தூத்துக்குடி)
செல்வி (சிவகாசி)
செஜிதா (சிவகாசி)
சொர்ணமதி (சிவகாசி)
தங்கமலை (சிவகாசி)
தபேஸ்வரி (சிவகாசி)
தனராஜன் (சென்னை)
தாமரைச்செல்வி (சிவகாசி)
தாமோதரன் (சிவகாசி)
தியாகராஜன் (ஆவடி)
திருமுருகன் (ஆவடி)
திருமூர்த்தி (சிவகாசி)
தீபா (சிவகாசி)
தேவன் (காவேரிப்பாக்கம்)
நாகமணி (சிவகாசி)
நாகராஜ் (சென்னை)
நாகலிங்கம் (சென்னை)
நேதாஜி (சிவகாசி)
பத்மாபதி (தூத்துக்குடி)
பவித்ரா (சென்னை)
பழனிக்குமார் (சிவகாசி)
பழனிசெல்வராஜ் (சிவகாசி)
பழனிவேல் (தூத்துக்குடி)
பாண்டிராஜன் (சிவகாசி)
பார்த்திபன் (சத்துவாச்சேரி)
பாலாபிராமி (சிவகாசி)
பாலாஜி (சிவகாசி)
பாலாஜி (சென்னை)
பாஸ்கரன் ES (சென்னை)
பிரபு (சிவகாசி)
பிரபு (திருப்பூர்)
பிரியா (சிவகாசி)
புன்னகைமகேஷ் (மதுரை)
புஷ்பா (சிவகாசி)
பூர்ணிமா (சிவகாசி)
பூர்ணிமா ஜீவானந்தம்
பொன்செல்வம் (சிவகாசி)
பொன்பிரியா (சிவகாசி)
பொன்லக்ஷ்மி (சிவகாசி)
மகிமா (சிவகாசி)
மகேஷ்குமார் (மதுரை)
மஞ்சுநாத் (பெங்களூரு)
மணிமாறன் (ஆவடி)
மணிமாறன் (சிவகாசி)
மணிவண்ணன் (சென்னை)
மஹிமா (சிவகாசி)
மாதவன் (தூத்துக்குடி)
முத்துகுமரன் (ஆவடி)
முருகேசன் (சிவகாசி)
முனியாண்டி (சிவகாசி)
மோகன் (சென்னை)
ரமேஷ் (சென்னை)
ரவிபழனிசாமி (சென்னை)
ராமமூர்த்தி (சென்னை)
ராஜம் (சிவகாசி)
ராஜா மகேஷ் (கிருஷ்ணகிரி)
ராஜேந்திரன் (சிவகாசி)
ராஜேந்திரன் (சென்னை)
ராஜ்குமார் (சென்னை)
ரிஷி (சிவகாசி)
ருக்மணி
லதா உதயன்
லலிதா (சிவகாசி)
வசந்தி (சிவகாசி)
வடிவேலன் (ஆவடி)
வளவன் (சென்னை)
வாசுகி (சிவகாசி)
வாசுதேவன்
விஜயகுமார் (சிவகாசி)
விஜயசங்கர் (சிவகாசி)
வீரலட்சுமி (சிவகாசி)
வெங்கடேசமுத்து (ஆவடி)
வெங்கடேசன் (சென்னை)
வெங்கடேசன் (வேலூர்)
வேலுK (ஆவடி)
ஜான்சிராணி (சிவகாசி)
ஜித்தின்
ஜீவானந்தம் (சிவகாசி)
ஜீவானந்தம் (காஞ்சிபுரம்)
ஜெகதீஷ் (திருச்சி)
ஜெய்குமார் (ஆவடி)
ஸ்ரீதுல்தாஸ் (வேலூர்)
ஸ்ரீமா (சிவகாசி)
ஹேமாவதி


Copyright © AMNA Trust, Chennai

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்ங ஆர்வமுள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக்கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

Account Name: **AathiMarghaNeethiAvai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: message2amna@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

*Twitter Page: https://twitter.com/TrustAmna*

*Instagram: https://www.instagram.com/amnatrust*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Vijaya Shankar, Sivakasi*
*Shri. Saravanakumaran, Chennai*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Annual Issue - Year: 2021*



Copyright © AMNA Trust, Chennai